29 APR 19[illegible]

உ

கணபதி துணை.

# திருமுல்லைவாயிற்புராணம்.

திருவாரூர் வைத்தியநாத நாவலரவர்கள்

குமாரர்

சீகாழி வடுகநாததேசிகரவர்கள்

இயற்றியது.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து மஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

ஸ்ரீகாழி மகா-ள-ள-ஸ்ரீ

ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளையவர்களால்

சீகாழி:

'திரிபுரசுந்தரி' பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரதி-இ௱.] 1927. [காப்பி ரைட்.

PRINTED AT THE
THIRUPURASUNDARI PRESS,
SHIYALI.

உ

சிவமயம்.

# திருமுல்லைவாயிற் புராணம்.

29 APR 19..

## முகவுரை.

வாகை—வல்லாண்முல்லை.

வாயில் வினையறுக்கும் வானமுதர் தென்முல்லை
வாயில் குடவளஞ்சேர் வாயிற்றே—காயிற்
கோடம்புரந் தாமக் குனிவில் லெடுத்தா
னடம்புரந் தாமத்த ணார்பு.

எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவநுக்கிரகமும் உடைய சிவபெருமான் தாம் ஒருவரேயாய்ப், பசுக்கள் யாவும் தமக்கு என்றும் உடைமைப் பொருள்களேயாகத் தாம் என்றும் உடையவராயே நின்று, பசுபதி எனப்படும் தாம் பிரபஞ்சம் எங்கும் நீக்கமற வியாபித்து நிறபராயினும், அவ்வுண்மை யாவருக்கும் விளங்காதாகலின், யாம் எளிதின் வழிபட்டுய்யுமாறு திருவுளங்கொண்டு எண்ணில்லாத சிவஸ்தலங்களைப் பூமியில் வைத்தருளினார். அவற்றுட் சோழமண்டலத்து ஆலிநாட்டின்கண் காவிரிநதியின் வடபாற் சமுத்திரதீரத்திற் சிறந்து விளங்குவது தென்திருமுல்லைவாயில். இத்திருப்பதி திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீன கர்த்தர் பரிபாலனத்துக்குட்பட்டது. இவ்வாலயம் கி.பி ௧௯௧௨ல் சீகாழி ஸ்ரீமத் சிதம்பரநாதமுதலியாரவர்களால் ஜீர்ணோத்தாரணமும் மஹாகும்பாபிஷேகப்பிரதிஷ்டையும் செய்விக்கப்பெற்றது.

இத்தலமான்மியத்தைத் தருமபுரவாதீனத்துத் திருவாரூர் வைத்தியநாத நாவலரது நான்காம் புத்திரர் வடுகநாததேசிகர் (௧௬௯௭—௧௭௮௭) இயற்றினார். இவர் சீகாழியில் வசித்துப் பிரபல கவிஞராகிச் சென்னையிற் றுறைசைக் கச்சியப்பமுனிவர் (௧௭௩௩—௧௭௮௬) விநாயகபுராண மரங்கேற்றியபோது அச்சபைக்கு நாயகராக வீற்றிருந்தா ரென்பதால் இவர் கல்வித்திறமும் ஆன்றவொழுக்கமும் அறியப்படுவன. இப்புராணவேடு எனது தந்தை கைவசமிருந்ததை ௧௯௧௫-ல் திருவாரூர் இலக்கண விளக்க பரம்பரைச் சோமசுந்தரதேசிகர் மிக்க பிரியத்தோடும் பிரதிசெய்து கொடுத்தனர்.

இந்தப் புராணத்தைப் பிரகடனஞ் செய்து உதவுவதற்கு எல்லாவுரிமையும் உடையவர்கள், திருக்கைலாய பரம்பரைத்

தருமபுரவாதீனத்து ௨௩-வது மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதிகளே ஆதலின் அப்பெருந்தகையாளர்க்கு இதனை உரிமைப்படுத்தி உரிமையுரை ஒன்று வரைந்து திருச்சமுகத்திற்குச் சமர்ப்பித்துள்ளேன்.

திருஞானசம்பந்தரது திருத்தேவாரம் பெற்ற இப்பெரும்பதியின் இம்மான்மியம் ஸ்ரீ ஸத்தியானந்த ஸௌந்தரி ஸமேத ஸ்ரீ யூதிகா பரமேச்வரசுவாமியின் பிரபாவத்தை எடுத்துக் கூறும் ௯ சருக்கம் உடையது. இச்சருக்கங்களின் வசனத்தைச சுருக்கமாகப் பிற்பகுதியிற் சேர்த்துள்ளேன். முல்லைவனநாதனையும் அணிகொண்ட கோதையையும் பூசித்துப் பேறு பெற்றதாக இப்புராணத்துட் கூறும் சோழவரசன் கிள்ளிவளவன். இவ்வளவன் திருமால் பிரமன் மரீசி காசிபன் விவஸ்வான் மநு இக்ஷுவாகு ககுத்ஸ்தன் மாந்தாதா முசுகுந்தன் (காலனுக்கிது வழக்கெனவுரைத்தவவன்) பிருதுலாக்ஷன் சிபி சோழமண்டலந்தாபித்த சுராதிராஜன் இராசகேசரி பரகேசரி இவர்களுக்குப் பின்னோன். தஞ்சைராஜராஜனுள்ளிட்டார்க்கு முன்னோன், காலனுக்கிது வழக்கெனவுரைத்த வவன் (கலிங். பரணி ௧௭௮). இக்கிள்ளிக்குப்பின் இவன் குலத்துத் தோன்றிய இவன் நாமத்தவர் பலர். அவருட் கூடலாங்கண் பழையன் மாறனைப் பொருது சாய்த்துக் கோதை மார்பனாற் பாராட்டப்பட்ட கிள்ளிவளவன் ஒருவன் (அகம் ௩௪௬, நக்கீரர்). சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் ஒருவன் (புறம் ௩௭௩, கோவூர்கிழார்). சோழன்குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஒருவன் (புறம் ௩௪—௪௧, ௪௬, ௬௯, ௭௰, ௧௭௩, ௨௨௬—௮, ௩௮௬, ௩௯௩, ௩௯௭ ஆலத்தூர்கிழார் வெள்ளைக்குடிநாகனார் மாறோக்கத்து நப்பசலையார் ஆவூர்மூலங்கிழார் கோவூர்கிழார் ஆடுதுறைமாசாத்தனார் ஐயூர் முடவனார் நல்லிறையனார் எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார்), இக்கிள்ளி சிறுகுடிகிழான்பண்ணனைப்பாடிய புலவனுமாவன் (புறம் ௧௭௩). இத்தொல் குடிவளவர் காலத்தே பிராசீனஸ்தலமாக இலகியது இம்முல்லைவாயிலெனின் இதன் தொன்மையும் பெருமையுங் கூறுதற் கியையுமோ? இப்பழம்பதிமான்மியத்தை யாவருமுணர்ந்து சிவபிரானை மெய்யன்போடு வழிபட்டுய்தற் பொருட்டு மஹாசந்நிதானத்தின் கட்டளையைச் சிரசாவகித்து இந்நூலைப் பிரசுரிக்கத் துணிந்த என் துணிவைப் பெரியோர் ஆதரிப்பார்களாக.

ஸ்ரீகாழி, பிரபவஹு
சித்திரைமீ ௧௨ } ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை.

திருக்கைலாசபரம்பரைத் தருமபுரவாதீனத்து

௨௫-வது மஹாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்தபண்டாரசந்நிதியவர்கள்

## திருமுன் விஞ்ஞாபனம்.

பாடாண்டிணை-உடணிலைத்துறை.

உலகு திகழுக வோங்கி யிலகுறும
விளரிவண் டிமிரத் தளையவிழ் முளரி
விளையுண முருக்கத் துளைகரு தோற்றம
களங்கனி மிடற்றுக் கண்ணுத னிறத்துத்
துளங்குவெண் டலைநிரை விளங்குவ கந்தருந்
துடவை செறீஇப் படர்தரும் பாண்டி
மண்டிலத் தவனிபர்க் கொண்டிறற் றகைநீஇ,
யிவனே யிளங்கதிர் தவழுகிர் தோற்றத்துப்
பரைபாற் றளிர்த்த பன்னிறச் சத்தியாக
காவிரி கிளைத்துக் கணைக்கில காலெழப்
பூவிரி வளவர்தம் புனனாட் டாங்கண்
தொண்டியர் பரசுந் தொண்டை யாண்டகை.
நீயே செம்மலை நிலைத்தெனப் பரநாட்
தாயே நிற்பத் தாழ்வி லாற்றலி
னுருப்பிறழ்ந் தொருவ னும்பர் நாணவுந்
தருக்குற் றொருவன் றாணிலை பேணவுந்
துருவிய குறியினைச் சுட்டுதல் கருதி
னொச்சியுங் கிடங்கும் போன்றுநிற் பனவென
நச்சுநர் நவிற்று நாமக் கூடலாய்,
இவனே யுடனுயி ரியக்க மிறைவனை
யிவரிய லின்றி யியங்கா வென்னப்
புலப்படுத் தற்காப் பொறிபல சுமந்த
நலத்தொளிர் முனிவரர் தருமையிற் கூடுவான்.
மங்கல குணந்தான் மலிந்தவ னென்றும்
பங்கமும் மலமில் பண்பின னென்றும்
மிறைசிவ னென்றும் மறைமொழி யவற்று
ளணிநிலை முழக்கும் விரிந்த வாசண
விழுப்பொருள் சொக்க மேலவ னீஇ,
யுருவுரு குறிகுண மடிமுடி நாப்பண்
ணருநிலைக் கட்டுச் சார்பிலா வீடு

துணர்ந்தவ னாகித் தனித்தவன் பதியாம்,
வெண்சிலை போன்று வியனிலை பற்றும்
பண்ணிய னிலையின பசுவாம், அவற்றைப்
பிணித்தி னுறுத்துவ திரிமலம், இவற்றைப்
பண்ணலஞ் செழுத்தே யகற்றுவ வென்று
முண்மைச் சொரூப முவப்ப நுவலு
மண்ணா லாகமத் தப்பொருள் சுட்டிய
மணிய தேசிக மாசிலா மணியிவன்.
அங்கயற் கண்ணி பங்கின னீஇ, யுராப்
பங்கயச செல்வி பாங்கின னிவனே.
கண்ணுதல் கண்டங் கறுத்தோ னீஇ,
ஒண்டக வாங்கவை யொறுத்தோ னிவனே.
அறிவான் றானே யறிவிப் பானே
பறிவா யறியும் அவனுந் தானே
அறியும் பொருளு மவன்றா னேப
புடனின் றாங்குத் திடனுறக் கெழீஇ,
பெப்புற் றனிறை யெனறிசைப் பவாதம்
நெஞ்சற் றன்னவின் னீர்மைய ராகலின்,
பாறு மப்பெரும் பேறளிப் பானும்
நீறு தவப்பூத்த நீயிரே யாகலின்,
இனியவு முளவோ வெமக்கிந் நிலையினும்
மருமலர்க் கமலையும் வளஞ்சால் தருமையும்
குருநில மென்னக் குழீஇய வாறு
திருமுக மலர்ந்த செழுந்தமிழ் வேந்தீர்
பிறிதுங் கேண்மினும் பிறங்கிசை வாழிய
வாழிய நிகமம் வாழிய வாகமம்
வாழிய வடியவர் மாண்பமர் குழாஅத்து
வாழிய தருமை மரபட் டவணை
ஞானசம் பந்த நற்பெயர் கொளீஇ
மோனநா தான்மிய முறுகக் கூடலின்
புறப்புற நெறியும் புறமார் நெறியும்
அகப்புற நெறியு மகற்றியவ் வகஞ்சால்
செம்மை நெறியே யம்மைய சரதம்
ஆங்கனம் வென்றிங் கசைவில்சித் தாந்த
மாப்பெரு வென்றி யடைந்தனிர் நிற்பீர்.
இருவரு மொருங்கே யிசைந்தனிர் மருவலிற்
பெருநில மடங்கலும் பெருநெறி யிலகுறுங்
கைவயப் படுதல் மெய்யே யன்றே
பொய்யா காதென வெய்யா தறைவல்.

## அகவல்

துந்திரு மடத்து நூல்வல் லாருட்
செந்திரு மாலெனச் சீரியன் வடிகள்
பேரா காரன் பேரா முல்லை
வாயி லென்னு நும் வாழ்க்கைமேம் பாடு
மொழிந்தன னதனை வழிப்படுத் துவிமெனை
அச்சத் தோடு நும் பக்க லியம்பும்
கொசசை மழலைக் கோடணைக் குதவுதிர்
பரம்பொருண் மூக்கட் பரமனன் றென்று
முரண்படு மூகர் மொய்வலி தொலைப்பான்
பெரும்பிணி தீர்க்கும் பேருருண் மந்திரஞ்
சைவ மடங்க ளெய்பதி னெட்டினு
மைந்தே யைநதென வநுவதிப் பதற்கா
விருபத நு மூன்று விரும்பு பட்டத்
தம்பெயர் ஞானசம் பநத ராயினிர்.
சாதன முற்றிய சாதிப் பானோங்
கோதன மாநுங் குரைகழற் பணிதலும்.
இறைபணி யாகக் கறைய வெவ்விளை
தேடலி னுகர்விற் கூடலிற் கழித்துச
சேர்ச்சி மாயை செறியிருண் மூலஞ்
சோர்ச்சியி னவியத் தூய தொண்டின்
மலரடி வைத்து மன்னுதா ளுக்கியும்
அலர்ப்பத நிழற்கீ ழமர்த்தி யணைந்திங்
கொப்பச் செய்தும் ஒருவ னாகிச்
செப்பம் நின்றிடச் சீரதி னடக்கியும்
இருத்தி யானந்த சொரூப மியைத்தும்
சிவரூ பந்தொடர் சிவபோ கம்வரை
அணைந்தோ னாகப் புணர்ந்தனிர் கேண்மிம்

அஃதான்று.

நின்மலஞ் சார நிலவிய வவத்தையுட்
பன்மயல் கடிந்து பகரும் விகாமி
யல்ல னுக்கித் தொல்லைச் சாக்கிரம்
தன்வணந் தந்து தாவில் சொப்பனம்
ஆகச் செய்திங் கரும்புஞ் சுழுத்தி
நீரத் தடக்கி நீடருந் துரியம்
ஆனந்தா தீதத் தழுத்திய வதீதம்
பெறுவான் புரிந்து பிணைஇ யுவந்தனிர்.

## அஃதான்று,

உயிர்தனைப் புல்லி யுரியதா னாக்கிச
செயிரற வணைந்து தீதற வடக்கி
வேதித் தமுதஞ் சாதித் திருந்தனிர்,
காந்த மனல்புனல் காந்துங் குளிகை
பொன்னய முப்புப் புகரறு சீருண
மிவற்றொடு மருவ லியைய வீங்குக்
குன்றுத லிலனாப் பொன்றுத லிலனாப்
சமத்துவ முளனாச் சமைத்துப் பத்தி
யாதி யாதற் கிழுக்கிலி ரன்னா
னநுபவ மொன்றற் கருதுண னாக
நல்கினிர் பரவ. நற்றமிழ்க் கமலை
பல்வளஞ் சுரப்பப் பாரகத் துதித்த
ஞானப் பிரகாச மானவ ராதலி
னென்று மினிதி னியைகநும் மியைபு.
சைவநற் கவசஞ் சாத்தி நீவிர்
மெய்ப்புரி வாளாற் பொய்ப்பகை களைஇப்
புகழும் வலியும் நிகழுங் கொடையும்
அளியுங் கவினுதிர் களியாம் பெறற்கே.

## உரிமையுரை.

முப்புவ னத்து மிக்க முல்லைமான் மியமர் மாலை
யிப்புவித் தருமை ஞானத் திலகுமா தீன கர்த்தர்
சுப்பிர மணிய நாமச் சுரேந்திரர்க் குரிய தாமாற்
றப்பிலா தணிந்தேன் முத்துத் தாண்டவ ராயப் பிள்ளை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தென்திருமுல்லைவாயிற்றேவாரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது.

### பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்ட
 னடமன்னு துன்னு சுடரோ
னொளிமண்டி யும்ப ருலகங் கடந்த
 வுமைபங்க னெங்க ளரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
 கமலங்க டங்கு மதுவிற்
றெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடுந்
 திருமுல்லை வாயி லிதுவே. (௧)

பருவத்தில் வந்து பயனுற்ற பண்ப
 னயனைப் படைத்த பரம
னரவத்தொ டங்க மவைகட்டி யெங்கு
 மரவிக்க நின்ற வரனூ
ருருவத்தின் மிக்க வொளிர்சங்கொ டிப்பி
 யவையோத மோத வெருவித்
தெருவத்தில் வந்து செழுமுத் தலைக்கொ
 டிருமுல்லை வாயி லிதுவே. (௨)

வாராத நாடன் வருவார்தம் வில்லி
 னுருமெல்கி நாளு முருகி
லாராத வின்ப னகலாத வன்ப
 னருண்மேவி நின்ற வரனூர்
பேராத சோதி பிரியாத மார்பி
 னலர்மேவு பேதை பிரியா
ளூராத காத னெதிநேர நீடு
 திருமுல்லை வாயி லிதுவே. (௩)

2

ஒன்றொன்றொ டொன்று மொருநான்கொ டைந்து
மிருமூன்றொ டேழு முடனா
யன்றின்றொ டென்று மறிவான வர்க்கு
மறியாமை நின்ற வரனூர்
குன்றொன்றொ டொன்று குலையொன்றொ டொன்று
கொடியொன்றொ டொன்று குழுமிச
சென்றொன்றொ டொன்று செறிவா னிறைந்த
திருமுல்லை வாயி லிதுவே. (ச)

கொம்பன்ன மின்னி னிடையாளோர் கூறன்
விடைநாளு மேறு குழக
னம்பன்னெ மன்பன் மறைநாவன் வானின்
மதியேறு சென்னி யரனூ
ரம்பன்ன வொண்க ணவரா டரங்கி
னணிகோ புரங்க ளழகார்
செம்பொன்ன செவ்வி தருமாட நீடு
திருமுல்லை வாயி லிதுவே. (ரு)

ஊனேறு வேலி னுருவேறு கண்ணி
யொளியேறு கொண்ட வொருவ
னானேற தேறி யழகேறு நீற
னரவேறு பூணு மவனூர்
மானேறு கொல்லை மயிலேறி வந்து
குயிலேறு சோலை மருவித்
தேனேறு மாவின் வளமேறி யாடு
திருமுல்லை வாயி லிதுவே. (சு)

நெஞ்சார நீடு நினைவாரை மூடு
வினைதேய நின்ற நிமல
னஞ்சாடு சென்னி யரவாடு கைய
னனலாடு மேனி யரனூர்
மஞ்சாரு மாட மனைதோறு மைய
முளதென்று வைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கொ
டிருமுல்லை வாயி லிதுவே. (எ)

வரைவந் தெடுத்த வலிவா ளரக்கன்
முடிபத்து மிற்று நெரிய
வுரைவந்த பொன்னி னுருவந்த மேனி
யுமைபங்க னெங்கள் பரனூர்

வரைவந்த சந்தொ டகிலுந்தி வந்து
மிளிர்கின்ற பொன்னி வடபாற்
றிரைவந்து வந்து செறிதேற லாடு
திருமுல்லை வாயி லிதுவே. (௮)

மேலோடி நீடு விளையாடன் மேவு
விரிநூலன் வேத முதல்வன்
பாலாடு மேனி கரியானு முன்னி
யவர்தேட நின்ற பரனூர்
காலாடு நீல மலர்துன்றி நின்ற
கதிரேறு செந்நெல் வயலிற்
சேலோடு வாளை குதிகொள்ள மல்கு
திருமுல்லை வாயி லிதுவே. (௯)

பனைமல்கு திண்கை மதமா வுரித்த
பரமன்ன நம்ப னடியே
நினைவன்ன சிந்தை யடையாத தேர
ரமண்மாய நின்ற வரனூர்
வனமல்கு கைதை வகுளங்க ளெங்கு
முகுளங்க ளெங்கு நெரியச்
சினைமல்கு புன்னை திகழ்வாச நாறு
திருமுல்லை வாயி லிதுவே. (௰)

அணிகொண்ட கோதை யவணன்று மேத்த
வருள்செய்த வெந்தை மருவார்
திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி
திருமுல்லை வாயி றன்மேற்
றணிகொண்ட சிந்தை யவர்காழி ஞான
மிகுபந்த னொண்ட மிழ்களி
னணிகொண்ட பத்து மிசைபாடு பத்த
ரகல்வான மாள்வர் மிகவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பிரதிபேதம்:—க. பாடு. ௯. அரனூர். ௮. அரனூர். ௰. வன.

## சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்.

வைகுமந் நாளிற் கீழ்பான் மயேந்திரப் பள்ளி வாசஞ்
செய்பொழிற் குருகா வூருந் திருமுல்லை வாயில் உள்ளிட்
டெய்திய பதிக ளெல்லா மின்புற விறைஞ்சி யேத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினார் தமிழ்ச்சொன் மாலை.

திருச்சிற்றம்பலம்.

—※—

௳

## பிறங்குசீர்ப் புராணந் தன்னைப்
## பெரும்புலி யச்சி னேற்ற, நிறந்தரு பொன்னை யீந்த
## நிருபர்தம் புகழ் கூறிற்று.

முருந்தன முரலார் முல்லை மான்மியம்
பருந்தன மிறைஞ்சுமத் தருமைப் பண்ணவர்
மருந்தன சுப்பிர மணிய தேசிகர்
கருந்தன மீயநற் காட்சி சான்றதே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமுல்லைவாயிற் புராணம்.

## (க) கடவுள் வாழ்த்து.

### காப்பு.

சத்தி யானந்தத் தாயுமை பங்கினன்
சத்தி யானந் தழைக்குந் தமிழ்ச்சொலுஞ்
சத்தி யாவுந் தருந்திரு முல்லைவாழ்
சத்தி யானையின் றாமரைப் பாதமே.

### மாசிலாமணிநாதர்.

நீர்மருவுஞ் சடைமுடியுந் திருவடியு மாதியந்த நிலைமை காணச, சீர்மருவுந் திருநெடுமா லேனமாய்ப் படியிடந்து தேடக் கஞ்சத், தார்மருவுஞ் சதுர்முகத்தோ னோதிமமாய்ப் பறந்து விண்ணுந் தாழத் தேட, வேர்மருவும் பேரொளியாய் வளர்ந்த முல்லை வனப்பொருளை யிறைஞ்சி வாழ்வாம். (க)

நின்மலமாய் நித்தியமாய் நிட்களமாய் நிராமயமாய் நினைவுக் கெட்டாச், சின்மயமாய்ப் பல்லுயிர்க்குந் தோற்றமா யுணர்வரிய தெளிவு மாகித், தொன்மயமா யைந்தொழிலுந் தொகுத்தருளே தனுவாகித் தோன்றுந் தேவைப், பொன்மதில்சூழ் முல்லைவனத் தினிதிருந்த பரம்பொருளைப் புந்தி சேர்ப்பாம். (உ)

### வேறு.

அல்லைவனப் பழித்தகுழ லருள்பொழிவேற் கண்ணி
யணிகொண்ட கோதையிடத் தணிகொண்ட மணியைத்
தொல்லைவன சத்தவனு நாரணனுங் காணச
சோதியைநா தாந்தபரஞ் சுடரான முதலைத்
தில்லைவனத் தருணடனங் குனித்துநின்ற தேவைத்
தெய்வசிகா மணியைமறை தேடியுங்கா ணாத
முல்லைவனப் பெருமானை மாசிலா மணியை
முக்கணுடைப் பகவனையா முன்னியிறைஞ் சிடுவாம். (ங)

## அணிகொண்டகோதையம்மை.

பூமகளு நாமகளும் போற்றிசைக்கும் பதத்தாளைப் போதார் தெய்வத், தாமநறுங் குழலாளைத் தடவரையைப் பழித்ததனத் தடத்தி னாளைக், காமனுருக் கடிந்தவனுங் காமமுறப் பொருத கயற் கண்ணி னாளைப், பாமருவு முல்லைநக ரணிகொண்ட கோதையையாம் பணிதல் செய்வாம். (௪)

## தக்கணாமூர்த்தி.

மைக்கணாள் மலைமகள் வழுத்து மேன்மைசே
ரக்கணா யகருட னன்று தோன்றிய
முக்கணா யகன்றிரு முல்லை மாநகர்த்
தெக்கணா மூர்த்திதாள் சிந்தை செய்குவாம். (௫)

## வயிரவர்.

உண்ட கஞ்சுகளு செல்வமுண் டருளுமுண் டுளமா
முண்ட கஞ்சுக மலர்தரப் பூம்பொழின் முகத்துப்
பண்ட கஞ்சுகம் பயிலிசைக் காழியம் பதியிற்
கண்ட கஞ்சுக னிணைச்சரண் பணிவது கடனே. (௬)

## வரசத்தி விநாயகர்.

பெருங்களிற்று முகப்பதகன் புயங்களிற்று விழவந்து
மொருகளிற்றின் முன்னடந்தோ னொளிதிகிரிக் கிரங்கிடநேர்
தருகளிற்றி னிருணிறஞ்சேர் சமர்க்களிற்றி னுரியார்பால்
வருகளிற்றைத் திருமுல்லை வனக்களிற்றை வணங்குவாம். (௭)

## முருகக்கடவுள்.

பார்காட்டுந் திசைமுகத்துப் பண்ணவனைச் சிறைகாட்டி
வார்காட்டுந் தனக்கோட்டு வள்ளியொரு புறங்காட்டிக்
கார்காட்டுந் திரைகடலிற் கவிழிணர்மா முகற்றுணியக்
கூர்காட்டு மிருதலைவேற் குமரனிணை யடிபணிவாம். (௮)

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

ஒருமைதரும் பரம்பொருள்பா லுமைமுலைப்பால் தருவிருப்பா
லருமைதருந் திருப்பதிக மண்ணல்தலந் தொறும்பாடிக்
கருமைதருஞ் சமண்கிளையைக் கழுவேற்றிச் சிவசமயப்
பெருமைதரும் புகழ்க்காழிப் பிள்ளையார் பதம்போற்றி. (௯)

### திருநாவுக்கரையராதியர்.

*நாவரசி னருள்போற்றி நம்பிதிரு நாவலூர்த்*
*தேவரசி னடிபோற்றி சிறந்ததிருப் பெருநதுறைக்குண்*
*மேவரசின் கழல்போற்றி மேதகுமந் திரமாலைப்*
*பாவரசின் சரண்போற்றி பரவுமன்பர் பதம்போற்றி.* (௰)

### நந்திதேவர், சண்டேசப்பிள்ளையார்.

*சுரருடம்பினுந் தவருடம்பினுந் துதிநிறைந்தவிஞ் சைய ருடம்பினும், பரவுதண்பிரம் படிதழும்பிடும் பரமநந்திதன் பத மிறைஞ்சுவாம், பிரணவஞ்சொலுங் குரவனந்தணன் பெருகு தநதைதன் றாள்தடிநதவன், றரணணிநதகொன் றையுமணிந்து நின் றருள்வழங்குதண் டியைவணங்குவாம்.* (௰க)

*சைவமே வளர்க வேதந் தளிர்கமா தவங்கள் சூழ்க*
*மெய்வளம் படர்க சென்மேல் வேநதெலாம் வாழ்க வென்று*
*மைவளர் கண்டன் கீர்த்தி மன்னுக முல்லை மூதூர்த்*
*தெய்வமாக் கதைபண் மீது சிறப்பொடு தழைக வென்றே.* (௰உ)

கடவுள் வாழ்த்து முற்றும்.

---

## அவையடக்கம்.

*இரும்பதனாற் பொன்விலைமே விடசசொல்வ போலெவரு மெள்ளு நொய்மைத், துரும்பதனாற் றாண்வலிமை சொற்படுவ போற்கைப்புத் தோன்றும் வேம்பாற், கரும்புமிகு சுவைபெறுவ போற்சிறியேன் புன்கவியாற் கவிஞர் சேர்த்த, பெருந்தமிழும் புகழ்பெறுமா லென்றமிழ்க்கு மவர்புகழ்ச்சி பேச லாமால்.* (க)

*தென்மாந்தை வேளாள னிராகவன்சேய் வீரப்பன் சிந்தை போலு, மென்மனமுந் தழைத்தோங்கி முல்லைவனச் சரிதைசிறி தியம்ப லுற்றேன், பொன்மகளைப் பொருந்தியமால் மண்மகளைப் பிரிந்ததனோ புலமை மிக்கோர், நன்மதியாற் போான வடுகன் வாய்த் தமிழென்று னவைசொல் லாரே.* (உ)

அவையடக்க முற்றும்.

---

## (௨) நகர்வளச்சருக்கம்.

பொன்னுல குவரி யாடைப் புவியினு முளதோ வென்னத்
துன்னுமா ளிகையு நீடு சூளிகைப் பரப்புந் தாவில்
மின்னுதோ ரணமுஞ் சூழும் வீதியும் வேலை யார்ப்பு
மன்னுதென் முல்லை மூதூர் வளம்பல விளம்ப லுற்றேன் (௧)

வேறு.

செய்யகதி ராதவனைப்போ லெழுந்தமுகில் கருங்கடற்றெண் டிரைநீர் தேக்க, மையகங்கு லிருளென்ன வானமெலாம் பரந் துருமு வழங்கி யார்த்துத், துய்யமுடிச் சையமிசை மதிநிலா வெள்ளமெனச் சொரிநீர் மாரி, வையமுழு துய்யவரைக் கையெ னவெள் ளருவிநீர் வழங்கிற் றம்மா. (௨)

வேறு.

அருவி நின்றிழிந் தம்பலப் பொருளரித் துடன்கொண்
டிரவி யீட்டம்போ லாத்தினித் தவழ்ந்துமா வெயினார்
தருகு றிஞ்சியும் பாலையு முல்லையுந் தணந்து
மருத மேபுகுந் திறைவாயல் பதிகளும் வணங்கி. (௩)

வேறு.

கரிய வங்கயற் கண்ணினைக் காட்டிக் காமர் புற்புதங் கனத னங் காட்டிச், சரிம லர்க்குழற் சைவலங் காட்டித் தனிமு கத் தெழிற் றாமரை காட்டிப், பரிபு ரத்தொலி துழனிகள் காட்டிப் பனம ணித்திரள் பலமணி காட்டி, விரிதி ரைத்திரள் தாமரை காட்டி மேவு காவிரி மெல்லியல் செல்லும். (௪)

கரைபெ லாம்பல நவமணி யிறைத்துக் கையெ லாமலர்க் கனிகளை வகுத்துத், தரையெ லாம்புறத் திவலையான் மறைத்துத் தண்க டற்கரைப் புளினமுங் குறைத்து, வரையெ லாம்பெறு முல்லைசூழ் தெய்வ வளந கர்ப்பிரான் மலர்த்துணைப் பாதந், திரையெ லாமலர்க் கரமென விறைஞ்சித் தென்றி சைக்கணே சிறந்தது பொன்னி. (௫)

வேறு.

தடவரைச் சிமய மான தாய்வயிற் சந்தங் கொண்டு
கடமதப் பகட்டின முத்தங் கையரிக் கொண்டு ளரிக் [னி
குடதிசை வளங்கொண் டெங்குங் குணதிசை முகத்துப் பொன்
வடதிசை நோக்கி முல்லை வாயிலை வணங்கச் செல்லும். (௬)

மாருதக் கயிறு பூண்டு வருந்திரைப் புரவி பாயக்
காருடை யோத மோதிக் கறங்கொலி முரச மார்ப்ப
வாருதிக் கிறைநீ ராழி மண்டப வீதி தோறும்
பாருடை மரக்க லத்தேர் பற்பல நடக்கு மாதோ. (௭)

செருக்கொளத் திவின் மீனந் திமிதிமி திமிலஞ் செய்ய
வுருத்தெழத் திமிங்கி லங்க ளுறுசிறு மீன்க ளோட
வெருக்கொளச சுறவுக் கூட்ட மீனேற்று மகரஞ் சீறி
மரக்கலஞ் சாயப் பாய வளர்ந்தது வாரி யோதை. (௮)

ஆயிர மிப்பி சூழ்ந்த விடம்புரி யலைமொத் துன்ன
வாயிர மிடம்பு ரிக்கொண் டணிவலம் புரிச்சங் கார்ப்ப
வாயிரம் வலம்பு ரிசசங் கடர்சலஞ் சலங்கள் சூழ
வாயிரஞ் சலஞ்ச லஞ்சூ ழரியாஞ்ச சனிய மாமால். (௯)

வேலையின் சிறப்பும் வேலை மீதெழுங் கதிரு நீண்ட
தாலமுங் கனிகள் வீழுந் தகைமையுஞ் சாற்றுங் காலை
மாலவன் றிகிரி யேவி வருதிற னிருதர்க் கொன்று
நீலவெஞ் சிரங்கள் வீழ்த்தி நின்றிடும் நிலைமை போலாம். (௰)

வேறு.

சக்க ரந்தவழ் மீனைப் பரதர்வஞ
சக்க ரங்கொடு தாமவலை வீசுதல்
சக்க ரத்துயிர் தோறுந கடவிப்பா
சக்க ரசசமன் வீசுந் தகையதே. (௰௧)

வேறு.

வரம்புநிறை பட்டினத்து வரும்பரதர் படகுதையாக
விரும்பனைகோட் டியாபுன்னை யிளமுகைவெண் கழல்நெகிழ்ந்து
பெருஞ்சுறவங் குழைகாட்டப் பேருவரி திரைநெறிக்கக்
கரும்பனையின் கருக்கெடுத்துக் கலைசுறு வகிர்வரால். (௰௨)

வேறு.

நத்தொடு தமரந் தூக்கி நறைமலர்ப் புன்னை கப்பூங்
கொத்தொடு தாம நாறுங் கொம்பொடு பவளங் கட்டி
முத்தொடு மிப்பி யாடும் பரதர்மா ளிகைமுற் றத்து
வித்தொடும் வினவிற் காய்வ வீசிய வலையு மீனும். (௰௩)

உவரிதன் திரைத்திண் காலா லுதைத்தவண் வலையை யோட்டித்
தவழ்வளைக் கோடு ருட்டித் தடங்கரைப் புளினந் தெற்றிப்
பவளமு முத்துந் தூர்த்துப் பரத்தியர் சிற்றின் முற்றச்
சுவடுபோன் றழிப்பச் சீறுந் தாழனிசேர் முல்லை மூதூர். (௰௪)

வேறு.

செங்குவளை வெண்கமலஞ் செங்கமலங் கருங்குவளை சேர்ந்து கூடிப், பொங்குதிரைப் புனற்றடத்துப் பூம்படாம் போர்த்ததெனப் பொலிந்த காட்சி, சங்குதவழ் முல்லைவனத் தெம்பிரான் றிருநயனந் தம்மி லொன்றுஞ், செங்கதிரை வெண்கதிரைச் செம்பாம்பு கரும்பாம்பு சேர்த லொக்கும். (கரு)

வேறு.

கானகக் கைதை வெள்வாட் கைக்கொளக் கடிப்புன் னைகங்
கானக மெடுத்தோன் மேனி கைக்கொளக் கஞ்சந் திங்கட்
கானக மனைய மாதர் கண்டன முல்லை வாயிற்
கானகந் திருவம் பாடக் கண்டன முல்லை வாயில். (கசு)

காமரம் படருங் கீதங் காவிநேர் கண்ணார் பாடக்
காமரம் படருங் கீதங் காவிநேர் கண்ணே பாடுந்
தாமரைத் தாளைத் தேடத் தரையிடந் தாழனு மீசன்
தாமரைத் தாளைத் தேடத் தரையிடந் தவன்போற் கேழல். (கஎ)

கோலவெண் கோட்டு முத்தின் கோலவெண் ணிலவார் காவே
நீலமா விருளைச செய்யு நீனிறக் கிடங்கே யானை
யோலமிட் டலறற் போற்கல் லோலமே யுவரி நீர்மோ
தாலமே யெனவி ருண்ட தாலமே பரந்த தெங்கும். (கஅ)

வேறு.

வேதமே வளர்க்குஞ் சைவ வேதிய ரிடமுங் கீத
நாதமே வளர்க்கு நல்யாழ் நாடக ரிடமுங் கேள்விப்
போதமே வளர்க்கு ஞானப் பொருளினோ ரிடமுங் கோடா
நீதமே வளர்க்குஞ் செங்கோ னிருபர்வா ழிடமு நீடும். (கசு)

வேறு.

ஆகு திப்புகை யெழுச்சியா லகிற்புகைத் திரளான்
மேக லோகமு மொத்தது பேரின்ப விளைவான்
மாக லோகமு மொத்தது நவமணி வளத்தா
னாக லோகமு மொத்தது முல்லைமா நகரம். (உ0)

வேறு.

கம்பலைப் பரிபுரக் காலி னார்நடச
செம்பொனின் மாடமேற் சித்தி ரங்கள்போ
லம்புயத் திருவனா ராடற் காணிய
வும்பர்கா டியர்புகுந் துறைவ தெங்குமே. (உக)

வேறு.

கொற்ற வர்க்குமொன் றில்லதந் நகரினிற் கொடுங்கோல்
கற்ற வர்க்குமொன் றில்லது பெரும்பொருட் காத
னற்ற வர்க்குமொன் றில்லது சித்தமெய்ஞ் ஞான
மற்ற வர்க்குமொன் றில்லது வறுமையின் வழக்கம். (௨௨)

வேறு.

பலமடற் குறுமுள் வெண்பூப் பசிளங் தாழை மன்றத்
தலம்வருங் குளிர்ப்பூந் தென்ற லினைநதவர் மறுகிச் செல்ல
விலவிதழ்க் கருங்கட் செவ்வா யிளஞ்சொலார் தோளு மார்பும்
புலம்விடாப் பாதப் போதும் பொருந்தவா டவரைத் தோய்வார்.

கேதகை மடற்பூ வாசங் கிடங்குதோய் நெய்தன் மண்டப்
போதரு புன்னை வேரி பொழில்கொளும் வீதி தோறும்
மாதர்மென் முலையிற் சாந்த மலர்க்குழல் மணங்கள் சூழுஞ்
சீதள முல்லை வாசந் திருக்கோயில் வலமாச செல்லும். (௨௪)

வேறு.

பொன்ம திற்புனை ஞாயில்சூழ் வாயிலிற் பொலிந்த
தொன்ம திப்பசும் பொன்னெடுங் கோபுரத் தொகுதி
முன்ம தித்திசை நிதியவன் மொய்வகை யிறினும்
பின்ம தித்தயன் சமனுமாய்ப் படைத்தெனப் பிறங்கும். (௨௫)

வேறு.

நிரைதரு பதிக டோறு நீடுரு ளிகைக டோறும்
வரைதொறுங் கோபு ரத்து வயின்றொறுங் கொடிக ளாடுங்
கரைதருங் கடலிற் றவுங் கறங்குதெண் டிரையே யன்றித்
தரைதரு மலைக டோறுந் தாவுவெண் டிரையுண் டென்ன. (௨௬)

தினமரு மாலை வேலை மலர்தரச் செய்த லாலும்
வனமுலைப் பெயரி னானு மானிரு நோக்கத் தாலுஞ்
சனகனுக் கருள்வோன் மேனி தழும்புற வளைக்கை யாலும்
வினவிடைக் கொடியி னாலுங் கவுரிபோல் விளங்கு முல்லை. (௨௭)

நகர்வளச்சருக்கம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம் ௪௪.

—※—

## (௩) நைமிசச்சருக்கம்.

முல்லை மாநகர்ப் பெருமையு முல்லைபூ சனைசெ
யெல்லை காணரு மாசிலா மணியரு ளெழிலு
மொல்லை யிற்கதி யளித்ததீர்த் தங்களு முணர்ந்தோர்
சொல்ல மண்மிசை விளங்கிய வளஞ்சில சொல்வாம். (௧)

ஆதி தன்கயி லாயமால் வரைபிரிந் தறியா
நீதி கொண்டவேழ் முனிவரு முனிவரு நீர்மைக்
கோதி லாதவ ரருளெண்ணு யிரத்தவர் குழுவுஞ்
சோதி நேமியான் பேரவை யெய்துவான் றுணிந்தார். (௨)

அரவ ணைக்கடற் சேக்கையா னருள்முனிக் கடலை
வரவ ணைந்துளா னெதிர்ந்தனன் பணிந்தனர் வந்தார்
சிரவ ணக்கொடு மஞ்சலி யொடுமவர் சேரல்
சரவ ணத்தன்முன் வானுளோர் சூழ்ந்தவத் தகுதி. (௩)

தனித்த னித்தனிப் படமுனிக் கணத்தவர் தம்பா
லினத்த ராயெழீஇ யாதிவண் சென்றவா றென்றான்
முனித்த வத்துளோர் மகம்புரி நீணெறி முன்னி
நனித்த வம்பெற வேண்டிடம் நல்கென நவின்றார். (௪)

அருப்ப மாயரி யம்புயற் குரைப்பவங் கவனோர்
தருப்பை வாங்கியோர் நேமியொன் றுருட்டமுன் சார்ந்த
திருப்பு விக்குளிங் கிருப்பிரென் றந்தணன் செப்ப
விருப்பு றும்பதி நைமிசா ரணியமாய் விளங்க. (௫)

மூடுங் கார்முக வண்டுமேற் சூழ்தலான் முகில்வா
னீடுந் தாமத்தாற் றுமத மெல்லைநீங் குதலால்
வாடுஞ் சோலையா லங்கியங் கடவுள்முன் மகிழ்ந்து
நாடுங் காண்டவ வனமொக்கும் நைமிசா ரணியம். (௬)

மோன மாகுவர் சிலர்சிலர் தருப்பைகள் முடிவர்
தான மீகுவர் சிலர்சிலர் தவம்பர வுவரா
ஞன மாடுவர் சிலர்சிலர் நற்கலை நனைவா
ரான வித்தொழில் முனிவர்வாழ் நைமிசா ரணியம். (௭)

சரியை யுள்ளவர் யோகசா தனையுளோர் தாவாக்
கிரியை செய்பவர் ஞானிகள் மோனிகள் கேள்வி
தெரியும் ஞாதுரு ஞானமே யத்திறந் தெளிந்தோ
ரரிய வேள்வியர் வாழ்வது நைமிசா ரணியம். (௮)

புனித வாவிகள் சமிதைகள் பலர்மலர்ப் பொழில்கள்
கனிகள் காய்கள்நல் லடகுகள் தருப்பைகள் கனவிக்
கினிய வத்திர வியங்கள்சா லிகள்விளை தடங்கள்
நனிவ ளர்ந்திட நல்குமால் நைமிசா ரணியம். (௯)

ஆய நைமிசா ரணியத்தம் முனிவர்சூழ் வந்து
மேய மாதவச் சூதனை வேதியர்க் கெல்லா
நாய கன்றனைப் பணிந்தவ னருள்பெற நாடித்
தூய மேனியன் சவுனக மாமுனி சொல்வான். (௰)

எண்ணி லாவருட் சூதனே யிருந்தவக் குன்றே
நண்ணி நீடுமெய்ஞ் ஞானகா ரணஞ்சொல காவி
னெண்ணில் யாவரு முய்ந்திட மறைப்பொருள் விரித்து
மண்ணில் யாவரு முய்ந்திடச் சிவகதை வகுத்தோய். (௰௧)

மங்க ளேசர்தம் பெருமையு மந்நகர் வளமு
மங்க ணுற்றிடு புனிததீர்த் தங்களி னடைவு
மெங்க ணும்பெறற் கரியவின் பமுந்தெரிந் திசைத்தோய்
தங்க வாய்மையா லறிந்தன முளத்தினுந் தரித்தோம். (௰௨)

அன்று முல்லைமா வனமென வைம்புலப் பகையை
வென்ற நம்மிறை வியாதனு மதன்பெயர் விரித்து
நன்று நன்றென யாமெலாங் கேட்டுள நயப்ப
வென்று மேன்மையா மப்பதிக் கெல்லையு மிசைத்தான். (௰௩)

தவமெ லாம்பயன் பெறவரு டருவது தவத்தோர்
பவமெ லாந்தொலைத் திடுவது தடங்கடற் பார்பாற்
சிவமு லாவிய பூமியு மானது நீயோ
ரவமெ லாந்தொலைத் தறிவுமே லாக்கிய தவ்வூர். (௰௪)

அளவி னேய்தனக் கொடுக மாவதந் தணர்க்கு
மளவி லாதவப் பரம்பொரு ளாமமாயிதில் வாழ்வோர்க்
களவில் செல்வமுந் தருவது சீர்த்தியுந் தருவ
தளவில் வைபவம் யாவையுந் தருவதா மவ்வூர். (௰௫)

என்ன முன்னைநா ளகத்தியன் வதிட்டனோ டெழுவ
ரன்ன வத்திரி யின்றுடன் யாவரு மறிய
முன்ன ருங்கவி வியாதவன் றுரைத்ததை முதியோ
யுன்னி யங்கதன் விரிவெலா மறைதியென் றுரைத்தான். (௰௬)

சவுன கன்சொலக் கேட்டலு மயமொழி தவமுன்
மவுன நீங்கினன மகிழ்ச்சியா லோங்கினன் வகுப்பான்
மவுனத் தோரோடு மருளொடும் பொருளொடு மடைவிற்
கவன மாப்பரிக் கதிரெனுஞ் சூதனுங் கலைஞன். (௧௭)

தொல்லை நீர்மைசேர் சவுனக கேட்டியாற் சுருதி
யெல்லை காணியன் முனிவிருங் கேட்குதி யிசைக்கேன்
முல்லை மாவனத் தமலன்வீற் றிருந்தவம் மூதூர்ச்
சொல்லை யும்பொருட் பயனையுங் கடந்திடு தொகுதி. (௧௮)

வளர வெற்பின்பாற் பிறந்திடுங் காவிரி வடபா
லுளதலங்கள்மெய்ஞ் ஞானபூ மிகளவற் றுறைந்தோர்
கிளர மூழ்கினோர் புனலுடற் கொள்பவர் கிளையோ
டளவி லாப்பரப் பிரமத்திற் காணிபெற் றடைவார். (௧௯)

வேறு.

காவிரிநீர் குடகத்து வேதன்மகம் புரியுங்
கனறகுண்ட தீர்த்தமாங் கடவுளகத் தீசர்
மேவுமதன் கீழ்பாலின் மேனோக்குந் தரமாம்
வியன்றீர்த்த மதன்கீழ்பாற கனகமெனுந் தீர்த்தந்
தாவிலா வதன்கீழ்பா லெய்ப்பில்லாத் திரைசூழ்
சையமா மலகமெனச் சாற்றுமிரு தீர்த்த
மாவியென விசையநதி காவிரிசங் கமமா
யணையுமிட மரியதலம் வினையனைத்து மகற்றும். (௨௰)

செழுங்கயிலை யெனுநதிதென் காவிரியா நதியாந்
தீர்த்தத்தென கீட்டிசையிற் றிகழீங்கோய் மலையிற்
றொழுமமரர்க் கருளுதவுஞ் சோதியவர் கீழ்பாற்
றுகளறுசிந் தாமணியாந் தீர்த்தத்தென் றாய
விழுமமுறு தாயுமாம் விமலர்வட கரையின்
மிக்கதிரு வானைக்கா வியனாவ லீசர்
பழம்பதிவைத் தியநாதம் கீட்டிசையன் பிலாலந்
துறைப்பதிக்கீழ் மழபாடி வைத்தியர்தம் பதியே. (௨௧)

போற்றியவப் பதிதென்கீட் டிசைதனிலை யாறு
புகழ்தருகை லாசகிரி தரிசனந்தந் தருளிச்
சாற்றுதமிழ்த் திருநாவுக் கரசினையாட் கொளுமா
தலமதன்பூ ருவதிசையிற் றாரகமெய்ப் பொருளா
யேற்றமிகு சிவகுருநா யகன்மறைகள் பரவ
வினிதமரு மலையதன்கீ ழெழிற்குடமூக் கமலன்
காற்றுறுநற் றிசையதனி லோரண்ட முனிக்கோன்
கருதுதிருக் கொட்டைநகர் கவினதன்பூர் வத்தே. (௨௨)

கணபதிபங் கலமுறநற் பூசனைகள் புரியுங்
கண்ணுதன்மங்க லப்பரமர் திருநகரப் பதியின்
குணதிசையிற கற்பகத்தா யுமையொடக் கினிசர்
குலவுமெழிற் கஞ்சனூ ரப்பதியின் கீழ்பா
லிணையிலகத் தியமுனிக்குத் திரிகோடி யுருவ
மெநதையரன் காட்டவக மகிழ்நதுடனம் முனிவன்
மணமலர்கொ டருசசிக்கும் பெரும்பதியப் பதிக்கு
வடகுணபா லிருக்குமொரு வளம்பதிசா றறுதுமே. (உ௩)

அரியதவ மியற்றவெம திறைவர்தரு வரத்தா
லாயிரத்தெட் டண்டமுழு தரசுபுரி சூரன்
பெருவலியா லமரர்களைப் பெருந்துன்ப மாற்றிப்
பீடுளவெங் கோனடத்திப் பெற்றியிறு நாளி
லொருவியொளித் திடுமமர ரேவுதலின் மார
னொளிநதுமலர்க் கணைவிடுப்ப வுடலெரிய விழிக்கும்
பரமனது திருக்கொறுக்கை யெனவுரைவீ ரட்டப்
பழம்பதியப் பதிவடகீழ் பாற்பதியொன் றுளதால். (உ௪)

ஆதித்த நகரெனவாங் கருப்பறிய லூரி
னைங்குற்றம் பொறுத்தருளு மாதியமர் தருமக்
கோதில்வட குடபாலிற கலைசசிபுரி யன்பிற்
குனிநதுகலை யர்க்குநிமிர்ந தருளுமிறை வைகும்
வேதமுறை திருப்பனைதா லப்பதியின் கீழ்பால்
விமலர்பசு பதியீச ரமர்நதருளு மாங்கே
சோதியுமை பநதணைநல் லூரெனவா கமநூல்
சொல்லியநற பதியதறகுத் தொகுதகுண வடக்கே (உ௫)

வானவர்மா முனிவரரும் வணங்கிமகிழ்ந தேத்தும்
மதிமவுலி யொருபங்கின் மலைமகளுக் கினிய
மோனபர ஞானமறை முழுவையுரைத தருளு
முழுமுதல்வை கியதிருவோ மாம்புலியூர் மருங்கி
லீனமிலீ சானத்தின் பிரமபுர மாகு
மிதன்கீழ்பா றகுநகாலூ ரிறைவர்பதிக் கிப்பாற்
றேனமரு மலர்சசோலை நவதீர்த்த முளதாந்
திகழுமுல்லை வனநாதர் செழும்பதியீ தாமே. (உ௬)

வேறு.

இன்ன மெண்ணிலாத் தலமுள பரமன்வா மெழுல்லை
யன்ன வித்தலங் கட்கெலாஞ் சிறப்புடைத் தாகும்
பொன்னி மாநதி யெல்லையி லிருந்தவன் புகழை
யென்ன சொல்லுகே னவனரு ளாற்சிறி திசைக்கேன். (உ௭)

ஆதி யந்தமி லாதவ னணிகொண்ட கோதை
பாதி கொண்டமெய்ப் பங்குகொண் டிருந்தருள் பரம
னாதி யந்தணன் முல்லையந் தழும்புடைத் தலைவன்
சோதி யெம்பிரா னிருந்தன னருந்தவர் துதிப்ப. (௨௮)

ஐய னாலயத் தனிலமா திசையினி லங்கள்
கையி ராயிரம வதனமோ ராயிரங் கரந்து
செய்ய வார்சடை முடிமிசை யிருந்துவாழ் திறம்போல்
வைய முய்யவோர் கூபத்திற கங்கையாள் வாழும். (௨௯)

செங்க ணாபக னாலயத் தங்கிமா திசையிற்
பங்க யாசன னாலிரு கையினாற் பயின்ற
துங்க வேள்வியின் விதியெலாம் புவியெலாந் துதிப்ப
மங்கை பங்கனு நாட்டிவான பிரமமா தீர்த்தம். (௩௰)

பண்ணு லாமொழி யுமையவள் பங்குறை முல்லை
யண்ண லாலய முன்னரப் பொன்னியி னணித்தாய்
மண்ணில் யாவர்க்கும் வான்பதத் தேவர்க்குமற றெவர்க்குந்
தெண்ணி லாவெழுந தெனப்பெறுஞ் சநதிர தீர்த்தம். (௩௧)

பொன்னி மாநதி போன்றது புராதனக் காசி
தன்னி னன்னதி யொத்தது குறுமுனி தாங்குங்
கன்னி வானதி யானது கறைமிடற் றிறைவன்
சென்னி மேனதி திகழ்நதது சநதிர தீர்த்தம். (௩௨)

கன்ம சஞ்சிதங் களையெலாங் களைந்திடுங் காணிற்
றொன்மை யாணவ மலத்தையும் புலர்த்திடுந் தோயில்
வன்ம வெம்பிணி யகற்றிடு முட்கொளின் மாறுச
சென்ம நோயையு மாற்றிடுஞ் சநதிர தீர்த்தம். (௩௩)

திரைவ ழங்கிய நுரைபெறுச சநதிர தீர்த்தக்
கரையி னிறசிவ லிங்கமொன் றுளதுதண் கயிலைப்
பரைப ரம்பொரு ளுடனுய்வீற றிருந்திடும் பத்த
ருரைக டந்தபே ருலகநா யகரென வோத. (௩௪)

ஓது மவ்விலிங் கந்தனை யிடைவிடா துவந்து
போது மூன்றினு மருச்சனை புரிந்துமுன் போற்றித்
தீது தீர்த்திடும் தேவரு முனிவர்தங் கிளைஞ
மாது பாகன்றன் பணிபுரிந் தவ்விடை வசிப்பார். (௩௫)

### வேறு.

கார்த்திகைத் திங்க டன்னிற் கருதரு திங்க டன்னிற்
சாத்திர முறைமை தன்னிற் சந்திர தீர்த்தந் தன்னி
லேத்தியே மூழ்கி னோரில் வாழ்வினிற் குபேர னவர்
நீத்திடுந் துறவோ ராய்மே னிமலனார் பதத்தைச் சேர்வார் (௩௬)

செஞ்சடை முல்லை நாதன் றிருக்கோயிற் றென்கீழ்ப் பாலா
மெஞ்சலில் முனிவர் வாச மெண்ணிலாக் கதிகள் பெற்றோ
ரஞ்செழுத் துருவோ ரொன்றே யாயிரங் கோடி யாகுஞ்
சஞ்சிதப் பகையா காசத் தானமென் றதற்கு நாமம். (௩௭)

### வேறு.

சந்திரவி னடந்தபிரான் றிருமுல்லை வனப்பதியிற் றனது பேராற், சந்திரதீர்த் தம்மெனவோர் தீர்த்தம்வகுத் தப்புனலிற் றாழ்ந்து தோய்ந்து, சந்திரிகை மேனிமிசைச் சடரோக மேறிவருஞ் சாபந் தீரத், சந்திரன்முன் னெடுங்காலந் தவம்புரிந்து சுரரேத்துந் தகுதி பெற்றான். (௩௮)

மாயிருஞா லப்பரப்பின் மலரனைத்துங் கொணர்ந்துமுல்லை வனந்தா னன்பா, லாயிரநா மமும்பரவி யாயிரத்துப் பத்துமல ரர்ச்சித் தேத்திப், பாயிரவி படரொளிபோற் பயில்கயிலைப் பரமனிருக் கையின் பாங்க, ரேயிருந்தான் சடாயுமுனி சிவார்ச்சனை பலப்பெருமை யியம்பற் பாற்றே. (௩௯)

சுந்தரனென் றொருநிருபன் வெண்குட்டந் தொலைந்தறவுந் தூய்மை யாகச், சந்திரதீர்த் தம்படிந்து தருணவுருக் கொண் டெழுந்தான் றவா விஞ்சைக், கந்திருவர் மாகதியூா சேர்ந்துமா கதியனைத்துங் கைக்கொண் டாரா, லிந்திரனார் விண்ணுள்ளோ ரெண்ணிலா ரிறைஞ்சியரு ணண்ணி னாரே. (௪௰)

தனுகரண புவனபோ கத்தளையான் மும்மலமுஞ் சலிப்ப வேங்கி, நினைவரிய தோற்றக்கி லிறந்துபிறந் துழலுமுயிர் நிலைகட் கெல்லா, மனவரத மருள்பொழியுந் திருவுருக்கொண் டிமையவல்லி யநுசந் தான, மினிதிருந்து விளையாடு மாடரங்கு முல்லைவன மென்று கண்டாய். (௪௧)

விண்விளங்க மிளிருமைஞ்ஞூற் றிரட்டிகடுங் கதிர்க்கிரணம் விரித்துக் காட்டி, மண்விளங்க விருடீர்ந்து வரும்பகலோன் றிருமுல்லை வனத்தான் றனைப், பண்விளங்க விசைபாடிப் பணிமலர் கொண் டினிதிறைஞ்சிப் பரமன் மேனிக், கண்விளங்குங் காட்சி யினால் மாட்சியவ னருள்சாட்சி கைக்கொண் டானால். (௪௨)

ஒருமையின்னா ரிருவரொடு முப்பொழுது நான்மறையஞ்
செழுத்து மோதித், திருமுகமா றுடையவே ளுலகேழுந் திசை
யெட்டுந் திருத்தோள் வேய்ந்த, வுருமணியொன் பதுமொளிரப்
பத்தியொடு முருத்திரர்பன் னொருவர் போற்றும், பொருளை
முல்லை மாபதியிற் பன்னிருகைத் தாமரையாற் பூசித் தானால். ()

கடதடக்கிம் புரிக்கோட்டுக் கரடகும்பக் களிற்றுமுகக்
கடவுள் கண்டு, தடமலர்கொண் டினிதிறைஞ்சி வழிபடுதற
கிசைந்ததுமித் தலமே சைல, மடவரலோர் பாகுடையான்
றனையங்கா ரகன்பன்னாள் வணங்கி யேத்திப், படவரவஞ் சிரத்
தேந்து பார்முழுதுந் தானரசு பரித்தா னன்றே. (சச)

அகலிகைசா பந்தீர்த்த வவதாரந் தனிநெடுமா லருச்சித்
தேத்திப், புகலுமுனி சபித்ததெய்வ மகளொருத்தி கல்லுருவப்
புரையுந் தீர, விகலவிளைத்த விலங்கையர்கோ னனையரை யடு
பழியி னிடும்பை தீரத், தகவுரைத்த சடாயுமுனிக் குதவியே
யித்தலத்திற் றவஞ்செய் தானால. (சரு)

தேன்முகத்துச் செழுங்கமலத் திருமலர்ச்சிங் காதனத்திற்
சிறந்து வாழு, நான்முகத்துப் பெருங்கடவு ளோடாறு மிக
வேள்வி நடத்தி வேத, நூன்முகத்து முறைவழுவா தியற்றி
யும்பர் வாழ்ந்திருந்து நூற்றான் போற்ற, வானமுகத்தைத்தொடு
மதில்சூழ் முல்லைவனத் தான்றனை வணங்கி னானே. (சசு)

## வேறு.

கைப்பொருள் கவர்தல் பொல்லாக் கள்ளுணல் பிரம கத்தி
மெய்ப்படு மாசா னில்லை விரும்பலிங் கிவைக் கூட
லிப்பரி சுரைத்த பஞ்ச பாதகத் திடரு நீக்குஞ்
செப்பரு முல்லை வாயிற் சிறந்துள பஞ்ச தீர்த்தம். (சஎ)

சீகரந் தரளம் வீசுஞ் சிறந்தகா விரியின் மூழ்கி
மாகமா மகத்தி லம்மா வாசியி லுச்சிப் போதி
லேகநா யகனை முல்லைக் கிறைவனை யிறைஞ்சு மன்பர்
போகபூ மிக்கும் வேலைப் பூமிக்கு மரச ராவர். (சஅ)

கங்கைவான் பொன்னி மூழ்கிக் கடும்பகல் முல்லை மூதூர்
மங்கையோர் பாகங் கொண்ட வள்ளலை வணங்கி னோர்கள்
சங்கையில் காள கண்டஞ் சதுர்ப்புய முக்க ணோடுஞ்
செங்கைமான் மழுவுந் தோன்றச் சாரூபம் பெறுவர் திண்ணம்.()

### வேறு.

வனிதை பங்கொடுந் திருமுல்லை வனத்தில்வாழ் வள்ள
லினிதி னருமவ் வெல்லைக்குத் தென்றிசை யிலங்கத்
தனியெ ழுஞ்சுட ரருட்குரு மூர்த்தமே தரித்து
முனிவ ரின்புற விருந்தது தக்கணா மூர்த்தம். (௫௰)

நாடி முத்தனைத் தக்கணா மூர்த்திசந் நிதியைத்
தேடி முத்திசே ரஞ்செழுத் திடையினிற் செபித்தால்
வீடி ருந்திடு நிச்சய மேகுரு விளம்பக்
கோடி லக்கமு மிக்கதோ ருருப்பலன் கொடுக்கும். (௫௧)

தந்தை செல்கதி யடைந்திடத் தந்தைமெய் யங்க
மெந்தை முல்லைமூ தூரினின் மகவுகொண் டேகி
வந்த வெல்லையில் மணஞ்செய்பொன் மலரென மலர்ந்தா
லந்த வெல்லையின் பெருமையா ரறிபவ ரறிவோய். (௫௨)

### வேறு.

திரிசங்கு மன்னன் முன்னஞ் செப்பிய சாபந் தன்னிற்
பரிசங்குத் தொடர முல்லைப் பதியில்வந் தணுகத் தூய்மை
புரிசங்கப் பொன்னி யாடிப் போதமூன் றினுமுன் போற்றிச்
சுரிசங்கப் படையான் காணச் சோதிதன் னருளே கொண்டான்.

### வேறு.

முருந்து முல்லையு மொத்தகூ ரெயிற்றுமை முதல்வன்
குருந்து நீழலான் முல்லையம் பதியில்வாழ் கோமான்
றிருந்து மேனியைக் கண்ணினாற் றெரிசிக்கச் சிலநாள்
வருந்திச் செய்தவத் தோர்க்கன்றி யாவர்க்கு வருமே. (௫௪)

கிளர்த்து மாதவச் சவுனக னாதியீர் கேளீர்
துளக்க மற்றவிச் சரிதையை விளம்பலாற் றூயே
னளப்ப ருந்தவஞ் செய்தன னீங்களன் பாக
வுளத்திற் கேட்டதுந் தவப்பல னாமென வுரைத்தான். (௫௫)

நைமிசச்சருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம் ௯௯.

## (ச) அங்கம் இரத்தினமான சருக்கம்.

தொகைப்பட வுரைத்த மூதூர்த் தொல்லைமாக் கதைக டம்மிற்
புகைத்தடம் பூத்த வென்பு புனைமணி பூத்த வென்றாய்
பகைத்தவைம் புலனை வென்றோர் பரவுமற் புதனே யெம்பால்
வகைப்பட விரித்தே யந்த வாறெலா முரைத்தி யென்றான். (க)

இன்னுமாக் காதை தம்மு ளென்புசே ரியல்பை யெல்லாம்
பன்னுவா யடைவி லென்று சவுனகன் பகரக் கேளா
வுன்னுதற் கரிய வின்ப வுணர்ச்சியா னுலகு வாழ
மன்னுமன் பெழுந்த சூத மாமுனி வகுப்ப தானான். (உ)

### வேறு.

தென்ம லைப்பிரான் செந்தமிழ் மாமலைத் தென்றல்
சின்ம யப்பொரு ளறுபத்து நான்குசீ ராடல்
மன்ம கிழ்ச்சிசெய் சங்கமே வண்டமிழ் வளர்ச்சி
நன்ம லைப்பொழில் சூழ்வன பாண்டிநன் னாடு. (ங)

பைந்த மிழ்த்துறைப் பாண்டியன் பாண்டிநன் னாட்டி
லந்த ணர்க்கெலா முதியவ னறுதொழி லாளன்
செந்த ழல்பொலி வேள்வியிற் றாழ்விலாச் செல்வன்
பந்த முற்றவெம் பவத்தையுந் தவத்தினாற் படுத்தோன். (ச)

சாதி மேன்மையான் றருமசீ லத்தினன் றரணி
வேதி யர்க்கெலா முபநிட தப்பொருள் விரிப்போ
னோதி யாவையு முணர்ந்தவ னோதாது முணர்ந்தோன்
பேதி யாவருட் சுசாவியென் றுரைத்திடும் பெயரோன். (ரு)

சுசாவி யென்பவன் சுருதியு மிருதியின் றொகையு
முசாவி யந்நிலை யொழுக்கமும் விடாமலே யுணர்ந்தெண்
டிசாமு கத்தினு மெண்ணில்மா ணாக்கரைச் சேர்ந்தான்
விசால மாம்பொரு ளுண்மறை நான்முறை விரித்தான். (சு)

இந்த வந்தணன் தவம்பெறு மைந்தர்க ளெண்ம
ரந்த மைந்தர்க்குச் செயுங்கட னனைத்தையு மடைவின்
முந்த நான்மறை நான்முறைச் சடங்கொடு முடித்தான்
செந்த ழற்றொழி லுதவினா னெண்மருந் தெளிய. (எ)

அனைய மைந்தர்க ளெண்மருஞ் செல்வமோ டகத்திற்
புனையும் வேள்விகள் வீற்றுவீற் றாகவே புரிந்தார்
நினைவ ருங்குல வொழுக்கமும் வணக்கமு நிறைந்தா
ரினையர் தந்தைதா யிடத்தினில் வழிபடற கிசைந்தார். (அ)

இந்ந லத்தினு லெண்மரும் பெரியரே யிவர்க்குண்
முன்ன வன்பெயர் வாமதே வன்றவ முதிர்ந்தோ
னின்ன வர்க்குளு மிவன்மீது பீடுளோன் றந்தை
சொன்ன சொற்றவ றுவகை வழிபடுந தொழிலோன். (க)

தூய நற்றெழின் மைந்தர்மா ணுக்கருஞ் சூழ
நேய முற்றனன் செயுந்தவ நீத்திலா னெடுநா
ளாயி ரம்பிறை தொழுதவ னிருநதன னப்பான்
மாய மெய்த்தனு வொழிநதருட் டனுக்கொடு மறைந்தான். (ம)

பெற்ற தந்தையுஞ் செல்கதி யடைந்தனன் பின்னர்
மற்ற மைந்தரில் வாமதே வனுமன மயங்கிச்
சுற்ற முந்துணைத் தம்பிய ரும்புடை சூழச்
செற்ற நீங்கில னுமறைச் சடங்கெலாஞ் செய்தான். (மக)

வேத வாய்மையின் மற்றைநாள் விதித்தது முடித்தா
னேத மில்கடத் தென்பெலா மன்பினு லெடுத்து
மாத லங்களில் வைப்பதே கடனென வநதா
ருத லாற்பெறும் புதல்வர்செய் கடனிது வன்றோ. (மஉ)

வேறு.

கும்பத் தினிலென் புசுமந் தொருவன் கொடுமுன் வரமுன் வருவான் முனிவோ, ரும்பர்க் கிணையென் றதவம் புரிவோ னொருவன் பலதன் கிளையுஞ் செலவே, யிம்பர்க் குளருந் தலமெங் கணுநா மினியே குவதே கடனு மெனவே, செம்பொற் கமலந் தருதண் புனல்சேர் திருமா மதுரைப் புரமே வினனுல் (மங)

வைகைத் திருமா நதியா டியதின் மறிபின் டழுமங் கிடுவா னதன்மேற், பொய்கைக் கரையிற் றாளந் திகழும் பொற்று மரைமூழ் கிமிகுங் கடனே, செய்தற் கிசைவான் மறையின் படியே திலதர்ப் பணமங் கடைவிற் செய்தபின், பையத் தருமா முனிநா யகனும் பாரத் துவசன் பதநண் ணினனுல் (மச)

கண்டன் பொடுசென் றுவணங் கியபின் கனிவா முனிவோ ரினிதா மருளே, யுண்டென் றுமகிழ்ந் திறைவன் பதிமீ தொரு நா ளிருநா ளுறைவா னருண்மேற், கொண்டென் பொடுசென் றிடுவான் மனனங் குலவந் தணரோ டியர்கா விரிவாய், மண்டுங் கயிலா யமிறைஞ் சியபின் வாழ்சம் புவனப் பதிவை கினனால். ()

தங்குஞ் சிவலிங் கமிறைஞ் சிவரந் தருகூ ரியபுட் கரத் தலமும், பங்கந் தவிர்பஞ் சநதிப் பதியும் பகர்மா யூரப் பதியுந் தங்குந், துங்கம் விளைநற் புன்கூர் வேளூர் சொல்லணி காழிப் பின்குரு காவூ, ரங்கங் கிளுமங் கமொடுந் திரியா வவன் முல் லையரும் பதிகண் டனனால். (௧௬)

பலகூ ளிகையும் பயில்மா ளிகையும் பணிமே டைகளும் பகர்சா ளரமுந், தலவா சமுறுந் தவவே தியருந் தவஞா னிய ருந் தகவா ழிடமுஞ், சிலதோ ரணமுந திரள்வீ திகளுஞ் சில சோ லைகளுந திகழ்சா லைகளும், புலவோ ரிடமும் புலவோ ரிட மும் புனைமுல் லைவனந் தனிலெய் தினனால். (௧௭)

வேறு.

மோகசா லங்கடந்து முனிவிழந்த முனிவோர்கள் முடிவி லாத, யாகசா லையுநதேவ ரியாவருக்கு மவியுதவ யாண்டு மின் னும், பாகசா லையுநதவத்தோர் பன்னகசா லையுமுதிராப் பாலன் வாழும், ஏகசா லையும்புவியி லிநதிரஞா லமும்போலு மினைய கண்டான். (௧௮)

இளமைமா றுவண்ண லென்றுமழி யாதபிரா னிறைவ னன்பாற், களமைமா றுவுருவக் காலனர சழித்தருளுங் கடவுள் மேன்மை, யுளமைமா றுப்பெருமை யரன்முல்லை வனத்தோர் பால் மேலைப் பாலை, வளமைமா றுத்தவஞ்செய் மார்க்கண்ட ளுச் சிரம மருங்கு சேர்ந்தான். (௧௯)

வெண்ணிலவு பொழிந்ததென்ன வெண்ணீறு திமிர்ந்ததிரு மேனி தோன்ற, வெண்ணிலக்க வடமாலை காஞ்சிரமார் பிலங்க முந்நூ லிலங்க நீங்காப், புண்ணியன்சீ ரஞ்செழுத்து நெஞ்சழுத் திச் சிவயோக போகத் தோடு, நண்ணியஞா னனந்த மார்க்கண் டன் றவசிருந்த நலனுங் கண்டான். (௨௦)

சயிலமென்ன வினிதிருந்த தவராசன் முன்றனது தந்தை யங்கம், பயிலுமொரு குடத்தைவைத்துப் பற்பலகாற் பணிந்தெ ழுந்து பரவா நின்றான், கயிலைமலைப் பொருளருள்சேர் கவுணி யர்கோன் புகழ்க்காழிக் கடவுள் முன்னர், மயிலையிலோர் வணி கன்மக ளங்கமிடு கடத்தைவைத்து வணங்கல்போல. (௨௧)

### வேறு.

ஆண்டகை யவனைக் காணா வருந்தவ நீயா ரென்னப்
பாண்டிய தேச வாசி வேதியன் மிருதிப் பண்பன்
காண்டகு சுசாவி செல்வக் காதலன் வாம னப்பேர்
பூண்டனன் விரத மொன்று புண்ணிய மூர்த்தி கேண்மோ. (௨௨)

முந்தமா தவனென் றாதை முடிவுற்றா னவன்மெய் யங்க
மந்தமி லேன்கொண் டேகி யருண்மறைக் கடன்க ளாற்றி
யெந்தையே யிவணுஞ் சேர்ந்தே னின்றன னினைய செய்துந்
தந்தையின் குறையுந் தீர்ந்து தமியனுந் தெளிந்த தில்லேன். ()

தலந்தொறுஞ் சென்று சென்று தலைப்படாத் தலமோ வில்லை
நிலந்தொறும் பிண்ட மீந்தி நின்றிடா நிலனு மில்லை
சலந்தொறும் தருப்பை யெள்ளாற் றருப்பியாச் சலமோ வில்லைக்
குலந்தொறு முய்ய யான்செய் குறையின்ன முடிந்த தின்றே ()

என்செய்வ திதன்மே லங்க மிருத்திடு மிடமியா தென்ன
நன்செய்தி மிருகண் டுய்யு நற்றவக் குமரன் கேளா
முன்செயுந் தவத்தா லன்றே முல்லைமா நகரஞ் சேர்ந்தா
யென்செயுங் கடனு முண்டோ பேதைநீ கேண்மோ வென்றான்.

பெற்றவர் பெறும்பே றீதே பிள்ளையாம் பலனு நீயே
நற்றவ மிதன்மே லின்றே நம்பிநீ தலங்க டோறு
மிற்றையுஞ் செயுந்த வத்தா லித்தலஞ் சேர்ந்தா யென்றான்
மற்றவன் றெளியு மாறு மனக்குறை தீர்க்க வல்லான். (௨௬)

### வேறு.

எத்தலமு மிணையொவ்வா தனாதியிற்றோன் றியதுவிண்
ணோ ரெண்ணி லோர்கள், முத்திபடைத் ததுநெடுமால் முல்லை
நா யகன்றிருத்தாண் முளரி யேத்திப், பத்திசெயப் பெற்றது
நின் பாக்கியத்தாற் றந்தைதவப் பயனா லங்க, மித்தலத்தி லெய்த
முத்தி யெய்தியது மாமென்றா னின்னுஞ் சொல்வான். (௨௭)

சுந்தரன்மால் முர்மூன்றாந் தோற்றத்தி லசோதைதாய்
துயருற் றேங்க, நந்தர்கோன் பாகதியை நாடியநா ளவன்றனக்கு
நன்மை செய்வா, னிந்தமுல்லைத் தலத்தினவ னங்கமுங்கொணா
டேகினனிவ் வெல்லைக்கண்ணே, வந்தளவி னவமலியா மலர்ந்து
மணம் பொலிந்ததந்த வள்ள லங்கம். (௨௮)

முல்லையர்கோன் றிருவருளால் முல்லையர்கோன் றனக்குச் செய் முறைமை யாலே, தொல்லையுல குண்டபிரான் வஞ்சனைக் கஞ் சனைத்தடிந்த தூயோன் றுனிவ், வெல்லையின்வந் துளசடங் கு முடித்துப்பா டாணமுநீ ரிட்ட வன்றே, யொல்லையினி னந்தர்கோன் பரபதத்தில் வீற்றிருந்தா னும்பர் போற்ற. (உகூ)

ஆதலாற் காவிரியிற் றோய்ந்துவட திசையினக ரருகிற் கஞ்சப், போதலரும் நந்தகோ பாலதீர்த் தத்திலங்கம் போக்கிப் பின்னர்க், கேதமாஞ் சென்னிதனிற் கேசமுமாற் றிடமுன்னோர் கிளைக ளெல்லா, நாதர்பா தக்கமல வீடடையுஞ் சரதமிது நடத் தா யென்றான். (௩௰)

இப்பரிசு பெருமறலி யதிகாரங் கடந்தபிரா னியம்பக் கே ளா, வொப்பரிய வுவகையொடும் பணிநதெழுநது விடைகொண் டா னுலவாப் பொன்னி, மெய்ப்புனலுண் மூழ்கியபின் னந்த கோ பாலர்செய்த வியன்தீர்த் தத்தைக், கைப்பொருளாய்க் கொ ண்டுரும்பத் தங்கமும்வைத் தப்புனலாற் கடனுஞ் செய்தான் ()

தீர்த்தவிசே டநதுதித்துப் படிநதெழுநது குறையனைத்துந் தீர்த்தா னங்கம், பார்த்தளவி லிரத்தினப்பூம் பணிமலராய்ப் பரி மளிக்கப் பட்ட தம்மா, சீர்த்திகொளவ் வூர்த்திறமுந தெரிந் திலார் கடன்மலையுந் தேடிச் சேர்த்துக், கோத்துமணி கழுவி யிழைத் தொப்பமிட்டுக் குயிற்றிவிலை கூறு மாநதர். (௩௨)

சுமைக்குடத்து ளென்பனைத்துந் தோன்றலுக்கு நவமணி யாய்த் தோன்றுந் தோற்ற, மிமையமலைப் பெண்ணணங்கை மணஞ்செயுநா ளவளணங்கி னெழிலுக் கொக்க, வமையுமொரு மணவாளக் கோலமுஞ்சே ரெம்பிரா னணியென் பெல்லாஞ், சிமையமன்னன் முதலியர்க்கு நவமணிப்பூ ணெனவிளங்குந் திறமை போலாம். (௩௩)

என்பணியென் பணிகொளலா லென்புமணி மரைாகச் செய் த வாறோ, தன்பதிமுல் லைத்தலத்தின் மேன்மையோ தீர்த்தத் தின் றன்மை தானோ, முன்புசொலக் கேட்டதுண்டோ பின்புல கிற் காண்பதுண்டோ மொழிவ தென்னே, யன்புருவான் திரு வருளை யறிகிற்பா ரியாவரென வதிச யித்தான். (௩௪)

பிறந்தவர்க்கு ளின்னுமின்னும் பிறப்பவர்க்குட் பிறவாமை பெறுதற் கியாவுந், துறந்தவர்க்கு ளென்போலுந் தவம்பயின்று ருளரென்றுஞ் சொல்லற் பாற்றோ, விறந்தகற்பங் கடந்திறவா திருந்தவர்க்குங் கைம்மாறே தெனச்சொல் கென்பா, னறந்த ழைக்கு முல்லைவனத் தவன்பெருமை யவனல்லா லறிவார் யாரே.

எனப்பரவி யெம்பிரா னாலயத்துட் சென்றுபணிந் தெழுந்து போற்றி, யளப்பரியான் காண்பரிதா யசஞ்சலமா யகண்டிதமா யனாதி யாகி, நினைப்பரிதாய் முல்லையின்கீழ் நிறைந்தபர மானந்த நிதியைக் கண்டான், மனப்பதியிற் றிருவடித்தா மரைசேர்த்தா னுரையுணர்வு மறந்து நின்றான். (௩௬)

கருவேறு கண்ணிதனிற் சிக்காது தடுத்தாண்ட கனியே போற்றி, திருவேறு கண்ணிடந்த சினவிடைமேற் பவனிவருந தேவே போற்றி, மருவேறு கண்ணிதிகழ் மவுலிபுனை மாசிலா மணியே போற்றி, யுருவேறு கண்ணிபங்கா வழகேறு நீறாவெம் முயிரே போற்றி. (௩௭)

பிறைமுடிக்குஞ் சடைமௌலிப் பெம்மானே யெம்மானே பேசற் கொண்ணா, மறைமுடிக்கும் பெரும்பொருளே மாசிலா மணியேயென் வாழ்வே நெஞ்சிற, குறைமுடிக்குந் திருவுருவே யெனத்துதித்தான் குணலைநடங் குனித்தான் கையால், நறைமுடிக்கு மலர்தூவி மெய்விழியா னந்தவெள்ள நனைப்ப நின்றான்.

முப்போதும் பணிநதெழுந்து நான்மறையு மஞ்செழுத்து முறையி லோதிக், கைப்போது கொடுவழிபட் டகம்புரியா மகம்புரியுங் கருத்த னாகி, மெய்ப்போதங் கீழ்ப்படநற் சிவபோத மேலிடவே விழைந்து நெஞ்சி, லெப்போது முல்லைவனத் திறையருளே துணையாக்கொண் டிறைஞ்சிப் போற்றி. (௩௯)

வேறு.

குலவல்லி மணஞ்சேர் முல்லைக் கொடித்தழும் புடையான் கோயில், குலவல்லி மணஞ்சேர் முல்லைக் கொடியொடும் வழிபட்டேத்தி, நிலவெல்லை யகல்வா னன்றி நெறியெய்திக் காட்டுவான்போல், நிலவெல்லை யகல்வா னன்றி நெறியெய்திக் கயிலை சேர்ந்தான். (௪0)

வேறு.

பத்தியொடுந் தந்தைதாய் தங்கிளைகள் பரிசனங்கள் பல்லோர் மெய்யி, லத்தியெனி னுங்கேச மெனினுமுகி ரெனினுமவ்வூ ரடையு மாகில், முத்திதரு முல்லைவனப் புனலிலங்க மிடுவமென்று முன்னி னாலுஞ், சித்திதரும் வழிநடப்போ ரோரினமந் நகர்பெறினுந் தேவ ராவர். (௪௧)

இரவுபக லனுதினமு மெல்லைபிரி யாதுபணிந் திறைஞ்சி யேத்தி, வரதனருள் வாழ்த்தினர்க்கு மவ்வெல்லை தனிற்பிறந்து வளர்ந்தோ ருக்கும், பரவுமந்தப் புனல்படிந்த பத்தருக்கு முத்தி தரும் பரமன் வாய்மை, சரதமிது சரதமிது சத்தியஞ்சத் திய மென்றான் தவத்தான் மிக்கோன். (சஉ)

அங்கமிரத்தினமானசருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம். கநஅ.

—❋❋—

## (ரு) பார்ப்பதியார் பஞ்சாக்கர சித்திபெற்ற சருக்கம்.

எனபு மாமணி யாயவா றியம்பினை யிறைவர்
பின்பு பார்ப்பதி யருந்தவம் புரிந்திடும் பெருமை
யன்பு மேற்படச் செவிப்புல மினிதுற வடியேன்
றுன்பு கீழ்ப்பட நவிற்றெனச் சூதனுஞ் சொலுவான். (க)

ஓங்கி நின்றமா லுறக்கமே சுமந்திடு முரக
நீங்கி நின்றரன் பாலணைந் தானென நினையாப்
பாங்கி னின்றமா திறைவனைப் பாற்கடல் மலையாய்த்
தாங்கி நின்றது போலுமாங் கயிலையஞ் சயிலம். (உ)

பூணு மென்பணித் தவளவெண் ணீற்றொளி புரளக்
காணு மாயிர முகத்துட னரியயன் காணாச்
சேணு லாவிய வடிவமாய்ச் செஞ்சடை திகழத்
தாணு வீற்றிருந் தன்னதாங் கயிலையஞ் சயிலம். (ந)

வேறு.

கின்னரர்கள் கந்திருவர் கிம்புருட ரிசைவல்லோர் கீதம் பாட, வுன்னரிய வன்னமறை முழங்கவெண்ணில் பலகோடி யும்பர் வாழ்த்த, முன்னவன்போ லெண்ணிறந்த சாரூப ரளவிலா முனிவர் வாழ்த்தப், பன்னொருபான் கோடிருத்ரர் தாஞ்சூழப் பெறுங்கயிலைப் பாங்க ரெல்லாம். (ச)

வலங்கையின்மான் மழுசசூரிகைப் பிரம்பேந்தி நந்திபிரான் வாயில் காப்ப, விலங்குமரி யணைமீக்கொண் டெண்ணிறந்த கதிரிரவி யீட்ட மென்னத், துலங்குபர மானந்தசு சுகாதீதச் சிற்சொரூபஞ் சேரச் சோதி, மலங்கடியு மவரைமணந் துயிர்த்தொகுதி வளர்த்தனள்பொன் மலர்ப்பூங் கோதை. (ரு)

### வேறு.

மருவும் பூவு மணியுமச் சோதியு
முருவு மாவியு மொண்பொன்னும் பூணுமாய்ப்
பொருவு மாகயி லைக்கிறை பூங்கிரித்
திருவுந் தானுஞ் சிறப்பொடு வாழுநாள். (௬)

வான நாட்டினின் மன்னனைக் கற்பகத்
தான நாட்டவெஞ் சூரைத் தடிந்திட
ஞான நாட்டன்பா னற்கும சேசனை
மீன நாட்டத்து மெல்லியல் தந்தபின். (௭)

பஞ்சின் மெல்விரற் பாடகந் தாங்கலா
தஞ்சி லம்பரற் றுநிற்குஞ் சீறடி
வஞ்சி ஞானம வளர்க்குங் கருணையா
னெஞ்சி லஞ்செழுத் துண்மை நினைவுறு. (௮)

இயக்க முற்ற சராசரம் யாவையும்
பயக்கு மன்னை பரம்பர னுமைமா
நயக்கு மஞ்செழுத் துண்மையை நாடியே
மயக்க முற்று மனந்தளர் வெய்தினாள். (௯)

போது லாஞ்சடைப் புண்ணிய மூர்த்திதாள்
மாது பார்ப்பதி வந்தனை செய்தொழு
தோது பல்லுயிர் கட்கு முதவிசே
ரேது வாக விசைப்பதின் மேவினாள். (௧௦)

மாறி நிற்கின்ற வுண்மையும் வாசிமே
லேறி நிற்கு மியல்புநம் மாணவஞ
சீறி நிற்குந் திறமு மெழுத்தொன்றி
லூறி நிற்கு மெழுத்தஞ்சு மோதென்றாள். (௧௧)

அஞ்செ ழுத்தி னடைவு மடைவினி
னெஞ்ச ழுத்து நிலையை நிகழ்த்தெனப்
பஞ்ச ழுத்துமென் சீறடிப் பாவைக்கு
நஞ்ச ழுத்து மக்கண்ட னவிற்றுவான். (௧௨)

ஐந்து பூதமு மைந்து புலன்களு
மைந்து மூர்த்தமு மைந்து பிரமமு
மைந்து நற்றொழி லாகி நிறைந்தது
மைந்தெ ழுத்தினை யல்லதொன் றில்லைகாண். (௧௩)

நாமு நீயு நடுவிய மானனை
நாமு நீயு நணுகிமுன் பின்னுமாய்
நாமன் னுவகை நாடாது நாடியே
நாம கிழ்ந்திட வாசி நவிலென்றான். (கச)

ஐந்து வெம்புலன் சிந்தைகொண் டானவே
யைந்தெ ழுத்துநம் மாதி யெழுத்திலே
வந்து சேரும் வகுக்கில் விரித்திடு
மிந்த வாறோ ரெழுத்தியல் பாமென்றான். (கரு)

பேசொ ணாத வெழுத்தும் பிரணவத்
தோசை காட்டு மெழுத்து முணர்வித்தா
னோசை தீரஞ் செழுத்தை யறிவித்தான்
வீசு மெட்டெழுத் துண்மை விளம்பினான். (கசு)

இன்ன மெண்ணிப்பல் பேதத் தியல்புதான்
பின்ன மேநம தஞ்செழுத் துண்மைதா
னுன்னிற் கேட்ட வுரைத்த விருவரா
மென்ன வுற்ற விடத்துண்மை யெய்தவே. (கஎ)

சாந்த நெஞ்சிற் றரத்தகு மெம்மிறை
சேர்ந்த நாமத் திருவஞ் செழுத்துமே
தேர்ந்து கந்து தெளிந்துணர்ந் தநிலை
சார்ந்தி ருந்தினிச் சாதிப்ப தேயெனா. (கஅ)

தம்பி ரான்றிருத் தாமரைச் சேவடி
யெம்பி ரானை யிறைஞ்சி யிசைத்தன
னும்ப ரானு முணர்வரி தாமெழுத்
தெம்ப ராதரித் தேத்து மிடமென. (ககூ)

வான நாதன் மலைமகள் கூறனு
மான வாய்மை யருளினன் றென்றிசை
ஞான பூமிதண் காவிரி நாட்டுள
தான மேன்மைத் தலமவ ணேகென்றான். (உ0)

பத்தி யோடும் பரஞ்சுட ரைப்பரா
சத்தி தாழ்ந்தெழுந் தாள்விடை கொண்டனள்
சித்தி செய்யுந் திறத்தி னுயிரெல்லா
முத்தி செய்யு முறைமையு முன்னியே. (உக)

கயிலை மாமலைக் கண்ணுதல் வாழுமச்
சயில நீங்கியோர் சாரலிற் சார்ந்துபின்
னயிலை நோக்கத் தருட்பரை சூழ்மணி
வெயிலு லாவும் விமானத்தை நாடினள். (உஉ)

வேறு.

எண்ணி லாச்செழுங் கதிர்த்திர ளெழுந்தென விலங்க
மண்ணி லாடகக் கிரியெனப் பலமுடி வயங்கத்
தெண்ணி லாமணி செம்மணித் திரளொளி திவள
விண்ணின் மீதினின் றெழுந்தது தெய்வத விமானம். (உங)

கண்ணி னும்புகுஞ் செவிபுகுங் கண்ணகன் ஞால
நுண்ணி னும்புகு மேருவை யளக்குமோர் நொடியின்
மண்ணி னும்புகு முலகமீ ரேழினும் வயங்க
விண்ணி னும்புகு மெண்ணினுங் கடியநல் விமானம். (உச)

இத்தி றத்தினன் மணித்தடந் தேர்மிசை யிமயத்
தத்தை மேற்கொண்டாள் கைத்தலந் தலையின்மேற் கொண்டு
மெய்த்த வத்தவர் விடைகொண்டா ரன்புமேற் கொண்டார்
கொத்த லர்க்குழற் சேடிமார் கவரிகைக் கொண்டார். (உரு)

வேறு.

ஆடகசசெந திருமுதலாந திருமகளி ரெண்மருவந் தருகிற் சூழப், பாடகசசீ றடித்தெய்வப் பத்தினிமா ரெழுவர்புறம் படர்ந்து செல்ல, நாடகமென் கையரம்பை யுருப்பசியுந் திலோத்தமையு நடநஞ் செய்யக், கேடகவாட் டொழிற்சதுமா லினி காப்பச செழும்பவளக் கிளைபோற் சென்றார். (உசு)

வெற்பரையன் மடப்பாவை யவ்வரையன் குலதீபம் விமானத் தேகச், சிறபரைதன் கருத்தறிநத செம்பொற்றேர் புனிதகங்கா தீர்த்த மெய்தத், தற்பரர்வே ணியினதிப்பெண் ணுமைபிரிந் தாள் நாமிருக்கத் தகுமோ வென்று, முற்படவந் ததிர்கொளல்போன் முன்னிகழ்ந்து தோன்றியவம் முறையுங் கண்டாள். ()

கங்கைநங்கை தனையிமய மங்கைமகிழ்ந் தவ்வெல்லை கடந்து கங்கை, தங்கையென மருவுகவு தமைபார்த்துச் சோணைதீர்த் தத்தை நோக்கி, யெங்கையார் யமுனைதீர்த் தத்தனுகி யலைநருமதைப்பாங் கெய்திச், செங்குவளை மடக்கிள்ளை வீமநதிப் புனல் கடந்து தென்பாற் செல்ல. (உஅ)

அங்கண்வருவசு தேவன் பெயராநன் னதிகண்டா ளதற்குத் தென்பாற், பங்கமிலாப் புனற்றுங்க பத்திரையை யருட்கண் ணுற் பரிந்து பார்த்தாள், மங்களப்பூங் கோதைமிகு வேகவதி தனைத்திருக்கண் வைத்தாள் தன்சேய், துங்கநதி கநதநதித் துறைசேர்ந்தாள் பாலாற்றின் றேற்றங் கண்டாள். (உகூ)

திருமணிமுத் தாநதிவெள் ளாறதிடைசசங் கமமதனிற் றிருநோக் குற்று, ஒருமணியைப் பழமலைசசோ தியைவணங்கி யகன்றுபுலி யூரிற் கேகி, நிருபர்படி சிவகங்கை தனைப்புகழ்ந்து விமானத்தி னிழிந்து மன்றிற், றிருநடனத் தரசிபோற் சாய்கொ டிபோற் றிருமேனி சாற்றி நின்றாள். (௩௰)

நின்றுவிடை கொண்டேகி வேளுரில் வயித்தியனை நேர்ந்து கீழ்பாற, சென்றுசா யாவனத்தி விமயவல்லிக் கொடிபடர்ந்து தெய்வத் தோணிக், குன்றுடையா னெடுஞானக் குழவிக்குத் திருமுலைப்பாற் கொடுத்த பொய்கை, யென்றுமன மகிழ்ந்தி ருந்து குணதிசையின் முல்லைவனத் தெல்லை சேர்ந்தாள். (௩௧)

பணிவரைத்தண் சுனைபூத்து மரைத்தே னறவொழுகப் பகைத்தல் தீர்ந்து, சினவரிசசெங கட்சீய மதயானைக் குழாத் தொடும்போய்த் தெண்ணீ ருண்ணப், புனைவரிசசெஞ சிறை வளைவாய்ப் பருந்தரவி னெடுமிரைகள் பொதுவின் மாநதக், குனிநுதறபேழ் வாய்ப்புலிகள் மான்கன்றை யணைத்துமுலை கொடுத்த வன்றே. (௩உ)

மலர்ந்திடுவ வரும்பனைத்து மணநதருவ மரைனைத்து மாறுங் காலம்,புலர்நததரு தழைத்தரும்பி மலரொடுங்காய் கனிசொரிவ பொழில்க ளெல்லா, முலர்நதுபடுந் தருவனைத்தும தழைத் திடுவ வுலகின்று ளொருத்தி செல்லக், கலைநதமலர் பெருந் திரைநீர் வற்றியவும் பெருகுவபூங் கழிக ளெல்லாம். (௩௩)

வேறு.

வளைத்த வெள்வளை மாதவண் சேறனு மார்பிற்
கிளைத்த மூவிலை யிளநதளிர்க் கண்டழை கிளரத்
திளைத்த முல்லையந் தழும்பொடு மானநதத் தேறல்
முளைத்தெ ழுந்தமை கண்டனள் பார்ப்பதி முன்னர். (௩௪)

வேறு.

நாதவுருவே போற்றி நாதாந்த மனோலயத்தி னடித்தாய் போற்றி, வேதவுருவே போற்றி வேதத்தி னுபநிடத வித்தே போற்றி, பேதவுரு வபேதவுரு பேதாபே தத்துருவம் பெற்றாய் போற்றி, போதவுருவே போற்றி போரடர்முல் லைப்பொருளே போற்றி யென்றாள். (௩௫)

மின்போலும படர்சடையான் திருமேனித் தழும்புபெற்ற விதத்தைக் கண்டா, ளென்போலு மரன்மேனி தழும்புபட வணைத்திடவே யீது மின்னன், முன்போந்த தவமியற்றி நின்றதென்று நகையிளந்தண் முகையை யீன்றாள், பொன்போலும் பரந்தருகின் முல்லைதனைப் பார்த்தருளாற் புகழ்ந்து சென்றாள். (௩௬)

சென்றளவிற் செம்பொற்றேர் தெக்கணா மூர்த்திமுன் னர்ச செல்லா தாகி, நின்றளவிற பரவசமாய்ச சுகாதீத மேலி டவே நினைறு னெஞ்சி, லின்றளவி லெழுத்தஞ்சும் பக்திசெய முத்திதரு மிடமீ தென்று, ளன்றளித்த மெய்ஞ்ஞான குருமூர் த்தம் போலிருந்த வருளைக் கண்டாள். (௩௭)

அரவடரும் புரிநூலு மரவூருந் திருமார்பு மநந்த கோடி, யிரவுதரு தளிரொளியு மிலங்குபுலித் தோலுடையோ டிருந்த பாங்கும், வரதவப யமுஞான முத்திரையுங் கதிர்சசடையு மதி நிலாவும், பரவுமலர்த் திருமுகமும் விழிமூன்று மருள்வடிவும் பவானி கண்டாள். (௩௮)

இவனல்லாற் பிறிதியாதே யென்குறையை மாற்றுமிட மிவ் வூர் நீங்காத், தவனல்லாற் பிறர்யாரே யென்றவத்திற சித்திரத் தக்கார் மிக்க, சிவபிரான் பணிக்கேற்ப தருதிரெனச சிலதிய ரைக் கூவச சென்றா, ருவகையூத் திறைவியரு டலைக்கொண்டு விடைகொண்டா ரொல்லை நீங்கி. (௩௯)

வேறு.

கோட்டினில் வாவி தன்னிற் கொடிகளி னிலத்தி னுள்ள
தோட்டினர் மலரை னைத்துந் தோகைமார் கற்ப கப்பொன்
னோட்டினும் புவிகண் மீதுங் கைவளை நாலக் கொய்தே
யீட்டிய வன்பி னோடு மிறைவிமுன் னுய்த்து நின்றார். (௪௰)

அஞ்சன வேற்க ணல்லா ளம்பொற்றே ரிழிந்து தூய
மஞ்சன மாட்டிச செவ்வி மலரினு லருச்சித் தேத்தி
யெஞ்சலி லுபசா ரத்தி னியல்பெலாங் கொடுத்துப் பின்னர்
நஞ்சணி கண்டன் பாங்கர் நாட்டினாள் ஞான நாட்டம். (௪௧)

புலன்வழிப் பட்ட தன்று புந்தியி னினைந்த தன்றாற்
பலன்வழி யெழுத்தோ ரைந்தாற் பார்ப்பதி நோற்ற பான்மை
நிலன்வழி யுயிர்கட் கெல்லா நிலயமா நிமல னார்க்கு
நலன்வழிக் கருணைப் பார்வை நங்கைக்குந் தெரியு மன்றே. (௪௨)

வளர்ந்திடு மமுதந் தோய்ந்த மதிக்கலை வடிவா னீசன்
விளங்குபங் கிருந்த மெய்யும் வேய்ந்தது நிலவே யல்லா
விளந்தளிர் மேனி கன்று மென்னுடை வெப்பத் தாலென்
றுளந்தளர்ந் தோடி வீழ்ந்தா னுவரிமே லுதய பானு. (௪௩)

பகலவன் பகலோ டேகப் பங்கயப் போதுக் கெல்லா
மிகல்வன கங்கு லோடு மெழுந்ததென் றுவரி மீதின்
மகிழுமா னந்தச் சோதி மாசிலா மணியான் வாழுந்
திகழ்திருக் கோயி லந்தித் திருவிளக் கிட்ட தென்ன. (௪௪)

கறங்குதெண் டிரைகண் மீது கலைநிலாத் திங்கள் பொன்னி
பிறங்குதெண் முல்லை மூதூர்ப் பேரொளி பிறந்த காட்சி
யுறங்கிய திருமால் முன்போ லொள்ளிய வெள்ளிக் கும்பத்
திறங்குபா லருவி யீசற் காட்டினா னென்ன லாமால். (௪௫)

வரைபடுங் கோபு ரத்து வயங்கவான் றீபம் போர்த்தார்
புரைபடு மதிலின் மீது புதுமணி விளக்கு வேய்ந்தார்
தரைபடுஞ் சூழ லெங்குந் தனிமணி யொளிகள் சூழ்ந்தார்
நிரைபடு கற்பி னார்பொன் னாலத்தி யேந்தி நின்றார். (௪௬)

ஆயகன் னியரிற் பல்பே ரலர்மழைத் தூவ யார்க்குந்
தாயகன் புடையிற் சில்பேர் சாமரை யிரட்ட வெண்மர்
மேயகற் பினர்பா வாடை வீசவேழ் மின்னார் காப்ப
நாயக னிடத்துத் தத்வ மசிநிலை நயந்து வாழ்ந்தாள். (௪௭)

வேறு.

கனகமா ளிகையெலாங் கடைதி றப்பவுற்
பனகண்மா தருந்துயர்ப் பால நீங்குற
வனகனுண் மையினர சடங்கச் சேர்ந்தது
தினகரோ தயமணி சிகர பூதரம். (௪௮)

## வேறு.

அரவவெம் பகையாற் சிம்பு ளானவன் கையா லஞ்சா
வரமினிக் கோடல் வேண்டு மலைமக ளிடத்தி லென்னப்
பரவவந் திடுவான் போலப் பரவைவெண் டிரையி னுப்ப
ணிரவிவந் துதயஞ் செய்தா னிளங்கதிர்க் கரங்கள் கூப்பி. (௪௯)

உள்ளுணா ரெழுத்தஞ் சுன்னும் யோகசா தனையா லிங்ஙன்
வள்ளலைப் பரிந்து வந்து மலைமக ளிருந்தா ளென்று
புள்ளொடு மாவும் யாவும் புலன்வழி காத்துத் தாழ்த்துந்
துள்ளுநீர்க் கடலுந் தத்துந் துழனிகண் டேங்கிற் றன்றே. (௫௰)

இன்னவா றமலன் பாங்க ரிரவுநன் பகலு நோக்காத்
துன்னருஞ் சிவலோ கத்தி லுயிரெலா மசைவு மின்றிப்
பின்னரு மாண்பெண் கூடப் பெற்றிலாப் பெற்றித் தாக
வன்னமென் னடையாள் நோற்று ளாம்பதிற றிரட்டி யாண்டு ()

தேவதுந் துபிமு முங்கத் திருவிசை கீதம் பாடப்
பூவலர் மாரி வானோர் பொழிதரப் பூத ரார்ப்ப
மூவர்தம் பெருமா னுறகு முதல்வன்மா துமைபா லிக்கும்
பாவனைக் கோலங் கொண்டு படருமால் விடைமேல் வந்தான். ()

பாலநீலா சனத்தான் வந்தான் பனிமதிச சடிலன வந்தா
னாலமா மிடற்றான் வந்தா னம்பிகை மணாளன் வந்தான்
சூலமார் கையான் வந்தான் சுரர்பிரான் வந்தா னென்றே
யேலவார் குழலார் கேட்ப வெழுந்தது சின்ன வோசை. (௫௩)

புனைமதி மவுலிப் பொற்பும் புயநான்கும் விழிகள் மூன்றும்
வனைதரு மிதழி மார்பு மழவிடைக் கிசைந்த வாய்பபுந
தனையறிந் தவர்க்குக் காட்டுந் தாமரைத் தாளு மின்னு
ணினைவுறும் படித்தாங் கோல நிமலனுங் காட்டி நின்றான். (௫௪)

வேணிலா டலைவென் றான்றன் றளினில் வீழ்ந்தெழுந்து
தாணிலாச சகோரம் போன்முட் டுசிகா ந்தம்போ லம்மான்
பாணிலா விழியி னீங்காப் பார்வையாற் பருகா நின்றாள்
கூணிலாக் திங்கட் டுடுங் குழகனே போற்றி யென்றாள். (௫௫)

விதிசிரந் தொடுத்த சன்ன வீரமா லிகையாய் போற்றி
திதிசெயு மாலோற் கன்று திகழ்படை யளித்தாய் போற்றி
கதிதரும் விடைமேற் கொண்ட கருணையங் கடலே போற்றி
துதிசெயு மடியா ருள்ளச சோதியே போற்றி யென்ன. (௫௬)

இறைவியை யிறைவன் காணு விருகையாற் றழீஇக்கொண் டன்பால், மறைவிடை யிடப்பா லன்பான் மகிழ்ந்தினி திருத்தி மாதே, நறைமலர்க் குழலே நம்முன் னவிற்றவோர் வரமுண் டென்ன, குறையுள தெனினுந் தீரக் கொடுக்குது மென்றான் பின்னும். (௫௭)

அருளுருப் பெற்ற துன்று லறிதியே நாமு நீங்காப்
பொருளுரு வஞ்செ ழுத்தின் பொற்பெனப் புகன்று னீயு
மொருவருங் கருதற் கெட்டா வுண்மையுஞ் சிந்தித் தந்தத்
திருவுருக் கொண்டா யென்றுஞ் செப்பினன் தேவர் தேவன்.()

மூவர்க்கு முதன்மை தந்த முக்கணு னிறைவி யோடுந்
தேவர்க்கு மன்பர் யார்க்குந திருவருள் பொழிந்து வேத
நாவர்க்குந் தெரிய வொண்ணு நான்மறை விடைமீக் கொண்டே
யேவர்க்கு மிறைவ னுன வெம்பிரான் கயிலை சேர்ந்தான். (௫௯)

இப்பதி தனக்கு நேரா யீரொழு புவியி லொன்று
மொப்பதி லறிவான் மிக்கோ ருலகின்கண் மேன்மை யாக
முப்பதி யுரைத்தா ரந்த முப்பதித் திறனு மிவ்வூர்
கைப்பதித் திட்ட நெல்லிக் கனியெனக் காட்டு மன்றே. (௬௰)

திருவெழுத் தஞ்சு மோதச் சித்திக்கு மிடமு மிஃதே
வருமருத் தோத யங்கள் மகோதய மாதத் தோற்ற
மிருசுடர்க் கிரக ணநதா மிநதுவோ டிரவி கூட்டம்
பொருவிலாப் புநிதத் திங்கள் விதிபாதம் பொருநது நாளில்.(௬௧)

தேசிக னெனப்பா வித்துத் தெக்கணு மூர்த்தி முன்ன
ராசிலாக் குரவ னேது மடைவினஞ் செழுத்து நாடி
மாசிலா திருநது நாவின் வழுத்திய தவத்தோ ரென்றும்
பாசபந் தங்க ணீங்கிப் பரகதி யடைவர் திண்ணம். (௬௨)

பார்ப்பதியார் பஞ்சாக்கர சித்திபெற்ற சருக்கம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம் உ௱.

—※※—

## (௬) பரத்தை கதிபெற்ற சருக்கம்.

மைத்த டங்கணா ளுலகமீன் றருள்மலை மடந்தை
மெய்த்த வஞ்செய்த காதையின் விரிவெலாம் விரித்தா
யித்த லந்தனி லின்னுமற் றுளவதி சயங்க
ளுய்த்து ணர்ந்துநீ சொல்லெனச சவுனக னுரைப்பான். (௧)

கேட்ட வெல்லையிற் சவுனக னுரைமிகக் கெழுமிச்
சூட்டுக் கண்டிகைச செஞ்சடைப் பெருமுடி துளக்கி
வாட்ட மின்றியே வளர்ந்தபே ரருள்மன மகிழ
நாட்டு முண்மையாற் சூதமா முனிவர னவில்வான். (௨)

சாதி பேதங்க ளளப்பில பொருந்திய சகத்தோர்க்
கேது வாகிய சுகந்தரு மணந்தரு மிதழிப்
போது லாவிய வேணியான் மங்கள புரமென்
றோது மந்நகர்க் குரைத்திட வுவமைவே றுண்டோ. (௩)

பொய்யு மாயமுங் கொலைகளும் வினைகளும் பொருந்து
மைய வேற்கண்ணா ளெவரையு நேசிக்கு மனத்தாள்
மெய்யி னாலிரு கையினாற் சுரதமே விளைத்துப்
பைய ராவல்குல் விற்றுணுஞ் சேரியம் பரத்தை. (௪)

ஆன நாட்டினிற் பரத்தைமு தருந்தவ மதனாற்
கான நாட்டையுங் களிவண்டி னாட்டையுங் கண்டு
வான நாட்டினர் பணிமுல்லை வாயிலின் வசித்து
ஞான நாட்டன்வாழ் பெரும்பத மடைந்தனள் நலத்தால். (௫)

என்று சூதனு முரைத்திட விருந்தவம் வளர்ந்த
குன்று போல்வருஞ் சவுனக னெதிர்மொழி கொடுப்பா
னன்றி யங்கவள் வரவுமங் கவள்செயுந் தவமு
மின்றெ னக்குநீ சொல்லெனச சூதனு மிசைப்பான். (௬)

உம்பர் நாயகன் பொன்னுல காமென வுரைப்பா
னம்பொன் மேருவின் புறத்தரை யாமென நலியுங்
கொம்பர் நேரிடைக் கங்கையந் திரைமணி கொழிக்குஞ்
செம்பொ னேவிளை காஞ்சன பூமியாந் தேயம். (௭)

அன்ன தேயத்திற் கணிகையர் தமக்கெலா பரசே
யென்னக் காமுக ருயிரென வணங்கனா ரிரதி
மின்னா ளெனக் கண்டவ ரையுற விரிபூண்
பொன்னா ளவண் வாழுநாட் கதிபெறும் பொருட்டால். (௮)

யார்க்கு மாதர வாகுமத் தேயம்விட் டயலே
சேர்க்குங் காதலன் றன்னொடு மேறினாள் திரைமே
லேற்கு மோர்மரக் கலமிசை கேரளத் தியல்பு
பார்க்கு மாசையாற் பரத்தைநீ ருவரிமேற் படர்ந்தாள். (௯)

லைகத வக்குலப் பரத்தையங் கேகலுங் கார்வான்
பெய்தெ றிந்திடத் திவலைகள் தரங்கமும் பெருக
வெய்த பாணம்போற் காற்றெழுந தலம்வர விரங்கி
வெய்து யிர்த்தனள் நடுங்கின ளொடுங்கினள் மெலிந்தாள். (௰)

இவளு மித்துய ருழந்துமுன் னியற்றுமா தவத்தாற்
றவள நீற்றினார் முல்லைமா நகர்க்கரை சார்நதா
ளவளி னிசசெயும் பெரும்பவங் காண்பதற் கஞ்சிப்
பவள மால்வரைப் புறத்தினிற் கதிரவன் படர்நதான். (௰௧)

அதிரு மேழ்கடற் கப்புறத் திருநில மடைந்து
கதிர வன்றனைச் செகுத்திடு வோமெனுங் கருத்தா
லெதிர்ந டந்துநாற் றிசையையும் வளைநதுகொண் டேகப்
புதிய சூரியன் மறைந்தன னிருண்டது புவியும். (௰௨)

ஆய வெல்லைகார் காலமு மாயவப் புரத்தின்
மேய திங்களி லமாவாசைக் கங்குலும் விரிப்பத்
தீய ளிங்கிவள் துணைவனுந் தானுமாச சேர்நத
வாய வப்புரங் கொள்ளியுங் கொண்டெ ன வநதாள். (௰௩)

வந்தவ் வூர்புகுந தீசனார் மாசிலா மணியா
ரெந்தை வாழ்திருக் கோயில்முன் மண்டபத் தேறி
முந்து தன்கையிற் கொள்ளியிற் றீயையு மூட்டிச
சுந்த ரக்கலை யாற்றரைப் புழுதியுந துடைத்து. (௰௪)

ஆடை யாகிய பாயலை விரித்தத லமர்நது
வாடை பூசிநன் மலர்முடித் திருவரு மகிழ்ந்தே
யாடல் வேளிடத் திரதிசேர்ந் தெனவநு ராக
வேடை தீரவே மணந்தனர் புணர்ந்தனர் விருப்பால். (௰௫)

விரவு மாசையாற் காமச்செந் தீயினான் மெலிவார்
பரம னாலய மென்பதுங் குறித்திலர் பரத்தை
திரமி லாதவ ளுறங்குமவ் வெல்லையிற் றீநச்
சரவந் தீண்டலு மக்கணத் தாருயி ரிறந்தாள். (௰௬)

வேறு.

மற்றிவ னிறத்தலு மடித்திதழ் கடித்துப்
பற்றினர் பாத்தையுயிர் பாசவலை வீசி
யெற்றினர் கதுப்பினி லிடித்தனர் முகத்திற்
சுற்றினர் புறத்திலெம தூதர்கொடு போத. (௰௭)

முட்டின ரடிக்கடி முலைத்தலையி லெட்டிக்
குட்டினர் மயிர்த்தலை குறைத்தன ருருட்டிக்
கட்டின ரறுத்துடல் கழித்தனர் பிளக்க
வெட்டினர் துகைத்தன ருதைத்தனர் மிதித்தார். (௰௮)

வேறு.

எரித்தழல் கொளுத்திவைத் தெடுத்ததிற் கிடத்துவா
ருரித்துடற் றசைக்கொழுப் பறுத்தொறுத் துருக்குவார்
கரத்தினைப் பிணித்தகை கழுத்துறப் பொருத்துவார்
பரத்தையைக் கயிற்றினிற் பிணித்தபொற் பணைக்கையார். (௰௯)

வேறு.

இப்பரி சறிந்து நந்தி யெம்பிரான் பேழ்வாய்ச் செங்கட், கொப்பரி வயிற்று வெண்பற் குறட்பூதப் படையை நோக்கி, மைப்பிறழியம தூதர் மாண்டிடப் பொருது வல்லே, துப்பிதழ் மழலைச் செவ்வாய்த் தோகையைக் கொணர்மி னென்றான். (௨௰)

வேறு.

வந்தன ரெதிர்ந்தனர் நமன்றமர் மடுத்துச
சிந்தினர் கரங்களொடு திண்சிர நெரித்தார்
தொந்திசரி யும்படி துகைத்தனர் மிதித்தார்
நந்திபணி கொண்டகண நாதர்சிவ தூதர். (௨௧)

தற்கமிடு கின்றவர் தடக்கையை யொடித்தார்
கற்கொடெறி யுஞ்சிலர் கடத்துமிவ ணென்றே
பற்கொடு பொருஞ்சிலர் பதைத்திட வடித்தார்
சொற்கதறி நொந்துயம தூதர்திர ளோட. (௨௨)

வேறு.

சொற்ற சித்திர மாமெம தூதரைத் துரந்து
கொற்ற வன்பதிக் கலகிட்டு விளக்கொளி கொளுவி
மற்று மத்தலத் திறத்தலா லவ்வினை மாற்று
நற்ற வத்திறற் பரத்தையைச் சிவகண நாதர். (௨௩)

தீதி லாதகற பகமழை பொழிதரச சிறிதுங்
கோதி லாததே வேந்திரன் விமானமேற் கொண்டு
மாதர் சூழ்வரத் தேவதுந் துமியொலி வழங்க
வாதி நாயகன் கயிலைமால் வரையிடத் தடைந்தார். (௨௪)

ஆலை யத்திற மறிந்திலா் ளரன்புக ழறியாள்
சேலை யித்தலை யாற்றரை துடைத்திருள் தீர்த்த
வாலை யத்திறந் தானலாத் தவஞ்சற்று மறியாள்
மேலை முத்திபெற் றுள்சிவ தருமமார் விதிப்பார். (௨௫)

## வேறு.

இன்னவா பரத்தை மாது மிருங்கதி யடைந்தா ளங்கண்
மன்னிய கால தூதர் வடவையி னுருத்துப் பொங்கித்
தன்னிக ரில்லாப் பாசந தடித்தறி சூலந் தாங்கிக்
கன்னெடு மலைபோல் வாழுங் காலன்மா பதியிற் சார்ந்தார். (௨௬)

சண்டன்மா சண்டன் சித்தந் தகமிகுத் தவமிகுத்தும்
மண்டிய காலன் தூதர் மற்றுளோ ரேவல் செய்ய
வென்றிகழ் சித்ர குத்த ரிறைஞ்சமை மலைபோல் வாழுங்
கொண்டலைத் தரும நீதிக் கூற்றனைப் பணிநது சொல்வார். (௨௭)

ஐயநின் னேவ லாலே யணிவளைப் பரத்தை தன்னை
மெய்யுறப் பிணித்துச செல்லும் வேலையி லெம்மைச சாடிச்
செய்யவார் சடையான் பாஙகிற சிவகண நாதர் போநது
வெய்யவெம் பவஞ்செய் தாளை விமானமேற் கொண்டு செல்ல.()

நொந்தன மீச னேவ லுன்மையோ ரென்றே யஞ்சி
வநதன மென்ன லோடு மறலியங கதனைக் கேளாச
சிந்தையிற் றெரிந்து தேர்ந்து சிவதரு மத்தி னுண்மை
யிநதவா றுயிற் றேறுவென் றெழின்முடி துளக்கி நின்று. (௨௯)

நிருமலன் றரும மேன்மை நினைந்திடா நிரயத் தோர்க்குந்
தருமதே வதையே யன்னுன் றவநெறி யுரைப்பா னெண்ணிப்
பொருகிடாப் பரிமேற் கொண்டு நரகலோ கத்துப் போந்தான்
கரும்மிகள் வருநதக் கண்டான் கருணையாற் கழற லுற்றான். (௩௰)

## வேறு.

செந்தழல் மறந்தீர் சிவன்றனை மறந்தீர்
சநதியு மிகழ்ந்தீர் தவங்களு மிகழ்ந்தீ
ரந்திபக லையமிடு மன்னையு மறந்தீர்
தந்தையனை நன்றியது தன்னையு மறந்தீர். (௩௧)

மண்புகழ முன்பொருவர் வைத்ததரு மத்தைக்
கண்குளிர வன்பினொடு கண்டுமறி யீரே
நண்பொடிது நன்றெனா நவின்றுமறி யீரே
விண்புகழ் தலங்களை மிதித்துமறி யீரே. (௩௨)

வேறு.

சூழ்புவி யிற்றே வாலய முந்தத் தொழுகில்லீ
ராழ்நதி யிற்போய் மூழ்க வயர்ந்தீ ரறிவில்லீர்
தாழு மவர்க்கே தாழ்வுற நிற்பீர் தயவில்லீர்
வாழ்வு குறைத்தீ ரேதை நினைத்தீர் மதியில்லீர். (௩௩)

வேத மொழிக்கே யேத முரைத்தீர் வினையுந்தீ
ராதுல ருக்கே லோடமுரைத்தீ ரறிவில்லீர்
வேதி யருக்கொன் றீவ தொழித்தீர் விறன்மிக்கி
ரீதன் மறுத்தீர் காதல் மிகுத்தீ ரென்செய்தீர். (௩௪)

கோளரி யொத்தீர் கோளு முரைத்தீர் குணமற்றீர்
வாள்கொடு மிக்கோ ராருயிர் செற்றீர் வரைவிற்றீர்
மூளெரி யிட்டே வாழ்மனை செற்றீர் முனிவுற்றீர்
பாளை மடற்சா றாறல் குடித்தீர் பழிவைத்தீர். (௩௫)

வேறு.

அரசர்மனை கற்பழித்தி ரளவில்கன் னியர்ப்புணர்ந்தீர்
குரவர்மனைக் கிசைவைத்தீர் குலமாதர் வரவழைத்தீர்
பரவரிய முன்னவன்றன் பன்னியையும் பாடுரைத்தீர்
விரவுமறை யாளர்குல மெல்லியர்க்கு விரும்பினீர். (௩௬)

வைகறையி லெழுந்துசிவ வந்தனைசெய் திருமிலீர்
பொய்கைதரு தெய்விகப் புனலிடைத்தோய்ந் திருமிலீர்
செய்கைபெறுந் தந்தைதாய் தீப்பசிதீர்த் திருமிலீர்
மெய்கையினுற் சிவன்முன்னர் வீழ்ந்துபணிந் திருமிலீர். (௩௭)

சங்கிருந்த தடக்கரத்தான் றனக்குமன்பு செய்கிலீர்
கொங்கிருந்த மலரிலேசீர் கொணர்ந்தரனைப் பணிந்தறியீ
ரங்கிருநது செய்தகொலை யளவிலவங் கவைமறந்தி
ரிங்கிருந்தே யரிதுயிர்த்தால் யானதற்கென் செய்கேனே. (௩௮)

வேறு.

முன்னதிபா தகம்புரிந்த வேசிகருங் கங்குல்தனின் முல்லை நாதன், சன்னிதியிற் செயும்வினையுஞ் சாற்றரிது கலைத்தலையாற் றலரையைத் தூர்த்தாள், பின்னதிகந் தருமமில்லை விளக்குமன்று கொள்ளியொளி பிறங்கச செய்தா, ளென்னதிகா ரமுங்கடந்தா ளப்பரிசு போலுமொன்றை யியற்றி னீரோ. (௩௯)

வேறு.

ஆதலா லென்மருங்கி னருளிலாக் கிங்க ரர்செய் வாதையால் வருத்தமுற்றீர் மற்றுநர கிடைப்புக்கீர் பாதிமா மதியணிந்த பழம்பொருளை நினைத்தீரேற் போதலாம் வானுலகி னினியென்னப் புகலுமே. (சO)

வேறு.

அரகர வென்றே சிவசிவ வென்றே யறைகின்றார் புரகர வென்றார் சிரகர வென்றே புகல்கின்றார் பரமப தந்தரு நிருமல வென்றே பகர்கின்றார் குரவ னெனுங்கா லனையு மகிழ்ந்தே குறைகின்றார். (சக)

வேறு.

மற்றி வன்சொ லும் வாசகங் கேட்டுமா நரகத் துற்று ளோரெலாஞ் சிவன்றிரு நாமமே யோதி நற்ற வத்தராய்க் காவிரி சோணைநன் னாட்டுக் கொற்ற வேந்தரா யறிவுடன் வந்துருக் கொண்டார். (சஉ)

பரத்தை கதிபெற்ற சருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம் உசஉ.

—※※—

## (எ) தீர்த்தவிசேடச் சருக்கம்.

செவிப்புலன் முல்லை நாதன் றிருக்கதை யமிர்தங் கொள் ளத், தவிப்பிலா வுவகை யோங்கச் சவுனக னெழுந்து சென்னி, குவித்தசெங் கரத்த னாகிக் குணலைகொண் டடியிற் றாழ்ந்து, புவிப்புரா ணிகனைச் சூதப் புனிதனைப் போற்றிச் சொல்வான். (க)

தீர்த்தவைம் புலத்தின் சால்புந் தீர்த்தங்க டம்மின் மேலோர்
சேர்த்தநூன் முறையி லாடுந் தினங்களின் றிறனு நாக
மார்த்தகோ டீரன் பாத மநதணற் களித்த பண்புங்
கூர்த்துணர் சிநதை யெந்தாய் குறைபடா துரைத்தி யென்றான்.

என்னலுஞ் சூதன் கேளா வெம்பிரான் முல்லை மூதூர், நன்னலஞ் சுருதி யாலு நவிற்றரி தியாமே சொல்வன், பின்னருஞ் சிறிது சொல்கேன் பிறங்குதீர்த் தங்க டம்மை, யுன்னலும் பவத்தை மாற்று முணர்தியென் றுரைத்தான் பின்னும். (௩)

பங்கயப் பொகுட்டிற் பாவை பார்மகள் பாங்கர்ச் சூழச்
செங்கையிற் றிகிரி தாங்குந் திருமறு மார்பன் முன்னங்
கஙகையிற றளைந்து திங்கட் கற்றையஞ் சடையா னீங்கா
மங்கைமெய்ப் பங்கன் முல்லை வனத்தினில் வநது சேர்ந்து. (௪)

அரியணைச் சேக்கை நீங்கி யறிதுயி லாழி நீத்துத்
தரணிகாத் தருளுந தூயோன் றுவிலஞ் செழுத்து மோதி
வரமருள் மாசி லாத மணிதனை யருச்சித் தேத்தி
யிரவுநண் பகலு நோக்கா திலக்கமோ ரிலக்க மாண்டு. (௫)

தன்றவக் குமரன் சாபத் தழைகணுக் கோது தள்ளி
மென்றிடு மாலைத் தீங்சா றருப்பமாய் விரும்பி நீலக்
குன்றென நின்றான் முல்லைக் கொடித்தழும் புடையான் மேனிக்
கென்றுமே யாட்டி மாத ரிருவரு மேவல் செய்ய. (௬)

நிலவவ னினவான் றீம்பா னிறைகடத் தேந்தி யார்க்குந்
தலைவன்மே னியினி லாட்டித் தாட்டுணை பரவா நின்றான்
குலகிரி நிறுவிப் பாந்தட் கொளுவிவே லையைக்க டைந்தான்
குலவிய வமுத சார மும்பருக் குதவு வான்போல். (௭)

வேறு.

தனுவளைவிற் பூண்டிடவே தரிக்கையாற் பின்னசலந் தங்குமாற்றாற், பனகன்மேற் படர்கையாற் பங்கயமுன் னுருமேவும் படித்தா லன்றி, வினவுகடற் சூழ்விடமுண் டிடுதலாற் றிருநெடுமால் மேகம் போலுந், தினகரலோ சனம்போலு மிருந்து மனம் பொருந்துதவம் செய்யு நாளில். (அ)

அநதராதுந் துமியியம்ப வண்டார்பூ மாரிசொரிந் தருகிற் போதச, சுநதரவெள் விடைபுடைசூழ் நந்திபிரான் பூதத்தின் தொகுதி சூழ, விந்திரவின் னுதற்பாவை யிடப்பாகத் தினிதி ருப்பவெழுத்தோ ரைந்தாற், செந்திருமால் பத்திசெய்யச் சித்தி யெய்தும் படியிருந்தான் தேவ தேவன். (கூ)

வேறு.

மண்ணிடந் துழன்று தேடு மலர்த்தாட்டா மரையின் மீது
கண்ணிடந் தணிநத வன்பன் கயிலைநா யகனைக் காணு
வெண்ணிடுந் தகுதிக் கெட்டா வின்புறப் பணிந்து வீழ்நதான்
பண்ணிடுந் துதிகள் பாடி யாடினுன் பரவிப் போற்றி. (ய)

கண்ணனுங் கனிந்து போற்றக் கண்ணுதல் கருணை மீக்கொண்
டெண்ணருந் தகுதி நல்கு மேதுமந் திரத்தின் காப்பால்
மண்ணகங் காப்பா யுன்பால் மந்திர வுருவந தந்தோ
நண்ணருஞ் சித்தி பெறுயு நன்றுதா னென்ருன் பின்னும். (யக)

காசிகே தாரந் தென்னற் கயிலைநற் சோம நாத
மாசிலாக் கோகன் னஞ்சூ ழரீசசரம் விருத்த காசி
மாசிலாத் தில்லை காழி மாயூரங் குடநதை யையா
றேசிவ லோக மூதூ ரின்னுநற் றலங்க ளுண்டால். (யஉ)

தானமுந் தவமு மொன்று கோடியாய்த் தழைப்ப தன்றி
ஞானபூ மியதா மெண்ணி னற்றலங் கட்கு மேலா
மானவிப் பதியி னீங்கா வருளொடு வாழ்தி யென்று
வானநா யகனன் ருேதி மாதொடுங் கயிலை சேர்ந்தான். (யங)

செங்கண்மால் கரிய கண்டன் றிருவருட் செல்வம் பெற்றுச்
சங்கமூர் கடல்வாய் முல்லைத் தனிநெடும் பதியின் சீர்த்தி
யெங்கணும் விளங்க வோதி யெல்லையு மிரியா தென்று
மங்கைய ரிருவ ரோடு மகிழ்ந்தினி திருந்தா னங்கண். (யச)

கீழ்திசைப் பால தாகக் கேடிலாக் கடவுள் முன்னர்ச்
சூழ்திரைப் புனித தீர்த்தம் சுரர்நதி பெற்றித் தாகு
மாழ்திரை யமளிப் பாய லண்ணருன் வகுத்த தங்கண்
மூழ்கினோர் பவவே லைக்குள் மூழ்கிநீந் தியவோர் முத்தர். (யரு)

ஆவணித் திங்க டன்னி லமரபக் கத்து ரோணி
கோவலர் மகர்கொண் டாடுங் கோகுலாட் டமிசேர் நாளி
லேவரே யெனினு மாயோ னியம்புதீர்த் தத்தின் மூழ்கிற்
றேவரே யாவ ரன்னோர் சிந்தித்த வெவையுஞ் சேரும். (௰௬)

மாவிடுந் தீர்த்த மாடன் மாதவர்க் கன்றி யெய்தா
வாவிடும் வீழ்திற் றூங்கு மருமகப் பேறி லாதோர்
பாலொடுங் கடமும் பொன்னும் பரிவொடு மறையோர்க் கீந்து
மேவிடும் புனலி லாடிற் புதல்வரைப் பெறுவார் மெய்காண். (௰௭)

அன்றியு மிந்து வாரத் தமாவாசி விதிபா தஞ்சேர்
நன்றிநன் னாளின் மாயோ னல்குநீர்ப் பொய்கை தன்னி
லொன்றிய வன்பின் மூழ்கி யுயர்நதவர்க் குதக நல்கி
லென்றுமே பெறுவர் முத்தி யெய்துவார் வினையை யெய்தார். ()

மன்னுகார்த் திகைத்திங் கட்செவ் வாயெனும் வார நான்குந்
துன்னுமா மறையோர் தம்பாற் றாசுகந தளித்துத் தோய்நதோர்
முன்னுவெண் குட்ட ரோக முயலகன் முதலா நோயி
னின்னலுற் றிடினு மாற்று மிகபரத் தெழிலு நல்கும். (௰௯)

திசைமுகத் தெண்டோள் வேதன் செய்திடும் பிரம தீர்த்தந்
திசைகொள்வை காசி மாதத் திலங்குபூ ரணையி லாட
விசையமெய்ஞ் ஞான வாளால் வெவ்வினைப் பகையை வெட்டி
வசையிலாச சுருதி கூறு மனோவதி யடைவார் பின்னும். (௨௰)

விரதமு நாலேழ் கோடி விரதமுன் றவத்தி லொன்றை
வரதமுற் றனுட்டிப் போரை மயக்கிய விரத பங்க
காணமு மகற்றிச செய்த விரதத்தின் பயனுங் காட்டுங் [றும்.
குரவர்தாய் தந்தை பாற்செய் கொடும்பெருந துரோகங் குன்

தடங்கடற் புவியே யுண்டான் றன்படி முந்நீர்த் தீர்த்தந்
துடங்கிமூழ் கிடலி ராசத் துரோகம்வா தனைத்தீ யூட்டல்
விடங்கொடுத் திடல்சே ராத மெல்லிய விடத்துச் சேர்த •
லடங்கலு மவரைப் பற்று வருநதரைக் காச ராவர். (௨௨)

வந்தித்து வணங்குந் தூயோர் வன்னியோர் பெரியோர் தம்மை
நிந்தித்த பழிச்சொல் வீட்டு நீள்வினைத் தொடர்பு நீக்குஞ்
சந்திக்கும் வழுவு வந்த தனைடால புறத்துத் தள்ளுஞ்
சிந்தித்த தன்மம் வாய்க்குந் தேவர்தோய் வசிட்ட தீர்த்தம். ()

ஆடிசித் திரைதைப் பூச மைப்பசி மாதத் தோறறங்
கூடிய மதியம் பானுக் கோளொடுங் கூடுங் காலம்
நீடிய வாய நாளி னெடுமுனி புனலின் மூழ்கி
னாடிய செல்வம் வாணாள் நற்போக நயநது நல்கும். (௨௪)

விளங்கிய பிரம தீர்த்தம் விண்டுபுட் கரிணி மிக்க
வளங்கொள்சங் கரத டாகம் வசிட்டநீர்ப் பேரா விந்த
மளநதிட நின்ற செங்கை யகத்தியன் வாவி மேலோ
றாளங்கொளும் பிரம தீர்த்த மொன்றுக்கொன் றாட்சி யாமால் ()

அவ்வகைத் தீர்த்தந் தம்மு ளடைவினிற் கடவுள் சொற்ற
விவ்வகை நாட்க டம்மி லேவரே யெனினு மூழ்கித்
தெய்வவே தியரைப் போற்றிச சிறநதகோ தான நல்கின்
மைவளர் கண்டன் வெள்ளி மால்வரைப் புறத்து வாழ்வார். (௨௫)

மற்றுமந் நீரி லாடி மழவிடை மறையோர்க் கீயப்
பெற்றிடிற் கயிலை காக்கும் பிரான்கண நாத ராவர்
நற்றவர் பரவு கஞ்ச நானமுகன் வாழு மூழி
சொற்றதோர் வருட மெண்ணிச சுரரென வும்பர் வாழ்வார். ()

வேலையைத் தாவும் பொன்னி மேதகு புனலி லாடி
யாலயஞ் சூழ்நத பஞச தீர்த்தத்தி லடைவின மூழ்கிற்
பூலய முறினு மாரப் பொறபத மீயு மல்லாற
காலையிற் பிரம தீர்த்தம் படியினு முத்தி காட்டும். (௨௮)

ஆயிரங் கோடி தெய்வத் தனித்தல மவற்றுண் மேலாம்
பாயிருங் கடல்வாழ் முல்லைப் பதியினி லன்ன தான
மேயிய னுதவி லநத வவியொன்றுக் கிமையோர் வாழ்க்கை
மேயின வருடம் பத்தும் பத்துமே விளங்கி வாழ்வார். (௨௯)

வேறு.

ஊர்வன வெனினும் பறவைக ளெனினு முறுவிலங் கெனினுநீ ரிடத்துச, சார்வன வெனினுந் தாவர மெனினுந் தவந்தரு முல்லைமூ தூரைச், சேர்வன வாகி னல்லுருக் கொள்ளுஞ் சிறந்தமா னிடரவண் சேர்நது, நேர்வரேல் மறந்து மானச சரசில் நிலைமையாய் வாழ்வர்நன் னெறியில். (௩௰)

### வேறு.

ஆதிநா ளோதி வல்ல வந்தண னொருவன் றங்கள்
சாதியி லொருவன் றாதை தனக்கிடுந் திதிநா டன்னி
லோதன வுண்டி யுண்டா னூழ்வினைச் செயலாற் கங்குற்
போதினிற் பின்னு மன்னம் பொருந்தியன் றருந்தி னானால். (௩௧)

அன்னிய ரகத்தூ ணுண்ட லவுடத மருந்த லோதல்
பன்னியைப் பிரிந்து சேர்தல் பகர்தந்த சுத்தி செய்த
வின்னல்சேர் தயிலத் தாட லிலையமு தடைக்காய் துய்த்தல்
சென்னியிற் கேச மாற்றல் திதிசெய்வோர்க் கீது தீது. (௩௨)

அருந்துவ தொளித்தல் வேற்றி லருந்துத லரிவை மார்தோள்
பொருந்துதல் பின்னு மன்னம் புசித்தலூர் வழிந டத்தல்
விரும்பியோர் தானம் பற்றல் வேறணி யுடுத்தல் சாலாப்
பெருஞ்சுமை தாங்க லெட்டும் பிழையெனப் பகரு நீதி. (௩௩)

அறந்தனைக் குறியான் வேதத் தருநெறி நீதி யந்தோ
மறந்தன னன்னான் மாள வல்வினை தொடரு நாளி
லிறந்தன னிறந்த காலத் தெதிர்காலங் காக மாகப்
பிறந்தன னென்றா னன்றோ பிறர்மனை யுண்டி பற்றல். (௩௪)

காருட னாடா வன்னக் கண்மணிக் கயவாய் முட்கால்
வேருடைத் தோகைத் தூவி விடிவுசெய் குரல மேலாய்ப்
பாரிடத் தவர்கண் காணாப் பறறுறும் புணர்ச்சி யின்ன
சீருடைக் கொடியே யெனனத திரிந்தனன் பறந்து சென்று. ()

இருபிறப் பமைந்த மேன்மை யிழந்துதன் னுகரத் தீயா
லெரிபிறங் கடையர் வீட்டி லிறந்திடா நிற்பப் பற்றித்
தருபல பலியூன் கொத்தித் தன்னினத் தோடு மந்தக்
கருமுடப் பறவை முல்லைக் கடிநகர் காணுற் றன்றே. (௩௬)

கடற்பிணா வோச்ச வோச்சக் கடலர்வாழ் மனைக டோறு
முடைப்புலால் முண்மீன பற்றி முன்றிலிற் பறந்து சூழ்ந்து
தடைப்படா துழலு நாளிற் றகையிலாப் பறவைத் தோற்றம் '
விடத்தகும் பொருட்டால் வேத விரிஞ்சதீர்த் தத்தின் பாங்கர்.()

மதிகதிர் பொருந்து மம்மா வாசிநண் பகலில் வேத
விதிமுறை மறையோர் சைவர் வேள்விமெய் முனிவோ ரன்றைத்
திதியினீ ராட வந்நீர்த் திவலையக் கொடிமேற் சிந்த
முதிருநல் லறிவு மெய்தி முற்பிறப் பறிந்து சோர்ந்து. (௩௮)

பாய்ந்துசூழ் பிரம தீர்த்தம் படிந்தது காக ரூப
மாய்ந்தது மாயத் தெய்வ வடிவொடு நின்ற தம்மா
காய்ந்தகா ரிரும்பின் முன்னர்க் காட்டிய விரத மூலி
வாய்ந்தநற் பசும்பொன் னாக்கும் வண்ணமொத் திருந்த தன்றே.

பொன்மலை சேர்ந்த காகம் பொன்வண்ண மாகு மாப்போற்
றன்மையாற் பிரம தீர்த்தந் தனிற்றோய்ந்த காகங் கொண்ட
நின்மல வுருவங் கண்டு நின்றுளோ ரீது போலு
நன்மதை யமுனை கங்கை நல்குமோ வென்று போற்ற. (௪௰)

விண்ணூறு நெறியிற் போந்த விமானத்தங் கவனை யேற்றி
மண்ணுளோ ரிறும்பூ தெய்த வருங்கண நாதர் மல்கி
யெண்ணுதற் கரிய வின்பத் திந்திர திருவி னோங்குங்
கண்ணுதற் கடவு ணீங்காக் கயிலைமா திசையைச சார்ந்தார். ()

வேறு.

காக்கைக்கு வல்லான் படைத்தா னுடல்கவ்வு மாலங்
காக்கைக்குப் பௌவ முற்றிருட் பெற்றிட வுண்டகண்டன்
காக்கைக்கு நல்குங் கயிலாய மெய்க்காட்சி யின்பங்
காக்கைக் களித்தனன் றன்னற் பதிகாணி யாக. (௪௨)

பதினாறு தோற்றமற் றக்காக வுருவுற் பவித்தே
யதிபாத கத்து ஞமலிப் பிறப்பா யிரம்பெற்
றிதினீந்தி மாந்த ருருவாய் மிடிசேர்ந திளைத்துத்
[illegible]ன்றிச் சுற்றிச சுழல்வர் கதிபல தீயோர். (௪௩)

இவ்வா றுரைத்த வுருவெய் திலனெய்தி னூற்
செவ்வான மேனி விழிமூன்று பொற்செங்கை நான்கொ
டெவ்வாழ்வு நீடு கயிலாய விருக்கை யென்று
லவ்வேக தீர்த்தப் பெருமைக் கினியன்ன துண்டோ. (௪௪)

தீர்த்தவிசேடச் சருக்கம் முற்றும்.

ஆகத்திருவிருத்தம் ௨௮௬.

—※※—

## (அ) கருடன் கதிபெற்ற சருக்கம்.

பொன்னுழைப் பணிக டோன்றும் பொற்பென முல்லை மூதூர், மன்னவ னருளாற் றோன்றி வரும்விளை யாட்டை யென்னா, லுன்னுதற் கடங்கா தேனு முற்பூத மாகக் கண்ட, தின்னுமோர் கதைகேண் மின்னென் றின்றருட் சூதன் சொல்வான். (க)

**வேறு.**

தார்வனப்பிற் சிறந்தறலைத் தணந்துதிரித் தடர்த்துநீர்க்
கார்வனப்பிற் சுருண்டிருண்டு கடைசுழன்ற கருங்குழலாள்
போர்வனப்பில் வாங்குசிலைப் புருவத்தாள் பரந்தநுதற்
சீர்வனப்பிற் றினந்தீட்டுஞ் சிந்தூரத் திலகத்தாள். (உ)

மையடர்ந்து காதடர்ந்து வஞ்சகமா யம்பொதிந்து
மெய்யடர்ந்த தகைத்தோரை வெறுத்தழித்துக் கடைசிவந்து
பொய்யடர்ந்த காமனுக்கும் போர்த்தொழிலின் திறங்காட்டிக்
கையடர்ந்த காமுகரைக் கலகமிடுங் கண்ணினாள். (ங)

களபசந்தச் சேருடிக் கதிர்த்தரள வடஞ்சூடி
யிளமதிக்கீற் றெழுதிநமக் கெதிரிலையென றிறுமாந்து
முளரியிள முகைமுகத்து முறுக்கணிபோற் கண்கறுத்துத்
தளர்மருங்குல் தனைவருத்துந் தனக்கோட்டு நலத்தினாள். (ச)

மேகலைகாஞ் சிப்பருமம் விரிசிகைசூழ் கலாபமைந்து
மாகமென்ன வுயிரென்ன வணியாத்த பட்டுடையாள்
தோகைமயில் சாயலாள் தொடருமன்ன நடையினாள்
கோகிலத்தின் குரல்தனக்குங் குறைகாட்டுங் குரலினாள். (ரு)

**வேறு.**

காவரிக் கிருபொறி கமலங் காவியே
மாவரிக் கிருபொறி வடிவங் கூந்தலே
பாவரிக் கிருபொறி பதநி தம்பமே
வாவரிக் கிருபொறி வான்ம லர்க்கணே. (சூ)

**வேறு.**

கலையொக்கு மங்குலைவெள் கலையாக்குஞ் சொனும்வாயே
விலையொக்கு மெனச்சொன்ன விலைவாய்க்கு மநுராகஞ்
சிலையொக்கும் புருவமரா சிலையொக்கு மகலல்குல்
மலையொக்கு மெனுமுலைக மலைதோற்ற மெனும்வடிவம். (எ)

மையொக்கும் மாதர்விழி மாமையொக்குங் குறிகள்மலர்க்
கையொக்கு மின்பசயங் கையொக்க வட்படியே
பொய்யொக்கு மிடைக்கொடிவான் பொன்னாட்ட ரம்பைமார்
மெய்யொக்க விளைவயனைத்து மெய்யொக்குங் குறங்கினாள். (௮)

எண்ணான்கா மிராகவித்தை யேழிசைநா டகவிஞ்சைப்
பண்ணான்கு பதினான்கு பக்குமெழில் வகைதெரிந்து
பெண்ணான்கில் திருமுல்லைப் பெருங்கோயி லுடையார்முன்
விண்ணாடல் போனடிக்கும் வேசிதே வடிமைமின்னாள். (௯)

போகவதி காமுகற்குப் புகலுமிசைப் பணிமொழியா
ளாகவதி ரூபத்தா லயிராணி தனக்கொப்பாள்
மாகவதி பதிநடன வனிதையர்போ னடிக்கவல்லாள்
மோகவதி யெனப்புவியோர் மொழிந்ததிருப் பெயரினாள். (௰)

முன்னீறி லாவிளைஞர் முயங்கிவறு மையிற்றளரப்
பின்னூறு பொன்றனக்குக் குறையென்று பிறாகேட்க
நன்னூறு போலாக்கி நயந்தவாசெல் வந்துடைத்துப்
பொன்னூறு கைக்குவரின் மெய்க்குவரும் புனர்சசிசெய்வாள்.()

வேறு.

பலர்பல மணியினைப் பணைகள் செய்திடச்
சிலமினார் புதுமலர்த் தெரிய லேந்திடச
கலவைநற் செப்பினைச சிலவர் கைக்கொளக்
குலமணி வாயிலிக் கோதை நிற்குமே. (௰௨)

இந்நிலைத் தணங்கவ ரேவல் செய்துற
மின்னலம் பொருமதி வேணி நாயகன்
பொன்னலக் கோயிலிற் புரிய நாடக
நன்னலக் கணிகைபா னயப்ப வாழுநாள். (௰௩)

வேறு.

மாசி லாத வந்தணன் வளங்கு லாவு முத்தர
தேசி மேவு கௌதமை தீர மீதில் வாழ்பவன்
பூசு ரர்க்கெ லாமறைப் பொருள்வி ரித்து ரைப்பவன்
வாசு தேவ னென்னவே வழுத்து கின்ற பெயரினான். (௰௪)

ஒருமை பெற்ற மேன்மையா னிருபி றப்பி னுரிமையான்
மிருதி சொற்ற முத்தழலின் வேத நான்கின் வல்லவ
னருண்ம தித்த வேள்வியைந்து மறுவ கைப்ப டுந்தொழிற்
பெருமை முற்று மற்றுநீடு பீடு முற்ற பெற்றியான். (௰௫)

வாழ்வி னோடு கற்பிசைந்த மாதி னோடு வாழ்மனை
வேள்வி யோடு மந்தணாளன் மேன்மை யோடும் வாழுநாள்
தாழ்வி லாத வன்றனக்கோர் தாழ்வு வந்து சார்ந்தென
ஆழ்மனைப் பொருட்டின் மைந்த னொருவன் வந்து தித்தனன். ()

தொடரு மாரி தோன்றுதற்கோர் தூம கேது வாமெனக்
கடல்க டைந்த வானவர்க்கோர் காள கூட விடமெனப்
படரு நீணி லாமதிப் பசுங்க திர்க்கோ ரரவென
வடமொ ழிப்பி ரானிடத்து மைந்தன் வந்து வளரவே. (௰௭)

கருட னென்னப் பெயர்புனைந்து காட்டு சாத கன்மமோ
டருண்ம றைச்ச டங்கியற்றி யார ணங்கொ டுத்தபின்
முருட னாகி யிந்தமைந்தன் மோகி யாகி நாடொறுந்
திருட னாகு மென்றுசோ திடந்தெ ரிந்து செப்பினான். (௰௮)

வேம்பின் மேவு கைப்புமாற்றி மிக்க நற்சு வைபெறப்
பாம்பின் வாய்வி டத்தை மாற்றி யமுதமாப் படுத்தல்போற்
றீம்ப னான மைந்தன்வெய்ய சிந்தை யின்றி ருக்கெலாம்
போம்ப டிக்கி யைந்தஞான போத கம்பு கன்றனன். (௰௯)

தாதை யோது மெய்ம்மொழி சலத்தி டும்மெ ழுத்தெனப்
பேதை மாதர் காதலோதல் பேசு கல்லெ ழுத்தென
வாதை சோம யக்கமெய்தி வரைவி லாத மாதர்தோள்
காத லித்து வந்துமிக்க காம வேலை மூழ்கினான். (௨௰)

அறங்க டிந்து முறைதிரும்பி யார ணம்ப ழித்துநீள்
மறம்பு ரிந்து சுடர்விளக்கின் மாய வீழும் விட்டில்போற்
கறங்கெ னச்சு ழன்றுநற் காலை முல்லை மாநகர்ச்
சிறந்த வல்லி மேன்மை நண்பர் செப்ப வாசை செய்தபின். ()

பெற்ற தாயர் தந்தைபாற் பிரிந்து வேட்கை வாழ்க்கையாற்
சுற்ற முந்து றந்துசொற்ற தூர்த்த ரோடு கூடியே
யற்றை நாள கத்துள வரும்பொ ருள்க வர்ந்துகொண்
டொற்ற ரோடு தென்றிசைக்க ணுலவை போற் படிந்தனன். ()

கடிகையோன் றிரண்டின் மிக்க காவதங் கடந்துசூழ்
படியி னீடு முல்லையம் பதியில் வந்த டைந்துபூங்
கொடிய னோரா டும்படர்ந்து சோலை நின்று லாயதோர்
வடிவு கண்டு மனமகிழ்ந்து வண்ண வாயி னண்ணியே. (உங)

மெய்ப் பொருள் வழிப்படா விகார மோக வேதியன்
பொய்ப் பொருட் பரத்தைபாற் புலன் செல விருப்பொடுங்
கைப் பொரு ளனைத்தையுங் கரந்திடா தளித் தனு
மைப்பெறுங் கயற் கணங்கை வம்மி னென்று கூறினான். (உச)

வேறு.

செம்பொனின் மாட மெங்குஞ் சித்தசன் கொடிக ளாடப்
பைம்பொன்மா ளிகைசசார் வெங்கும் பன்மணிப் பத்தி பாய
வம்பவிழ் பிணைய லாட வளஞ்செய்பூஞ் சேக்கை மீதி
லம்படர் கண்ணி யோடு மணுகின னந்த ணாளன். (உரு)

பூமலர்த் திருவ னாளும் புகழ்ந்துள மகிழ்ந்து தாவாக், காமவின் பத்தைக் காட்டி மனேலையப் படுத்தும் வண்ணம், தாமமென் கொங்கை யாரத் தழீஇக்கொண்டு கொவ்வைச் செவ்வாய்த், தேமல ரிகழ்த்தே னல்கிச் சேர்நதனள் சுரதஞ் செய்து. (உசு)

சேந்தநன் கனிமென் பாலிற் றீஞ்சுவை யமுதந் தேக்கிச்
சாந்தவண் களபந் தோய்நது தண்மலர்த் தாமஞ் சூடிக்
காந்தளங் கையாள் போற்றக் காமநூல் கலவி காட்டிப்
பூந்தவி சிழியா வின்பங் கருடனும் புணர்ந்து வாழ்நாள். (உஎ)

தூயவெள் ளிவ்வி யாழந் தொடங்கிநற் கொடியு மேற்றி
நேயமாய் நடத்திக் கையி னிதியெலாந் தொலைந்த வன்றே
யாயவேள் கொடியி றங்கி யாயிழை பொருந்தா ளாகிப்
பாயலு மிழந்து நீங்காப் பரிவுபோய்ப் பிரிவு கொண்டான். ()

தனமிலா வறுமை வந்து சார்ந்திடக் கணிகை சற்று
மனமிலா திருப்ப வாவாண் வராவகை மடமா னென்ன
வினவிலா தயரு மன்றி லென்னநொந் திரங்கிச் சோர்ந்து
இனமிலான் மான மில்லான் தெருத்தலை வாயி னின்று. (உகூ)

அலையுநீர் மதியம் போல வாட்டாலைக் கோது போற்றீ
யுலையரக் கதுபோல் வேழ முண்டதிங் கனிபோ லானு
னிலைதடு மாறி வீழ்வ னினைவறத் திரிவன் மாரன்
கொலைசெயும் பகழி தூங்கக் கோவென முறையிட் டோய்வான்.

மாயவே ளிடையான் பட்டு மனனொடு மலர்ந்து சேர்ந்த
தூயமே னியும்ப சந்து சோற்றினைக் கான்று நின்று
நேயவெண் ணீறு மிட்டு மடலேந்த நின்றா யென்பே
யாயதோ வுனது சிந்தை யடர்ந்ததே நகையே யென்பன். (௩௧)

அன்றிலை வெறுக்கோ கூவி யடுங்குயில் தனையே நோகோ
தென்றலை யொறுக்கோ காமத் தெய்வத்தை வைகோ பாவி
முன்றிலைப் பழிக்கோ சேர்ந்த முகூர்த்தத்துக் கொலையோமாதை
யென்றினிச சேர்வே னுவேன் மெலித்தனை பகையோ வென்ன.

மங்கைமெய்ப் பொருந்தா மார்பை வடிவெலாங் காணாக் கண்ணைக், கொங்கையி லணையாக் கையைக் கொவ்வைவாய் பருகா வாயை, யங்கயல் விழியாள் கூறு மணிமொழி கேளாக் காதைப், பங்கயத் திருப்போ னென்போற் பாவிக்கோ படைத்தா னென்பன். (௩௩)

கண்டகக் கைதை காள்வெங் கலைச்சுறா வினங்காள் புன்னைத்
தண்டலைத் தருக்கா ளென்போற் றவித்திடு மரக்க லங்காள்
முண்டகக் கழிகா ளென்போன் முறையிடு திரைகாள் பாவி
பண்டையிற் பழியோ சேரப் பார்த்தன ளென்றுஞ் சொல்வன்.

சோருவ னழுவன் வீழ்வான் சுழலுவன் படங்கைக் கொண்டே
யூருவ னென்று நிற்பன் ஒய்யென்று முறையோ வென்று
நேருவ னவனபா லங்க ணின்றுளோ ருருகச சேராத்
தாருவின் வல்லி போலுந் தையலு மவன்முன் சார்ந்தாள். (௩௫)

கண்களுக் கிடும்வி ருந்தாக் காதலி வடிவங் கண்டான்
பண்டனக் கியைந்த கீதம் பாடினா னாடிச சூழ்நதான்
பெண்களுக் கரசே யான்செய் பெருந்தவப் பயனே பொன்னே
மண்களுக் கரசே யென்றான் மனமிலாள் பழித்துச் சொல்வாள்.

பொருளுண்டே லன்பு முண்டாற் பொருளிலா னனங்க னேனு
மருளுண்டே பரத்தை மாருக் கறிகிலாய் நினைவி லாநீ
மருள்கொண்டா யந்தோ பொய்யை மெய்யெனக் கருதி மாய்வாய்
தெருள்கொண்டா யெனக்குன் மீது சிறிதுமன் பில்லை கண்டாய்.

என்மீதில் வைத்த வன்பி லெள்ளள வெனினு மீசன்
றன்மீதில் வைப்பா யாகிற் றவறுண்டோ பரத்தை மாதர்
முன்மேவு மொருவன் வாயிற் றம்பல முறையிற் பற்றிப்
பின்மேவு மொருவன் வாயி லுமிழ்ந்திடும் பெற்றி கண்டாய். ()

மலப்பிண்ட மென்பு கோத்து வளர்புழு மொய்ப்ப நாறுஞ்
சலப்பிண்ட மன்றோ தீந்து தசையொடுங் குடரைச் சூடி
யுலப்பின்றி மலங்கள் பாயு மொன்பது துளையோ டோங்கும்
புலப்பிண்ட மடவா ராக்கை போகமே யளித்தல் பொய்காண். ()

கல்லொடு புல்லும் பூடு கருமியாங் கிருமி தாருப்
பல்லுயிர் விலங்கு சூழப் பறவையாய் வாரா நின்று
நல்லுருப் பெறுதல் முற்செய் நல்வினைப் பகுதி யாவி
யெல்லைநீர்க் குமிழி யீதே யீடேற்றும் பிறவி கண்டாய். (௪௰)

மானிட யாக்கை கொண்டு மறையவர் குலத்து வந்த
தோனுழை குடம்பை தெறறித் தூங்கிய வண்டு போலு
மானதோ வுனது சிநதை யைம்புலப் பகையை வென்று
ஞானநா யகனைப் போற்றி நற்றவ மியற்றொ ணாதோ. (௪௧)

காசிசே ரளவி லெல்லைக் கங்கையை நிகருந தீர்த்த
மாசிலா மணியான் ஞான வாரியாய் வாழு மூதூ
ராசிலாத் தலத்தி லிங்க னடைநதனை யிரந்துண் டேனு
மேசிலாத் தருமஞ் செய்தி யெல்லையைப் பிரியா தெய்தி. (௪௨)

பூவினா லிலையா னீராற் பூதியால் வழிபட் டேத்தி
நாவினா லிறைவர் நாமம் நவின்றிடில் நரகஞ் செல்லா
தாவிபோ மளவு மன்போ டருந்தவம் புரிநதால் முத்தி
மேவிவாழ்ந் திடலா மென்று விளம்பியவ் வணங்குஞ் சென்றாள்.

உறங்கினான் கையிற் பந்து பொன்பொரு ளெனவுந் தீமை, மறந்தனன் மறந்தா னன்றே மாதர்மேல் மாதர் நீத்தான், அறந்தனைப் புரிந்தான் கையி லிரந்துண்டங் கரனைப் போற்றித், துறந்துமெய்ஞ் ஞான முற்றுந் தொண்டர்க்குத் தொண்டு செய்தான். (௪௪)

ஆணவ வினையு மற்று மாசானா லரனைப் போற்ற
மாணவ னெனவு மோக மதியினால் மயங்குஞ் சிந்தைக்
கோணைவா ளாலே மாற்றிக் குலத்தொழில் புரியு நாளிற்
றாணுவின் பதியி லாவி தனைவிடு மிறுதி யெய்த. (௪௫)

வாரக முலைப்பி ராட்டி மடிமிசைக் கிடத்தி வேத
பாரகன் கலையை மார்பிற் படர்தானை யதனா லாற்றச்
சேரகத் துயிரே முன்னஞ் செவியுற்ற முல்லை நாதன்
றாரகப் பிரம போகச சாரூப பதவி சார்ந்தான். (௪௯)

பவத்தொழிற் பரத்தை காதற் பரத்தனும் பதத்தை நாடிச்
சிவத்தொடுஞ் சீவன் முத்தி சேர்ந்தன னென்றால் மேலைத்
தவத்தினோர் தமக்கு முல்லைத் தலத்திறங் கூறற் பாற்றே
யிவற்றையா னுரைக்கப் பெற்ற தெம்பிரா னருளே யன்றே. ()

வேறு.

தில்லைவன மறிகடற்றெண் டிரைபடர்சா யர்வனஞ்சீர்
வில்வவனஞ் சொல்லரிய வேதமொழி வேதவன
முல்லைவனம் பெறற்கரிய முத்திக்கு வித்தாகுஞ்
சொல்லைவனத் தினுஞ்சிறந்து தோன்றுவது முல்லைவனம்.(௪௮)

கங்கைநதி யமுனைநதி கவுதமைநன் னதிமாறாத்
துங்கபத் திரைநதியார் துலங்குகா விரிநதிமெய்
பங்கமுறும் பவமகற்றும் பஞ்சநதி யவற்றுமுந்நீர்ச்
சங்கமகா விரிநதியின் றன்பெருமை சாற்றரிதால். (௪௯)

வேறு.

சிறந்தகா விரியி னெல்லைத் திருமுல்லை வாயி னண்ணிப்
பிறந்தவர் பிறவா வாசம் பெற்றவர் பெறாதொன் றில்லை
யிறந்தவ ரிறைவன் றாளி லெய்துவர் நினைப்போர் துன்பந்
துறந்தவர் துறவோ ரானுந் தொழப்படுந் தூயோ ராவர். (௫௦)

காரணங் கடந்து மேலைக் கற்பனை கடந்து மூர்த்தி
பூரண வடிவாய் முல்லைப் பூம்பதி யுறைந்தா னென்றே
யாரணன் முதலா யுள்ளோ ரஞ்சலி கூப்பி வேலைப்
பேரணி முழவார் தெய்வப் பெரும்பதி பிரியா துற்றார். (௫௧)

பிருதிவி யப்பு தேயு வாயுவா காசம் பீடார்
திருவுருப் பெறுமி லிங்கத் தெய்வநற் றான மைந்தி
லருளுரு மலைகே தார மணிமுது குன்றங் காழிக்
குருமலை கமலை நீங்காக் கோகன வெற்போ டைந்து. (௫௨)

இன்னநற் றலங்க டம்மு ளிருந்திரைப் பாங்கர் முன்ன
மின்னமு நவிற்று நின்ற முதுநக ரிடத்தி லெம்மா
னன்னமென் னடையா ளோடு மமர்ந்திடும் பெருமா னென்று
பன்னரு மன்பர் யார்க்கும் பரிவொடும் பகர்ந்தா னன்றே. (௫௩)

தாரணி மீதி லின்னந் தலங்களில் முல்லை மூதூர்
பூரணு னந்தத் தோடும் புராந்தக னிருந்து வாழுங்
காரண மிதனு லென்றுங் கருத்தினிற் றெரிந்தி லேன்யான்
நாரணன் முதலி னோரு மறிந்திலா ரவனை யன்றே. (௫௪)

இலகுதண் முல்லை மூதூ ரெம்பிரா னுலை யத்தி
லலகிட மெழுக நாவுக் கரையனுர் பணியே செய்யக்
குலவுநெய் விளக்கு மேற்றக் கோதிலா நியமம் பெற்றார்
மலர்தலைத் தரணி யாளு மணிமுடி நிருப ராவர். (௫௫)

கொந்தலர்த் தொடையல் மாலை குங்குலு வகிலி னுவி
சுந்தரக் கலைக டாவாத் தூயமஞ் சனநீர்ச சாந்தனு
சநதனத் தொடுகர்ப் பூரஞ் சங்கரன் றனக்கு நல்கும்
வந்தனைத் தவத்தோா வெள்ளி மால்வரை யதனில் வாழ்வார். ()

கருடன் கதிபெற்ற சருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம் ௩௪௫.

## (௬) கிள்ளிச்சோழன் முத்திபெற்ற சருக்கம்.

வெள்ளிமால் வரையமர் விமலற் கன்புளான்
வள்ளியோ னெனத்தரும் வண்மை வாய்த்துளான்
புள்ளிவான் புலிக்கொடிப் புலமைப் பொற்புடைக்
கிள்ளிமாக் கதைவளங் கிளத்து வாமரோ. (௧)

தெய்வயூ திகக்கொடி திளைத்துச் சூழ்தலால்
மெய்வருந் தவத்தினர் விமலர் காண்கிலான்
கைவருங் கனகவாள் காட்ட வாண்டெழுந்
துய்வன செய்தவா றுரைக்கற் பாலதோ. (௨)

முல்லைமா தவத்தினுன் முளைத்த வுண்மையான்
முல்லையா னெனும்பெயர் முதல்வர்க் கானது
முல்லைவான் கொடியவன் முடியிற் சூழ்தலான்
முல்லைமாப் பதியென மொழியப் பெற்றதே. (ங)

வேறு.

சீரின் மிக்கதென் முல்லையின் வழிபடுந் திறத்தாற்
பாரின் மிக்கது பாவன மானது படைத்தா
னீரின் மிக்கது நீள்சடைக் குறுமுனி நிறுத்த
பேரின் மிக்கதோர் மாசிலா மணியெனும் பெயரே. (ச)

உஞ்சை மாநகர் தென்புகார் பொன்வரை யுரைசால்
வஞ்சி கூடலின் மிக்கதா வளம்பல விளம்பச்
செஞசு டர்க்கிரி யேயன ஞாயில்கொண் டிலங்குந்
தஞ்சை மாநகர்க் காவலர்ப் பயந்தமெய்த் தவத்தோன். (ரு)

வேறு.

நாளினிற் கலிக டந்து நன்னெறி மறுவில் செங்கோல்
தோளினிற துணைபு ரிந்து தொன்னெறி மனுவிற் றுங்கி
வேளினிற் சிறந்து பொன்னி விரைவள நாடு காத்து
வாளினிற் பகைது ரந்து கிள்ளிமால் புகாரின் வாழ்ந்தான். (சு)

வாழுநா ளயனுர் தந்த வள்ளலாங் கிள்ளி வேந்த
னேழுநாட் கலிக டந்திட் டிருநிலம் புரக்கு நாளி
னேழுநாட் பதியங் குள்ளா ரெய்துவோர் நாவி னேத்தத்
தாழுநாட் டணியா வாழித் தடங்கட லாட வெண்ணி. (எ)

பாய்பரிப் பந்தி வேழப் பரிமதக் கடகம் பொற்றேர்
காய்கதி ரிலைவேல் வண்டர் கடலொடுங் கதிரோன் மானச்
சேயிளங் குமரர் சூழத் தெண்ணிலாக் கவரிக் சுற்றை
சாய்தர முரச மாப்பத் தடக்கைவா ரணமேற் சென்ருன். (அ)

பொன்னிநீர்க் கன்னி சென்னி போற்றினன் வடபாற் றென்பால்
பன்னிசைத் தலங்கள் கண்டு வளங்களின் விளங்குங் காட்சி
தன்னிக ரில்லா னிக்கண் சாத்தின னுதய நேமி
துன்னினுன் விருந்தா மென்னச் சூரியன் குணபாற் சென்ருன்.

குணகிரி தோன்றி மேரு குணகிரி சூழ்வான் மேல்பால்
புணரியிற் றோன்றிச சேறல் புதுமைத்தே யிவ்வா றென்ன
மணமலி யாரின் றாரின் வள்ளியோன் கிள்ளி வேந்தன்
கணமலி தானை மல்கக் கதிரவன் போலுஞ் செல்வான். (௰)

வாரிநீ ருதய நல்க மணிமுர சோதை மல்கச்
சூரிய னொருவ னல்லான் சூழ்கட லாட வல்லா
னரிவன் போலு மென்ன வாரிவ ரென்ன வந்தான்
காரிலு முதவு நீர்மைக் காரியல் காட்டு மெய்யான். (௰௧)

அமுதமே கடைந்த ஞான்றே ராலம்வந் தடைந்தா லென்னக்
குமுதமே காணுங் கோளார் குடைநிழல் மறைப்பக் கண்டான்
தமுதன்மை காட்டித் தநத தனியிளங் கருப்பஞ் சாரச
சிமுதநீ தித்தா மேன்மை செயுஞ்சுடர் சிநதை கொண்டு. (௰௨)

சிற்பர னுரைத்த நூலிற் றினகரோ தயத்து மாற்றம்
பற்பல விதமு மாற்றிப் பற்பணி விடமு மாற்றிக்
கறபமும் வினவிப் பற்றுங் காலையுந தவிரும் போழ்து
மற்பயி லிரவி போல்வா னரும்பெருந தானஞ் செய்து. (௰௩)

இரவிமுன் னமையல் லாது மெழுமதி விளங்க நோக்கி
யரவநீற் கடல்கண் டோகா வர்க்கியங் கரங்கொண் டேற்றிப்
பரவைநீர்ப் புனித நீராய்ப் பயிலுமந திரத்தாற் றீண்டிச்
சரபவித் திரங்கள் சாத்திச சங்கறப முறையி லெய்தி. (௰௪)

தாதைதன் றாதை மற்றுந் தாதைமு தாதை மிக்கோர்
பேதையா ரன்னை மார்தம் பெயர்பெறப் பெருநீர் நல்கித்
காதையும் வினவித் தெண்ணீர்க் கடல்குளித் தாடி மிக்க
பூதலம் பொன்னுந தூசும் பூசுரர் களிப்ப நல்கி. (௰௫)

கண்டகு மெங்கள் பொன்னிக் கன்னியே யெங்கள் வாழ்வே
மண்டலம் புரக்கு மன்னன் மாதவக் குபேரன் வாழ்வே
யண்டரா ரமுதென் றெண்ணி யணிமுடி தாழ்ந்து வீழ்ந்து
விண்டனன் படிந்தான் மன்னன் விதிமுறை நீதி செய்து. (௰௬)

பாடலில் விஞ்சை வல்லோர் பல்லாண்டு பலவுங் கூற
வாடலி லுதக நீர்கொ ளங்கைமா முனிகை யென்ன
நீடலை யஞ்சி யோட நின்றவ னடந்து பொன்னிக்
கூடலிற் சங்கங் கண்ட கொற்றவன் போலுங் கண்டான். (௰௭)

தோளினி லாரந் தாங்கித் துலங்குகே யூரந் தொட்டுத்
தாளினிற் கழல்கள் பூட்டித் தனிமுடி யினிது தாங்கி
வாளிகல் வணங்கச் சாத்தி மணித்துகி லணிந்து வீர
வேளினிற் சிறப்ப வேந்தன் விசயவெம் பரிமேற் கொண்டு. ()

கவரிபா வாடை பாய்மாக் கறங்குதெண் டிரையிற் சூழத்
தவளவெண் சங்க மல்கத் தானையங் கடல்கள் பம்ப
நவநவ முரச வோதை நரலைநீ ரோதை செய்ய
வுவரியே புரையு மன்னு முதயபா னுவைப்போற் செல்ல. (௧௯)

நாகிளம் புன்னை முத்தும் பவளமும் பொன்னு நல்க
வாகுசே ருடைவாள் கைதை மலர்மடல் பலவு மேந்தச்
சேகுசேர் தாலங் கைகள் விரித்துநின் றிரவு செய்யப்
பாகுசேர் மொழியார் போலு மனுஞைகள் பரதங் காட்ட. (௨௰)

ஆழியங் கடவுள் முத்த மந்துகி ரிறைப்ப வங்க
மேழுய ரியானை மேற்கொண் டெக்காள ரேத்தல் போலக்
காழ்புளி னங்க டோறுங் கறங்கிசைப் பறவை யார்ப்பச [ருன்.
சோழர்தம் பெருமான் கிள்ளிச சோழர்கோன் குடபாற்சென்()

மேல்திசை மருத்து நேராய் வேகவெம் புரவி செல்லுங்
காலொடு முல்லை வல்லி பிணித்தது கட்டு மாப்போல்
மூலமந் திரத்திற் பாந்தள் தடைப்பட்ட முறைமை போல
வாலுளைப் புரவி நிற்க வுதைத்தனன் தளவைத் தாளால். (௨௨)

தாளினை யுதைத்துக் கட்டித் தடக்கையோன் றெடுத்துக் கூவத்
தூளிநின் றெழுந்த தென்று சித்திரத் தூசி நிற்ப
யாளிமொய்ம் பசைத்துப் பின்னர் நோக்கின னூர்த்த முல்லை
கோளிணை துரங்கக் காலிற் கொளுவவுங் கண்டு கொண்டான்.()

சிதைத்தனன் கொடியை வாளாற் கலீரிடத் திரும்பி நோக்க
வதைத்தகை வாளுஞ் சோரக் குபீரிடக் குருதி வாரப் [ணி
பதைத்தனன் றுணுக்குற் றேங்கிச் சோர்ந்தனன் செவியிற் பா
புதைத்தன னந்தோ வென்று புலம்பினன் கண்ணீர் பொங்க. ()

வேள்பட்ட கண்ணுன் முல்லை வேதனை தானுங் கொள்ள
வாள்பட்ட கொழும்புண் கண்டான் மாறன்கைப் பிரம்பால் வீச
நாள்பட்ட தழும்பிற் புண்ணீர் சோர்ந்தவோ வென்று நைந்தா
னுள்பட்டேற் கிந்த வாறே னென்றுநின் றலறி வீழ்ந்தான். ()

அரியயன் காணா தானே யன்பிலா வன்பி னேற்குத், தெரி
யொணா வண்ண முல்லை வனத்தினி லிருந்தாய் தீயேன், புரியுமிக்
கொலைக்கென் செய்கேன் பொருந்துமோ புனிதா கெட்டே,
னெரிவிழிக் கூற்றன் பாத கத்திலுங் கொடிதென் வாளே.(௨௬)

என்கொலா மெனது நீதி யென்கொலா மெனது செய்கை
வன்கண னொருவன் றோன்றி மநுக்குலம் பிழைத்த வாறே
என்கணீ ரெனக்கே யாகி யெனதுவா ளெனக்கே யாகிப்
புன்கணீர் பொழிய லாமே பொருந்தவந் திண்ண மன்றே.(௨௭)

கோள்கொண்ட மதியங் கூற்றோ குறைகடல் கொடிதோ வன்றி
வாள்கொண்ட வென்கை தீதோ வாளிது நலியக் கற்போற்
றோள்கொண்ட பரியோ கூற்றந் தகைகொண்ட முல்லை தானோ
சூழ்கொண்ட வினையி னேற்குஞ் சொல்லுமா றறியே னென்று.()

மந்திரி வதன நோக்கான் மன்னிளங் குமரர்ப் பாரான்
தந்திரத் தவற்கன் பில்லான் சயசய போற்றி யென்று
கந்தரத் துருவக் கூர்வாள் காட்டின னறுத்த லோடு
மந்தரத் தேர்மே லாக வரசேயென் றொருசொல் கேட்ப. (௨௯)

வேறு.

அந்தர துந்துமி யியங்கண் முழங்கிய வவ்வெல்லை
யிந்திர ரும்ப ருவந்தலர் சிந்தின ரெங்கெங்கும்
புந்தி மகிழ்ந்திட முந்தி நடந்தன பூதங்கள்
இந்து நிறைந்தது முந்தி யெழுந்தன கீதங்கள். (௩௦)

வானவ ரன்பொடு மாடி நடஞ்செய வந்தார்கள்
பானுவர் துந்துமி வாணரு வந்திசை பாலித்தார்
ஞான பரம்பர நாம சினங்க ணவின்றார்த்தார்
மேனி விளங்கொளி யோர்விடை நின்றது விண்ணத்தே. (௩௧)

கங்கை யிளம்பிறை செஞ்சடை விஞ்சு கவின்கொள்ளப்
பங்கய மொத்திட வாண்முக முக்கணும் பாலிப்ப
வங்கையின் மலர்கொடு வானவர் தாமடி யார்வெய்த
மங்கை பசுங்கொடி பங்கரு ளாளன் வரக்கண்டான். (௩௨)

வன்பினன் வண்கணன் வஞ்சக நெஞ்சினன் மாரீசன்
வன்ம மலத்தவ னுன்றிரு மேனி வடுச்செய்த
வென்பிழை நிந்தனை வந்தனை கொண்டவை யாதேயோ
நின்பரி வென்கொல் பரம்பர வென்றனன் நேரிக்கோன். (௩௩)

## வேறு.

அயர்வுறேல் கிள்ளி வேந்தே யடுத்திந்நாள் தடுத்தாட் கொண்டோ, மயல்விண்டி மறுவொன் றில்லோ மாசிலா மணிகா ணெம்போர், துயரெலாந் தவிர்ந்து நம்மிற் சூழ்மதி லால யங்கள், வயநெடுங் காலை செய்து மகிழ்விழாக் கண்டு போற்றி. (ருச)

இந்நெடும் பணிக ளாற்றி யிகல்கடந் தொருகோ லோச்சிப்
பன்னெடுங் காலம் வாழ்தி பாரெலாம் புரந்து பின்னர்
நின்னெடு தவத்தா லெம்பா னிலைமைபெற் றுயர்தி யென்று
தன்னொடு தனக்கு நேராத தம்பிரா னருளிச் சென்றான். (ருரு)

தனித்தனி யரசர் யாருந் தாளினைப் பணிந்து போற்றி
மனித்தரிற் சுரரி னின்போல் வரம்பெற்ற பாலர் யாரென்
றினித்தபல் லுலகத் தோர்க ளியம்பிட வின்ப மெய்தி
நனித்திற மதிவல் லானை நகைமுக நோக்கிச் சொல்வான். (ருசு)

என்னையாட் கொள்ள வந்தா னெம்பிரா னுறையுந் தானந்
தன்னையா ரணத்திற் கண்ட தகுதியின் பகுதி யோர்ந்து
பொன்னவி ரெயில்சூழ் வாயிற் புனிதமாங் கோபு ரங்கள்
மன்னுதே ரெழுநால் வீதி வளம்பிற வகுப்பா யென்ன. (ருஎ)

காவலன் பணித்த மாற்றங் கைவல னுளங்கொண் டேத்தி
யேவலன் புளதென் வாழ்வென் றிரும்பெரு மகிழ்ச்சி யோங்கத்
தேவர்தம் பெருமா னந்தத் தெய்வமாக் களிறு செல்வோன்
மேவருந் தான மேத்தி மெய்த்திருக் கோயில் கண்டு. (ருஅ)

பணிக்கதி ரிருக்கு மௌலிப் பரனவில் வண்ணஞ் செய்த
தனிப்பெருங் கோயி லெங்குந் தமனியந் தன்னால் வேய்ந்து
மனித்தரிற் சுரரி னுகா வண்ணமா மதில்கள் சூழக்
குனித்தபொற் கிரிபோ லெண்ணில் கோபுரந் திகழக் கண்டான்.

பூசுர ரிருக்கை வாட்கைப் புரவலர் வாழ்க்கை பொன்னந்
தேசுசேர் வணிக ரில்லந் திருத்தகு நன்மை யோர்கள்
மாசுதீர் மனைகள் வேள்வி மாதவர் சினக ரங்க
ளாசுதீர் வழிசெய் தானு லயமொடு மயனே ரன்னான். (சo)

சூளிகை முற்ற மாடத் தூணிரை சூறடு சூழ்ந்த
மாளிகை சாள ரங்கள் வயங்குபொன் மண்ட பங்கள்
யாளிகள் வயமா கைம்மா யாப்புறு முகப்பு மேலைக்
கோளிகல் பரிதி தீண்டுங் கொடிமுடி யுடனு மற்றும். (சக)

சேயிதழ்க் கமல நீலச் செவ்வியந் தெண்ணீர் வாவி
ஞாயிறு நுழையாப் புன்னை ஞாழல்முள் ளரைப்பூங் கைதை
பாயிருஞ் சோலை மல்கப் படருநந் தனவ னங்க
ளாயின தேவர்க் கெய்த வளநிலப் பொருளுஞ் சேர. (சஉ)

விண்ணுல குளவ ளங்கள் வியன்பெறு முவரி சூழு
மண்ணுல கடைந்தா லன்ன மாக்கதி மூதூர் வாய்ப்பக்
கண்ணுறக் கருணை பொங்கிக் காவல னுவகை பொங்கித்
தண்ணளி பொழிந்து தெய்வத் தச்சற்கு வரிசை செய்து. (சங)

அருள்விழாக் காணு மார்வத் தலைகட லருக நெஞ்சிற்
பெருகினன் சீவ னன்பின் பிழைவராக் களிற்றிற் காண
நிருபனுக் கரிய தீஞ்சொல் நிட்கள சகள மாட்ட
வருவமுங் காண்பா யாக வவனிப வென்ற தன்றே. (சச)

நீங்கொணு மலத்தை நீக்கு நிமலனைத் தொழுது வான்பா
லாங்கெழு மருட்சொல் லோதை யமையுமுன் வெளியே நின்றான்
பாங்குறு முமையா ளோடும் பற்பல கோடி பாநு
வோங்குபே ரொளிசெம் மேனி யுயரழ கெறிப்ப நின்றான். ()

வேறு.

நரபதி முன்னர்ச் சரணமோ ரிரண்டு நற்கலை மருங்குநான் மார்பு,வரதமோ டபய மான்மழுத் தரித்த மலர்க்கரங் களுமணிக் கண்ணு, மரதனக் குழையு முறுவலார் முகமு மருள்விழி மூன் றுநீண் முடியும், பரமகல் லியாணி வாமமு மாகப் பாயுமால் விடைமிசை நின்றான். (சரு)

ஐந்துதுந் துமியு மந்தரத் தியம்ப வண்டர்பொன் மாமழை பொழிய, விந்திரா தியர்கள் செயசெய செயென வெம்பிரான் றிருவருட் கோலம், புந்திநான் காகிப் பொறிவழி யைந்திற் புலப் படா வதீதபோ கத்தில், வந்தனை தவத்தில் வளவர்கோன் போற்றி வாழ்வுபோல் வரவெதிர் மகிழ்ந்தான். (சஎ)

இத்தனைப் பகுதிப் பான்மையிக் கெய்தி யிணையிலாத் திருப் பணி புரிந்திட், டுத்தமன் விழாவும் நடத்திய பின்ன ரோதிய நீதி நூ றெறிந்திட், டத்திற நெறியின் வாசிபொற் பீட மாபர ணாதிக ளமைத்து, வித்தகன் பரிசா ரத்தினோ டாதி வேதியர் விழைந்தி டப் புரிந்தான். (சஅ)

எந்தையெம் பெருமான் மகவிழாப் பெருமை யெடுத்துரைத்தான்மறை வல்லோன், முந்தைநாள் வருணன் மோதிடக் குருவை முடிந்தனன் முனிமகனுவா,னந்தவெம் பழியாற் பிரமராக்கதனு யரக்கர்வந் தடல்செய மெலிந்தான், வந்துகா ரணைத்தும் படிந்தில முன்னர் வறத்தலால் மாரிமா றியதால். (௪௯)

முல்லைநா யகனைப் பணிந்துவான வர்கள் முறையிட வினிதெழுந்தருளி, யெல்லையிற் காட்சி மகப்புன லாட விருங்கடல் வேந்தனு மெழுந்து, தொல்லைவெம் பழியைத் துறந்தனன் பெருமான் றுணைமல ரருளினை யேத்த, வல்லையே லவனி யுய்ந்திடும் வானம் வழங்கிடும் வளமிகு மன்னு. (௫0)

வேறு.

மதிபுனைந்த திருச்சடையான் மாசிமகங் கடலாடல்
விதிபுனைந்த விழாவன்றோ விரும்பியருள் புரியும்விழா
துதிபுனைந்த புனனாட்டுத் தோன்றலே நடாத்தென்று
கதிபுனைந்த சிவமறைநூல் கற்பனையி னோதினன். (௫௧)

மாசிலா மணியார்க்கு வளர்மதிப்பஞ் சமியாதி
மாசிவிழா மதிநிறைந்த மகத்துநாட் கடலாட
மாசிலாப் பதமுரைத்த மன்னவர்க்கு வரிசைசெய்து
மாசிலா வாரணத்தூர் வலம்வந்து செயுமினென்றான். (௫௨)

மணிமதில் வாயிறொறு மகரதோ ரணங்களுட்டி
யணிசெய்பைங் கதலிமலி யலர்க்கமுகு நிரைநாட்டிக்
கணிகவினுங் கொடிநாட்டிக் களபவிரை நிலமெழுகிப்
பணிமதில்சூழ் பொன்னேடும் பாலிகைவெண் முளைபரப்பி. ()

வயங்காட்டும் புலிக்கொடியோன் மற்றவர்கள் மகத்துநெறி
வியங்காட்ட மாசிவிழா விடைக்கொடியு மேற்றுவித்தான்
குயங்காட்டு மரம்பையனார் கோதினட மும்நடத்தி
நயங்காட்டு மிசைமுழக்க நாகருங்கண் டதிசயிப்ப. (௫௪)

ஆதியான் றிருக்கரத்தி லமர்பொற்காப் பணிசாத்தி
வீதிபொற்ப வினிதுசெல விண்ணவரு மண்ணவராய்
மேதினியோ ராங்கவர்கள் மேதக்க பெருங்காட்சிக்
கோதிலா வோலக்கங் கொண்டருளக் கண்டனனால். (௫௫)

இத்தகைய பெருஞ்சிறப்பி னெம்பிரான் றெய்வவிழா
வுத்தமநா ளொன்பதுங்கண் டுயரும்பொற் றேரூர்ந்து
நித்தவிழா மகிழ்ந்தருளி நித்தமன்பர்க் கருள்புரிந்து
தத்துதிரைக் கடல்விழாக் கண்டருளத் தொடங்கினன். (௫௬)

### வேறு.

அடலுடை நெடுவேற் கோமா னண்ணலெம் மான்பொன் செய்த
தடமலர் முல்லை மூதூர்த் தனிவிழாக் காண்டு மென்று
படுசுடர்ப் பகலோன் வந்து பணிந்திட விழிந்த தேபோற்
கடல்வழி யிரும ருங்கு நிறைவன கடவுள் வையம். (ருஎ)

அங்கவர் செம்பொற் றேர்வா யடற்பரி போலு மாங்கண்
பைங்கதிர்க் கற்றை சேர்க்கும் படிவரும் பரவை வெருது
சங்கரன் வருமா கண்டு தானெதிர் வேண்டு நீராச
செங்கரம் விரித்தா லொக்கு மணிக்கொடி விரித்த சீர்கள்.(ருஅ)

அளிமுரல் குன்று தோறு மலமரும் புயல்கள் போலும்
புளினவெண் குன்று தோறும் பொறகொடி யாடை யாட
வொளிதரு சோதி பாநு வுதயபொற கிரணம் போலுந்
தளிர்புரை துகில்வி ரித்துத் தரையெலா மலர்சொ ரிநதார்.(ருகூ)

சீரணி கும்ப மொன்று தென்மலை முனியைப் போற்றி
வாரணக் கடல்நீர் முத்தும் வாங்கியுட் கொண்டா னென்னுங்
காரண முளதோ வென்று கலங்கினீர் காணு மென்று
பூரண கும்ப ராசி பொற்புற வலங்க ரித்தார். (கூ0)

ஐயர்மால் விடைமேற் செல்ல வகில்நறும் புகைகள் காட்டித்
துய்யகர்ப் பூரத் தூளி தூவினர் வான மோங்க
வையகம் விளங்கக் கண்ட மகவிழா மாகந் தன்னிற்
பெய்யவே கதிர்ம றைக்கும் பின்பனிப் பீடு போலாய். (கூக)

அணிமகத் திருநாள் முந்நீ ராடினோ ரேகு மாறு
கணிதமில் விமான மெய்துங் காட்சிபோற் கடலின் மீது
பணிநெடும் புவியோர் தேடாப் பற்பல பொருளு நீல
மணிகளு நிறைந்து வான்றோய் மரக்கலக் குழாங்கள் மல்க. ()

பாத்திர மறிந்து நல்காப் படிறர்போ லுமுத மெல்லா
மேத்திய விண்ணோர் போற்ற விடமிடோ மிவர்களென் றஞ்சி
வேத்திடுந் துகிரு முத்தும் வெண்டிரைக் கரத்தா லள்ளிச
சாத்திுற் போலும் வேலை தான்மணி கொழித்த தங்கண்.(கூங)

கங்கையிற் சிறப்ப வேதக் கடிமணங் காட்டி யெம்மான்
பங்கயத் தாளி லாட்டப் பரவையி லிருகாற் றீண்டி
யங்கண்மா ஞாலங் காக்கு மவனிலும் பவனி மானத்
தங்கிய விண்ணோர் மண்ணோர் தாழ்ந்தனர் புயல்கள் போல. ()

வருந்தவ ரெழுவர் மாதர் வானவர் மகளி ராடிப், பெருந்தவப் பேறு பெற்றுப் பிறைமுடிப் பெம்மான் பாதம், பொருந்தினர் பணிக வித்துப் பொருந்துபூண் கொள்வார் போற்பின், குருந்தெறி கோலம் வேலை கொண்டது முண்டு மாதோ. (சுரு)

எண்ணில்சீர் வளங்கொண் டோங்க விவ்வண்ணங் கடனீ ராடிப், புண்ணிய முதல்வன் கோயில் புகுநதனன் புவியோர் வாழக், கண்ணிறை கிள்ளி வேந்தன் கடல்விழாக் காட்சி கண்டு, மண்ணிலா முயிர்கட் கெல்லாம் வான்பொருள் வழங்கி னானே.()

வேறு.

பன்னிரு ககன வாதித்தர் வீதி பவனியின் பேரொளி செய்யப், பன்னிரு சுடரன் றொருசுட ரின்றும் பகர்வது முண்டென விளங்கிப், பன்னிரு தடக்கைப் பாலகன் பரவும் பரம்பொருள் பன்னிரு திங்கள், பன்னிரு விழாவுங் கண்டுபார் முல்லைப் பதியில்வாழ்ந திருநதனன் பன்னாள். (சுஎ)

வேறு.

முல்லை மாவனத் தெம்பிரான் றிருப்பணி முடித்துச்
சொல்ல ரும்பெருந தோற்றமே மாற்றிமெய்த் தோன்ற
லெல்லை யில்லதோர் தமரொடுந் தானைய ரொடுஞ்
செல்லு தற்கருங் கயிலைமால் வரைப்பதி சேர்ந்தான். (சுஅ)

நரகி டைப்படு வோர்க்கொரு பரத்தைசீர் நடுவன்
குரவ னுமெனக் கூறுசொற் குறிகொளுங் குணத்தாற்
புரவு பூண்டிடத் தோன்றிமா சகற்றியப் புனிதர்
பரமன் மால்வரை யடைநதன ரென்பது பயனே. (சுசு)

வாழ்க வாரண முல்லைமா வனத்திறம் வளர்க
வாழ்க மாசிலா மணியடித் தாமரை வண்மை
வாழ்க சைவவைந் தெழுத்தியல் வளவிய நீறு
வாழ்க பூதலத் தடியவர் மன்னவர் மகிழ்க. (எ0)

கிள்ளிச்சோழன் முத்திபெற்றசருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் சகரு.

திருச்சிற்றம்பலம்.

முல்லைவனநாதன் திருவடி வாழ்க.

உ

# பாடபேதம்.

| பக்கம் | பாட்டு | வரி | பாடம் | பேதம் |
|---|---|---|---|---|
| ௩௨ | ௪௭ | ௪ | தத்வமசி | தத்தொமசி |
| ௩௩ | ௫௨ | ௩ | பாலி | பாவி |
| ௩௮ | ௨௭ | ௪ | தகமிருக் | தருமிருத் |
| ,, | ,, | ,, | தவமுருக் | தவமிருத் |
| ௫௰ | ௨௪ | ௪ | பெறுங | பொருங |
| ,, | ௨௭ | ௪ | சிழியா | சிகழா |
| ௫௧ | ௩௨ | ௪ | ஞவேன்மெ | வேனென்மே |
| ௫௩ | ௪௯ | ௪ | போக | மோத |
| ௫௯ | ௰௯ | ௨ | குபேரன் | கவேரன் |
| தக்கிணம் | தக்கணம் | | தெக்கிணம் | தெக்கணம் |

# பிழை திருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| viii | ௧ | ௮ | விலறைப் | விலறைச் |
| ௭ | ௨ | ௩ | ததனே | தனனே |
| ௰௨ | | ௨ | ளாமா | ளா |
| ௩௬ | ௩௭ | ௩ | செப்கை | செய்கை |
| ௪௩ | ௨௰ | ௧ | தீர்த்தங் | தீர்த்தத் |

Printed at the Thirupurasundari Press, Shiyali.

உ

திருக்கைலாய பரம்பரைத்

# தருமபுர வாதீனத்துச்

# சைவநூல்கள்.

தருமையாதீனத்துப் பண்டாரசாத்திரங்களாகிய

(௧) சதமணிக்கோவை, (௨) ஞானதீக்ஷாக்கிரயம், (௩) துசகளறுபோதம், (௪) ஞானப்பிரகாசர் திருச்செந்தூரகவல், (௫) தத்துவப்பிரகாசம், (௬) ஞானப்பிரகாசர் தசகாரியம், (௭) சிவபோகசாரம், (௮) முத்திநிச்சயப்பேருரை, (௯) பேரானந்த சித்தியார், (௰) திரிபதார்த்தரூபாதி தசகாரியம், (௧௧) பதிபசுபாசப்பனுவல், (௧௨) சிவானந்தமாலை, (௧௩) சாம்பிரதாயதீபம், (௧௪) ஞானாவரணவிளக்கக்குறள், (௧௫) பண்டாரமும்மணிக்கோவை, (௧௬) சித்தாந்தநிச்சயம், இவற்றுட்பொருளை விளக்கும் சிவானுபோகசாரம், பரபக்ஷதிமிரபானு, பரமதசங்கற்ப நிராகரணம், பரமோபதேசம், ஐக்கியவியல், சிவதருமோத்தரம், சைவசமயநெறி, வடமொழியில் சச்சிதானந்த ஸூத்ர வியாக்கியானம் (சிவஞானபோதம்), வாஞுசரம சந்திரிகை, சைவசந்நியாசம் முதலியன.

பண்ணியேபணவிடைதானந்திசந்தி பத்துநாள் சர்க்கரையிற்
கொள்ளுமபோது, உண்ணவேபத்தியமோ இல்லேகண்டாய் உத்தம
னே நீயருகிற வியாதிகேளு, நண்ணவே குஷ்டசொறி விரணமவெ
ள்ளை நலமானசருமேகம் வாதவாய்வு, திண்ணவே க்ஷயரோகங்குன்
மவலி கூடத் தீருமடா இன்னமொரு செய்திகேளே 352

மூசுண்டக்கியாழம

செய்தியென்ன குடிகொண்டால் மருந்திளுலே தீருதற்கு ஆறு
கபவேர் பலமபத்தப்பா, நைதுமேயதிமதுரங் கூகைநீறும நலமான
மாதளமபூபிளகிஞ்டு, எய்துமே பல மரைதான் கூடப்போட்டுஎன்
மகனே றுபடிநீ ரெட்டொன்ருக்கி, கொய்துமே காற்படி நீர் பாக்
களவு வெண்ணை கூட்டியே முனுநாள் காலமேகொள்ள 353

சன்னிக்குத் தைலம

கொள்ளவேவிறடனே கடுப்புமபோகும குணமான சந்நிபிட
தைலமகேளு, விளளவேமாவிலிங்கம புனல்முருங்கககாயும விளா
வின்வேர் நொச்சிவேரருககன்வேரும, களளவேசொனனகரைவா
த்மடககக கருவானபட்டை பலமாருெடாக்க, வளளலேபலமிரண்
டு மயிலபீலிதானும வண்மைபுடன் எட்டியிடகுறுணியாயே 354

குறுணியாமிதனையு மிடித்துப் பாண்டங் கூட்டியே வேப்பெ
ண்ணை புங்கிலெணணை, கருணமாயெள்ளெண்ணை படி யரையாய்சா
ர்த்துத் தயவாகத்தான் பிசறி மேலேமூடி, அருணமாயச சீலே
மணவலுவாய்சசெய்து அப்பனேயடியிலே தமருகான்போட்டு, வரு
ணவாய்ககுழிவெட்டிப் பலலாய்வைதது மைந்தனே பலவாவாய்ப
பானைத்தூரே 355

தூரெல்லாம் மண்பூசிப் புகைபோகாமல் துரிதமுடன் சாணை
மேற்றிச சுத்திகேளும, பாரெலலாந் தானெரியக கனல மாய்ப்போ
ட்டு பாங்கானகலயததில் தைலம வீழும்; நேரான குழித்தைலம
பதனமபணணி நினைவாக மேலபூசிப பிடித்துவருமபோது, பாரெல்
லாம் சந்நியொடு வலிப்பிசிப்பு பாங்கானமுடககம பாரிசவாயு 356

காதுமந்தத்துக்குச சிரசில்தேய்க்கத்தைலம்

வாயுவெலலாம போகுமடா தைலந்தன்னில் வண்மையுடன்
காதுகேளாமற்போனால், மேயுவென்றநல்லெண்ணை படிகால்தன்னில்
லெப்பணையுங்காற்பலந்தானபொடித்துக்காச்சி, பாயுவென்றபாதமிர
ட்டிலில்தேய்நீபதனமாயப்பக்குவமாய்மண்டலந்தான், ஓயுவென்

உ

முருகன் துணை.

# கழுகு மலை

## சுப்பிரமணியர் காவடிச்சிந்து.

இஃது

சென்னிகுளம் — அண்ணாமலை ரெட்டியார்

இயற்றியது.

---

'நல்லாசிரியன்' பத்திராதிபர்

ம-ள-ள-ஸ்ரீ,

கா. ரா. நமசிவாயமுதலியார் மாணவரும்

"விஜய விகடன்" பத்திராதிபருமான

க. ச. கதிர்வேல்நாடார் அவர்களால்

பார்வையிடப்பட்டு

---

குன்னத்தூர்

ஆ. கிருஷ்ணசாமி முதலியாரால்

சென்னை விஜயவிகடன் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

# முகவுரை

நாம் இந்த கழுகுமலை ஸ்ரீ சுப்பிரமணியர் காவடிச்சிந்துக்கு முகவுரை எழுதவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இப்புத்தகம் பெரியோர்களால் பாடப்பட்டதாலும், ஸ்ரீசுப்பிரமணியர் மீது பாடிய துதியாதலினாலுமே. ஆனால் நாம் இப்போது முகவுரை எழுதவந்த காரணம் யாதெனில், இச்சிந்தானது நீண்ட நாளாய் பக்திமான்களால் பாடஞ் செய்யப்பட்டு அவரவர்கள் பிரார்த்தனைகாலங்களில் பக்தியோடு பாடப்பட்டு வந்தன. இத்தகையபாடலை சில நமது நாட்டு நாடகக்காரர்கள் சிங்காரரசங்களில் கலந்துபாட ஆரம்பிக்கவே இதில் அசப்பியமிருக்கிறதென்று நமது காருண்ய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களில் சிலருக்குத்தென்பட்டு அப்பாசுரங்களில் சில அசப்பியங்கண்டு பிடித்து வழக்குகொண்டுவந்து பொது ஜனங்களின் விருப்பத்திற்கிணங்க, அவ்வழக்கை தாங்களே நடத்தாமல் நிறுத்திக்கொண்டார்கள். இதனால் சிலர் இக்காவடிச்சிந்தின்மீது ஒருவித கருத்துகொண்டும், இதைப்பாடினால் என்னவருமோ ஏதுவருமோவென்று பயந்தும் பக்தியாயுள்ளவர்கள் பலரும் இப்பாடல் பாடுவதை நிறுத்திவிட்டார்கள்.

இதை உத்தேசித்து யாம் இப்புத்தகத்திலுள்ள பாடல்களில் எது அசப்பியமென்று தோன்றுகிறதோ அவற்றை எல்லாம் அறவேநீக்கி, அதற்கு அடிதளை குறையாமலும், பத அருத்தங்கெடாமலும், சந்தக்குணிப்பு தவறாமலும், பெரியோராகிய சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் கவியின் கருத்துக்கு இடறுபடாமலும்பாடி பிழையறப் பரிசோதித்து திருத்தத் துணிந்தனம்: இவ்வாறைக் கண்ணுறுவோர் எமமீது யாதொரு கருத்துங் கொள்ளாது அன்பாய் இத்திருத்தப் பொருத்தங்களை அங்கீகரிப்பார்களென நம்புகிறேன்.

---

இனாம். இனாம்.

அரையணா ஸ்டாம்பு, அனுப்புகிறவர்களுக்கு விஜயவிகடன் பத்திரிகையொன்றும், சென்னைமீது சிட்டுக்கவி என்ற புத்தகமும் இனாமாக அனுப்பப்படும்.

விஜயவிகடனாபீஸ்,

மதராஸ் என்.ஈ



உ

வேலுமயிலுந்துணை.

# கழுகுமலை.

## சுப்பிரமணியர் காவடிச்சிந்து.

### விநாயகர் துதி.

திருவுற்றிலகுகங்க வரையிற்புகழ்மிகுந்து
திகழத் தினமுறைந்த வாசனை மிகு
மகிமைச் சுகிர்தத்தொண்டர் நேசனை பல்
தீயபாதக காரராகிய சூரர்யாவரு மாளவேசெய்து
சிகரக்கிரியிளங்க வேலனை உமை
தகரக் குழல்கொள்வஞ்சி பாலனை

மருவுற்றிணர்விரிந்து மதுபக்குலமுழங்க
மதுமொய்த் திழிகடம்ப வாரனை மிக
சிதசித்திர சிகியுந்து வீரனை எழில்
மாகநாககுமாரியாகிய மாதினோடு கிராதநாயகி
மருவப்புளகரும்பு தோளனை யெனை
யருமைப் பணிகொளுந்த யாளனை

# கழுகுமலை சுப்பிரமணியர்

தெரிதற்கரியமந்திர மதனைத் தனதுதந்தை
செவியுட்புகமொழிந்த வாயனை இள
ரவியிற் கதிர்சிறந்த காயனை யகன்
தேவநாடுகெடாதுநீடிய் சேனைகாவல னாகவேவரு
திரலுற்ற சிவகந்த நாதனை விரி
மரையொத் தொளிருகின்ற பாதனை

மருளற்றிட நினைத்து மனதிற்களிசிறந்து
மதுரக் கனிவுவந்து கூடவே பல
விதமுற் றிலகுசிந்து பாடவே விரி
வாரிநீரினை வாரிமேலவரு மாரிநேர் தரு மாமதாசல
வதனப் பணிரண்டு தாளையே நய
முதவப் பணிவமிந்த வேளையே (1)

## முருகன் துதி.

வேறு

சீர்வளர் பசுந்தோகை மயிலோன் வள்ளி
செவ்விதழ லாதினிய தெள்ளமுது மயிலோன் விய
போர்வளர் தடங்கையுறு மயிலோன் விறல
பொன்னடியை யின்னலற வுன்னுதல்செய்வாமே

குஞ்சரவணங் காவல் வீடா தடபடி
கொஞ்சிமரு வுஞ்சரச ரஞ்சிதவி சேடா
பைஞ்சர வணங்காவல் வீடா வளரும்
பாலனென மாலையொடு காலைநினை வாமே

வல்லவுணர் வழியாதும் விட்டு பொருள
வன்சமர்செய் கந்தனிடம் வழியடிமை பட்டு
நல்லவுணர் வழியாது மட்டு மிஞ்சு
ஞானபர மானந்த மோனமடைவாமே

ஒருதந்த மாதங்க முகத்தான் மகிழ
வுத்தம கனிட்டனென வுற்றிடு மகத்தான்
வருதந்த மாதங்க முகத்தான் எவரும்
வாழ்த்து குக நாயகனை யேத்துதல் செய்வாயே. (2)

## கழுகுமலை நகர்வளம்.

### வேறு.

தெள்ளுதமி ழுக்கதவு சிலன் துதி
செபபஞுமலைநகுமனு கூலன் வளர்
செழியப் புகழ்விளைத்த கழுகுமலைவளத்தைத்
தேனே சொல்லு வேனே

வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை அந்த
வெய்யவ னடத்திவரு துய்யவிர தப்பரியும்
விலகும் படி யிலகும்

வீதிதொறு மாதிமறை வேதம் சிவ
வேதியர்க ளோதுசாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப் பூவையுடன்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்

சீதளமு கிற்குவமை கூறும் நிறச்
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்ச்
சித்திர நிகர்த்தமின்னார் நத்தியணி குங்குமச்செஞ்
சேறுங் காத நாறும்

நித்தநித்த முங்சணவ ரோடுங் கூடி
நீடியே விணங்கிமனம் வாடுங் கரு
நீலவிழி யார்வெறுத்த கோலமணி மாலைாத்ந
நெருங்கு மந்த மருங்கும்

கத்துகட லொத்தகடை வீதி முன்பு
கட்டுதா ளப்பந்தலின் சோதி யெங்கும்
காட்டுவதா லீரிரண்டு கோட்டுடைத யானையிற்பல
களிறும் நிறம் வெளிறும்

முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டம் கலை
முற்றிலு முணர்ந்திடுகொண் டாட்டம் நெஞ்சின்
முன்னுகின்ற போதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அச்சஞ் சனிக்கும்

எத்திசையும் போற்றமர ரூரும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்சு
மிந்நக ரந்தனைய டைந்தவர்க் கதுவும்வெறுத்
திருக்கும் அருவருக்கும்

துள்ளியெழு வெள்ளையலை மடங்கும் படி
சுற்றிலும் வளைந்தவகழ்க் கிடங்கும் பல
சொன்னமலை போன்மதிலு மின்னதி ஞ்சோலைபுழ்
தோன்றும் போக மூன்றும்

கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக
கனியை விரும்பிடுமவி சாகன வளர்
கழுகுமலை நகரின்வள முழுமையுமொ ருவிலடங
காதே மடமாதே. (3)

---

## கோயில்வளம்.

### வேறு.

செண்ணிகுளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செகமெச்சிய மதுரககவி யதனைபபுய வரையிறபுனை
தீரன் அயில் வீரன்

வண்ணமயில்முரு கேசன் குற
வள்ளிபதம்பணி நேசன் உரை
வரமேதரு கழுகாசல பதிகோயிலின வளம்நான்மற
வாதே சொல்வேன் மாதே.

கோபுரத்துத் தங்கத் தூவி தேவர்
கோபுரத் தூக்கப்பால் மேவி கண்கள்
கூசப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தொடு
குலவும் புவி பலவும்

நூபுரத்துத்தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
நுழைவாரிடுமுழவோசைகள் திசைமாசுணமிடியோ வென
நோக்கும் படி தாக்கும்

சந்நிதி யிற்றுஜத் தம்பம் . விண்ணிற்
றுலிவருகின்ற கும்பம் எனுஞ்
சலாசியை வடிவார்பல கொடிசூடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந் தோங்கும்

உன்னதமாகிய விஞ்சி பெண்ணாட்
டும்பர்நகருக்கு மிஞ்சி மிக
வுயர்வானது பெறலாலதில் அதிசீதள புயல்சாலவு
முறங்கும் மின்னிக் கறங்கும்

அருணகிரிநாவிற் பழக்கம் தரு
மந்தத்திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கணமொழி பாதினி லமராபதி யிமையோர்செவி
யடைக்கும் அண்ட முடைக்கும்

கருணைமுருகனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறியமெழுகாய்வரு பவரேவரும் இகமேகதி
காண்பார் இன்பம் பூண்பார். (4)

---

## கழுகுமலை வளம்.

வேறு

ன்னுலவு சென்னிகுள நன்னகரனு ணுமலைத
புந்தியின் மகிழ்ந்து நித்தம் நின்றவன் மூர்த்தி
வெந்திறலரக்கர்களை வென்றவன் மயில்
போலவேனலின் மீதுலாவுகிராதமாதுமு னேகியேயடி
பூவையே யுனது தஞ்ச மென்றவன் அவ
ளீயுமாவினையுமென்று தின்றவன்

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களுந் துன்னியே கதி
வேண்டியே யகத்திலன்பு மன்னியே பணி
வேலவன்கிருபாகரன்குகன் மேவிடுங்கழுகாசலந்தனில்
மிஞ்சியவளங்களைநா னுன்னியே சொல்ல
ரஞ்சிதமாய் கேளடிவிற் பன்னியே

மூசுவண்டு வாசமுண்டு காவின்மொண்டு தேனையுண்டு
மோகனமுகாரிராகம் பாடுமே உய்ய
வேகமாயப் பேடையுடனே நாடுமே அலை
மோதுவாரிதி நீரைவாரிவின் மீதுலாவிய சீதளாகார
முகில்பெருஞ் சிகரமூறு மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே

தேசுகொண்ட பாரதந்த விரதும் பிராசியன்டர்
தேவதாரு வைக்கரத்தாற் பிடிக்குமே சுற்றி
மேவியகிளையைவளைத் தொடிக்குமே யொளிர்
சேயசந்திர னைத்தீண்டுசுப லாமரங்களி லேநெருங்கிய
தீங்கனிமதுரசத்தை வடிக்குமே மந்தி
பாங்கினின் றதனையள்ளிக் குடிக்குமே

அந்தர முறுவிவளர்ந் திந்திர னுலகுநடந்
தப்புறம்போய் நின்றதையுஞ் சந்தன மரந்
தப்பிதமிலாது கையால் வந்தன எங்க
ளாறுமாமுக நாதனுக்கிடு மாறுபோல விசாலமுற்றகொம்
பத்தனையு நின்றுதலை சாய்க்குமே அண்டப்
பித்திகை தனிலுஞ்சென்று தேய்க்குமே

கந்தரந்தொ றுங்கிடந்து கந்தரம்பரந்தொதுங்க
கர்ச்சனை புரியுந்திறச் சிங்கமே நெஞ்சி
லச்சமுறவின்னுறைமா தங்கமே தடங்
காவிலேசில தாவிலேவளர் மாயிருண்டு வேகிருதர்கள்
கார்முகமெய்யுங்கணைக ளேறுமே அதில்
வார்மதுவால வாரியுவர் மாறுமே

காலவடி வேநெடிய வாள்கொடிய நாகமுமிழ்
காரிபிணைவாரிகணை பானலே யனன
கூர்நயனவேடமின்னு ரேனலே காக்குங்
காலைமேலெறி போதுவார நவமணிமோமணி தேசுவீசவே
கதிரவன்றள துமுகஞ் சுழிக்குமே அவன்
குதிரையுங் கண்ணைச்சுருக்கி விழிக்குமே

ஓலமலி கோலநீலவேலை சூழு ஞாலமீதி
லுற்றவரின்பத்துடனே வானமே சொல்ல

வைத்தபலசித்திரசோ பானமே யென்ன
வோங்குகோங்ககிளுங்கிலாங்கிலிபுங்க நீங்கருவேங்கை பூங்கமழ
யொன்றோடொன்றுவம்புகொண்டு நீளுமே கோள்கள்
சென்றுசென்றுநின்றுநின்று மீளுமே. (5)

---

## வாவி வளம்.

### வேறு.

புள்ளிக்கலாபமயிற் பாகன் சத்தி
புதல்வனனகன யோகன் மலை
போலத்தோன்றிரண்ட மோலப்பன்னிரண்டுவாகன் நல்விவேகன்
வள்ளிக்கிசைந்தமுரு கேசன் அண்ணா
மலைநகவிராசன்மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலைவாவிவளஞ் சொல்வேன்மாதே கேளிபபோதே
வெள்ளைநாரைநொத்தும் வேளை தப்பி
மேற்கொண்டெழுந்துசின வாளை கதி
மீறிப்பாயுந்தோறுங் கீறிச்சாயுநதென்னம் பாளை யுடன்றழை
தெள்ளும்பிள்ளையன்னப் பேடும் இளஞ்
சேவலானதுவு மூடும் பின்பு
தேமலர்க்கதவுசிற் சாமத்தினில் நாடும் உறவாடும்
மின்னிக்குலவிமதி மானும் வரி
வெளளைபணிலராசி தானும் மட
மின்னாவிழிகளென்ன மன்னுகெண்டை முத்தமீனுமடமானும்
வனைத்தாமரையைக் கண்டு வாயின்
மதுரராகபாடிக் கொண்டு மதி
மயங்கிபேட்டினுடன்முயங்கியேகிடக்கும் வண்டு கள்ளையுண்டு
அந்தரத்துப்பெண்கள் நாடி யங்கு
அன்பாகவேவிளை யாடிச் செல்லு
மங்கலார்நடக்கு நன்னருடைகி யன்னருசெல்லும்பின்னம்
மந்தமேதியுள்ளே யெட்டும் சினை
வராலுமெழுந்துமே முட்டும் போது
மடிசுரந்து கன்று தனைநினைந்து கண்டமட்டும் பாலைக்கொட்டும்

---

## துதி

### வேறு.

மரகத விகசித வொளிதவ ழிருசிறை
மருவியமயின்மிசை யனுதின முறைதரு வாசன் பவ நாசன்
குரகத சுகமணி வளிரத நடவிய
குவலய சாதர னெனுமக னனிமகிழ் சோலன் பரைபாலன்
பரிபுர வணிகல வென வொலிபுரி
பரிதியு தயமதி லவிழ்மறை மலர்நிகர் பாதன் குகநாதன்
திரிபுர மவையொரு நொடிதனி லெரிகொடு
சிதைவுற நகையுரி சிவன்மன மகிழுப தேசன் விசுவிசாசன்
பதுமநிதியினொடு பணிலநிதியுமெழில்
பரவிய சுரபியு முருசுர புரன்மகள் பாகன் கன யோகன்
சததள நளினல விசுமிசை வதியொரு
சதுமுக விதிசிறை யதிலுற நிறுவுவி சாகன் றடன்வாகன்
குரைதிரை வரைநிரை புரைதர வுலவிய
குரைவயி னடுவுறை நிருதரை முடுகிய கோபன் கமழ் நீபன்
பரைசிவை பகவதி யுதவிய சரஹண
பவனறு முககுகன்மிசைமதுநிதகவி பாடுஞ் சுகநாடும் (எ)

---

## துதி

### வேறு.

பவண கிரியதனுட் டானே மன்னுவானே பல
பாழிலேயலையாமலின்புற நாளுமேயருள்மேவு கண்கொடு
பாராய்இன்னல் தீராய்
அருணைப் பகையைமுடித்தோனே புண்யவானே பதி
யாருமேதருவாருமிங்கிலை யாதலாலருள் வாயினம்புரி
யாதே பண்ணுஞ் சூதே
விரகப் பொருவிதனத் தாலே மண்ணின்மேலே கனம்
விணிலேயுழ தாதுகந்தவி சாகனேபுரி நீயும்வஞ்சமென்
பீதேயெண்ணி டாதே
நரக சமன்வருமப் போதே பின்னில்லாதே
நாளுமேமற் வாதுநின்சிறு பாதமாகிய சீதபங்கய
நாணே உன்னி னேனே

நிமலப் பெருமிதச்செவ் வேளே கன்னல் வேளே தொடு
நீடுபாணமே தான்மருண்டிடை வாடுமாதரிடங்கெடாவகை
நீயே யென்னு வாயே
குமரிக் கெதிபரற் கானே நண்ணி ஞானே யிகழ்
கோதிலாதத போபலம்பெறு நீதர்பால்நலாது றைந்தருள்
கோவே யென்னுள் வாவே
கடல்சுற் றியவுலகப் பாலே மின்னற் போலே வரு
காயமாகிய தீயவன்பிணி மேவியேதவி யாமலன்பொடு
காவே யென்னை யாவே
திடமற் றவனினுடைச் சேயேயன்னை நீயே திவ்ய
சேவையேசெயுஞான பண்டிதர் நாவினூடினிதாவிளைந்திடு
தேனே பொன்ன ஞானே (அ)

---

துதி.

வேறு.

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு
செய்யபாத கஞ்சமே நமக்
குய்யமேவு தஞ்சமே யின்று
செப்புவது கொஞ்சமே கேட்கத்
தீயபாதக விரோதமாய்விட்டுத்
திரும்புவாயே நெஞ்சமே
பந்தபாசமிதை யெந்தவேளையினும்
பார்க்கும்போது தொல்லையே எல்லா
லார்க்குமாவ தில்லையே யொரு
பாரமேரு வில்லையே கையிற்
பற்றுநாதன்மாது பெற்றநீதன்மீது
பனுவல்சூடு வல்லையே
மங்கைமார்களிருதுங்க மேவுமாத
வாரணங்கொள் கும்பமே முகம்
பூரணசந்திர விம்பமே பட
மாசுணங்கொள் கம்பமே யுறு
மாரவேளரசு மண்டபத்தருகில்
வைத்தரண்டு ம்கபமே

செங்கை சூரியோத யக்குலா வமலர்
சீதபத்ம தளமே வாயி
லோதுசொற்கள் குளமே யிதழ்
திவ்யபொற்ப வளமே சென்று
சிந்தித்தாற்குமரன் கந்தப்பாதமலர்
சேர்வதெவ்வா றுளமே
வன்னி மானவிழி மன்னவே கடையில்
வக்ரதந்த சங்கமே கொண்ட
வுக்ரதுங்க சிங்கமே யென்ன
மறலிதூதர் பொங்கமே யுற்று
வந்துவேளைநெஞ்சே கந்தவேளை நினை
மருவுறுது பங்கமே
செவ்விமா நகரண் ணுமலைக்கவிஞன்
தேச மெங்கு மிசையே பெறப்
பேசுதந்த மிசையே சற்றுந்
தீர்ந்திடாத நசையே வைத்துச்
சேவலாளிபதந் காவலோடுபணி
தினமுநாறு விசையே (8)

---

சுரம்போக்கு-நற்றாயிரங்கல்.

வேறு.

பாதிராத்திரி வேளையில்வீட்டுப்
பக்கத்தில்வந்து மேவிப் பஞ்ச
பாதகனொரு பாவி சிறு
பாவையை மெள்ளக் கூவிக் கையைப்
பற்றிக்கூட்டிக்கொண் டேகினன்பதை
பதைக்குதேயென்ற னாவி
சோதனைப்பிர காரமாயென்னைத்
தொடர்ந்ததே பெருந் தோஷம் எவர்
சூதினால் வந்த மோசம் இனித்
தொலையுமோ பிள்ளைப் பாசம் இதைச்
சுற்றத்தாரிந் தாலெனக்குமுன்
சொல்வரோபரி யாசம்

தேனிலங்கிய காவனத்திகழ்
சென்னிமாநகர் வாசன் துதி
செய்யுமண்ணுமலை நாசன் செப்புஞ்
செந்தமிழ்க்கரு ணேசன் நாளுஞ்
சிந்தனை செய்யுந் தொண்டர்தீவினை
தீர்த்திடு முரு கேசன்

நானிலப்புகழ் கழுகுமாமலை
நாயகன் பாண்டி நாட்டில் நெஞ்சில்
நாணம்விட்டுத்தன் பாட்டில வெப்பம்
நண்ணியபாலைக் காட்டில் மகள்
நடக்கவேண்டிமுன் னடக்காகத் தெய்வம்
லபித்தோ மண்டை யோட்டில

மனமுகந்தொருபையல் பின்செல
வயது மீறின மாதோ இந்த
மார்க்கந்தோன்றின தேதோ செனம
வாசனைபல னீதோ அந்தோ
மாதப்பத்துஞ்சு மந்துபெற்றவென்
வயிறுந்தானெரி யாதோ

செய்யுபஞ்சணையும் பொருதுமே
சிவந்துகொப்பள மாகும் நெரிஞ்
சிப்பழமென்று நோகும் அவர்
சீரடிரண்டும் வேகும் மடி
தீயுங்கானலிற் சாயும்வெனிலாந
தீயிலெப்படி போகும்

தேடிலுங்கிடை யாததாகிய
திரவியக்கரு கூலம் போலே
செனித்த பெண்ணுக்குச் சீலம் வேறே
திருப்பினதென்ன காலம் வயது
திரண்டிடா முன்ன மருநதிடறசெலவன்
செய்தானோ விந்த்ர சாலம்

காடுசேர்கையிற் காடிவேங்கைகள்
சாட்டுமேயார வாரம் அதைக்க

காதிற்கேட்டுவி சாரம் வைத்துக்
கலங்குவாளந்த நேரம் என்றன்
காதலிதன்னை யாதரித்துயிர்
காப்பது வேலன் பாரம்

---

## தலைவியிரங்கல்

### வேறு.

நேமமாய்ப்பணியன் ஞமலைக்குதவு நீதனைக்
கழுகுமலை நாதனை நெஞ்சில்
நினைக்கநினைக்கமீறியெனைக்கொல்லுதே பெரும் வேதனை

கோமளக்கடலி லேமிகுத்ததிரைக் கூட்டமே
கொண்டபோ ராட்டமே செய்து
கோரமேவிளைத்தாற்றீருமோவெனக்குமனவாட்டமே

வெள்ளைத்திரையின்மேலே துள்ளித்திரியுஞ்சுறு மீனமே
யினியுமுண்டோ மானமே பெரும்
வீறல்கொண்டதனுவேற்குதில்லை யன்னபானமே

அள்ளற்கழிக்கரையுண்மெள்ளக் குலவிவருமாமையே
கொடியமனத் தீமையே நாளு
மதிகரித்திடலா லவமதிக்குதிந்தச் சீமையே

பொங்குமதுலர்க ளெங்குபரிமளிக்கும் புன்னையே
பெற்றுவளாத்த வன்னையே யெந்தப்
போதும்வைதுவைதுமோதுகிறுள்பாடியென்னையே

தங்குளித்திலம்புரி யிங்கிதவலம்புரிச் சங்கமே
தென்றலுமொரு சிங்கமே போலத்
தாக்கவேமயங்கி யேக்கமாமெலிந்தே னங்கமே

மங்கைமார்களத ரங்கணேர்பவள வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசகடம்பன்வரநேசத்துடன்சொல்மோபல்லியே

அங்கயத்தினிறைபங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியம்வைத்து முன்னமே காட்டி
யாதரித்தவேன்முருகனைக்கண் காணேனோ இன்னமே

---

## தலைவியின் ஊடல்.

வேறு,

ஆறுமுகவடி வேலவனே கலி
யாணமுஞ்செய்ய வில்லை சற்று
மச்சமில்லாமலே மெத்தப்பித்தாகி
அடைக்கிறாயென்ன தொல்லை

மீறிய வெண்ணமிலாத பெண்ணோடே
விளம்பாதே வீண் பேச்சு சும்மா
வெள்ளைத்தனமாகத் துள்ளுகிறாய் நெஞ்சில்
வெட்கமெங்கே போச்சு

மேட்டிமையென்னிடங் காட்டுகிறாயினி
வேறிலையோ சோலி இதை
வீட்டிலுள்ளோர் கொஞ்சங் கேட்டுவிட்டாலது
மெத்த மெத்தக் கேலி

தாட்டிகஞ்சேர்கழு காசலமாநகர்
தங்குமுரு கோனே இந்திர
ஜாலத்திறலென்னைக் காலைபபிடித்தாலும்
சம்மதியே னே

அக்கரைக்காரறகு புத்திகெஞ்சமென்ப
ராரும் பழ மொழியே நீயும்
அபபடியென்னைப் பலாத்காரஞ் செய்திடில்
லாச்சுது பெண் பழியே

சக்கரைக்கட்டிபோல் வள்ளிதெய்வயானை யாந்
தையலுனக் கிலையோ ரண்டு
தையலரைக்கொண்ட பையலுனக்கென்ன
தானுமொரு நிலையோ

அம்புவியிற்சிறு பெண்களின்மேலுனக்
காசையேன் காணுதையா நீ
ஆக்கப்பொருத்தாலு மாறப்பொறுதவர்
ஆகபவ தோணுதைய

நம்புமண்ணாமலை தாசன்பணியும்
நளினமலாப் பாதா கொஞ்ச

நாளைக்குமேலொரு வேளைக்குமேநன்மை
நடத்திடலா காதா. (12)

---

## பாங்கிதலைவி நிலைமைகூறித் தலைவனை யழைத்தல்.

வேறு.

கண்ணாயிரம் படைத்த விண்ணோரிடந்தரித்த
கனவயிரப்படை யவன்மகளைக்கொண்ட கர்த்தனே திருக்
கழுகுமலைப்பதி யானுதினமுற்றிடு சுத்தனே
உண்ணாமலைக்கிடர்க ளண்ணாத் தொழுதுமிக
வகமகிழ்த்தன தருளைப்பளித்திடு மையனே திசை
யாவரும்வேட்குற மயிலைநடத்திய தூயனே
மின்னேகமலமலர்ப் பொன்னேரிவனப்புகல
விகசிதரத்தின நகைகடரித்தொளிர் மெய்யினாள் கதிர்
விரவியசித்திர வளையலடுக்கிய கையினாள்
என்னேரமுமனதி லுன்மீதில் தியானங்கொண்
டெழுகியசித்திரமெனமவுனதரி க்கிறாள் வள்ளத்
திடுகிறயுத்தமுகிலையும்வெறுத்தரு வருக்கிறாள்
கும்பத்தினைச்சினந்து வம்பைப்பிதிர்த்தெழுந்து
கொடியிடைமுற்றிலுமொடியவளைத்தது அங்கமே தினம்
குலவுகடப்பினில்நினைவதுவைத்தனள் மங்கையே
செம்பொற்சிலம்புகள் புலம்பப்பெருந்தெருவிற்
றிகழ்தருசிற்றில்கள்புரிவதைவிட்டவள் தியங்கினாள் உன்றன்
றிருவழகைக்கரு விழியுளிருத்தியே மயங்கினாள்
போராடுதற்குரிய கூரார்மலர்க்கணையெய்
புகழ்பெருசித்தச னனுவதனைப்பொரு புருவத்தாள் தவம்
புரிபவரைத்தன தடியில்விழப்புரி பருவத்தாள்
சீராகசிந்தைதனில் நேராகவைத்துனது
திருவருட்கனி யதனையருத்தியே காரையா யிந்தத்
தெரிவையுளத்துயரலதுபிடித்தவ ரரையர். (13)

## தலைவி பாங்கியைத் தூதுவிடுத்தல்.

வேறு

பூமிமெச்சிடுமன் னுமலைக்கோ னதிப யானவன்
  மயில்வாகனனவன் ஒரு   கானவனெ   னப்
  புனத்தைக்காக்கும் வள்ளி
  மனத்தைப்பார்க்கமெல்லப்   போனவனே

சேமமுற்றகழு காசலேசனைப்   போ தேடுதே
  மனம்வாடுதே காலந்தனை   ளாடுதே   யிரு
  செங்கைதங்கிநின்ற சங்கினங்களுங் கழன்றோடுதே

தென்றலானபுலி வந்துமேற்பாய்மாசி   சீறுதே
  தடுமாறுதே யிப்   கோறுதே   மெத்த
  தீமையாமிருள் சூழுமாகிரியு   மீறுதே

குற்றமானபயம் ரண்டும்விட்டமிம்மிக கொண்டுதே
  திகழ்மண்டுதே வெப்புக்   கண்டுதே   மலர்க
  கொம்புபோலமென் மருங்குலானதுந் துவண்டுதே

உள்ளமெல்லமெல்ல கந்தமீதினைந்   துருகுதே
  முத்தங்கருகுதே கண்ணீர்   பெருகுதே   எனை
  யுச்சிக்கேறிபக்தி
  பித்தங்கிறுகிறென்று   வருகுதே

வள்ளமேவுபசும் பாலுந்தேனுமரு   வருக்குதே
  கசந்திருக்குதே துன்பம   பெருக்குதே   மன்ன
  வாருந்தாழுமாருக நீறவேதினமும   பருக்குதே

பாரவானசமுசார வேட்டைமடி   பாயுதே
  யுடல்தேயுதே மலர   தீயுதே   கொடும
  பாவியானமதி யாவிசோர வந்து   காயுதே

மாரவேளினால் கோரமானபெரு   வாதையே
  யெனுந்தீதையே நீரத   தூதையே சொல்லி
  யாரும் நீராகுலனைக்கூட்டி வாடியபூ   கோதையே.   (14)

—★—

## பாங்கிதலைவியின் அவயவத்தருமை சாற்றல்.

### வேறு

சந்தவரை வந்தருக                    நாதா          பரை
    யந்தரிமு ஞேன்மணியா              மாதா          அருள்
    சண்முகசடாட்சரவி                 நோதா
    குழைக்காதா சூரர்                 வாதா          வன
    சஞ்சரிவெண் குஞ்சரிச              மேதா

செந்தமிழுண்ணுமலையை                யாளாக்        கொண்ட
    கந்தவரவிந்தமலர்த்                தாளா          கட்க
    சிந்திடுசடம்பணியுர்               தோளா
    நெடுநாளா                       மறவாளா        வனைத்
    தேடொர்குயிற் பேடுருவங்            கேளாய்

சுந்தர மிகுந்தகுழன்                 மேகம         அவள்
    சொர்ந்தநுதலிந் துவிலோர்           பாகம்         திருத்
    தும்புருவம் விலைலொடுசி            நேகம்
    தவயோகம் வென்ற                 னேகம்         வஞ்சந்
    துஞ்சுவிழி நஞ்சினிதும்             வேகம்

சந்தமலிகின்றமுக                   மிந்து         வள்ளைத்
    தண்டுசெவி யென்பதுவே              தந்து         கன்னம்
    சாணைநனிசா சியின்ப               சுந்து
    மதுச்சிந்து தலபொ                 ருந்து         சிறு
    சண்பகந் துப்பாமிதழ்சி             வந்து

செங்குமுத புட்பமதை                 யொத்து        மொழித்
    தேனுதவும் வாய்நகையோ             முதது         கண்டஞ்
    சிதரனு ருதுவர                    நத்து
    சொற்றித்தித்துப பாகைக்            கைத்து        விடச்
    செய்புமென வுனலாமு              ளத்து

குங்குமவா கங்கசகோ                 தண்டம்        முன்கைக்
    கோமகர யாழுவமை                 விண்டம்       கையைக்
    கோகனக மோவனம                  ருண்டம்
    ஆழிமண்டங் குலி                   கண்டம்        நெருக்
    குங்கெளிறு சிறுகிளி               துண்டம்

கட்டுகதிர் பட்டுமணி வம்பு இழி
பட்டுவிழி விட்டிடவே மூம்பு இற
கட்டழகாம் வட்டகுட்டச் சொம்பு
யானைக்கொம்பு சிவ சம்பு குடங்
கைக்கும்வனை யாதவொரப றம்பு

மட்டுமிழ் பசுந்துளப மாலே செங்கண்
வளருகிற தயிலெசனுமொ ராலே சிறு
வயறுமயிர் சிறநெம்பு போலே
விரைவாலே வெள்ள மேலே சுறநி
வந்தசுழி யுந்தியிடை நூலே

தரமரவ படமெனல முண்டு துடை
தங்கநிறச செங்கதலித் தண்டு முழங்
தாட்குவமை கேட்கிலவை நண்டு
சினைகொண்டு வளர் பெண்டு வரால்
சாருங்கணைக்கா லெனு மிரண்டு

பரடுதரா சுயர்குதிகந் துகமே பணி
பரவுபுறவடியிணைபுத தகமே தடற்
பவளமதி தசவிரல்கள் நகமே
யம்போருகமே பத யுகமே மயில்
பண்ணுமிளஞ சாயலையா சகமே

மேனகையொ டுருவசியிந்திராணி செல்வ மிக்க
திருமக்யகலை வாணி இந்த
மின்னரசி தன்னுருவங் காணி
நெஞ்சுநாணி மலர்ப் பாணி தலை
மீதுகுவித்துத்தொழுவார் பேணி

சேனையொடுவந்துகருங் காவி யப்பமைச்
செய்யகருப்புச் சிலைவைத் தேவி சண்டை
செய்யுமொரு மன்மதனும் பாவி
எங்கடேவி யிடமேவியுட லாவி தனைத்
தீர்க்குமுளங் காத்திடுவாய் மேவி. (15)

## தலைவன் வருத்தஞ் சாற்றல்.

வேறு

வண்ணாத தினைமாமைத் தெள்ளியே யுண்ணுடை
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே பயிர
வாங்கபயிறந்திட்ட கள்ளியே யிரு
வடமேருவை நிகராகிய
புயமீதிதணிபலமாமணி
மாலைபடைரெதன துள்ளியே விழு
வான்மதி விசாதி யள்ளியே

கன்னத்தி னிற்குயிற் சத்தமே கேட்கக்
கன்றுது பாரென்றன் சித்தமே மயக்
கஞ்செய்பு தோமப பித்தமே யுடல்
கனலேறிய மெழுகாயின
தினியாகிலு மடியாதகி
காத்தருள் செய்துன்றன் சித்தமே தந்தாற்
கைதொழுவே னுன்னை நித்தமே

வாடியிருப்பது வஞ்சமோ பொல்ல
வன்கருங்கல்லோ வுன்னெஞ்சமோ கொண்ட
மாமப்பயித்தியம கொஞ்சமோ உயிர்
மறையாகமமுதுகாவிய
மதிலேமொழி சுகமேதரு
மார்க்க முனக்கென்ன சஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும பஞ்சமோ

தேடக்கிடையாத சொன்னமே யுயிர்ச்
சித்திரமேமட வன்னமே அரோ
சிக்குதுபால்தயி ரன்னமே பொரு
விலையானது கொலைவேலென
தினமேமிகு கொடுவாதனை
செய்வதுகண்டிலை யின்னமே என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே (16)

—*—

## தலைவனோடுற்றமையை தலைவிபாங்கிக்குக்கூறல்.

வேறு

சௌந்தினமாநக ரந்தனிலமேவிய
தேசிகனுமுரு கேசன் மயில்
வாசியி லேறுமுல் லாசன் சிறு
திங்களும்பனை சங்கமாசுணை
முந்திலங்கிய கங்கையாரொடு
செஞ்சடாடவி மீதணிவார்செவி
சேரமுன் னோதுப தேசன் அடி
யாரதமையாள் விசு வாசன்

எந்தநேரமும் வந்தனைசெய்தடி
யெண்ணும் அண்ணமலை தாசன துதி
பண்ணுமெய்ஞ் ஞானவி லாசன் சான்றோ
டிந்தெழுந்து தயங்கு மாலையில்
வந்துவண்டு முழங்கு சோலையி
வின்பசாகர மாகியநாடக
மன்புடனே செய்தான் மானே அந்தச
ம்பரம மென்னசொல் வேனே

மங்கைமார்பல ரும்புடைசூழ்தர
மாமலர் கொய்திடச் சென்றேன் அங்கோர
பூமரத்தேகனி நின்றேன் சந்த்ர
மண்டலங்களை வென்றவாநன
மைந்தொடொன்று மிகுந்தவார் மது
வண்டலோடுக டம்பெனுமாரமும்
வாரமுந் தோன்றிடச் சேர்ந்தான ஏன
தேரைபார்த்தே களி கூர்ந்தான்

பங்கயாசன மேலுறைநான்முகப
பாதகனுமாக் கைதான் கொண்டுன
சோதியையெபபடிச் செய்தான் அடி
பஞ்சரஞ்சிறு மஞ்சசிரடி
கொஞ்ச ரஞ்சித வஞ்சியேபுவி
பட்டுநீ நிலைநிற்க வொண்ணுதென் று
பண்மலர் மெத்தையொன றிட்டான் பின்பு
மென்மல ரெந்தன்னை தொட்டான் (17)

## துதி.

### வேறு

கன்னல்சூழ்பழ னமபுடைசூழ்கழு
காசலந்தனில் வாழ்பிர தாபனே கன
வாசமெங்குங் கமழ்கின்ற நீபனே வள
காதலோடிரு போதிலுமபல
போதினாபணி வாாமனவுதகுறை
காரிருடகுவை நீககிய தீபனே அதி
சூரபதமனைத் தாககிய கோபனே

சென்னிமாநகர் வாழுமண்ணுமலை
செபபுஞ்செநதமிழ் முககதி நேசனே சிவ
சுபரமணய னெனுமபபர காசனே கொடு
சிநதைதனைநது புலையபினறிரு
மநதிரநதனில வநதடைநதுனை
சேவிககுமபகுணா மெனறெணாக காகுமோ மிகு
பாவிககுநதுய ரெயபபடிப போகுமோ

வநதவர்க்குப பழம்புரிக் காடியே
தநதிடசசகி யாாதமைத் தேடியே பிர
பந்தமெத்தனை யெததனை கோடியே குலை
வாழையின்பழமபோற கனிந்திடுந்
தாழையின் கனி யோவெனுமபடி
மதுரிதமபெறவேமந்தம பாடியே யொரு
பரிசுமபெறுதுளம வாடியே

வெந்துரைகளுள் வெபபிடைய பாலையே
சிநது பித்தரைபபோல்வெறுமை வேலையே செய்யும
வீணனென்விளங் குன்றணைடக் காலையே எந்த
வேளையுநதுதி கூறவுநதுயா
நீருநவெமபவ மாதலம புரி
வில்வவேணிசோ கற்பக வாலையே தரு
செல்வனே யெனுங்கற்பகச சோலையே. (18)

## தலைவியின் ஊடல்.

வேறு.

செந்தூர் வளர்முருக நாதா அருணைதயச்
செந்தாமரைமிகரும் பாதா திகழ்
சிந்தைதனி லெண்ணுமலைசெய்
நிந்தையை யென்னுதருள்செய்
சித்திரவேற்கரனே போதா உனதுவஞ்ச
செய்கையினைமுங்கெரி யாதா

சந்தோஷ மாகவேபோய் வீடு வீடுதோறுந்
சரசர்சொனாடாடுமிதே பாடு வந்துன்
கணிகையர்கள பேர்வரிய
சகஸ்திரம வேணுமென்ன சேடு நனித்தேரிடந்
தங்கிமே யேயுமெமவள னாடு

வேசையர் வாசலிலே சென்று தம்பலங்களை
வெட்கமில்லாமல் வாங்கி மென்று தின்று
மெத்தப பரிதபியாகொண்டு
சுற்றித்திரிந்தேமருண்டு
விடுமே கடிவந்தாயே இன்றுதொடவேமாட்டேன்
வேணுமென்றுமே போடு சொன்று

ஆசைகொண்டவருக்கு நேசங்கிடையாதெம்பார்
அப்படிக்காசவிசு வாசம வைக்கும்
அந்தவில்லபபெணடுகளைச
சொந்தமெனக்கொண்டனையே
யானுமுன்னைபபோலே மோசம்போனவருண்டோ
ஆருஞ்செய்கிறரேபரி காசம்

கந்தாசெய்யாதேபல வந்தம் புதுமலரைக்
கசக்கியறிவாகளோ கந்தம் சற்றுங்
காதலில்லாமற் சிலந்தரா
கையைவலியபபிடிசதுக்
கசக்கினலாமோசுகா நந்தம் உனக்கெங்குந்
கனவிலுமில்லையினித் தொந்தம்

எந்தப்பறப்பினுமே வல்லி யுனையல்லாமல்
எவராயுப்பாரேனென்று சொல்லி ஊரில்
எத்தனைபரத்தையரோ
ரித்தமுநீகத்தினையோ
இப்படிக்காசி காஞ்சி டில்லி கன்யாகுமரி
எங்கும்பார்த்தாலுமில்லை சல்லி

கங்குகரையில்லையே ஜாடைசொல்லிவைபவர்
கட்டுகிறாயேயெதற காடை மானங்
காக்கவல்லவாவென்பர்போ
சேர்க்கையிலாதேயன்பாலே
காத்தாயேவேசைமாதா மேடை கைவசமாமோ
கலப்புல்லுத்தின்றாலுமோ காடை

குங்குமஞ் சந்தனஞ்சவ் வாது கதம்பங்
குழைத்துமென்றோபுயத்தின மீது வாசனை
கொட்டுதெழில் ஒனற்றிசந்தப
பொட்டொடிப கட்டுதித்த
கோகிலம்புதிதாய் வந்த தேதுநடந்தலொதெலலாங்
கொஞ்சலுஞ்சொல்வாய் பண்ணாதே சூது (19)

— x —

## தலைவி வருந்தல்

வேறு.

பாளைவாய் கழுகில்வந்தூர் வாளைபால் வயல்சூழ்செந்தூர்
பாலனம்புரியவந்த புண்ணியா எந்த
காலையுஞ்செய் கிறப்புமுனிபின் ணெண்ணியா

வேளையோவிடுந்தையா நாளைவாரேனின்று கையை
விட்டிடென்றாலுமவிடாமற் பிடிக்கிறாய் பாலை
யொட்டவே மடுவரிந்து குடிக்கிறாய்

சித்தமும் அண்ணுமலைசெய் குற்றமெண்ணுவேலாகண்டோர்
சின்னிதழ்பப வளங்களில வெள்ளையே தென்று
லெனனசொல்வே ஞொருபெண் பிளளையே

மத்தகஙிகர்புயத்தின் மெத்தகரவாகைப்பட்டு
மாலைப்பிறை போலவொளி தோணுதே யிது
கேலிதநுறை யாருமென்று நாணுதே

உன்னையும் விவாகமில்லா வென்னையுமேயன்னைகண்டா
லொன்றுஞ்சொல்லிடாளே அடா பாவியே யின்று
தின்றிடுவேனென்பாள் பச்சை நாவியே

சன்னைசாடை யாகவந்தென் றன்னைக்கண்டுபோவிரென்று
சாற்றிடுமென் னுண்மையான சொல்லையே விட்டுசு
கூத்துவன்போல வநதாயென்ன தொல்லையே

சாறுசேர் கரும்புருசி யாயிருந்தா லுமவேரோடு
தான்பறித்துத் தின்னுவது நியாயமோ முழு
ஆண்பிள்ளை கிது தான் சமா தாயமோ
நூறுநூறாயிரந்தரம் மாறிமாறியேபிறந்து
நோகுதே எந்தனுடைய வுள்ளமே சித்தப்
போகுதே பலவாய் வுந்தன் கள்ளமே. (20)

---

## நற்றாய் தலைமகளின் வேற்றுமைகண்டுவினவுதல்

### வேறு

என்னடி நான் பெற்றநங்கை இளந்கொங்கை வுடல் சங்கை என்
இப்படியாயிற்றே செங்கை வளை
யிடற்பொறிட வுடைபட்டன நடைகெட்டதுன் னுடையிற்பல
வெய்தின சந்தனப் புள்ளி என்னை
செய்தாயோ சொல்லடி கள்ளி
அன்னவயறபெருந்துறவாசன் மந்தகாசன் அன்பர்நேசன் நாளும்
அண்ணுமலைக்கவி ராசன் பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ் களபத்தொடு கமழ்பொற்புய
அற்புதவேலவன்செய் ஜாலம் தன்னால்
கற்பழிந்தாயோவிக் காலம்
சித்தசன்மெச்சிடு நூலை யந்திமாலையொடு காலை வைத்துச்
சிந்திப்ப தாச்சுதுன் வேலை
சின்னத்தின மடவஞ்சியேயுன்னைப்பணியொடு கொஞ்சியே
சேவற்கொடியோன்பூஞ் சோலை - தனில
தேடிவந்திட்டானே மாலை சுப
மெத்தப்பிரமைகொண்டேங்கி மனமோங்கி நேசப்பாங்கி மூரை
விட்டுத்தனியாக நீங்கி வடி
வேலுக்கதியனை எண்ணியே மேலிட்டலறியகன்னியே
வெட்கத்தைப் போக்கடித் தாயோ காக
வேசைத்தனம்படித் தாயோ

இன்னம்விவாகமேயில்லை கமழ்கொல்லை வெட்டிமுல்லை குழ
லெனுங்குஞ்சிங்காரிக்க விலலே சந்த
மினிதாகிய களாந்தனை கணையேருவி லணிமென்றனே
இப்படியே தலை விதியோ பெண்ணே
செப்படியேயிது மதியோ

சன்னதமாகுயோர்பேபே பிடித்தாயே வேப்பங்காயே போலச்
சாதம் வெறுத்தாயே நீயே பெருஞ்
சண்டாளிபே கண்டோர்திரள கொண்டோர்பழிமிண்டார்நம
சாதிக்கெல்லாமொரு வடுவே வரத்
தான்பிறந்தாய்வந்து நடுவே

வண்ணமயபிரவிதோடி ராகம்பாடி யுறவாடி யுன்மூன்
வந்துதினமவிளை யாடி எங்கும்
வசைமேவிடும் வகைசெய்தன னகுமூரினி மிகவேயுயர்
வையகத்திப்பிதை யறியா அந்த
வாலைமகனுக்கும் வெறியா

எண்ணங்குமரவேள்பாலே*சென்றதாலே யினிமேகளே பழி
யெப்படியுமுன்றன் மேலே வரு
மென்றேயென துளமஞ்சுது நன்றேசொலிலென வஞ்சக
மிலலைக்கிழவன்சொல வீணைக் காரர்க்
கேற்காதென்றாலுங்கண் ணேணை. (21)

---

## தலைவனிட்டத் தலைவி வருந்துதல்

### வேறு.

மஞ்சுநிகர்குந்தளமின்னை சதகளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய்ய
வன்னமேயொளிர் சொன்னமே நடை
யன்னமே யிடை மின்னமே பெ
வந்தகுலபாரவஞ்சியே அதிவிருப்பத் துடனுரைக்கும்
வார்த்தையைக்கேளாசை மிஞ்சியே

## கழுகுமலை சுப்பிரமணியர்

அஞ்சுவயதானபருவந் தனிலெனது பிறமனைமுன்
அங்கசவேள் போலே வுருவாம் பெற்றே
அன்றுவந்து நயந்துமாலையில
னெஞ்சழிந்து மயங்கவே யரு
ளாறுமுகவேலவனையே
நினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லையென்ன வினையே
சென்னிகுளமேவிய வாசன் இனிபதாதி யனுதினமுஞ்
செய்திடும் அண்ணாமலைதாசன் பாடுஞ்
சிநதுமீது மிகுந்தநேயமு
றுஞ்சுசிலகு கஞ்சரோருக
திவ்விய முகங்களாறுமே
கண்களிற்கண்டால் பண்பிணர்க்கெலாம
செவ்விதழும் வாயுமூழுமே (22)

கழுகுமலை சுப்பிரமணியர் காவடிச்சிந்து
முற்றுப்பெற்றது.





முருகன் துணை

# கழுகுமலை சுப்பிரமணியர்

# வழிநடைப் பதம்.

விநாயகர் காப்பு.

சீரார்கழுகுமலை செல்லும்வழிநடையைப்
பேராருஞ்சிந்தாகப்பேசுதற்கு-காராய்
குணபதியேநீதிக் குணநிதியேஆதிக்
கணபதியே என்பால் கனிந்து.

இராகம் காம்போதி-தாளம் ரூபகம்.

பல்லவி.

கண்ணேகற்கண்டே கழுகுமலைவளர்
கந்தனை சேவிப்போம்வாராய்-இந்த
காசினிதனிலே பூசித்தபேர்கட்கு
கனயோகமுண்டாகும் பாராய். (௧)

## கழுகுமலை சுப்பிரமணியர்

### அநுபல்லவி

பெண்ணே இதுதாண்டி பீச்சுஸ்டேஷன் பாரு
பிரியமாய் டிக்கட்டு கொண்டோம் வண்டி ஏறு
எண்ணு முன்னே கண்ணே எழும்பூர் வந்தோம் நேரு
இதமாகவே
பதமாகவே
கதிரோனுமே
பதிசார்ந்தனன் (க)

பாராய் சைதாபேட்டை பரங்கிமலையிது
பாங்குற்றோங்கும் பல்லாவரமே செங்கற்
பட்டு இதுதாண்டி பட்டாளம் பாலாறு
பாவாய் இது விழுப்புரமே அடி
நேராக ஓடுது சீராய் பண்ணுருட்டி
நெல்லிக்குப்பமிது திரமே கிள்ளை
நேர்த்தியை என் சொல்வேன் கீர்த்தியாய் ஜீவர்கள்
சேவித்திடும் சிதம்பரமே
பூராய் நடராஜன பொன்னடியோதி
பூமிகொழுநன் கோவிந்தன் றுயிலு நதி
தோராயமாய்க் கொண்டு தொல்லைகளை மிதி
துதியே சபா
பதியே தினந்
ததியே என
நிதியே வரும், (க)

வள்ளமிகுந்திடுங் கொள்ளிடந்தாண்டினோம்
வைதீசுரன் கோவில பாரே இதோ
வந்தோம் மாயவரம் சேர்ந்தோம் கும்பகோணம
வளங் கொழிக்குந் தஞ்சாவூரே அதோ
தென்னூரோடை காவிரிசூழ் திருச்சி
திருவரங்கர் கோயில் நேரே இது
திண்டுக்கல் அப்பாத்துரையையும் கடந்தோம்
தெரியுது கொடைக்கானல் சீரே.

# வழிநடைப்பதம்

வில்லூர்வாடிபட்டி ஸ்டேஷனையும் விட்டோம்
விளங்கும் சோழவந்தான் சமையநல்லூர் தொட்டோம்
மள்ளர்நிரைவயல் மதுரையை முன்னிட்டோம்

மானே சொக்கரை
போற்றடி
மீனாக்ஷியைதினம்
ஏற்றடி (க)

அனமே பசுமலை கடந்தோம் திருப்பரங்
குன்றங்கந்தன்வளர்ஸ்தலமே இதோ
அடுத்துவந்துவிட்டோம் கப்பலூர்ஸ்டேஷனை
அதுதாண்டி திருமங்கலமே
முனமே தெரியுது முனிசிபல்கவுன்சிலர்
கூளையநாடாரின நிலமே அடி
மொய்குழலேசிவரக் கோட்டையைக்கடந்தோம்
கள்ளிக்குடி ஸ்டேஷன்பலமே

தனமே பெருகிய விருதுபட்டியிது
தளிருங்குலக்கரை துலுக்கப்பட்டியது
கனமேர்வேப்பிலைப்பட்டி சதுரமோ பொது

கடுகினில் வண்டியு
மோடுது
முடுகியே யூர்களை
நாடுது (க)

சின்னப்பெண்ணே சாத்தூர்ஸ்டேஷனைப்பாரடி
செப்புமநள்ளிஇது மயிலே இதோ
சிறப்புற்றோங்கும் கோவில்பட்டிஸ்டேஷனிது
சீக்கிரமிறங்கு குயிலே
என்னசொல்லப்போறேன் மன்னன்எட்டியாபுரம்
இபறநிய பங்களா ஒயிலே சற்று
இங்கேயிருந்து இளைப்பாறிக்கொள்ளுவோம்
இறங்கிடுவோம் கடு வெயிலே

## கழுகுமலை சுப்பிரமணியர்

கன்னல்மொழியாளே கடுநேர மாச்சுது
கடும்பகலோமேறுகுது கடலுள்ளே போச்சுது
நன்னையமதிகால் கிழக்கில் சேர்சுது

நடடி விசை
தொடடி யிட்டா
யெடடி கொஞ்சம்
கொடடி யுண்ண (க)

பாதையிருபுறம் சாலையழகதை
பகர என்னாலுமாகாது அந்தோ
பாராய் மைதானத்தில் பட்டாளத்தார்வீடு
பஞ்சாலையாகுமே யீது இளங்
கோதையே வானாம்பட்டியிதுவட்டி
கொஞ்சிநடந்துவா மாது இது
கூறும்நாலட்டம் பூதூர்வந்துவிட்டோம்
கூசாமற்பேசு இப்போது
காதலியே கழுகுமலையுந் தெரியுது
கருதுசங்கரன் கோவில்சாலைபிரியுது
ஆதலினாலெனக்கன்பு சொரியுது

அளியே பசுங்
கிளியே கதி
ரொளியே சரப்
பளியே புனை (க)

## ஆண்சொல் விருத்தம்

கந்தனை துதிக்கவென்றும் காவடி பார்க்கவென்றும்
சிந்தனைபுரிய வென்றும் சீர்நகர் பார்க்கவென்றும்
வந்தனை புரியவென்றும் வந்தனம் கழுகுத்தங்கும்
விந்தையை மலையின்நேற்பை வியப்புடன் பாராய்மாதே.

ஊர்வள மதனைப்பாராய் வுறைபவர் வளத்தைப் பாராய
நீர்வளமதனைப்பாராய் நிலவளமதனைப்பாராய்
ஏர்வளமதனைப்பாராய் எழிலுறுவர்த்தகத்தின்
சீர்வளமதனைப்பாராய் சென்னையிற்பிறந்தபெண்ணே.

## வழிநடைப்பதம்

கோவிலைப்பாராய்பெண் கோபுரம்பாராய்சூழ்ந்த
காவியைப்பாராய்வான வரையுள்ளமலைப்பாராய்
பூவினம்பொலிந்துவண்டு புகுந்தசல்லந்தொடுங்
காவினங்களையுங்கண்டு களிக்கநீ சென்னைப்பெண்ணே.

## இருவரும் கோயிலுக்குள் சென்று பாடுதல்.

() முருகனே சரணம் வேத முடிவனே சரணம் மாயன்
மருகனே சரணம் பசுபதி பாலனே சரணம் வள்ளி
அருகனே சரணம் போரூர் அண்ணலே சரணம் ஞானப
பெருகனே சரணம் மாறான் பெய்துயர் தீர்ப்பாய் போற்றி.

வேலனே வருக கீர்த்தி விமலனே வருக வேத
மூலனே வருக ஆதி முதல்வனே வருக தண்டைக்
காலனே வருக கந்த கடம்பனே வருக போரூர்
சீலனே வருக எங்கள் சிறுமையைத் தீர்ப்பாய் போற்றி.

சண்முகா முறையோ தொண்டர் சகாயனே முறையோ சோதித்
தண்முகா முறையோ கருணாகரா முறையோ ஆதி
ஒண்முகா முறையோ போரூர் உறைபவா முறையோ ஞானத்
திண்முகா முறையோ எங்கள் தீர்ப்பாய் போற்றி

---

இவை சென்னை "வித்தியாவதி" பத்திராதிபர்
ச-சு-சங்கலிங்கநாடார் எழுதியது

() இந்தப்பாட்டு பரிகோஷி விலாசத்திலுள்ளது

புத்தகம் வேண்டியவர்கள் புஸ்தக வியாபாரிகளாகிய தங்கசாலை தெரு நெ. 355. திருவண்ணாமலை மடத்துவீடு மதராஸ். கு. ஆ. கிருஷ்ணசாமி முதலியாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் கழுகுமலைசுப்பிரமணியர் காவடிசிந்து கேட்டவர்க்கும் இனாமாக அனுப்பப்படும்.

இந்துஸ்தான் "பங்கஜலோசனி" ஜாவளி விலை அணா 2.

பார்ஸி சரசபூஷணி சரித்திரம். அணா 4

பாரதம் முழுமையும் பார்ஸி கம்பெனியாரால் நடத்தியதை
தமிழிலியற்றியது புத்தகம் 1-க்கு- 0 4 0

வாங்கியேவெயிலுலர்த்திச் சூரணமேசெய்து வண்மையுடனங்
கிடைக்குகற்கண்டுகூட்டி, தேங்கியேவெருகால் தான் அந்திசந்தி
மானபசுவெண்ணெய்மண்டலமேகொள்ள, ஓங்கியே ஓடுகிற வெள்ளைதீ
ரும் உத்தமனே நீரெரிப்புடனேதீரும், பாங்குடனேபத்தியமோ
காரமாகா பரிவானபுலத்தியனேபாகமாமே ௱௧௦

இஞ்சிசூரணம்,

பாகமாயின்னமொருசூரணங்கேள பாக்கானஇஞ்சிபலம்பத்து
வாங்கி, சோகமாய்த்தோல்போக்கிவில்லையாக்கி சுத்தமாயொன்வறு
ப்பாய்பசுநெய்யாலே, ஏகமாய்ப்பொடிசெய்து வைத்துக்கொண்டு
ஏலமொடுதிரிகடுகுகிராம்புமம், தாகமாய்வாலுழுவைச் சாதிக்கா
யுந் தருவான ஆனந்திப்பிலிசிரகமாமே ௱௧௧

ஆமப்பா அதிமதுரங் குருசாணிஓமம் அமுக்கிரா சக்கசாலவ
ங்கப்பத்திரி, நாமப்பா மோடியுடக்கொத்தமல்லி நலமானபேரீச்சமு
ந்திரிகைஒக்க, தாமப்பா வகைக்குசாம்பலமேவாங்கித் தருவானஇவை
வறுப்பாய்சூரணமேசெய்து, ஓமப்பாசீனிபலம்பத்துங் கூட்டி உத்
தமனே மூன்றுமொன்றாய் விரவிக்கொள்ளே. ௱௧௨

விரவியேவொருகடிதான் அந்திசந்தி விவரமுடன்மண்டலமே
கொண்டாயானால், பரவியேமந்தமோடன் அக்கினியாமந்தம்பாங்கான
ஊஷ்ணத்தின்வாயுகூட, கரவியேபித்தமொடுபித்தவாய்வுங் கா
ணுமேதலைநடமாதிபனமுண்டாகும், பிரவியென்றவாதமெல்லாமொடு
க்கி நல்ல பிலமுண்டாமின்னமொருவிவரங்கேளே. ௱௧௩

திராட்சசூரணம்,

கேளேநீமுந்திரிகை பேரீச்சோடு இருநையுள்ளதக்கோல மது
ரமுத்தம், வாளேநீகொத்தமல்லி அல்லிக்கிழங்கும வகையானசாதி
க்காய்லவங்கஞ்சுக்கு, ஆளேநீகனஒலிலவககப்பத்திரி அப்பனேதா
ளிசம் திப்பிலிவிலாமிசசு, பாளேசிறுநாவற்பூலவங்கப்பட்டையாங்
கானசந்தனமுமறங்கிலுப்பே. ௱௧௪

உப்பானநெல்விதை நெற்பொறியுமொக்க வுத்தமனேவகை
க்குஒருபலமாய்வாங்கி, செப்பாமல்சூரணித்து சமனிடைதான்சீனி
சேர்த்துமேவொருகடிதான் அந்திசந்தி,ஒப்பாககாலேசும்மாமண்டல
ந்தான் உத்தமனேபசுநெய்யில் மாலையிலுண்ணத், தப்பாதபத்திய
மோ இல்லையப்பா தருவானவியாதிதனைச் சாற்றக்கேளே. ௱௧௫

சாற்றுக்கேள் பக்கிதியமும் பாண்டுசோகைத் தருவானபித்த
மொடுபீரத்தபித்தம், போற்றியேகாமாலைதாகசுரமும்வாங்கிப்போம

# சந்திரா கூந்தல் வளரும்

# பரிமள தைலம்.

**புட்டி 1-க்கு விலை அணா 0 8 0**

அதிக பரிமளமுடைய இத்தைலத்தில் கொஞ்சமெடுத்து தலையில் உற்பத்திஸ்தானங்களில் படும்படியாகத் தேய்த்து வந்தால், மயிரானது செழிப்பாகவும் அழகாகவும், செய்து ஆலம் விழுதுபோல ஓங்கி வளரும், மயிர்க்கால்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து சிவந்த நிறத்தை மாற்றி நாகப்பழம்போன்ற கருநிறத்தையுண்டு பண்ணும், கண்டு மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுழற்றல், தேகத்திலுள்ள சொறி, சிரங்கு, வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம், மனச்சஞ்சலம், ஞாபகமறதி முதலிய வியாதிகளைக் கண்டித்து கண்ணுக்கு மிகக் குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையும் சுகந்தபரிமள வாசனையையும் தேகத்தில் மினுமினுப்பையும் தந்து, முகத்தில் நல்ல காந்தியைக் கொடுக்கும். இத்தைலம் அநேக பிரபுக்களால் நன்கு மதிக்கப்பட்டு சர்டிபிகேட்டுகள் பெற்றிருக்கின்றது. அருமையான தைலம்.



முக்கிய கவனிப்பு:— இச்சந்திரா கூந்தல் தைலத்தை உபயோகித்தால் கூந்தலை ஆலம் விழுதைப்போல் வளரச்செய்யுமென்கிற சந்தேகமுடையவர்கள் தைலத்தை உபயோகித்த பிறகு, ஆய்ந்து பார்த்தால் இதனுடைய உண்மையை நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம்.

எச்சரிக்கை:— இக்காலத்தில் சிலர் உபயோகமற்ற எண்ணெய்களை வைத்துக் கொண்டு அதற்காக வெகு விமரிசையாய் நீட்டி நீட்டி எழுதி விளம்பரங்கள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணெய்களை வாங்கி அநேகர் உபயோகித்து, இருந்த கூந்தலையும் போக்கடித்துக்கொண்டு ஐயோ இதென்ன அநியாயம்! கூந்தல் வளர எண்ணெய் தடவினால் இருந்த கூந்தலும் உதிர்ந்துபோய்விட்டதே என்று விசனமுற்று ஏங்கி நிற்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணெய்களை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு இது ஓர் எச்சரிக்கை. குணத்தைக் கொடுத்து கூந்தலை வளர்க்கும் எங்களுடைய சந்திரா கூந்தல் வளரும் பரிமள தைலத்தை வாங்கி உபயோகித்தால் யாதொரு கெடுதியும் சம்பவிக்காதென்று உத்திரவாதம் கொடுக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| புட்டி 1-க்கு விலை அணா | 0 | 8 | 0 |
| தபால் செலவு அணா | 0 | 2 | 0 |

எமது விலாசம்:—

கு. ஆ. கிருஷ்ணசாமி முதலியார்
நெ. [illegible], தங்கசாலைத்தெரு, மதராஸ்

[illegible] காப்பியம

உரை

பூ. ரா. வை. ஜானகிராம் அண் கம்பெனி,
புதுமண்டபம், மதுரை.

VITHYA VINOTHINI SERIES.

உ

சிவமயம்.

அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரலங்காரம் மூலமும்,

அதற்கு

வித்யாவிநோதினி பத்ராதிபர்களால்

எழுதுவித்த பதவுரையும்.

இவை

திரு - சம்பந்தமுதலியாரால்,

சென்னை:

அமெரிக்கன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1892.

Reserved Copy-right.

மூ. ரா. வெ. ஜானகிராம் அன் கம்பெனி,

புதுமண்டபம், மதுரை.

சிவமயம்.

# கந்தரலங்காரம்.

## காப்பு.

அடலருணைத்திருக்கோபுரத்தேயந்தவாயிலுக்கு
வடவருகிற்சென்றுகண்டுகொண்டேன்வருவார்தலையிற்
றடபடெனப்படுகுட்டுடன்சர்க்கரைமொக்கியகைக்
கடதடகும்பக்களிற்றுக்கிளையகளிற்றினையே.

இ - ள். அடல் - வலியமைந்த, அருணை - திருவருணையிலுள்ள, திருக்கோபுரத்தே - திருககோபுரத்தின்கண்ணே, அந்தவாயிலுக்கு - அந்த வாசலுக்கு, வட அருகில்சென்று - வடபாரிசத்திறபோய், வருவார்தலையில் - (அவ்வாசல்வழியாய்) வருவோர் சிரங்களில், தடபட எனப்படும் குட்டுடன் - தடபட வென்றுபடுகின்ற குட்டுகளோடு, சாக்கரைமொக்கிய - சர்க்கரையைத்திணித்த, கை - துதிக்கையையும், கடம் - மதத்தையும், தடகும்பம் - பெரிய கும்பஸ்தலங்களையுமுடைய, களிற்றுக்கு-யானையாகிய விநாயகமூர்த்திக்கு, இளையகளிற்றினை - இளையயானையாகிய முருகக்கடவுளை, கண்டுகொண்டேன-சேவித்துக்கொண்டேன். எ - று.

அடல் - ஊழிக்காலத்தும் அழியாவலியுடைமை. திணித்தல் கூறுகொள்ளல். மூத்தபிள்ளையாருக்கு எலலாவுறுப்புக்களினுஞ்சிறந்த வுறுப்பாகிய தலையானைத் தலையாதலால், களிறெனவே கூறினர். களிறுபோலு முருகக்கடவுளைக் களிறென்றது உவமையாகுபெயர். திருவருணைக் கோபுரத்தின் வடபாரிசத்திலெழுந்தருளியிருக்கிற முருகக்கடவுளைக் கண்டு கொண்டேன் என்பது கருத்து.

## நூல்.

1. பேற்றைத்தவஞ்சற்றுமில்லாதவென்னைப்ரபஞ்சமென்னுஞ்
சேற்றைக்கழியவழிவிட்டவாசெஞ்சடாடவிமே
லாற்றைப்பணியையிதழியைத்தும்பையையம்புலியின்
கீற்றைப்புனைந்தபெருமான்குமாரன்க்ருபாகரனே

இ - ள். பேற்றைத்தவம் - வீடுபேற்றுக்கேதுவாகிய தவத்தை, சற்றும் இல்லாத - சிறிதும் உடையனல்லாத, என்னை - அடியேனை, ப்ரபஞ்சம் என்னும் சேற்றை - பிரபஞ்சமெனகிற அளற்றை, கழிய - நான் கடக்கும்படி, செம்சடாடவிமேல் - செவந்த சடைக்காட்டின்மீது, ஆற்றை - கங்காநதியையும், பணியை - பாம்பையும், இதழியை - கொன்றைமலரையும், தும்பையை - தும்பைமலரையும், அமபுலியின்கீற்றை - சந்திரகண்டத்தையும், புனைந்த - அணிந்த, பெருமான் - பெருமையுடையானாகிய சிவபிரானுக்கு, குமாரன் - (இளைய) புதல்வனாகிய, க்ருபாகரன் - தயாளுவானவன், வழிவிட்ட ஆறு என் - வழிவிடுத்த ப்ரகாரம் என்ன வியப்பு.

பேற்றை உருபுமயக்கம். அளறு - ஓர்நரக விசேடம். இது "உண்ணாமையுள்ள துயிர்நிலையூனுண்ண அண்ணாத்தல் செய்யாதளறு" என்னும திருக்குறளுனாயிற்காண்க. க்ருபா ஆகரன் எனப்பிரிக்க. ஆகரன்பிறப்பிடமாயுள்ளவன். தவமுடையாரைக் கழியவிடுதல் இயல்பாமன்றித் தவமுடையேனல்லாத என்னைக் கழியவிடுதல் ஒருவியபபாமென்பார், தவஞ்சற்றுமில்லாத வென்னை ப்ரபஞ்சமென்னுஞ் சேற்றைக் கழியவழிவிட்டவா என்றார்.

**௨.** அழித்துப்பிறக்கவொட்டாவயில்வேலன்கவியையன்பா
லெழுத்துப்பிழையறக்கற்கின்றிலீரெரிமூண்டதென்ன
விழித்துப்புகையெழப்பொங்குவெங்கூற்றனவிடுங்கயிற்றாற்
கழுத்திற்சுருக்கிட்டிழுக்குமன்றோகவிகற்கின்றதே.

இ - ள். அழித்து - இறந்து, பிறக்க - பிறக்கும்படி, ஒட்டா - (நம்மைவிடயார் தரங்களில்செல்ல) ஒட்டாத, அயில வேலன்கவியை - கூர்மையாகிய வேற்படையையுடையவனாகிய முருகக்கடவுளின் விடயமாகிய பாடல்களை, எழுத்துப்பிழை அற - எழுத்துவழுவில்லாமல், கற்கின்றிலீர் - கற்கமாட்டீர்களாயிருக்கின்றீர்கள், எரிமூண்டது என்ன - நெருப்பானது மூண்டெரிகின்றதென்னும்படி, விழித்து - கண்விழித்து, புகை எழ - (அதனிடத்துப்)புகையுண்டாக, பொங்கு - சீறுகின்ற, வெம்கூற்றன் - கொடியயமன், விடும்கயிற்றால் - விடுகின்ற காலபாசத்தால், கழுத்தில் சுருக்கிட்டு - கழுத்திற் சுருக்குப்போட்டு, இழுக்கும் அன்றோ - இழுக்கின்ற அந்நாளிற்றானோ, கவிகற்கின்றது - (நீங்கள் அவன்விடயமாகிய) பாடல்களைக் கற்கப்புகுவது. எ - று.

அழிந்து என்பது அழித்து எனவலித்தல் பெற்றது. உலகத்தாரே, நீங்கள் முருகக்கடவுள் விடயமாகிய பாடல்களைக் கல்லாதிருக்கின்றீர்கள்; கூற்றுவன்வந்து, தன் பாசக்கயிற்றால் உங்கள் கழுத்தில் சுருக்கிட்டிழுக்கும் அக்காலத்திலோ கற்க இருக்கின்றீர்கள் என்பது கருத்து.

3. தேரணியிட்டுப்புரமெரித்தான்மகன்செங்கையில்வேற்
கூரணிபிட்டணுவாகிக்கிரௌஞ்சங்குலைந்தரக்கர்
நேரணியிட்டுவளைந்தகடகநெளிந்ததுசூர்ப்
பேரணிகெட்டதுதேவேந்த்ரலோகம்பிழைத்ததுவே.

இ - ள். தேர் அணியிட்டு - பூமியாகிய தேரின்பெருமையைக்கொண்டு, புரம் எரித்தான்-முப்புரங்களை நீறுபடுத்தினவனாகிய சிவபெருமானுக்கு,மகன் - குமாரனாகியமுருகக்கடவுளின், செங்கையில் - செவந்தகையிலுள்ள, வேல் - வேற்படையின், கூர் - நுனியானது, அண்ணியிட்டு - படுதலால், கிரௌஞ்சம் - க்ரௌஞ்சமலையானது, அணுவாகிக்குலைந்து - அணுக்களாய் அழிந்து, அரக்கர் - அரக்கர்களுடைய, நேர் அணியிட்டுவளைந்த - நேரமையாகிய வரிசையோடு கூடிவளைந்துகொண்ட, கடகம் - படைவகுப்பு, நெளிந்தது - உளுக்கிற்று, சூர் - சூரபன்மனது, பேர் அணி கெட்டது - பெரிய அழகு அழிந்தது, தேவேந்தரலோகம் பிழைத்தது - தேவேந்திரனது உலகம உய்ந்தது. எ - று.

சிவபெருமான் புதல்வனாகிய முருகக்கடவுளின் கைவேல்படுதலால், க்ரௌஞ்சமலையும் அரக்கர்படையும அழிந்து சூரனும் மாண்டு தேவேந்தரலோகமும் உய்ந்தது என்பது கருத்து.கிரௌஞ்ச மலையின்வரலாறு. கிரௌஞ்சன் என்னும் ஓர் அசுரன், தன்மாயையினால் மலைவடிவாகி,அநேகமாகிய சாதுஜநங்களையும் தேவர்களையும் வருத்திக்கொண்டிருந்தான், முருகக்கடவுளானவர் தன்கைவேலினால் சூரனுக்கிளைய தாருகனைக்கொன்றபோது இவனையும் இருகூறுசெய்தார் என்பது

4 ஓரவொட்டாரொன்றையுன்னவொட்டார்மலரிட்டுனதாள்
சேரவொட்டாரைவரசெய்வதென்யான்சென்றுதேவருய்யச்
சோரநிட்டூரனைச்சூரனைக்காருடலசோரிகக்கக்
கூரகட்டாரியிட்டோரிமைபபோதினிற்கொன்றவனே.

இ - ள். சென்று - போய், தேவர் உய்ய - தேவர்கள் பிழைக்க, சோரநிட்டூரனை - கள்வனாகிய நிஷ்ட்டூரனை, சூரனை - சூரபன்மனை, கார் உடல் - (அவனது) கருமையாகிய வுடம்பு, சோரிகக்க-உதிரத்தையுமிழும்படி, கூர - கூர்மையையுடைய, கட்டாரியிட்டு - வேற்படையினால், ஓர் இமைப்போதினில் - ஒரு இமைப்பொழுதில், கொன்றவனே - வதைத்தவனே, ஐவர் - (பொறிகளாகிய) ஐவர், ஒன்றை ஓரவொட்டார் - ஒன்றையுணரவொட்டார, உன்னவொட்டார் - நினைக்கவொட்டார், உனதாள் - உன்திருவடிகளில், மலர் இட்டு - மலர்களைத்தூவி, சேரவொட்டார்-அணுகவொட்டார், யான் செய்வது என் - (இதற்கு) நான் செய்யக்கடவது யாது. எ - று.

கட்டாரி - ஓர் ஆயுதவிசேடம். அது இங்கு வேலையுணர்த்திற்று. ஐவர் என்றது மெய், வாய், கண், மூக்கு, செவியென்பவற்றை. ஐவர், உன் திருவடியைவழிபடவொட்டாமல் என்னைவருத்து கின்றார்கள், இதற்கு யான் செய்யக் கடவது யாது என்பது கருத்து.

5. திருந்தப்புவனங்களீன்றபொற்பாவைதிருமுலைப்பா
லருந்திச்சரவணப்பூந்தொட்டிலேறியறுவர்கொங்கை
விரும்பிக்கடலழக்குன்றழச்சூரழவிம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே.

இ - ள். திருந்த - திருத்தமாக, புவனங்கள் ஈன்ற - உலகங்களைப் பெற்ற, பொன்பாவை - பொற்பிரதிமையையொத்த வுமாதேவியின், திரு முலைப்பால் அருந்தி - திருமுலைப்பாலுண்டு, சரவணம் - சரவணப்பொய் கையாகிய, பூந்தொட்டில் ஏறி-பூந்தொட்டிலில் ஏறி, அறுவர் கொங்கை விரும்பி - (கிருத்திகைமுதலிய) அறுவர் முலைகளையுண்ண இச்சித்து,கடல் அழ-கடலழவும், குன்று அழ - க்ரௌஞ்சமலையழவும், சூர அழ சூரனஅழ வும், விம்மியழும் - விம்மியழுத, குருந்தை - சிறுகுழவியை, குவலயம - உலகமானது, குறிஞ்சிக்கிழவன் என்று ஓதும் - குறிஞ்சிக்கிழவனென்று சொல்லா நிற்கும். எ - று.

அறுவர்-கார்த்திகைமுதலியோர். கடல்முதலியவை அழும்படி அழுத குழந்தையாகிய முருகக் கடவுளைக் குறிஞ்சிக்கிழவன் என்று உலகஞ் சொல்லும் என்பது கருத்து. குறிஞ்சிக்கிழவன் என்பதற்கு குறிஞ்சி நில த்து விருத்தன் எனவும்,குறிஞசி நிலத்துக்கு உரியோன் எனவும் பொருள் கொள்க குருத்துஎன்பது குருந்து எனமெலிததல் பெற்றது.

6. பெரும்பைம்புனத்தினுட்சிற்றேனலகாக்கின்றபேதைகொங்கை
விரும்புங்குமரனைமெய்யன்பினான்மெல்லமெல்லவுள்ள
வரும்புந்தனிப்பரமானந்தந்தித்தித்தறிந்தவன்றே
கரும்புந்துவர்த்துச்செந்தேனும்புளித்தறக்கைத்ததுவே.

இ - ள். பெரு - பெரிய, பை - பசுமையாகிய, புனததினுள்-புனத் தின்கண், சிற்றேனல் காக்கின்ற - சிறியதினைக் கொல்லைகளைக்காவல் செய்கின்ற, பேதை - பேதைப்பருவத்தையுடைய வள்ளிநாயகியின்,கொங் கை - தனங்களை, விரும்பும் - விரும்புகிற, குமரனை - முருகவேளை, மெய் யன்பினால் - உண்மையாகிய அன்பினால், மெல்ல மெல்ல உள்ள - பையப் பையநினைக்க, அரும்பும் - உண்டாகின்ற, தனி - ஒப்பற்ற, பரம ஆநந்தம்- மேலாகிய இன்பமானது, தித்தித்தறிந்த அன்றே - இனிக்கவுணர்ந்த அப்பொழுதே, கரும்பும் துவர்த்து - கருப்பஞ்சாறும் துவர்த்து, செந்தே னும் புளித்து - செந்தேனும் புளித்து, அறக்கைத்தது - மிகவுங் கசந்தது.

குமாரக்கடவுளை நினைத்த அளவில் நிரதிசயாநந்த முண்டாகி, கரும்பு முதலிய இன் சுவைகள் எனக்கு வெறுத்தற்குரியவாயின என்பது கருத்து.

7. சளத்திற்பிணிபட்டசட்டுக்கிரியைக்குட்டவிக்குமென்ற
னுளத்திற்ப்ரமத்தைத்தவிர்ப்பாயவுணருரத்துதிரக்
குளத்திற்குதித்துக்குளித்துக்களித்துக்குடித்துவெற்றிக்
களத்திற்செருக்கிக்கழுதாடவேறொட்டகாவலனே.

இ - ள். கழுது - அலகைகள், அவுணர் உரத்து - அரக்கர் மார்பினின்று மொழுகின, உதிரக்குளத்தில் குதித்து - உதிரக் குளத்திற்பாய்ந்து, குளித்து - மூழ்கி, களித்து - மகிழ்ந்து, குடித்து - பருகி, வெற்றிக்களத்தில் செருக்கி ஆட-வெற்றியையடைந்த போர்க்களத்தில் களித்து ஆடும்படி, வேல்தொட்ட-வேற்படையையேவிய, காவலனே - வேந்தனே, சளத்தில் பிணிபட்ட - துன்பத்தில் கட்டுப்பட்ட, சட்டுக்கிரியைகருள் - உடற்றொழிலில் அகப்பட்டு, தவிக்கும் - தவிக்கின்ற, என்றன் உள்ளத்தில் - என்மனத்திலுள்ள, ப்ரமத்தை-மயக்கத்தை, தவிரப்பாய்-நீக்கியருள்வாய். எ - று.

சட்டு - சட்டகம் என்பதன் சிதைவு. அலகைகள் அரக்கருடைய உதிரப்பொய்கையில் குளித்தாடும்படி வேல்விடுத்த குமரவேளே, உடற்பிணிப்பில் கட்டுப்பட்டுத் தவிக்கின்றஎன்னுள்ளத்தின மயக்கத்தை நீக்கியருளல் வேண்டுமென்பது கருத்து.

8. ஒளியில்விளைந்தவுயர்ஞானபூதரத்துச்சியின்மே
லளியில்விளைந்ததொரானந்தத்தேனையநாதியிலே
வெளியில்விளைந்தவெறும்பாழைப்பெற்றவெறுந்தனியைத்
தெளியவிளம்பியவாமுகமாறுடைத்தேசிகனே.

இ - ள். முகம்ஆறு உடைதேசிகன் - ஆறுமுகங்களையுடைய குருநாதன், ஒளியில்விளைந்த - ஒளியின்கண் உண்டாகிய, உயர் - உயர்ந்த, ஞானபூதரத்து உச்சியின்மேல் - ஞானமலையினுச்சியில், அளியில்விளைந்தது - கருணையில் உண்டானதாகிய, ஓர் ஆநந்தத்தேனை - ஒப்பற்ற இன்பத்தேனை, அநாதியிலே - முற்காலத்தில், வெளியில்விளைந்த-வெளியிலுண்டாகிய, வெறும்பாழை - சுத்தசூநியத்தை, பெற்ற - தன்னிடத்துக்கொண்டிருக்கின்ற, வெறுந்தனியை - சுத்த தனிப்பொருளை, தெளிய - தெளியும்படி, விளம்பிய ஆறு - சொன்னவிதம் (என்னவியப்புடைத்து). எ - று.

ஆறுமுகதேசிகன், உண்மைப் பொருளையெனக் கருள்செய்த விதமிருந்தவாறென்ன வியப்புடைத்து என்பது கருத்து. தேன், தனி என்பன ஒருபொருட் பன்மொழிகளாய் உண்மைப் பொருளையுணர்த்தின்றன.

**9.** தேனென்றுபாகென்றுவமிக்கொணாமொழித்தெய்வவள்ளி
கோனன்றெனக்குபதேசித்ததொன்றுண்டுகூறவற்றோ
வானன்றுகாலன்றுதீயன்றுநீரன்றுமண்ணுமன்று
தானன்றுநானன்றசரீரியன்றுசரீரியன்றே.

இ - ள். தேன்என்று - தேனென்றும், பாகுஎன்று - பாகென்றும், உவமிக்க ஒண்ணு - உவமிக்கக்கூடாத, மொழி - சொல்லையுடைய, தெய்வம் வள்ளிகோன் - தெய்விகமாகியவள்ளிமணாளன், அன்று-அந்நாளில், என்க்கு உபதேசித்தது ஒன்று உண்டு - எனக்குப்போதித்த தொரு பொருளுளது, கூறவற்றோ - (அது) சொல்லப்படும் தரத்ததோ, வான் அன்று - ஆகாயமல்ல, கால் அன்று-காற்றல்ல, தீ அன்று-நெருப்பல்ல, நீர் அன்று-நீரல்ல, மண்ணும் அன்று - மண்ணுமல்ல, தான் அன்று - தானல்ல, நான் அன்று - நானல்ல, அசரீரி அன்று - அசரீரியல்ல, சரீரி அன்று - சரீரி அல்ல. எ - று.

வள்ளிமணாளன் எனக்குபதேசித்த பொருள் ஒன்றுளது, அது ஆகாசமுதலிய பொருள்களன்று, அவற்றிற்கு மேலாகியதத்துவப்பொருள என்பது கருத்து.

**10.** சொல்லுகைக்கில்லையென்றெல்லாமிழந்துசும்மாவிருக்கு
மெல்லையுட்செல்லவெனைவிட்டவாவிகல்வேலனல்ல [வ்வாய்
கொல்லியைச்சேர்க்கின்றசொல்லியைக்கல்வரைகொவ்வைச்செ
வல்லியைப்புல்கின்றமால்வரைத்தோளண்ணலவல்லபமே.

இ - ள். இகல்வேலன் - வலியமைந்த வேற்படையையுடையவன், நல்லகொல்லியைச சோக்கின்ற சொல்லியை - நல்ல கொல்லிப்பண்ணைத் தழுவுகின்ற சொல்லையுடையவளை, கல்வரை - கல்லடர்ந்த குறிஞ்சி நிலத்திற்பிறந்த, கொவ்வைச் செவ்வாய்வல்லியை-கோவைககனிபோலும் செவந்தவாயையுடைய கொடிபோல்பவளை, புல்கின்ற - தழுவுகின்ற, மால் வரைத்தோள் - பெரியமலைபோலுந் தோள்களையுடைய, அண்ணல் - பெரியோனாகிய முருகக் கடவுளுடைய,' வல்லபம் - ஆற்றலை, சொல்லுகைக்கு இல்லை - சொல்லுதற்கு ஆற்றலில்லை யென்று, எல்லாம் இழந்து - எல்லாவற்றையுமிழந்து, சும்மா இருககும் எல்லையிலே - சும்மா இருத்தற்குரிய எல்லையின்கண், செல்ல - சென்று நிலைபெறும்படி, என்னைவிட்டவாறு- என்னைச் செலுத்தினவிதம் என்ன வியப்பு எ - று.

கொல்லி-ஓர்பண். சொல்லிவல்லி என்பது வள்ளிநாயகியை. முருகக் கடவுளின் ஆற்றலைப் புகழ்தற் கொல்லாதென்று சொல்லும் பொருளுமற்றுச் சும்மாவிருக்கு மெல்லையில் என்னை விடுத்த விதம் என்ன வியப்புடைத்து என்பது கருத்து.

11. குசைநெகிழாவெற்றிவேலோனவுணர்குடாகுழம்பக்
கசையிடுவாசிவிசைகொண்டவாகனபீலியின்கொத்
தசைபடுகாலபட்டசைந்ததுமேருவடியிடவெண்
டிசைவரைதூள்பட்டவத்தூளினவாரிதிடர்பட்டவே.[1]

இ - ள். வெற்றிவேலோன - வெற்றிவேலையுடைய வனுகியமுருகக் கடவுள, அவுணாகுடாகுழம்ப - தானவருடையகுடல்கலங்கும்படி, குசைநெகிழா - கடிவாளம் நழுவாத, கசையிடுவாசி - கவசமிடப்பட்ட குதிரையாகிய, விசைகொண்டவாகனம் - வேகங்கொண்ட வாகநமென்கிற மயிலின், பீலியின்கொதது - கலாபத்தொகுதி, அசை - அசைதலில், படு - உணடாகின்ற, காலபட்டு - காறறுப்பட்டு, மேரு அசைந்தது - மேருமலை சலித்தது, அடியிட - அடிபெயாததுவைக்க, எண்திசைவரை - அஷ்டதிக்குப்பர்வதங்களும, தூளபட்ட - துகள்பட்டன, அத்தூளின் - அந்தத்துகளினால், வாரி - சமுததிரஙகள், திடாபட்ட - மேடுபட்டன. எ - று.

குமரவேள் அரக்கரை யதஞ்செய்யப் போம் போது அவனது வாகநமாகிய மயிற்றோகைக்காறறினால மேருமுதலிய பொருள்கள் நிலை கலங்கின என்பது கருத்து.

12. படைபட்டவேலவன்பால்வந்தவாகைப்பதாகையென்னுந்
தடைபட்டசேவல்சிறகடிக்கொள்ளச்சலதிகிழிந்
துடைபட்டதண்டகடாகமுதிர்நததுடுப்படல
மிடைபட்டகுன்றமுமாமேருவெற்புமிடிபட்டவே.

இ - ள். படைபட்ட வேலவன் பால் வந்த - வேலாயுதத்தையுடையவனுகிய முருகக்கடவுளிடத்து வந்த, வாகைப்பதாகை என்னும் - வெற்றிகொடியென்கிற, தடைபட்ட சேவல் - (அவனால்) தடுக்கப்பட்ட சேவலானது, சிறகு அடிககொள்ள - சிறகையடித்துக் கொள்ள, சலதிகிழிந்து - சமுத்திரங்கள் கிழிபட்டு, அண்ட கடாகம் உடைபட்டது - அண்டமுகடு உடைந்தது, உடு படலம் உதிர்ந்தது - நட்சத்திரக் கூட்டம் உதிர்ந்தது, இடைபட்ட குன்றமும் - நடுவேயகப்பட்ட மலைகளும், மாமேருவெற்பும் - மகாமேருகிரியும், இடிபட்ட - இடிந்தன. எ - று.

குமரவேளின் வெற்றிக்கொடியாகிய சேவல் சிறகடித்துக் கொள்ள வுண்டாகிய காற்றினால் கடல் முதலாயின தத்தம் நிலை கலங்கினவென்பது கருத்து.

13. ஒருவரைப்பங்கிலுடையாள்குமாரனுடைமணிசேர்
திருவரைக்கிங்கிணியோசைபடத்திடுக்கிட்டரக்கர்

வெருவரத்திக்குச்செவிபெட்டெட்டுவெற்புங்கனகப்
பருவரைக்குன்றுமதிர்ந்தனதேவர்பயங்கெட்டதே.

இ-ள். ஒருவனை - ஒப்பற்றவராகிய சிவபெருமானை, பங்கில்உடையாள் - பாகத்தில் உடையவளாகிய உமாதேவிக்கு, குமாரன் - புதல்வனுகிய முருகவேளின், உடைமணிசேர் - உடைமணியோடு கூடிய, திருவரைக் கிங்கிணி - திருவரையிற் கட்டப்பட்ட கிங்கிணியின், ஓசைபட - ஓசையுண்டாகவே, அரக்கர் திடுக்கிட்டு வெருவர - அரக்கர் திடுக்கிட்டு அஞ்ச, திக்கு செவிபெட்டு - திசைகள் செவிபெட்டு, எட்டுவெற்பும் - அஷ்டகுலகிரிகளும், கனகப் பருவரைக்குன்றும் - பெரிய பொன்மலையும், அதிர்ந்தன - அதிர்ந்துபோயின, தேவர் பயம் கெட்டது-தேவர்களுடைய பயம் ஒழிந்தது. எ - று.

உடைமணி - அரையிற் கட்டுவதோர்மணி, இது, "உடைமணிகட்டிச்சிறு தேருருட்டி" என்னுந் திருக்கோவையாரினுங் காண்க. குமரவேளின் திருவரையிற் கட்டிய கிங்கிணியோசை கேட்டளவில், அரக்கர் முதலாயினோர் அஞ்சிக்கலங்கினர், தேவர் பயமழிந்தது என்பது கருத்து. குலகிரிகள் எட்டாவன - கைலை, இமயம், மந்தரம, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பன.

14. குப்பாசவாழ்க்கையுட்கூத்தாடுமைவரிற்கொட்படைந்த
விப்பாசநெஞ்சனையீடேற்றுவாயிருநான்குவெற்பு
மப்பாதியாய்விழமேருங்குலுங்கவிண்ணோருமுய்யச்
சப்பாணிகொட்டியகையாறிரண்டுடைச்சண்முகனே.

இ-ள். கு - மண்ணுலகத்தில், பாசவாழ்க்கையுள் - பாசவாழக்கையில், கூத்துஆடும் - கூத்தாடுகின்ற, ஐவரின் - ஐவரால், கொட்பு அடைந்த - சுழற்சியையடைந்த, இப்பாசநெஞ்சனை-இந்தப்பாசமனத்தையுடையேனை, ஈடேற்றுவாய் - ஈடேற்றக்கடவாய், இருநான்கு வெற்பும் - அஷ்டகுலகிரிகளும், அப்பாதியாய்விழ - அந்தப்பாதிபங்குகளாய் விழவும், மேரும் குலுங்க - மேருமலையும் குலுங்கவும், விண்ணோரும் உய்ய - தேவரும் பிழைக்கவும், சப்பாணி கொட்டிய - சப்பாணிகொட்டின, கை ஆறிரண்டு உடை - பன்னிரண்டுகைகளையுடைய, சண்முகனே - ஆறுமுகனே. எ-று

அஷ்ட குலகிரிகள் முதலாயின குலுங்கவும் தேவர்உய்யவும் சப்பாணி கொட்டிய பன்னிருகையனே, இந்த ப்ரபஞ்சவாழ்க்கையிற் சிக்கிவருந்துகின்ற என்னையீடேற்ற வேண்டும் என்பது கருத்து. ஈடேற்றல் - கடைத்தேறச்செய்தல். அன்றிப் பெருமையடையச் செய்தல் என்றலுமாம்.

**15.** தாவடியோட்டுமயிலிலுந்தேவர்தலையிலுமென்
பாவடியேட்டிலும்பட்டதன்றோபடிமாவலிபால்
மூவடிகேட்டன்றுமூதண்டகூடமுகடுமுட்டச்
சேவடிநீட்டும்பெருமாண்மருகன்றன்சிற்றடியே.

இ - ள். மாவலிபால் - மகாபலியினிடத்து, அன்று - அந்நாளில், மூவடிபடிகேட்டு - மூன்றடிமண்கேட்டு, (அவன் இசைந்தபிறகு) மூது - பழைய, அண்ட கூடமுகடுமுட்ட - அண்ட கூடத்தின் முகட்டிற்பட, சேவடி நீட்டும் பெருமாள் - திருவடியை நீட்டின திருமாலின், மருகன் தன் சிற்றடி - மருகனாகிய முருகவேளின் சிறிய திருவடி, தாவடி ஓட்டும் மயிலிலும் - (அவன்) போரிற் செலுத்துகின்ற மயிலின்மீதும், தேவர்தலையிலும் - தேவர்களுடைய சிரசிலும், என்பா - என்பாடல்கள், வடி ஏட்டிலும்-எழுதப்பட்ட ஏட்டிலும், பட்டது அன்றோ-பட்டதல்லவா. எ - று.

முருகக்கடவுளின் சிறியதிருவடியானது மயிலின் மீதும் தேவர் தலையின் மீதும் என்பாட்டிலும் பட்ட தன்றோ வென்பது கருத்து.

**16.** தடுங்கோண்மனத்தைவிடுங்கோள்வெகுளியைத்தானமென்று
இடுங்கோளிருந்தபடியிருங்கோளெழுபாருமுய்யக் [ம்
கொடுங்கோபச்சூருடன்குன்றந்திறக்கத்துளைக்கவைவேல்
விடுங்கோனருள்வந்துதானேயுமக்குவெளிப்படுமே.

இ - ள். மனத்தை தடுங்கோள்-மனத்தை (விஷயங்களில் செல்லவொட்டாமல்) தடைசெய்யுங்கள், வெகுளியை விடுங்கோள் - கோபத்தை விடுங்கள், என்றும், எப்பொழுதும், தானம் இடுங்கோள் - தானஞ்செய்யுங்கள், இருந்தபடியிருங்கோள் - சும்மா இருங்கள், (இப்படிசெய்வீர்களானால்) எழுபாரும் உய்ய - ஏழுலகங்களும் பிழைக்கும்படி, கொடு கோபம் - கொடிய கோபத்தையுடைய, சூருடன் - சூரனுடன், குன்றம் திறக்க - கிரௌஞ்சகிரியானது பிளவுபடும்படி, துளைக்க - தொளைக்கும் பொருட்டு, வைவேல் - கூரியவேற்படையை, விடும் - விட்ட, கோன் - இறைவனாகிய முருகக்கடவுளது, அருள் - திருவருளானது, தானே வந்து உமக்கு வெளிப்படும்-தானேவந்து உமக்கு வெளிப்படத் தோன்றும். எ-று.

உலகத்தாரே, நீங்கள் மனத்தைவிடயங்களிற் செல்லாமல் தடைசெய்யுங்கள், கோவத்தைவிடுங்கள், தானம்பண்ணுங்கள், இருந்தபடியிருங்கள், இப்படி செய்வீர்களாயின், குமாரக்கடவுளின் திருவருள் உங்களுக்கு எளிதிற்கிடைக்கு மென்பது கருத்து. இருந்தபடியிருத்தலாவது திருவருளில் வேற்றுமையின்றிக் கலந்திருத்தல். இதனைச் சும்மாவிருத்தல் என்பர்.

17. வேதாகமசித்ரவேலாயுதன்வெட்சிபூத்ததணடைப்
பாதாரவிந்தமரணாகவல லும்பக லுமிலலாச்
சூதானதற்றவெளிக்கேயொளித்துச்சும்மாவிருக்கப்
போதாயினிமனமேதெரியாதொருபூதர்க்குமே.

இ - ள். மனமே - நெஞ்சே, வேதாகமசித்ரம் - வேதாகமங்களால் பிரதிபாதிக்கப்படுகின்ற ஆச்சரிய குணஙகளையுடைய, வேலாயுதன் - முருகவேளினது, வெட்சிபூத்த - வெட்சி மாலைபூதத, தண்டை - தணடையை யணிந்த, பாதஅரவிநதம் - திருவடித்தாமரையை, அரண் ஆக - நமக்குக் காவலாகக்கொண்டு, அல் லும் பக லும் இல்லா-இரவும் பகலுமற்ற, சூதானது அற்ற - குற்றமற்ற, வெளிக்கே ஒளிதது - பரவெளியில் மறைந்து, சும்மா இருக்க - சும்மா இருத்தற்கு, இனி போதாய் - இனிவருவாயாக, ஒரு பூதர்க்கும் தெரியாது - (இந்தவுபாயம்) ஒரு பூதசரீரிகளுககும தெரியாது.

மனமே, முருகக்கடவுளின் திருவடியை நமக்கு ரக்ஷகமாகக் கொண்டு, சதோதயமாய் விளங்கு மிடத்தில் சுமமாவிருத்தற் பொருட்டு வருவாயாக,இது ஒருவருக்கும் உணரவொண்ணாதவுபாய மாம் என்பது கருத்து.

18. வையிற்கதிர்வடிவேலோனைவாழ்த்திவறிஞர்க்கென்றும்
நொய்யிற்பிளவளவேனும்பகிர்மின்களுங்கட்கிங்ஙன்
வெய்யிற்கொதுங்கவுதவாவுடம்பின்வெறுநிழல்போல்
கையிற்பொருளுமுதவாதுகாணுங்கடைவழிக்கே.

இ - ள். வையின் - கூர்மையோடு, கதிர் - ஒளியையுமுடைய,வடி- வடிக்கப்பட்ட, வேலோனை - வேலாயுதனை, வாழ்த்தி - துதித்து, வறிஞர்க்கு - வறியோருக்கு, என்றும் - எப்பொழுதும், நொய்யின்பிளவு அளவு எனும் - நொய்யின் பிளப்பளவாயினும, பகிர்மின் - பகிர்ந்திடுங்கள், (ஏனெனின்) நுங்கட்கு - உங்களுக்கு, இங்ஙன் - இவ்விடத்து, வெய்யிற்கு ஒதுங்க உதவா-வெயிலுக் கொதுங்கி நிற்கவு முதவாத, உடம்பின் வெறு நிழல்போல் - சரீரத்தின் பயனற்ற நிழல்போல, நும் கடைவழிக்கு-உமது கடைப்பிரயாணத்துக்கு, கையிலபொருளும் உதவாது - உங்கள்கையிலுள்ளபொருளும் துணைசெய்யாது. எ - று.

கடைவழி - முடிவாகிய பிரயாணம். (மரணப்ரயாணம்), உலகத்தார், பொருள்முதலிய யாவும் நீங்களிறக்கும்போது கூடவராதன ஆதலால், குமரவேளைவாழ்த்தி, எளியோர்க்கு உதவிசெய்யுங்கள் என்பது கருத்து. கடவுளை வாழ்த்தாதுசெய்யும் அறம், அறமாகாதாதலின் "வையிற்கதிர்வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்னும் நொய்யிற்பிளவளவேனும் பகிர்மின்கள்" என்றார்.

19. சொன்னகிரௌஞ்சகிரியூடுருவத்துளைத்தவைவேல்
மன்னகடம்பின்மலர்மாலைமார்பமௌனத்தையுற்று
நின்னையுணர்ந்துணர்ந்தெல்லாமொருங்கியநிர்க்குணம்பூண்
டென்னைமறந்திருந்தேனிறந்தேவிட்டதிவ்வுடம்பே.

இ - ள். சொன்ன - சொல்லப்பட்ட, கிரௌஞ்சகிரி - க்ரௌஞ்சகிரியின், ஊடுஉருவ - இடையிற்பட்டுருவிச்செல்ல, துளைத்த - தொளைசெய்த, வைவேல் - கூரியவேலையேந்திய, மன்ன — இறைவனே, கடம்பின் மலர்மாலைமார்ப - கடப்பமலாமாலையை யணிந்த மார்பையுடையவனே, மௌனத்தைஉற்று - மௌனநிலையையடைந்து, நின்னைஉணர்ந்துஉணர்ந்து - உன்னை அறிந்து அறிந்து, எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம்பூண்டு-எல்லாமடங்கிய குணராஹித்யத்தைப் பூண்டு, என்னைமறந்து இருந்தேன்-என்னை மறந்திருந்தேன், இவ்வுடம்பு இறந்தேவிட்டது - இந்தச் சரீரவாசனை அற்றேயொழிந்தது. எ - று.

என்னை மறந்திருந்தேன் என்றது தற்போதமற்றிருத்தலை. கடவுளை உணர்ந்தார்க்குப்பின் உணர்தற்குக்கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலால் "எல்லாம் ஒருங்கிய" என்றுா. இதனை "உணர்ந்தார்க்குணர்வரியோன்" என்னும் திருக்கோவையாருரையினும் காண்க. குணராஹித்யம் - முக்குணவியல்பற்றிருத்தல். சொன்ன கிரௌஞ்சகிரி - பொன்மயமாகிய கிரௌஞ்சமலை எனினும் பொருந்தும. குமரவேளே, மௌனநிலையையடைந்து, உன்னையறிந்து, என்னைமறந்திருநதேன், இருந்தளவில், இநதச் சரீரவாசனை பற்றற்றுப் போயிற்று என்பது கருத்து.

20. கோழிக்கொடியனடிபணியாமற்குவலயத்தே
வாழக்கருதுமதியிலிகாளுங்கள்வல்வினைநோய்
ஊழிப்பெருவலியுண்ணவொட்டாதுங்களத்தமெல்லாம்
ஆழப்புதைத்துவைத்தால்வருமோநும்மடிப்பிறகே.

இ - ள். கோழிக்கொடியன் - சேவற்கொடியை யுடையவனாகிய முருகவேளின், அடிபணியாமல் - திருவடியை வணங்காமல், குவலயத்தே வாழக்கருதும் - பூமண்டலத்தில் வாழநினைக்கிற, மதியிலிகாள் - அறிவிலிகளே, உங்கள் வல்வினைநோய் - உங்களுடைய வலிய வினைகள் காரணமாக வுண்டாகிய பிணிகளாகிய, ஊழி-யுகாந்தத்தின், பெருவலி - மிக்கவலியானது, உங்கள் அத்தம் எல்லாம் - உஙகள் பொருள்களையெல்லாம், உண்ணவொட்டாது - (உங்களை) அநுபவிக்கவொட்டாது, (அப்பொருள்களை) ஆழப்புதைத்துவைத்தால் - ஆழமாகப்புதைத்துவைத்தால், (அவை)

நும்அடி பிறகே வருமோ - உங்கள் காலின்பின்னே தொடர்ந்துவருமோ. எ - று.

முருகக்கடவுளின் திருவடியை வணங்காமல், உலகவாழ்க்கையில் மயங்கிக்கிடக்கின்ற அறிவிலிகளே, உங்கள் கைப்பொருள்முதலியவற்றை உங்கள் ஊழானது உங்களை யநுபவிக்க வொட்டாது, அவைகளை நிலததிற் புதைத்துவைத்தால், அவைநீங்களிறக்குமபோது கூடவருமோ வென்பது கருத்து.

**21.** மரணப்ரமாதநமக்கில்லையாமென்றும்வாய்த்ததுணை
கிரணக்கலாபியும்வேலுமுண்டேகிங்கிணிமுகுள
சரணப்ரதாபசசிதேவிமாங்கல்யதந்துரக்ஷா
பரணக்ருபாகரஞானகரசுரபாஸ்கரனே.

இ - ள். கிங்கிணி - சதங்கையணிந்த், முகுளம் - (உடனேவிரியத்தக்க) பேரரும்புகள் சாத்தப்பெற்ற, சரணப்ரதாப - திருவடிப்ரதாபத்தை யுடையவனே, சசிதேவி - இந்திராணியின, மாங்கல்யதநது-மங்கலநாணே, ரக்ஷஆபரண - காததலாகிய ஆபரணததைப் பூணடவனே, க்ருபாகர - கருணாகரனே, ஞானஆகர - ஞானத்துக்குப பிறப்பிடமானவனே, சுரபாஸ்கரனே - தேவர்களுள் சூரியனே, கிரணம் - ஒளியுள்ள, கலாபியும் - மயிலும், வேலும் - வேலாயுதமும், என்றும் வாய்தததுணை உண்டு - எக்காலத்தும வாய்ப்பாகிய துணையாக எங்களுக்குண்டு, (ஆகையால்) மரணப்ரமாதம் - மரணமூர்ச்சையானது, நமக்கு இலலைஆம் - எமக்கில்லையாகும்.

கலாபி - கலாபத்தையுடையது. கலாபம்-தோகை. கிங்கிணிமுகுள சரணம் என்பதற்கு,கிங்கிணிவாய்போல மெல்லமலர்ந்த தாமரைமலர்போலும் திருவடியென்றலுமாம். அரக்கரால் இந்திரன் இறந்தால் சசிதேவி மஙகல நாண் இழககவேணடிவரும், அப்படி நேரிடாமல் அரக்கரைவதைத்து இந்திரனை ரக்ஷித்ததனுல், "சசிதேவி மாங்கல்யதந்து ரக்ஷாபரண" என்றார். முருகவேளே, உன்வேலுமயிலும் எமக்குத் துணையுண்டாதலால், மரணமூர்ச்சை யெமக்கில்லையென்பது கருத்து.

**22.** மொய்தாரணிகுழல்வள்ளியைவேட்டவன்முத்தமிழால்
வைதாரையுமங்குவாழவைப்போன்வெய்யவாரணமபோல
கைதானிருபதுடையான்றலைபத்துங்கத்தரிக்க
எய்தான்மருகனுமையாள்பயந்தவிலஞ்சியமே

இ - ள். மொய் - நெருங்கிய, தார் அணிகுழல்வள்ளியை வேட்டவன் - மலர்மாலையையணிந்த கூந்தலையுடைய வள்ளிநாயகியை விரும்பின

வனும, முத்தமிழால் வைதாரையும் - முத்தமிழ்ப்பாடல்களால் வைதவரையும், அங்கு வாழவைப்போன் - அம்முத்தியுலகில் வாழவைப்போனும், வெய்யவாரணம்போல் - கொடிய யானைபோல, கைஇருபது உடையான்தலை பததும் - இருபது கைகளையுடையவனாகிய ராவணனுடைய பத்துத்தலைகளையும், கத்தரிகக - சேதிக்கும்படி, எய்தான் - அமபெய்தவனாகிய திருமாலுக்கு, மருகன் - மருகனும், (யாரெனின்) உமையாள் பயநத இலஞ்சியமே - உமாதேவியீனற களஞ்சியம்போல் பவனாகிய முருகக்கடவுளே.

வாரணம் கடலெனக்கொண்டு, கடல்போன்ற நிறமுள்ளவன் என்றலுமாம். வள்ளியைவேட்டல்முதலாயின செய்தவன் உமையாள் புதல்வனாகிய முருகவேளேயென்பது கருத்து முருகக்கடவுள சர்வகலாநிபுணர் ஆதலின தம்மை வைதாரையும் கலைத்திறததுக்கிணஙக வாழவைப்பார் எனறற்கு "முததமிழால் வைதாரையு மங்குவாழவைபபோன்" என்றார்.

**23.** தெய்வத்திருமலைச்செங்கோட்டில்வாழுஞ்செழுஞ்சுடரே
வைவைத்தவேற்படைவானவனேமறவேனுனைநான்
ஐவர்க்கிடமபெறக்காலிரண்டோட்டியததிலிரண்டு
கைவைத்தவீடுகுலையுமுன்னேவந்துகாத்தருளே.

இ - ள். தெய்வத்திருமலை - தெய்வததன்மையமைந்த திருமலையாகிய, செங்கோட்டில் - திருசசெங்கோட்டில, வாழும்-வாழ்கின்ற, செழுஞ்சுடரே - செழுமையாகிய சோதியே, வைவைததவேல்படை வானவனே - கூர்மையமைந்த வேற்படையையுடைய தேவனே, உன்னைநான்மறவேன் - உன்னைநான் மறக்கமாட்டேன, ஐவாக்கு இடம்பெற - ஐவர்க்கு இடமுண்டாக, கால் இரண்டு ஓட்டி - இரண்டுகால்களை நிறுத்தி, அதில் - அதனிடத்து, இரண்டு கைவைத்த - இரண்டுகையமைத்த, வீடு - (இந்தச் சரீரமாகிய)வீடு, குலையுமுன்னே - கலைவதற்குமுன்பே, வந்துகாத்து அருள் - வந்து ரக்ஷித்தருள்வாயாக எ - று.

முருகவேளே, இந்தச்சரீரம் விழுமுன்னமே வந்து என்னை ரக்ஷித்தருள வேண்டும் என்பது கருத்து. ஐவா - ஐம்பொறிகள். வீட்டுக்குக்காலும் கையும்போல உடம்புக்கும் காலும் கையும உள வாதலால் உடம்பையும் வீடென்றார். வீட்டுக்குக் கால் தூண், கை கொடுங்கை. இருகால் என்றது இரட்டைத்தூணை.

**24.** கின்னங்குறித்தடியேன்செவிநீயன்றுகேட்கச்சொன்ன
குன்னங்குறிச்சிவெளியாக்கிவிட்டதுகோடுகுழல்
சின்னங்குறிக்கக்குறிஞ்சிக்கிழவர்சிறுமிதனை
முன்னங்குறிச்சியிற்சென்றுகல்யாணமுயன்றவனே

இ - ள் கோடுகுழல் சின்னம்குறிக்க - ஊதுகொம்பும் வேய்ங்குழலும் திருச்சின்னமும் ஊத, குறிஞ்சிக்கிழவர் - குறிஞ்சிநிலத்துக்கு உரியவராகிய குறவரது, சிறுமிதன்னை - புதல்வியாகிய வள்ளிநாயகியை, முன்னம் - முற்காலத்தில், குறிச்சியில்சென்று - குறிஞ்சிநிலத்தூரிற்சென்று, கல்யாணம் முயன்றவனே - விவாகஞ்செய்ய முயன்றவனே, இன்னம்குறித்து - (என்) துயரத்தை நின் திருவுளத்தடைத்து, (அதை நீக்கும்பொருட்டு) அடியேன்செவி - அடியேன் காதில், கேட்க - கேட்கும்படி, நீ அன்று சொன்ன - நீஅன்றுசொல்லிய, குன்னம் - இரகசியம், குறிச்சி வெளியாக்கிவிட்டது - குறிஞ்சியாகிய இந்நிலத்தில் தன்னை வெளிப்படுத்திவிட்டது. எ - று.

இரகசியம் என்றது மெய்ஞ்ஞான உபதேசம். தன்னைப்பெற்ற என்னையும் மெய்ஞ்ஞானி ஆக்கிவிட்டது என்பதுபொருள். வெளியாக்கிவிட்டது என்பதற்கு ஒளியுருவாகச்செய்தது என்னலுமாம். வெளி - ஒளி. குறிஞ்சிநிலத்திற்சென்று வள்ளிநாயகியைக் கடிமணம்புணர்ந்த முருகக்கடவுளே, எனது பிறப்பிறப்பாலாகிய துன்பங்களை நீக்கும்படி திருவுளமபறறி, நீ என்செவியில் உபதேசித்த மெய்ஞ்ஞான உபதேசமானது என்னைத் தன் வடிவாக்கிக்கொண்டதென்பது கருதது,

25. தண்டாயுதமுந்திரிசூலமும்விழத்தாக்கியுன்னைத்
திண்டாடவெட்டிவிழவிடுவேன்செந்தில்வேலனுக்குத்
தொண்டாகியவென்னவிரோதஞானச்சுடர்வடிவாள்
கண்டாயடாவந்தகாவந்துபார்சற்றென்கைக்கெட்டவே.

இ - ள். அந்தகா - யமனே, செந்தில் வேலனுக்கு - திருச்செந்தில் முருகவேளுக்கு, தொண்டு ஆகிய - அடிமையாகிய, என் அவிரோதஞானம் - என் அவிரோதஞானமாகிய, சுடர்வடிவாள் - ஒளியுள்ள வடித்த வாளை, கண்டாயடா-பார்த்தாயேடா, என்கைக்கு சற்று எட்ட - என் கைக்குச் சிறிது எட்டும்படி, வந்துபார்-வந்துபாராய், தண்டாயுதமும்-கதாயுதமும்-திரிசூலமும் - முத்தலைச்சூலமும், விழ - (உன்கையினின்றும்கீழே) விழும்படி, உன்னைதாக்கி - உன்னைமோதி, திண்டாடவெட்டி - வலியழியும்படி வெட்டி, விழவிடுவேன் - உன்னைவிழுத்துவேன் எ - று.

முருகவேளின் திருத்தொண்டுபூண்ட இறுமாப்பினால் இங்ஙனம் கூறுவாராயினர் "இறுமாந்திருப்பன் கொல்லோ, ஈசன்பல்கணத்தெண்ணப்பட்டுச், சிறுமானேந்தி தன்சேவடிக் கீழ்ச்சென்றங் கிறுமாந்திருப்பன் கொல்லோ" எனமேலோர்கூறலுங்காண்க. அவிரோதம்-விரோதமின்மை. அவிரோதஞானமாவதுதடையற்ற ஞானம். தடை அஞ்ஞானம், சந்தேகம், வி

பரீதம்எனமூவகைப்படும்.அஞ்ஞானம்-சாராசாரவிவேகமின்மை.சந்தேகம்-ஐயம்,அது குற்றியோமகனோ என்பது.விபரீதம்-திரிபுணர்ச்சி,அது பழுதையைப்பாம் பென்பது,இம்மூவகையாகியதடைகளோடு கூடியஞானம் பந்தநீக்கத்துக் கேதுவாகாமையால், அவிரோதஞானச் சுடர்வடிவாள் என்றார். "தடைகள்யாவெனினஞ்ஞானஞ் சந்தேகம்விபரீதங்கள், படர்செயுமிந்தமூன்றும் பலசன்மப் பழக்கத்தாலே, உடனுடன்வரும் வந்தக்காலுயர்ஞானங் கெடுமிவற்றைத், திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே" என்றார் பிறரும். "ஞானவாளேந்துமையர்" எனத்திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளலுங்காண்க. இயமனே, ஞானவாள் என்கையது, நீ யெனமீது வந்தால்,நீதோல்வியடைவா யென்பது கருத்து.

26. நீலச்சிகண்டியிலேறுமபிரானெந்தநேரத்திலும்
கோலக்குறத்தியுடன்வருவான்குருநாதன்சொன்ன
சீலத்தைமெள்ளத்தெளிந்தறிவார்சிவயோகிகளே
காலத்தைவென்றிருப்பாரமரிப்பார்வெறுங்கர்மிகளே

இ - ள். நீலச்சிகண்டியில் - நீலநிறமுள்ளமயிலின்மேல், ஏறும்பிரான் - ஏறுகின்ற பெருமானும், எந்தநேரத்திலும் - எந்தக்காலத்திலும், கோலக்குறத்தியுடன் வருவான் - அழகையுடைய குறச்சிறுமியோடு கூடிவருபவனும் ஆகிய, குருநாதன் சொன்ன-குருநாதன் சொல்லிய,சீலத்தை-ஒழுக்கத்தை, மெள்ளத்தெளிந்து இருப்பார் - மெல்லத்தேறியிருப்பவர்களாகிய, சிவயோகிகளே - சிவயோகிகளே, காலத்தை வென்று இருப்பார்-காலதத்துவத்தை ஜெயித்திருப்பார்கள், வெறுங்கர்மிகள்-வெறுமையாகிய கர்மிகள், மரிப்பார் - மரணமடைவார்கள். எ - று.

குருநாதன் சொன்ன சீலம் ஒருமொழி. இதுமெல்லத்தெளிந்துணர்வார்க்கன்றிப்பயன் படாதென்றற்கு, "குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத்தெளிந்தறிவார்" என்றும், இவரேகாலதத்து வத்தைவெல்லற்குரியர் என்றற்கு, தெளிந்துணர்வார் சிவயோகிகளே காலத்தை வென்றிருப்பார் என்றும், மற்றையர்க்குக் கூடாதென்றற்கு, "மரிப்பார் வெறுங்கர்மிகள்"என்றும் கூறினர். காலதத்துவத்தை வெல்லுதலாவது மரணமடையாதிருத்தல். கர்மிகள் என்றது தீவினையாளரை.சிகண்டம்-தோகை,அதையுடையதாதலால் மயிலைச்சிகண்டியென்றார்.முருகவேள் சொன்ன அர்த்தமுணர்ந்தார் இறவார், மற்றையா இறப்பர் எனபது கருத்து.

27. ஓலையுந்தூதருங்கண்டுதிண்டாடலொழித்தெனக்குக்
காலையுமாலையுமுன்னிற்குமேகந்தவேண்மருங்கில்
சேலையுங்கட்டியசீராவுங்கையிற்சிவந்தசெச்சை
மாலையுஞ்சேவற்பதாகையுந்தோகையும்வாகையுமே.

இ - ள். கந்தவேள் - முருகவேளின், மருங்கில்சேலையும் - திருவரையிற் கட்டிய ஆடையும், கட்டிய சீராவும் - அதன்மேலணிந்த கவசமும், கையில் - தோளிலணிந்த, செவந்தசெச்சைமாலையும் - செவந்தவெட்சிமலர்மாலையும், சேவல்பதாகையும் - கோழிக்கொடியும, தோகையும் - மயிலும், வாகையும் - வெற்றிமாலையும, எனக்கு - அடியேனுக்கு, ஓலையும் தூதரும் கண்டு - ஓலையையும் தூதுவரையும்பார்த்து, திண்டாடல் ஒழித்து - வலியழிதலைக்கெடுத்து, காலையும மாலையும் - காலையிலும் மாலையிலும, முன்னிற்கும் - எனக்கு எதிரேநிற்கும். எ - று.

கை இவ்விடத்துத் தோளுக்காயிற்று. முருகக் கடவுளின் திருவிடையாடைமுதலியனஎந்நேரமும் எனக்கெதிரேதோனறுவன வாதலால் இனி இயமனுக்குயான் அஞ்சவேண்டுவதில்லை யென்பது கருத்து. "சங்கங்களங் கழனிக்கரை சேர்செந்திற்றங்கின நஞ், சங்கங்களங்கர நண்ணரன்சேயெய்தச் சார்ந்தனஞ்சற், சங்கங்களங்கனியை நிகாதண்ட தரற்கினிய, சங்கங்களங்கொன நின்ற யாங்கணெஞ்சங்கனைந்தே" என்றார் பிறரும்.

௨௮. வேலேவிளக்குகையான்செய்யதாளினில்வீழ்ந்திறைஞ்சி
மாலேகொளவிங்ஙன்காண்பதல்லால்மனவாக்குச்செய
லாலேயடைதற்கரிதாயருவுருவாகியொன்று
போலே யிருக்கும் பொருளை யெவ்வாறு புகல்வதுவே.

இ - ள். வேலே விளக்குகையான் - வேற்படையையே விளங்கப் பண்ணுங்கையையுடையவனது, செய்யதாளினில் வீழ்ந்து இறைஞ்சி - சேவடியில் வீழ்ந்துவணங்கி, மாலேகொள்ள - அன்புமிக, இங்ஙன் காண்பது அல்லால்-இவ்விடத்துக் காண்பதல்லது, மனவாக்குச்செயலாலே - மனம்வாக்கு காயம் என்பவற்றின் றொழில்களால், அடைதற்கு அரிது ஆய் - அடைதற் கரியதாகி, அருஉருஆகி - அருவமும் உருவமுமாகி, ஒன்று போலே யிருக்கும்பொருளை - ஒன்றுபோலிருக்கும் பொருளை, எவ்வாறு. புகல்வது - எந்தவிதம் சொல்லுவது. எ - று.

கையின் ஒளிக்குவேலொளிமழுங்கு மென்பார் "வேலேவிளக்குகையான்" என்றார். முருகக் கடவுளின் திருவடியையடைந்தாலன்றிமனோவாக்குக் காயங்களாகிய முக்கரணங்களுக்கு மெட்டாத பொருளைக்காணுதல் கூடாதென்பது கருத்து.

௨௯. கடத்திற்குறத்திபிரானருளாற்கலங்காதசித்தத்
திடத்திற்புணையெனயான்கடந்தேன்சித்ரமாதரல்குல்
படத்திற்கழுத்திற்பழுத்தசெவ்வாயிற்பணையிலுந்தித்
தடத்திற்றனத்திற்கிடக்கும்வெங்காமசமுத்திரமே.

இ - ள். சித்ரம் - சித்திரித்தாற்போன்ற, மாதர் - மாதர்களுடைய, அல்குல் படத்தில் - பாம்பின்படம்போன்ற அல்குலினும், கழுத்தில் - கழுத்திலும், பழுத்த செவ்வாயில் - பழுத்தசெவ்வாயினும், பணையில் - மூங்கில்போன்ற தோள்களினும், உந்திதடத்தில் - நாபீப்ரதேசத்திலும், தனத்தில் - கொங்கைகளினும், கிடக்கும் - தங்குகிற, வெம்காமசமுத்திரம் - கொடிய காமமாகியகடலை, கடத்தில் குறத்தி - குறிஞ்சிநிலத்திலுள்ள குறச்சிறுமியாகிய வள்ளிநாயகிக்கு, பிரான் - பெருமானாகிய முருகக்கடவுளின், அருளால் - கருணையால், கலங்காதசித்தம்திடத்தின் - கலங்காத மனோத்ருடத்தை, புணைஎன - மரக்கலமாகக்கொண்டு, யான்கடந்தேன் - நான் தாண்டினேன். எ - று.

மாதர்மயக்கமாகிய கடலை முருகவேளின் திருவருளால் உண்டாகிய மனோதிரமாகிய மரக்கலத்தைக் கொண்டு கடந்து முத்திக்கரையேறினேனென்பது கருத்து.

**30.** பாலென்பதுமொழிபஞ்சென்பதுபதம்பாவையர்கண்
சேலென்பதாகத்திரிகின்றநீசெந்திலோன்றிருக்கை
வேலென்கிலைகொற்றமயூரமென்கிலைவெட்சித்தண்டைக்
காலென்கிலைமனமேயெங்ஙனேமுத்திகாண்பதுவே.

இ - ள். மனமே - நெஞ்சமே, பாவையர் மொழி பால் என்பது ஆக - மாதர்களுடைய சொல்லானது பாலென்றும், பதம்பஞ்சு என்பது ஆக - அடியானது பஞ்சென்றும், கண்சேல் என்பது ஆக - விழியானது சேல்மீனென்றும் (புலம்பி) திரிகின்ற நீ - அலைகின்ற நீ, செந்திலோன் - திருச்செந்திலையுடையவனாகிய முருகவேளின், திருக்கை - அழகியகையிலுள்ள, வேல்என்கிலை - வேலென்று சொல்லுகின்றிலை, கொற்றம் மயூரம் என்கிலை - வெற்றியையுடைய மயிலென்று சொல்லுகின்றிலை, வெட்சி - வெட்சிமாலையையும், தண்டை - சதங்கையையுமணிந்த, கால் என்கிலை - திருவடியென்று சொல்லுகின்றிலை, (ஆதலால்) முத்திகாண்பது - நீ முத்தியுலகையடைவது, எங்ஙனே - எப்படியோ (யான் அறியேன்). எ - று.

மனமே முத்திக்கேதுவாகிய முருகவேள் வர்ணனையை விட்டு பெத்தத்துக்கேது வாகிய மாதர்வர்ணனையைப் பற்றினையே, நீ யெப்படி உய்வாயென்பது கருத்து.

**31.** பொக்கக்குடிலிற்புகுதாவகைப்புண்டரீகத்தினுஞ்
செக்கச்சிவந்தகழல்வீடுதந்தருள்சிந்துவெந்து
கொக்குத்தறிபட்டெறிபட்டுதிரங்குமுகுமெனக்
கக்கக்கிரியுருவக்கதிர்வேறொட்டகாவலனே

இ - ள். சிந்துவெந்து - கடல்வெதும்பி, கொக்கு - மாமரவுருவமாகவந்தசூரன், தறிபட்டு எறிபட்டு - இருபிளவாக வெட்டியெறியப்பட்டு, குமுகுமுவென-குமுகுமுவென்று, உதிரம்கக்க - இரத்தத்தை உமிழவும், கிரிஉருவ-க்ரௌஞ்சகிரியையுருவிச் செல்லவும், வேல தொட்ட-வேலெறிந்த, காவலனே - ரக்ஷகனே, பொக்கம் - பொய்யாகிய, குடிலில் - (சரீரமாகிய) வீட்டில், புகுதாவகை - (இனிப்) புகாதவண்ணம், புண்டரீகத்தினும் - தாமரைமலரினும், செக்கச்சிவந்த - மிகச்செவந்த, கழல் - உன்திருவடியென்கிற, வீடு - வீட்டை, தந்து அருள் - (அடியேனுக்குக்) கொடுத்தருள்வாய். எ - று.

கடல் முதலாயின நிலைகெடும்படிவே லேவியகந்தவேளே,இனி நான் 'பிறவாவகையருள் செய்யவேண்டு மென்பது கருத்து. "கஞ்சங்கரிதே யெனச்செய்கின் சரண்டைந்ததே" என்றார்பிறரும்.

32. கிளைத்துப்புறப்பட்டசூர் மார்புடன்கிரியூருடுவத்
துளைத்துப்புறப்பட்டவேற்கந்தனே துறந்தோருளத்தை
வளைத்துப்பிடித்துப்பதைக்கபதைக்கவதைக்குங்கண்ணார்க்
கிளைத்துத்தவிக்கின்றவென்னையெந்நாள்வந்திரட்சிப்பையே.

இ - ள். கிளைத்துபுறப்பட்ட-கிளைத்துவெளிப்பட்ட, சூர்மார்புடன்-சூரனதுமார்போடு, கிரி - க்ரௌஞ்சகிரியையும், ஊடுருவ - ஊடுருவும்படி, துளைத்துப்புறப்பட்ட - தொளைத்துவெளிப்பட்ட, வேல் - வேற்படையையுடைய, கந்தனே - கந்தவேளே, துறந்தோர் உள்ளத்தை - துறந்தோர் மனத்தையும், வளைத்துப்பிடித்து - வளைத்துப்பற்றி, பதைக்கப்பதைக்க - துடிக்கத் துடிக்க, வதைக்கும் கண்ணார்க்கு - வதைசெய்கிற கண்களையுடைய மாதருக்கு, இளைத்துத்தவிக்கின்ற - மெலிந்து பரிதபிக்கிற, என்னை-அடியேனை, எந்நாள் வந்து இரட்சிப்பையே-எக்காலம் வந்து காத்தருள்வையோ, எ - று.

சூர்மார்பும் கிரௌஞ்சகிரியும் உருவும்படி வேல்விடுத்தோனே, அந்த வேலைக்கொண்டு, மாதர்கண்வேல் பட்டுவருந்து மென்னை யெந்நாள்வந்து காத்தருள்வையோ வென்பது கருத்து.

33. முடியாப்பிறவிக்கடலிற்புகார்முழுதுங்கெடுக்கு
மிடியாற்படியில்விதனப்படார்வெற்றிவேற்பெருமா
ளடியார்க்குநல்லபெருமாளவுணர்குலமடங்கப்
பொடியாக்கியபெருமாடிருநாமம்புகல்பவரே.

இ - ள். வெற்றிவேல் பெருமாள் - வெற்றிவேலையுடைய பெருமாள், அடியார்க்கு நல்லபெருமாள் - அடியவர்க்கு நல்லபெருமாள், அவுணர் குலம் அடங்க - அரக்கர்கூட்டமுழுதும், பொடிஆக்கியபெருமாள் - பொடிபடுத்தியபெருமாள், (அவரது) திருநாமம்புகல்பவர் - திருநாமத்தை யுச்சரிப்பவர், முடியா - (மெய்ஞ்ஞானியர்க் கன்றி மறறையர்க்குக் கடக்க) முடியாத, பிறவிக்கடலில் புகார் - ஜன்மசாகரத்தில் இனிப் பிரவேசியார், முழுதும் கெடுக்கும் - எல்லாச்சுகங்களையும் அழிக்கின்ற, மிடியால் - வறுமையால், படியில் - பூமியில், விதனப்படார் - கிலேசப்படமாட்டார்.

பெருமாள் பெருமான் என்பதின் திரிபு, பொருள் பெருமையுடையான் என்பது. தன்னடியவர்க்கு அவர் வேண்டியவற்றையெல்லாம வரையாது அருள்செய்தலால் அடியார்க்கு நல்லபெருமாள்என்றும், வெற்றிவேலைக்கொண்டே தம்மையடைந்தவர்க்கு எல்லாக்காரியங்களையும் முற்றுவித்தருள்பவராதலால் வெற்றிவேற்பெருமாள் என்றும், சூரனாகிய அவுணர் குலத்தலைவனை யழித்தபோதே அவன்குலமுழுதும் அழிந்ததாதலால் அவுணர்குலமடங்கப் பொடியாக்கிய பெருமாள் என்றும், பிறவிக்கடல் ஞானமாகிய மரக்கலமேறினார்க்கன்றி மற்றையர்க்குக் கடக்கமுடியாமையால் முடியாப்பிறவிக்கடல் என்றும், வறுமையானது இருமையின்பங்களையும் அழிப்பதாதலால் முழுதுங்கெடுக்கு மிடிஎன்றும் கூறினார். வறுமை இருமை யின்பங்களையுங் கெடுக்கும் என்பதை, "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியுமெனப், பனிவருங் கண்பர மன்றிருச் சிற்றம்பலமனையாய், துனிவரு நீர்மையிதென்னென்று தூநீர் தெளித்தளிப்ப, நனிவரு நாளிது வோவென்று வந்திக்கு நன்னுதலே" எனவும், "வறியாரிருமை யறியாரென மன்னுமாநிதிக்கு, நெறியாரருஞ்சுரஞ் செல்லலுற்றார்நமர் நீண்டிருவ, ரறியாவளவுநின் றோன்றில்லைச் சிற்றம்பலமனைய, செறிவார் கருங்குழல் வெண்ணகைச்செவ்வாய்த் திருநுதலே." எனவும் திருவாதவூரடிகள் திருக்கோவையாரினும், "இன்மையென வொருபாவிமறுமையு, மிம்மையுமின்றி வரும்" எனத்தெய்வப்புலவர் திருக்குறளிலும், வற்புறுத்திக் கூறியிருத்தல் காண்க. முருகக்கடவுளின் திருநாமத்தை யுச்சரிப்பவர் பிறவிமுதலியவற்றால் வருந் துன்பங்களை அநுபவியார் என்பது கருத்து.

**34.** பொட்டாகவெற்பைப்பொருதகந்தாதப்பிப்போனதொன்றற்
கெட்டாதஞானக்கலைதருவாயிருங்காமவிடாய்ப்
பட்டாருயிரைத்திருகிப்பருகிபசிதணிக்குங்
கட்டாரிவேல்விழியார்வலைக்கேமனங்கட்டுண்டதே.

(இ - ள்.) இருகாமவிடாய்பட்டார் - பெரியகாமவிடாய்ப் பட்டவரது, உயிரை - சீவனை, திருகிப்பருகி - திருகியுண்டு, பசிதணிக்கும் - பசியைநீக்கிக்கொள்ளுகின்ற, கட்டாரி - கட்டாரியாகிய, வேல்விழியார் - வே

ற்படைபோன்ற கண்ணையுடையவராகிய மாதரென்கிற, வலைக்கே - வலையின்கண்ணே, மனம் கட்டுண்டது-என்மனமாகிய மான் கட்டுப்பட்டது, (ஆகையால்) பொட்டு ஆக - தொளையுண்டாக, வெற்பைப்பொருத-க்ரௌஞ்சகிரியை (வேலால்) தாக்கின, கந்தா - கந்தவேளே, தப்பிப்போனது - (என்னைவிட்டுத்) தப்பிப்போனதாகிய, ஒன்றற்கு எட்டாத - ஒன்றுக்கும் எட்டவொண்ணாத, ஞானக்கலைதருவாய் - ஞானமாகிய கலையை யெனக்கருள்செய்வாயாக. எ - று.

கட்டாரி - ஓராயுதம், அது இவ்விடத்து வேலுக்காயிற்று. "சோரநிட்டூரனைச் சூரனைக் காருடல் சோரிகககக் - கூரகட்டாரி யிட்டோரிமைப் போதினிற்கொன்றவனே" என்னும், இந்நூலின் நான்காம்பாட்டிலும் கட்டாரியென்பது வேலையுணர்த்தல்காண்க. கட்டாரிவேல் கட்டாரியாகிய வேல் என விரிதலால் இருபெயரொட்டு. கட்டாரி வேல் கட்டாரியாகிய படையெனினுமாம். அன்றிக் கட்டாரி வேல்விழியார் என்பதற்கு கட்டாரியையும் வேலையும் நிகர்த்த கண்களையுடைய மாதர் எனினு மமையும். மாதர்கண்ணை வலையாகக்கூறுதல் "காய்சினவேலன்ன மின்னியல்கண்ணின் வலைகலந்து வீசினபோது என்னுந் திருக்கோவையார் செய்யுளானுமுணர்க. ஞானகலை ஞானகலைப்பொருள் எனினுமாம். ஞானகலை-பதிபசுபாசம் என்னும்முப்பொருள்களி னிலக்கணத்தையும்முத்திநெறியையு முணர்த்தும் நூல். இது அறிவு நூல் எனவும் வீட்டுநூல் எனவும் படும். கந்தவேளே,என்மனமாகிய மான் மாதர்கண்வலையிற் சிக்கி வருந்தாநின்றது அதனை மீட்டுக் கொடுக்கவேண்டுமென்பது கருத்து.

**35.** பத்தித்துறையிழிந்தானந்தவாரிபடிவதினான்
புத்தித்தரங்கந்தெளிவதென்றோபொங்குவெங்குருதி
மெத்திக்குதிகொள்ளவெஞ்சூரனைவிட்டசுட்டியிலே
குத்தித்தரங்கொண்டமராவதிகொண்டகொற்றவனே.

இ - ள். பொங்கு - பெருகுகின்ற, வெம் குருதி-வெவ்வியவுதிரம், மெத்திக் குதிகொள்ள - நிறைந்தலை யெறிய, வெம் சூரனை - கொடிய சூரனை, சுட்டியிலேகுத்தி - நெற்றியிற்குத்தி, தரம்கொண்டு - வெற்றிகொண்டு, விட்ட அமராவதிகொண்ட - (இந்திரனால்) விடப்பட்ட அமராவதியைக் கைக்கொண்ட, கொற்றவனே-அரசனே, நான் - (யானாகிய) அடியேன், பத்திதுறை இழிந்து - பத்தியாகிய துறையில் இறங்கி, ஆனந்தவாரிபடிவதில் - இன்பக்கடலில் மூழ்குவதனால், புத்தி தரங்கம் - என்மனமாகிய அலையடங்கி, தெளிவது - (என்னறிவு) தெளிவடைவது, என்றோ - எக்காலமோ. எ - று.

கட்டி - நுதலணி, அது ஈண்டு நெற்றிக்காயிற்று. ஆநந்தவாரியென்றார் அதிற் படிந்தோர் கரைகாணாதழுந்துதலின். "ஆநந்தமாக்கடல்" என்றார் திருவாதவூரடிகளும். ஆநந்தம் இறைவனது எண் குணத்துளொன்று. சூரனைக் கொன்று சுரபுரங் கொண்ட சூரனே, நான் உன்பத்தி மேலீட்டால் ஆநந்தமாக் கடலாடப்பெறுவது என்றோ வென்பது கருத்து.

36. சுழித்தோடுமாற்றிற்பெருக்கானதுசெல்வந்துன்பமின்பங்
கழித்தோடுகின்றதெக்காலநெஞ்சேகரிக்கோட்டுமுத்தைக்
கொழித்தோடுகாவிரிச்செங்கோடனென்கிலைகுன்றமெட்டுங்
கிழித்தோடுவேலென்கிலையெங்ஙனேமுத்திகிட்டுவதே.

இ - ள். நெஞ்சே - மனமே, செல்வம் - செல்வமானது, சுழித்து ஓடும் ஆற்றில் - சுழித்துக்கொண்டு ஓடுகின்ற நதியில், பெருக்கு ஆனது - பிரவாகத்தை நிகர்த்தது, துன்பம் இன்பம் கழித்து - (அச்செல்வத்தின் போக்கு வரவுகளாலுண்டாகின்ற) துக்க சுகங்களையொழித்து, ஓடுகின்றது - (நாம் துறவின்கண்) விரைந்து செல்வது, எக்காலம் - எந்த நாள், (அவற்றைக் கடந்தோடு மாற்றலில்லாத நீ) கரிக்கோட்டு முத்தை - யானைக்கொம்பிலுண்டாகிய முத்துகளை, கொழித்து ஓடு - கொழித்துக் கொண்டு விரைந்துசெல்லுகின்ற, காவிரி - காவேரியாற்றங்கரையிலுள்ள, செங்கோடன் என்கிலை - திருச்செங் கோட்டையுடையவனே என்று சொல்லுகின்றிலை, குன்றம் எட்டும் - திசைகளிலுள்ள எட்டு மலைகளையும், கிழித்து ஓடு - பிளந்துபோதற்குரிய, வேல் என்கிலை - வேலேயென்று சொல்லுகின்றிலை, முத்திகிட்டுவது - நாம் வீட்டையணுகுவது, எங்ஙன் - எவ்வாறு எ - று.

மிகுமழையால் சுழித்தோடும் நதியின் பெருக்கு அது இல்லாதபோது இல்லையாதல்போல, செல்வம் நல்வினையுள்ள காலத்து வந்து அது இல்லாதபோது இல்லையாகுந் தன்மையதாதலால், சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வம், என்றும், அச்செல்வம் வாராக்கால் துன்பமும், வரின் இன்பமுமுளவாத லியற்கையாதலால், அடுத்துத் "துன்பமின்பம் என்றும், அவற்றைக் கடந்து துறவின் கட்சேற லருமையாதலால், கழித்தோடுகின்றதெக்காலம், என்றும், அவ்வாறு செல்லுதற்கு மனவுறுதிவேண்டப்படுதலால் நெஞ்சே" என்றும், இப்படி செய்யவியலாவிடின், அம்மனவுறுதியை யருள்செய்வோன் திருச்செங் கோடனாதலால், அவனையாயினும் துதிப்பாய் என்றற்கு, செங்கோடனென்கிலை, என்றும், அதுவு மியையாதாயின் அவனது சம்பந்தியாய் இரண்டெழுத்தாலாகிய வேலென்றாயினு முச்சரியாய் என்றற்கு,' குன்றமெட்டுங் கிழித்தோடுவேலென்கிலைஎன்றும், இவற்றி லொன்றை யேனுஞ் செய்யாவழி முத்தி கிட்டுவதரிதாதலால்" "எங்ங

னே முத்திகிட்டுவதே" என்றும் கூறினர். யானைக்கொம்பில் முத்துண்டாதல் "தந்திவராக மருப்பிப் பிபூகந்தழைகதலி, நந்து சலஞ்சலமீன்றலை கொக்கு ளினமின்னார்-கந்தரஞ் சாலிகழை கன்னலாவின் பல் கட்செவிகார்-இந்துவுமிப்பு கராமுத்த மீனுமிருபதுமே" "கயல் கொக்குடும்பின் சிரசுகளுங்-கரிக்கோடேனமுடக்கோடும், கழையுங் கரும்புங் கமுகினமுங் கதலிசாலி கடிக்கமலம் - புயனத் தாதிதருமுத்தம் - புனலிற் கனலிற் புடவியினிற்-பொன்றும் பொதியிற்கே ழொளிபோம் - பொருந்தும் விலையுண்டவை வேண்டேம் - இயல் புற்றென் றுனழிவிலதாய் - என்றும் புதுமை தருமொளியாய்-எவர்க்கு மதிக்கவரிதாகியிருந்து மிகுந்தமதுரமெலாம் - முயல்வுற்றளிக்கு நின்கனிவாய்-முத்தந்தருக முத்தமே, முகுந்தன் மருகாசமரபுரி-முருகாமுத்தந்தருகவே" என்பவற்றால் இனிது விளங்கும், "துக்கத்துட்டுங்கித் துறவின் கட்சேர்கலா மக்கள்" எனமேலோர் கூறலால் இவரும் துன்பமின்பம் எனத்துன்பத்தை முன்வைத்தார். துறவின்கண் விரைந்து சேறற் குத்துன்பம் முக்கிய காரணமாதலால் அதனை முன்வைத்தார் எனினுமமையும். மனமே, இல்லற வாழ்க்கையின் அல்லலைக் கடந்து, துறவறத்திற் செல்வாயுமல்லை, அவ்வாறு செல்லு மனவுறுதியை நமக்கருள் செய்கிற முருகவேளையும் அவனது வேற்படையையுந் துதிப்பாயுமல்லை, நமக்கு முத்திகிட்டுவ தெவ்வாறு என்பது கருத்து.

**37.** கண்டுண்டசொல்லியர்மெல்லியர்காமக்கலவிக்கள்ளை
மொண்டுண்டயர்கினும்வேன்மறவேனமுதுகூளித்திரள்
டுண்டுண்டுடுடுடுடூடூடுடுடுடுடுண்டுடுணடு [னே.
டிண்டிண்டெனக்கொட்டியாடவெஞ்சூர்க்கொன்றராவுத்த

இ - ள். முதுகூளித்திரள் - முதிர்ந்த பேய்க்கூட்டம், டுண்டுண் டுடுடு டூடூ டுடுடு டுண்டு டுண்டு டிண் டிண்டு என *, கொட்டி-பறைகொட்டி, ஆட - கூத்தாடும்படி, வெம் சூர்கொன்ற ராவுத்தனே-(மயிற்பரியேறி),கொடிய சூரனைக்கொன்ற வீரனே, கண்டு உண்டசொல்லியர் - கற்கண்டின் சுவையை வென்ற சொல்லையுடையவராகிய, மெல்லியர்-மாதரது, காமக்கலவிக் கள்ளை - காமப்புணர்ச்சியாகிய கள்ளை, மொண்டு உண்டு - அள்ளிக்குடித்து, அயர்கினும் - (அவ்வெறியால்) புத்திமயங்கினும், வேல் மறவேன் - உன்வேலாயுதத்தையான் மறக்க மாட்டேன். எ - று.

* கண்டு-கற்கண்டு. அது இவ்விடத்து அதன் சுவையையுணர்த்திற்று. ராவுத்தன் - திசைச்சொல், பொருள் குதிரை வீரன் என்பது. சூரனைக் கொன்ற சூரனே, மாதரது காமக்கலவிக் கள்ளையுண்டு அறிவழிந்திருக்குங் காலத்தினும், உன்திருக்கையிலுள்ள வெற்றி வேலைமறவேன் என்பது கருத்து.

38. நாளென்செயும்வினைதானென்செயுமெனைநாடிவந்த
கோளென்செயுங்கொடுங்கூற்றென்செயுங்குமரேசரிரு
தாளுஞ்சிலம்புஞ்சதங்கையுந்தண்டையுஞ்சண்முகமுந்
தோளுங்கடம்புமெனக்குமுன்னேவந்துதோன்றிடினே.

இ - ள். குமரேசர் - முருகீசரது, இருதாளும் - இரண்டு திருவடிகளும், * சிலம்பும் சதங்கையும தண்டையும், சண்முகமும் - ஆறு திருமுகங்களும், தோளும் - பன்னிருதிருப் புயங்களும், கடம்பும் - கடப்பமலர்மாலையும், எனக்கு முன்னே - எனக்கெதிரில், வந்து தோன்றிடின் - வந்து தோன்றுமாயின், நாள் என்செயும் - (எனக்கு) நட்சததிரம் என்ன தீமையைச் செய்யும், வினைதான் என் செயும் - தீ வினைதான் என்ன தீமையைச் செய்யும், என்னை நாடிவந்த - என்னை வருத்தும்படி தேடிவந்த, கோள் என்செயும் - நவக்கிரகம் என்ன தீமையைச் செய்யும், கொடுங்கூற்று என் செய்யும் - கொடிய யமன் என்னதீமையைச் செய்வான். எ - று.

நாள் முதலாயினவும் தமக்குத்தீங்கிழையாவகை யருள்புரிவது முருகவேளின்திருவடியாதலால், முதற்கண், "முருகேசரிருதாளும்" என றும், அவற்றைச் சேர்ந்தழகு செய்வன சிலம்புமுதலியனவாதலால், அடுத்துச் "சிலம்புஞ் சதங்கையுந் தண்டையும்" என்றும், அடியார்க்குப் புகலிடமாவது திருவடியாதலால் அதனை யநுபவிதது மேல் நோக்கினவாறே திருமுகப்பொலிவு கண்மனங்களைக் கவர்ந்தமையால் "சண்முகமும்" என்றும், அதிற் சற்றிழிதலும் புயங்களியங்கலால் "தோளும்" என்றும், அவற்றைச் சேர்ந்தழகு செய்வது கடப்ப மலர்மாலையாதலால், "கடம்பும்" என்றும் கூறினார். சண்முகமும் என்றதை யடுத்துத் தோள் என்ற மையால் பனனிரண்டென்பது வருவித்துரைக்கப் பட்டது. முருகக் கடவுளின் திருவடி முதலாயின எனக்கெதிரே தோன்றுமாயின் நாண் மீன்முதலியன என்னை வருத்தமாட்டாவென்பது கருத்து.

39. உதித்தாங்குழல்வதுஞ்சாவதுந்தீர்த்தெனையுன்னிலொன்ற
விதித்தாண்டருடருங்காலமுண்டோவெற்புநட்டுரக
பதித்தாம்புவாங்கிநின்றம்பரம்பம்பரம்பட்டுழல
மதித்தான்றிருமருகாமயிலேறியமாணிக்கமே.

இ - ள். வெற்பு நட்டு - (மந்தர) மலையைமத்தாக நட்டு, உரகபதித்தாம்பு வாங்கிநின்று (அந்தமத்தை) நாகராஜனாகிய வாசுகி யென்கிற தாம்பினால் வளைத்து நின்று, அம்பரம் - கடலானது, பம்பரம் பட்டு உழல - பம்பரத்தின் தன்மையையடைந்து சுழலும்படி, மதித்தான் - கடைந்தவனாகிய திருமாலின், திருமருகா - திருமருகனே, மயில் ஏறியமாணிக்கமே - மயிலின் மேல் ஏறியமாணிக்கமே, உதித்து ஆங்கு உழல் வதும் - பிறந்து

அவ்விடத்துச் சஞ்சரிப்பதையும், சாவதும் - இறப்பதையும், தீர்த்து-நீக்கி. என்னை - அடியேனை, உன்னில் ஒன்று ஆ - உன்னிடத்தில் ஐக்கிய மாம்படி, விதித்து — நியமித்து, ஆண்டு - ஆட்கொண்டு, அருள்தரும் காலம் உண்டோ - அருள் புரியும் காலமும் உளதோ. எ - று.

ஆங்கு என்றது - வினைக்கீடாகச் சென்றுபிறக்கும் அவ்விடத்தை. செவ்வேளாதலால் மாணிக்கமே யென்றார். அமுதக் கடல் கடைந்த அச்சுதன்மருகனே, பிறப்பிறப்புக்களினின்றுயநீக்கி என்னைநீயாண்டருளுங்காலமு முண்டோ வென்பதுகருத்து.

40. சேல்பட்டழிந்ததுசெந்தூர்வயற்பொழிறேங்கடம்பின்
மால்பட்டழிந்ததுபூங்கொடியார்மனமாமயிலோன்
வேல்பட்டழிந்தனவேலையுஞ்சூரனும்வெற்புமவன்
கால்பட்டழிந்ததிங்கென்றலைமேலயன்கையெழுத்தே.

இ - ள். செந்தூர்வயல் - திருச்செந்தூரிலுள்ள கழனி, சேல்பட்டு அழிந்தது - சேல்மீன்கள் தாக்குதலால் அழிந்தது, பூங்கொடியார் மனம்-மாதர்மனம், பொழில் தேம் கடம்பின்-சோலையிலுள்ள மணம் பொருந்திய கடப்பமலரின், மால்பட்டு அழிந்தது -விருப்பம் படுதலால் அழிந்தது, வேலையும் சூரனும் வெற்பும் - கடலும் சூரனும் கிரௌஞ்சமலையும், மாமயிலோன் - பெரியமயில் வாகனத்தையுடையோனாகிய முருகக் கடவுளின், வேல்பட்டு அழிந்தன - வேலாயுதம் படுதலால் அழிந்தன, இங்கு என்தலைமேல் - இவ்விடத்தில் என்சிரசின்மேல், அயன் கையெழுத்து - பிரமனதுகை யெழுத்தானது, அவன் கால்பட்டு அழிந்தது - அவனது திருவடிபடுதலால் அழிந்தது. எ - று.

பிரமனால் படைக்கப்படுதலாகிய தொழில் ஒழிந்ததென்றற்கு, என்தலைமேலயன் கையெழுத்து அழிந்தது என்றார். எனவே இறத்தலுமில்லையென்றதாயிற்று. "அவன் கால் பட்டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே" என்பதற்கு உதாரணமாக, "வல்லைத் துரந்த முலை நுளைமாதர்வலையெறியப் - பல்லைத்திறந்துறுமிக் கவிதாலப்பழ முகுக்குந் - தொல்லைத் திருத்திகழ் போரூர்க்குகன்பதஞ் சூடுஞ் சென்னிக் - கில்லைப்பிரமன்று யருறக்கீறு மெழுத்துக்களே"என்றார் பிறரும். வயல்பொழில் என்பதை வயலும் பொழிலும் என்றுரைத்து அழிந்தன எனப் பன்மையில்முடிப்பினுமாம்.

41. பாலே யனையமொழியார்தமின்பத்தைப்பற்றியென்று
மாலேகொண்டுய்யும்வகையறியேன்மலர்த்தாடருவாய்
காலேமிகவுண்டுகாலேயிலாதகணபணத்தின்
மேலேதுயில்கொள்ளுமாலோன்மருகசெவ்வேலவனே.

இ - ள். காலே மிகவுண்டு - வாயுவையே மிகவும் புசித்து, காலே யிலாத - கால்களேயில்லாத, கணபணத்தின்மேல் - கூட்டமாகிய படங் களையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பின்மீது, துயில்கொள்ளும் - யோக நித்திரைசெய்கிற, மாலோன் மருக - திருமால் மருகனே, செவ்வேலவனே - செவந்த வேலாயுதத்தையுடையவனே, பாலே அனைய - பாலையே நிகர்த்த, மொழியார்தம் - சொல்லையுடையமாதரது, இன்பத்தைப்பற்றி - சுகத் தைப்பற்றி, என்றும் - எக்காலத்தும், மாலேகொண்டு - மயக்கத்தையே மேற்கொண்டு, உய்யும் வகை அறியேன் - பிழைக்கும் விதம் அறிகிலேன்; (ஆதலால் நான்பிழைக்கும் வண்ணம்) மலர்த்தாள் தருவாய் - தாமரைமலர் போலும் உன் திருவடியைத் தந்தருள்வாயாக. எ - று.

திருமால் மருகா, மாதர்மயக்கங்கொண்டு, உய்யும் வகையறியாதவனு யிருக்கிறேன், ஆதலால் உன்திருவடியை யருள் செய்யவேண்டும் என் பது கருத்து. பாம்புக்குக் காற்றேயுணவாதலால், "காலேமிகவுண்டு" என் றும், 'காலிலியாதலால்' "காலேயிலாதகணபணம்" என்றும் கூறினர். உய் யும் வகையறியாமைக்குக் காரணம் மாதரின்பமென்றாராயிற்று. பாம்புக் குக் காற்றேயுணவென்பதை, "வாயுவும் பூவின் மணமிரண்டும் புசித்திருக் கும்" என்னுஞ் சித்தராரூடச் செய்யுளானும்,

"சிலைமதனம்படுமாறெழுஞ்சேய்மயிலுச்சிட்டவெச்
சிலைமதனம்படுசிந்துவையிந்துவைச்செய்வதென்யான்
சிலைமதனம்படுகோட்டுவர்கேளிருஞ்செங்கழுநீர்ச்
சிலைமதனம்படுதாமரைவாவித்திரள்சங்கமே"

என்னுங் கந்தரந்தாதிச் செய்யுளில், "சேய்மயிலுச்சிட்ட வெச்சில்" என் பதனாலும் உணர்க.

42. நிணங்காட்டுங்கொட்டிலைவிட்டொருவீடெய்திநிற்கநிற்குங்
குணங்காட்டியாண்டகுருதேசிகனங்குறச்சிறுமான்
பணங்காட்டுமல்குற்குருகுங்குமரன்பதாம்புயத்தை
வணங்காத்தலைவந்திதெங்கேயெனக்கிங்ஙன்வாய்த்ததுவே.

இ - ள். நிணம் காட்டும் கொட்டிலைவிட்டு - நிணத்தையே மிகுதி யாகக் காட்டுகிற சாலையாகிய சரீரத்தைவிட்டு, ஒரு வீடு எய்தி நிற்க - ஒப் பற்ற வீட்டையான் அடைந்து நிலைத்திருக்க, நிற்கும் குணம் காட்டி - நிற் றற்குரிய தன் அருட்குணத்தைக்காட்டி, ஆண்ட - என்னையாட்கொண்ட, குருதேசிகன் - குருநாதன், அம் குறச்சிறுமான் - அழகிய குறச்சிறு பெண் ணாகிய, பணம் காட்டும் அல்குற்கு - பாம்பின் படத்தின் தன்மை யைக்காட்டுகின்ற அல்குலையுடைய வள்ளிநாயகியின் பொருட்டு, உரு கும் - உருகுகின்ற, குமரன் - முருகன், (அவனது) பத அம்புயத்தை -

திருவடித்தாமரையை, வணங்காதலை இது எங்கே வந்து-பணியாதசிரசாகிய இது எப்படிவந்து, எனக்கு இங்ஙன்வாய்த்தது-எனக்கு இவ்விடத்தில் அமைந்தது. எ - று.

குருதேசிகன் இருபெயரொட்டெனினுமமையும். மான் உவமையாகு பெயர். பிறவித்தொடக்கொழிந்து பேரின்ப வீடடையும்படி யான் நிற்க வேண்டிய தன்திருவருள் நிலையையெனக் கருளிய குமரவேளின் திருவடித் தாமரை மலரைச் சூடாத தலையெனக்கேன் வாய்த்ததென்பது கருத்து.

43. கவியாற்கடலடைத்தோன்மருகோனைக்கணபணக்கட்
செவியாற்பணியணிகோமான்மகனைத்திறலரக்கர் [பாற்
புவியார்ப்பெழத்தொட்டபோர்வேன்முருகனைப்போற்றியன்
குவியாக்கரங்கள்வந்தெங்கேயெனக்கிங்ஙன் கூடியவே.

இ - ள். கவியால் - வாநரங்களைகொண்டு, கடல் அடைத்தோன் மருகோனை-சமுத்திரத்தை அணைகட்டித்தடுத்தோனாகிய திருமாலின் மருகனை, கண பணம் - கூட்டமாகிய படங்களையுடைய, கட்செவியால் - பாம்பைக்கொண்டு, பணி அணி - ஆபரணமாகப் பூண்ட, கோமான் மகனை - சிவபெருமானுக்குப் புதல்வனை, திறல் அரக்கர் புவி - வலியையுடைய அரக்கர்வாழ்கின்ற உலகங்களெல்லாம், ஆர்ப்பு எழ-கதறும்படி, தொட்ட-பிரயோகித்த,போர்வேல்-போர்த்தொழிலில்வல்ல வேற்படையையுடைய, முருகனை - குமாரக்கடவுளை, அன்பால் போற்றி - அன்போடுவணங்கி, குவியாக் கரங்கள்-கூம்பாதகைகள், எனக்கு எங்கேவந்து - எனக்கு எப்படிவந்து, இங்ஙன் கூடிய - இவ்விடத்துப் பொருந்தின. எ-று.

கடலடைத்தது-இராவணவதத்தின் பொருட்டு இலங்கைக்குச்சென்ற காலத்தில். பாம்பு உருவப் புலனுக்குரிய பொறியாகிய கண்ணையே ஓசைப்புலனுக்குரிய பொறியாகிய செவியாகவுங் கொண்டிருப்பதாகையால் கட்செவியெனப் பட்டது. கணபணக் கட்செவியாற் பணியணி கோமான் என்பதை, "திகழ்கனகாதினகரனந்த நடனர்"

"காம்பிணையாற்களிமாமயிலாற்கதிர்மாமணியால்
வாம்பிணையால்வல்லியொல்குதலான்மன்னுமம்பலவன்
பாம்பிணையாக்குழைகொண்டோன்கயிலைப்பயில்புனமுந்
தேம்பிணைவார்குழலாளெனத்தோன்றுமென்சிந்தனைக்கே"

' கூம்பலங்கைத்தலத்தன்பொன்பூமுருகக்குனிக்கும்
பாம்பலங்காரப்பரன் றில்லையம்பலம்பாடலரிற்
றேம்பலஞ்சிற்றிடையீங்கிவளுங்கனிவாய்கமழு
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே''

என்றற் றொடக்கத்தன வற்றுற் காண்க.

முருகக்கடவுளை அஞ்சலியாத கைகள் எனக்கேனுண்டாயின வென்பது கருத்து.

**44.** தோலாற்சுவர்வைத்துநாலாறுகாலிற்சுமத்தியிரு
காலாலெழுப்பிவளைமுதுகோட்டிக்கைநாற்றிநரம்
பாலார்க்கையிட்டுத்தசைகொண்டுமேய்ந்தவகமபிரிந்தால்
வேலாற்கிரிதொளைத்தோனிருதாளன்றிவேறில்லையே.

இ - ள். (மனமே) தோலால் சுவர்வைத்து - தோலினுல் சுவரெழுப்பி, நாலாறு காலில் சுமத்தி - பத்துக் கால்களினுற்முங்குவித்து, இருகாலால் எழுப்பி - இரண்டுகால் களால் எழப்பண்ணி, வளைமுதுகு ஓட்டி - வளைந்த முதுகெலும்பாகிய முகட்டைவேய்ந்து, கைநாற்றி - இருகையாகிய கொடுங்கைகளைத் தொங்க அமைதது, நரம்பால ஆர்க்கை இட்டு-நரம்புகளால் கட்டி, தசைகொண்டு மேய்ந்த - மாமிசத்தால் வேய்ந்த, அகம் பிரிந்தால் (உடம் பாகிய) வீட்டை விட்டு யாம் நீங்கினுல், (நமக்கு உறைவிடமாவது) வேலால் - வேலாயுதத்தால், கிரிதொளைத்தோன் - க்ரௌஞ்சமலையைத் தொளைத்தவனுகிய முருகவேளின், இருதாள் அன்றி-இரண்டு திருவடியல்லது, வேறு இல்லை - வேறொருதுணையில்லை. எ - று.

பத்துக்கால்கள் என்றது தசவாயுக்களை. அவையாவன பிராணன், அபாநன், சமாநன், உதாநன், வியாநன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்பன. இவற்றுள், இதயத்தியங்குவது பிராணன், உச்சர்க் கத்தலத்திடை நிற்பது அபாநன், கந்தரசக்குழியிற் சந்திடை நிற்பது சமாநன், நாபியில் நிற்பது உதாநன், சரீரமுழுதும் வியாபித்திருப்பது வியாநன், நீட்டலு முடக்கலும் சொல்லலும் செய்வது நாகன், உரோமம் புளகித்திமைப்பது கூர்மன், முகத்திடை நின்று தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது கிருகரன், ஓட்டமு மிளைப்பும் வியர்ததலும் விளைப்பது தேவதத்தன், உயிர் நீங்கினும் நீஙகாது உடமபை வீக்கித் தலைகிழித்த கல்வது தனஞ்சயன். இவற்றின் விரிவெல்லாம் யோக நூல்களிற்காண்க. மனமே, இந்தச்சரீரத்தை விட்டு நீங்குங்காலத்தில், முருகவேளின் திருவடியிணை யன்றி நமக்கு வேறுதுணையில்லை யென்பது கருத்து.

**45.** ஒருபூதருமறியாத்தனிவீட்டிலுரையுணர்வற
றிருபூதவீட்டிலிராமலெனமுனிருகோட்டொருகைப்
பொருபூதரமுரித்தேகாசமிட்டபுராந்தகற்குக்
குருபூதவேலவனிட்டேரகுலாந்தகனே.

இ - ள். இருகோடு - இரண்டு கொம்புகளையும், ஒருகை - ஒருது திக்கையையுமுடைய, பொரு-போர் செய்கிற, பூதரம்-மலையை, உரித்து - உரித்து, ஏகாசம் இட்ட - உத்தரீயமாகப் போர்த்த, புராந்தகற்கு - திரிபுர நாசகனுக்கு, குரு - தேசிகனும், பூதம் வேலவன்-பரிசுத்தமாகிய வேலாயுதத்தையுடையவனும், நிட்டூரம் - நிஷ்டூரத்தையுடைய, சூரகுலம் அந்தகன் - சூரனது வமிசத்துக்கு யமனும் ஆகிய முருகவேள், பூதவீட்டில் இராமல் — பூதவீடாகிய சரீரத்திலிராமல், ஒரு பூதரும் அறியா - ஒரு பூததேசிகரும் உணராத, தனி வீட்டில்-ஒப்பற்ற வீட்டில், உரை உணர்வு அற்று - சொல்லும் உணர்ச்சியும் ஒழிந்து, இரு என்றான்-இருப்பாயென்று சொல்லியருளினான். எ - று.

ஒரு பூதரும் என்பதற்கு ஒப்பற்ற பரிசுத்தான்மாக்களும் என்றுரைத்தலுமாம். தனிவீடு - மோக்ஷம். பஞ்சபூதாத் மகமாதலால் சரீரம் பூதவீடு எனப்பட்டது. பூதரம் - மலை, அது இருகோட்டொருகைப் பொரு என்னும்டையடுத்து நின்றமையானும்,உரித்து என்மே லொருவினைவரலானும் இவ்விடத்து யானையையுணர்த்திற்று. சிவகுருவாதலால் புராந்தகற்குக் குரு, என்றார். இது உபசாரம். குமரவேள், இந்தப் பூதவீட்டை விட்டு அந்தப் பூதவீட்டையடை யென்றான் என்பது கருத்து.

௪௭. நீயானஞானவினோதந்தனையென்றுநீயருள்வாய்
சேயானவேற்கந்தனேசெந்திலாய்சித்ரமாதரல்குற்
றோயாவுருகிப்பருகிப்பெருகித்துவளுமிந்த
மாயாவினோதமனோதுக்கமானதுமாய்வதற்கே.

இ - ள். சேய் ஆன - குழந்தையாகிய, வேல்கந்தனே - வேல் முருகனே, செந்திலாய் - திருச்செந்திலையுடையானே, சித்ரம் - அதிசயித்தற்குரிய, மாதர் - மாதரது, அல்குல்-நிதம்பத்தடத்தில், தோயா - படிந்து, உருகி - மனமுருகி, பருகி - அவாது சுகத்தை அநுபவித்து, பெருகித் துவளும் - மிகுந்து சோர்கின்ற,இந்தமாயாவினோதம் - இந்தமாயாவிசித்ரத்தாலுண்டாகிற, மனோதுக்கமானது - மனத்துன்பமானது, மாய்வதற்கு - கெடும் பொருட்டு, நீயான - நீயாகிய, ஞானவினோதம் தன்னை - ஞானலீலையை, என்று - எக்காலத்தில், நீ அருள்வாய் - நீ எனக்குக் கிருபை செய்வாய். எ - று.

நீயாதல்-யான் என்னுந் தற்போத மொழிந்து சிவத்துவமொன்றுங்கல். பசுகரணங்கள் கெட்டுச் சிவகரணங்கள் தோன்றல் எனினுமாம். குழந்தை வேலன் என்றற்குச் சேயான வேற்கந்தனே என்றும், தன்னுருவமாகிய ஞானலீலையுந் தன்னடியார்க்கருள் செய்வோனாதலால் "நீயான ஞான

விநோதந்தனை யென்று நீயருள்வாய்" என்றும் கூறினர், மாயாவி நோதத்தைக் கெடுப்பது ஞானவிநோத மாதலால், மாயாவிநோதமநோ துக்கமான்று மாய்வதற்கு நீயான ஞானவிநோதந் தனையென்று நீயருள் வாய்என்றார். முருகா, மாதர்மயக்கிலாழ்ந்து வருந்துவது ஒழியுமாறு, உன் ஞானலீலாரூபத்தை எனக்கு ஒன்று காட்டியருள்வை யென்பது கருத்து.

47\. பத்தித்திருமுகமாறுடன்பன்னிருதோள்களுமாய்த்
தித்தித்திருக்குமமுதுகண்டேன்செயல்மாண்டடங்கப்
புத்திக்கமலத்துருகிப்பெருகிப்புவனமெற்றித்
தத்திக்கரைபுரளும்பரமானந்தசாகரத்தே.

இ - ள். செயல் மாண்டு அடங்க - செய்கையற்றொடுங்க, புத்தி கமலத்து உருகி-(அப்பொழுது) இதயதாமரையினின்றும் உருகி, பெருகி-பெருக்கெடுத்து, புவனம் எற்றி - உலகங்களாகிய மணிகளை யெறிந்து, தத்தி - தாவி, கரைபுரளும் - கரைகடந்தோடுகின்ற, பரமம் ஆனந்தம் சாகரத்து - மேலாகிய இன்பக்கடலின்கண், பத்திதிருமுகம் ஆறுடன் - வரிசையாகிய ஆறுதிருமுகங்களோடும், பன்னிருதோள்களும் ஆய் - பன்னிரண்டு புயங்களையுடையதுமாகி, தித்தித்து இருக்கும் - (தன்னைக் கண்டவருடைய வுள்ளத்தின்கண்) இனித்திருக்கின்ற, அமுது கண்டேன் - ஒரு அமிர்தத்தை யான்பார்த்தேன். எ - று.

தேவர்கள் அமுதசாகரத்தில் சாவாமைக்கேதுவாகிய அமிர்தத்தைக் கண்டாற்போல, யானும் பரமானந்தசாகரத்தில் பன்னிருதோளனென்னும் சாதல் பிறப்பொழிதற் கேதுவாகிய அமிர்தத்தைக் கண்டேன் என்பது கருத்து. செயல்மாண்டடங்கல் - சும்மாவிருத்தல். அமுது - சாவாமையைத் தருமருந்து.

48\. புத்தியைவாங்கிநின்பாதாம்புயத்திற்புகட்டியன்பாய்
முத்தியைவாங்கவறிகின்றிலேன்முதுசூர்நடுங்கச்
சத்தியைவாங்கத்தரமோகுவடுதவிடுபடக்
குத்தியகாங்கெயனேவினையேற்கென்குறித்தனையே.

இ - ள். குவடு - க்ரௌஞ்சமலையானது, தவிடுபட - பொடியும்படி, குத்திய காங்கெயனே - (அதனைவேலாயுதத்தால்) குத்தினகாங்காபுத்ரனே, புத்தியைவாங்கி - புலன்வழியே செல்லுகின்ற என்மனத்தை வலித்துத் தடுத்து, நின்பாத அம்புயத்தில் புகட்டி, உன்பாத தாமரையிற் புகுத்து, அன்பு ஆய் - அன்புகொண்டு, முத்தியைவாங்க - மோக்ஷத்தைக் கவர்ந்து

கொள்ள, அறிகின்றிலேன் - உணர்ந்திலேன், முதுசூர்நடுங்க - பழைய சூரனனவன் நடுங்கும்படி, சத்தியைவாங்க-அவ் வேலையெடுக்க, தரமோ- (அவன்) தரத்தனோ, வினையேற்கு - வினையினேனுக்கு, என்குறித்தனை - யாது செய்யக் கருதினை. எ - று.

தரத்தன் - பக்குவன். உன் ஞானசத்திவை அபக்குவியாகிய அவன் மீதெடுக்கத்தகாதென்றபடி. சூரன் நூற்றெட்டியுக மிருந்தானுதலால் முதுசூர் என்றார். உன்திருவடிக்குப் பத்திசெய்ய வறிந்திலேன், அடியேனுக்கு என் செய்ய நினைத்திருக்கிறாய், சூரனது வினையைப் பொடிசெய்தது போல என்வினையையும் பொடிசெய்தருளல் வேண்டும் என்பது கருத்து.

49. சூரிற்கிரியிற்கதிர்வேலெறிந்தவன்றொண்டர்குழாஞ்
சாரிற்கதியன்றிவேறிலைகாண்டண்டுதாவடிபோய்த்
தேரிற்கரியிற்பரியிற்றிரிபவர்செல்வமெல்லாம்
நீரிற்பொறியென்றறியாதபாவிநெடுநெஞ்சமே.

இ - ள். தண்டு தாவடிபோய் - சேனையுடன் போர்க்குச்சென்று, தேரில் - இரதத்தின் மேலேறியும், கரியில் - யானையின் மேலேறியும், பரியில் - குதிரையின்மேலேறியும், திரிபவர் - திரிவோராகிய அரசருடைய, செல்வம் எல்லாம் - ஐசுவரிய மெல்லாம், நீரில் பொறிஎன்று - நீர்மேலெழுத்தாமென்று, அறியாத - உணராத, பாவிநெடுநெஞ்சமே - பாவியாகிய பெரியமனமே, சூரில் - சூரன்மீதும், கிரியில் - க்ரௌஞ்சகிரியின்மீதும், கதிர்வேல் எறிந்தவன் - ஒளியையுடைய வேலாயுதத்தைப் பிரயோகித்தவனுகிய முருகக்கடவுளது, தொண்டர் குழாம் - அடியார் கூட்டத்தை, சாரின்-அடைந்தனையாயின், கதி அன்றி - நமக்குக்கிடைப்பது முத்தியேயல்லது, வேறு இல்லை - வேறோர் பொருளுமன்று. எ - று.

தொண்டர் குழாத்தை எழுவாயாக்கி, சார் இல் எனப்பிரித்து, அடையுமிடம் என்றுரைப்பினுமாம். ரதகஜதுரகங்களோடு திரிபவருடைய செல்வமெல்லாம் நீரிலெழுத்தென்றுணராதமனமே, முருகவேளின் தொண்டர் கூட்டத்தை அடைவையாயின் நமக்குக்கிடைப்பது மோக்ஷமேயன்றி வேறுபொருளன்றென்பது கருத்து.

50. படிக்குந்திருப்புகழ்போற்றுவன்கூற்றுவன்பாசத்தினாற்
பிடிக்கும்பொழுதுவந்தஞ்சலென்பாய்பெரும்பாம்பினின்று
நடிக்கும்பிரான்மருகாகொடுஞ்சூரனடுங்கவெற்பை
யிடிக்குங்கலாபத்தனிமயிலேறுமிராவுத்தனே.

இ - ள். பெரும் பாம்பில் நின்று - பெரிய (காளிங்கன் என்னும்) பாம்பின்மேல் நின்று, நடிக்கும் பிரான்மருகா - நடித்த உபகாரசீலனாகிய திருமாலுக்கு மருகனே, கொடு சூரன்நடுங்க - கொடிய சூரனானவன் நடுங்கும்படி, வெற்பை இடிக்கும் - கிரௌஞ்சமலையைப் பொடிபடுத்தின, கலாபம் - தோகையையுடைய, தனி - ஒப்பற்ற, மயில் ஏறும் - மயிற்பரிமேலேறுகின்ற, இராவுத்தனே - குதிரைவீரனே, படிக்கும் - அறிஞர் படனம் பண்ணுதற்குரிய, திருப்புகழ் - உன்திருப்புகழை, போற்றுவன்-நானும் புகழ்வேன் (ஆதலால்), கூற்றுவன் - இயமனானவன், பாசத்தினால் - தன் கைப்பாசக்கயிற்றினால், பிடிக்கும் பொழுது - என்னைக்கட்டிப் பிடிக்குங் காலத்தில் - வந்து - (எனக்கெதிரில்) எழுந்தருளி, அஞ்சல் என்பாய்-அஞ்சாதேயென்றருளக் கடவாய். எ - று.

சூரன் நடுங்க ஏறியமயில் - இந்திரனாகிய மயில். இராவுத்தன் என்றது ஏற்கேற்ப மயிலைப்பரியென்றனம். முருகவேளே, இயமன, தன் பாசத்தினாற் பிணிக்கும்போது உன் திருப்புகழைப் படித்துப்போற்றுவேன், அக்காலத்தில் நீ வந்து அஞ்சலென்றருள் செய்யவேண்டுமென்பது கருத்து.

51. மலைபாறுகூறெழவேல்வாங்கினானைவணங்கியன்பி
னிலையானமாதவஞ்செய்யுமினோநும்மைநேடிவருந்
தொலையாவழிக்குப்பொதிசோறுமுற்றதுணையுங்கண்டீ
ரிலையாயினுமவெந்ததேதாயினும்பகிர்ந்தேற்றவர்க்கே.

இ - ள். (உலகத்தாரே) ஏற்றவர்க்கு - (உம்மிடத்துவந்து) யாசித்தவர்க்கு, இலை ஆயினும் - இலைக்கறியையாயினும், வெந்தது ஏதாயினும் - வெந்ததாகிய வேறெந்தப் பொருளையாயினும்,பகிர்ந்து-பகுத்திட்டு(உண்டு), மலைஆறுகூறு எழவேல் வாங்கினானை அன்பின்வணங்கி-கிரௌஞ்சமலையை ஆறுபங்காயெழும்படி வேலெடுத்தவனாகிய குமாரக்கடவுளை அன்போடு பணிந்து, நிலை ஆனமாதவம் செய்யுமின் - நிலையாகிய பெருந்தவத்தைச் செய்யுங்கள், (அப்படிசெய்வீராயின், அது) நும்மை நேடிவரும் - (யமன்) உம்மைத்தேடிவருகின்ற - தொலை யாவழிக்கு-தொலையாதநெறிக்கு, பொதிசோறும் - கட்டமுதும், உற்றதுணையும் - உற்றதுணையுமாகும். எ - று.

தொலையாவழிக்குப் பொதிசோறும் உற்றதுணையும் நும்மை நேடிவ்ரும் என அந்வயித்து, அத்தவம் தொலையாத தென்திசைப் பிரயாணத்துக்குக் கட்டமுதும் உற்றதுணையுமாகி உம்மைத்தேடிவரும் என வுரைப்பினுமாம். வேலின்து ஆறுமுகத்தானுங் கூறுபட்டமை தோன்ற, "ஆறுகூறெழ" என்றார். வேல்விடுத்தானை யென்னாது வேல்வாங்கினானை யென்றது அவ்வேலினது பேராற்றலை யுணர்த்தற்கு "கறங்குதிரைக் கருங்கட

லுங் காரவுணப்பெருங்கடலுங் கலங்கக்கார்வக், துறங்குசிகைப்பொருப்புஞ் சூரப்பொருப்பும் பிளப்ப மறையுணர்ந்தோராற்றும், அறங்குலவு மகத் தழலுமவுணமடவார்வயிற்றினழலு மூள், மறங்குலவு வேலெடுத்த குமர வேள் சேவடிகள் வணக்கஞ்செய்வாம்" என்றார்பிறரும். உலகத்தாரே, முருகக்கடவுளைவணங்கித் தவஞ்செய்யுங்கள், செய்வீர்களாயின், அத்தவமே உமது கடைவழிக்குக் கட்டமுதும் உற்றதுணையுமாகும் என்பது கருத்து.

52. சிகராத்ரிகூறிட்டவேலுஞ்செஞ்சேவலுஞ்செந்தமிழாற்
பகரார்வமீபணிபாசசங் க்ராம பணாமகுட
நிகராட்சமபட்சபட்சிதுரங்கந்ருபகுமரா
குகராட்சசபட்சவிட்சோபதீரகுணதுங்கனே.

இ - ள். பணிபாசசங்க்ராம - தாழ்ந்த பாசப்போரையுடையவனே, பணாமகுடநிகரம் - படத்தைக்கொண்ட முடிக் கூட்டத்தையுடைய, அட்சமம்பட்ச - பாம்பைப் புசிப்பாகவுடைய, பட்சிதுரங்க - பறவையாகிய மயிலைவாகனமாகவுடையவனே, ந்ருபகுமரா - ராஜகுமாரனே, குக - குகனே, ராட்சசபட்ச - அசுரநாசகனே, விட்சோப-கலக்கமில்லாதவனே, தீர - தைரியசாலியே, குணதுங்கனே - பரிசுத்தகுணத்தையுடையவனே, சிகர அத்ரி - சிகரங்களையுடைய கிரௌஞ்சமலையை, கூறு இட்ட-பாகித்த, வேலும் - உன்வேலாயுதத்தையும், செம் சேவலும்-செம்மையாகிய கோழிக்கொடியையும், செந்தமிழால் பகர் ஆர்வம்-செந்தமிழ்ப்பாக்களாற் புகழ்தற்குரிய விருப்பத்தை, ஈ - கொடுத்தருளல் வேண்டும். எ - று.

அடசமம-அழுககாறு. அது அழுககாறறையுடைய பாம் புக்காயிற்று. பாம்புகளுடைய தாயாகிய கத்துருவிட்டத்துள்ள அழுக்காற்றைப் பாம்புகளுக்கு மேற்றியுரைத் தார்போலும். அவள் அழுக்காற்றையுடைய வள் என்பதை அவளது சரித்திரம் நன்கு விளக்கும். மயிலுக்குப் பாம்புஇரையாதலால், "பணாமகுட நிகராட்சமபட்சபட்சி" என்றார். சிவபெருமானுக்கு, மேலானவர் ஒருவருமில்லையாதலால், அவரை ந்ருபர் என்றார். அன்றி ந்ருப, குமரா, என இரண்டாகப்பிரித்து இறைவனே, குமரனே, என்றுரைப்பினு மமையும். குகன்-என்பதற்கு சிவகுருவானவன் என்பது பொருள்.

53. வேடிச்சிகொங்கைவிரும்புங்குமரனைமெய்யன்பினாற்
பாடிக்கசிந்துள்ளபோதேகொடாதவர்பாதகத்தாற்
றேடிப்புதைத்துத்திருட்டிற்கொடுத்துத்திகைத்திளைத்து
வாடிக்கிலேசித்துவழ்நாளைவீணுக்குமாய்ப்பவரே.

இ - ள். வேடிச்சி கொங்கைவிரும்பும் - குறத்தியாகிய வள்ளிநாயகியின் தனங்களை யிச்சித்த, குமரனை - முருகனை, மெய் அன்பினால்பாடி - உண்மையாகிய அன்பினால்பாடி, கசிந்து - மனங்கரைந்து, உள்ளபோதே - கையிற் பொருளுள்ளகாலத்திலேயே, கொடாதவர் (சற்பாத்திரத்தில்) தானஞ்செய்யாதவர், பாதகததால்தேடி - பாவவழியால் பொருளைச் சம்பாதித்து, புதைத்து - மண்ணிற்புதைத்து, திருட்டில்கொடுத்து - கள்வருடைய திருட்டிலிழந்து, திகைத்து இளைதது - மனம் பிரமித்து உடம்புமெலிந்து - (அதனால்) வாடிக்கிலேசித்து - வாடித்துக்கித்து, வாழ்நாளை (இவ்வாறு) தமது ஆயுள்நாளை, வீணுக்கு மாய்ப்பவரோ - வீணில்அழிப்பவரோ யாவர்.

கடவுளை நினைந்துச்செய்யாத தானம் பயன்படாதாதலால் "குமரனை மெய்யன்பினாற்பாடிக் கொடாதவர் என்றும், செல்வம ஓரிடத்து நிலையாமையையே யியற்கையாக வுடையதாதலால், உள்ளபோதே கொடாதவர் என்றும், பாவவழியால் தேடினபொருள் தானமுதலியவைகளுக்கு உபயோகமாகாமல் தானும் அனுபவியாமல் மண்ணிற்புதைத்துவைத்தற்கே யுரியதாகுமாதலால், "பாதகத்தால் தேடிப்புதைத்து' என்றும், "புதைத்தபொருள் திருடர் முதலானோர்க்கே யுரியதாகுமாதலால், "திருட்டில் கொடுத்து என்றும், இழந்தவன் இனி யென் செய்வோமெனத் திகைத்தலியற்கையாதலால், "திகைத்து" என்றும், திகைத்தலும் உடம்பிளைக்குமாதலால், "இளைதது" "என்றும" பொருளையீட்டலும் அநுபவியாது இழத்தலும் அதனால் துக்கமடைந்து மெலிதலுமாகிய இவைகளாலே தமது ஆயுளைக கழித்து இறைவனது திருவருளுக்குரிய காரியமொன்றுஞ் செய்திலராதலால், "வாழ்நாளை வீணுக்குமாய்ப்பவரோ" என்றுங் கூறினார். "கைத்துண்டாமபோழ்தே கரவாதறஞ்செய்ம்மின்" என்றும், "உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றும், கெடாஅத நல்லறமுஞ்செய்யார்-கொடாஅது; வைத்தீட்டினாரிழப்பர் வான்றோய்மலைநாட, வுய்த்தீட்டுந் தேனீக்கரி." என்றும், பிறரு மிவ்வாறு கூறுதல்காண்க. கொடாதவர் என்றதற்கேற்பப் பொருளும், பாதகத்தால் தேடியிழத்தல் முதலியன மேலேவருதலானும் தானம் என்பதற்கு சற்பாத்ரமும் வருவித்துரைக்கப் பட்டன. தமதுபொருளைப் பகவதர்ப்பணம்பண்ணி, சற்பாத்திரத்தில் தானம்பண்ணாதவர் அதனை திருடர்முதலியோரா லிழந்து வருந்தித்தம் வாணாளை வீணாளாய்க் கழித்திறப்பரென்பது கருத்து.

54. சாகைக்குமீண்டுபிறக்கைக்குமன்றித்தளர்ந்தவர்க்கொன்
றீகைக்கெனைவிதித்தாயிலையேயிலங்காபுரிக்குப்
போகைக்குநீவழிகாட்டென்றுபோய்க்கடறீக்கொளுந்த
வாகைச்சிலைவளைத்தோன்மருகாமயில்வாகனனே.

இ - ள்' இலங்காபுரிக்குப் போகைக்கு - இலங்கைப்பட்டணத்துக்குப் போவதற்கு, நீவழிகாட்டு என்றுபோய் - நீவழிகாட்டக் கடவையென்று சமுத்திரராஜனிடம் சென்று, அவன் கடல்-அவனது இடமாகிய கடலானது, தீகொளுந்த - நெருப்புப்பற்றியெரியும்படி, வாகை சிலைவளைத்தோன் - வெற்றியையுடைய கோதண்டத்தை வளைத்தவனாகிய திருமாலுக்கு, மருகா-மருகனே, மயில்வாகனனே-மயில்வாகனத்தையுடையவனே, சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும் அன்றி - இறத்தற்கும் திருமிப்பிறத்தற்குமே என்னைப்படைத்தனையன்றி, தளர்ந்தவர்க்கு - வறுமையால் தளர்வடைந்தோர்க்கு, ஒன்று ஈகைக்கு - ஒருபொருளைக் கொடுத்தற்கு, என்னை விதித்தாயில்லையே - என்னைச்சிருஷ்டித்தாயில்லையே (இதென்ன அநீதி).

மயில்வாகனக்கடவுளே, பிறக்கவும் இறக்கவும் என்னைப்படைத்தனையன்றி வறுமையால் தளர்ந்துவந்தவர்க்குக்கையிலுள்ள தோர்பொருளைக் கொடுக்க என்னைப்படைத்தாயில்லையே யென்பது கருத்து.

55. ஆங்காரமுமடங்காரொடுங்கார்பரமானந்தத்தே
தேங்கார்நினைப்புமறப்புமறார்தினைப்போதளவு
மோங்காரத்துள்ளொளிக்குள்ளேமுருகனுருவங்கண்டு
தூங்கார்தொழும்புசெய்யாரென்செய்வார்யமதூதருக்கே.

இ - ள். ஆங்காரமும் அடங்கார் - அகங்காரமுதலிய நான்கும் அடங்கப்பெறாதவரும், பரமானந்தத்தே ஒடுங்கார் - மேலாகிய இன்பத்தின் கண்ணே யொடுங்காதவரும், தேங்கு ஆர்நினைப்பும் மறப்பும் அறார் - நிறைதலைப்பொருந்திய நினைப்பையும் மறப்பையும் ஒழியாதவரும், தினைப்போது அளவும் - தினைப்பொழுதினளவாயினும், ஓங்காரத்து உள் ஒளிக்குள்ளே - பிரணவத்தினது உள்ளொளியின்கண், முருகன் உருவம்கண்டு-முருகக்கடவுளின் உருவத்தைத் தெரிசித்து, தூங்கார் - (அவ்விடத்தே)உறங்காதவரும், தொழும்புசெய்யார் - தொண்டுசெய்யாதவரும் ஆகிய இவர், யமதூதருக்கு - இயமனது தூதர்செய்யும் துன்பத்துக்கு, என்செய்வார்-யாது பரிகாரம் செய்துகொள்வார். எ - று.

அந்தக்கரணசதுஷ்டயத்தில் ஒன்றாகிய ஆங்காரமும் என்ற உம்மையால் மனம் புத்தி சித்தங்களாகிய மற்றைமூக்கரணங்களும் வருவிக்கப்பட்டன. தினை காலத்தின் சிற்றளவைக்குறித்து நின்றது. கரணசேஷ்டையொடுங்கி முருகக்கடவுளை நினைப்பு மறப்புக்களற்ற இடத்திற்கண்டு வணங்கி அவருக்குத் தொண்டுசெய்யாதவர், யமதூதர்செய்யும் துன்பத்துக்குப் பரிஹாரமாகயாதுசெய்யக் கடவர் என்பது கருத்து.

56. கிழியும்படியடற்குன்றெறிந்தோன்கவிகேட்டுருகி
யிழியுங்கவிகற்றிடாதிருப்பீரெரிவாய்நரகக்
குழியுந்துயரும்விடாய்ப்படக்கூற்றுவனூர்க்குச்செல்லும்
வழியுந்துயரும்பகரீர்பகரீர்மறந்தவர்க்கே.

இ - ள். கிழியும்படி - பிளவுபடும்படி, அடல்குன்று எறிந்தோன் - வலிமையுள்ள க்ரௌஞ்சகிரியை வேலாலெறிந்தவனாகிய முருகக்கடவுளின் விஷயமாகிய, கவி - பாடல்களை, கேட்டு உருகி - கேட்டு மனமுருகி, இழியும்கவிகற்றிடாது இருப்பீர்-இழிந்த வேறு விஷயமாகிய பாடல்களைக் கல்லாதிருக்கக்கடவீர், எரிவாய் நரகக்குழியும் துயரும் - எரிவாயாகிய நரகக்குழியையும் அதில்துன்பங்களையும், விடாய்ப்பட - விடாய்க்கும் படி, கூற்றுவன் ஊர்க்குச்செல்லும் - யமபுரத்துக்குப்போகின்ற, வழியும துயரும் - வழியையும் அதிற்றுன்பங்களையும், மறந்தவர்க்கு - (அறிஞர் சொன்னதைக்கேட்டு) மறந்தவர்களுக்கு, பகரீர பகரீர்-சொல்லீர் சொல்லீர்.

குமரவேள் விஷயமாகிய கவிகளைக்கற்பதும் வேறுகவிகளைக் கல்லாமையுமாகிய இவைகளைச்செய்யுங்கள், நரகவேதனைமுதலியவைகளை அறிஞர் சொல்லக்கேட்டு மறந்தவர்களுக்கு வற்புறுத்திச் சொல்லுங்கள் என்பது கருத்து.

57. பொருபிடியுங்களிறும்விளையாடும்புனச்சிறுமான்
றருபிடிகாவலசண்முகவாவெனச்சாற்றிநித்த
மிருபிடிசோறுகொண்டிட்டுண்டிருவினையோமிறந்தா
லொருபிடிசாம்பருங்காணதுமாயவுடம்பிதுவே.

இ - ள். (நெஞ்சமே) இரு வினையோம் இறந்தால் - இரு வினையையுடையோமாகிய நாம் இறந்தோமாயின், மாயஉடம்பு இது-மாயாகாரியமாகிய சரீரமென்னும் இது, ஒருபிடிசாம்பரும் காணது-ஒருபிடிசாம்பலுமாகாதொழியும், (ஆதலால்) பொரு - போர்செய்தற்குரிய, பிடியும்களிறும்-பெண்யானையும் ஆண் யானையும், விளையாடும்-விளையாடுதற்கிடமாகிய, புனச்சிறுமான் - புனத்தின்கண்ணுள்ள சிறிய மானுனது, தரு - பெற்ற, பிடி - பெண்யானைக்கு, காவல - தலைவனே, சண்முகவா - அறுமுகனே, எனச் சாற்றி - என்று உச்சரித்து, நித்தம் - நாள்தோறும், பிடிசோறுகொண்டு இட்டு - ஒரு பிடிசோற்றையாயினு மெடுத்து இரப்போர்க்குக்கொடுத்து, உண்டு - பிறகு நீ புசித்து, இரு - சும்மா இரு, எ - று.

இரப்போர்முதலியோர்க்கு கொடாதூட்டி வளர்த்தாலும் உடம்பு நிலைத்திராதென்றற்கு, "பிடிசோறுகொண்டிட்டுண்டிரு வினையோ மிறந்தால் ஒரு பிடிசாம்பருங்காணாது மாயவுடம் பிதுவே" என்றார். பிடி - வள்ளிநாயகி, இவள் மான்வயிற்றுதித்தமையால் 'மான்தருபிடி' என்றார். இந்த மாயவுடம்பைப் பேணாது இரப்போர்க்குக் கொடுத்து நீங்களுமுண்டு முருகக்கடவுளைத் துதித்திருங்கள் என்பது கருத்து.

58. நெற்றாப்பசுங்கதிர்ச்செவ்வேனல்காக்கின்றநீலவள்ளி
முற்றாத்தனத்திற்கினியபிரானிக்குமுல்லையுடன்
பற்றாக்கையும்வெந்துசங்க்ராமவேளுமபடவிழியாற்
செற்றார்க்கினியவன்றேவேந்த்ரலோகசிகாமணியே.

இ - ள். நெற்றாஅ - முதிர்காயாக, பசுங்கதிர செவ்வேனல் - பசுமையாகிய கதிர்களையுடைய செந்தினையை, காக்கின்ற - (ஒடியெறிந்து) காவல் செய்கிற, நீலவள்ளி - நீலநிறத்தையுடைய வள்ளிநாயகியின், முற்றாதனத்திற்கு - (என்றும்) முதிராததனங்களுக்கு, இனியபிரான் - இனிமையாகிய பெருமானும், சங்க்ராமம் - போரில் வல்லவனாகிய, வேளும்-மன்மதனும், இக்கு முல்லையுடன் - கருப்புவில முல்லை மலர்க்கணை இவைகளுடன், பற்றாக்கையும் வெந்து - பற்றாக்கையும் வெந்து, பட - இறக்கும்படி, விழியால் - நெற்றிக்கண்ணினால், செற்றார்க்கு-வென்றவராகிய சிவபெருமானுக்கு, இனியவன் - இனிமையாயிருப்பவனுமாகிய முருகக் கடவுள், தேவேந்தரலோகசிகாமணி - தேவேந்த்ரலோகத்துக்கு முடிமணிபோல் பவனுவன். எ - று.

நெற்றா - நெற்றாகாத எனினுமாம். முல்லையொன்றையே கூறினாராயினும், இனம்பற்றி, தாமரை, மா, அசோகு, நீலம் என்பவைகளாகிய நான்கும் உடன்கொள்ளப்படும். இவையே மன்மதனது பஞ்சபாணம் எனப்படுவன, இவற்றுள் தாமரைமலருக்கு நினைப்பூட்டுவதும், மாமலர்க்குப் பசலை நிறத்தையுண்டாக்குவதும், அசோகமலர்க்குஉணவுமுற்றும்வெறுக்கச்செய்வதும், முல்லைமலர்க்குக் கிடையாய்க்கிடக்கச் செய்வதும், நீலமலர்க்குக் கொல்லுவதும் குணங்களாம், இவை எய்யப்படுமிடங்கள், முறையே நெஞ்சு, கொங்கை, விழி, சிரம், அல்குல் என்பவைகளாம். இவைகளை, "நினைக்கு மரவிந்த நீள்பசலைமாம்பூ, அனைத்துணவு நீக்குமசோகு, வனத்திலுறும், முல்லைகிடைகாட்டுமாதே முழுநீலம், கொல்லுமதனம்பின் குணம்" "நெஞ்சிலரவிந்த நீள் சூதங் கொங்கையிலே, துஞ்சும் விழியில்சேர்கமலம், வஞ்சியர்தம், சென்னியிலே முல்லை திகழ் நீலமல்குலிலே, அன்னவேளெய்யுமியல்பாம்" என்னுஞ் செய்யுட்களானுணர்க. "மதன்

நீலக்கணையிற்கை வைத்தானினிச்சற்று நேரநிற்பிற்; காலற்கிரையிடு மென்றுவிளை" எனவும், "அனங்கனெய்த தன்னஞ்சிலம்புருவிலையல் லாது தணந்தனனே" எனவும் பிறர் கூறுதலுங்காண்க. வள்ளிகாதலனே, சிவகுருவே, தேவலோகத்தார்க்கு முடிமணியே, எம்மைக் காக்கவேண்டு மென்பது கருத்து வள்ளிகாதலன் தேவேந்த்ரலோகசிகாமணிஎன்பன இம் மைமறுமையின் பங்களைத்தருவோ னென்பதையும், இக்குழலிலை யுடன் பற்றுக்கையும் வெந்துசங்கராமவேளும்படவிழியாற் செற்றோர்க் கினியவன் என்பது வீடுபேறாகிய முத்தியின் பத்தைத்தருவோன் என்பதையும் குறி த்து நின்றன. பிரான், இனியவன், இவைகளை அண்மை விளியாக்கி, பிரா னே, இனியவனே என்றுரைப்பினுமாம். பற்றுக்கை - அம்பு கட்டுங்கயிறு.

59 பொங்காரவேலையில்வேலைவிட்டோனருள்போலுதவ
வெங்காயினும்வருமேற்பவர்க்கிட்டதிடாமல்வைத்த
வங்காரமுமுங்கள்சிங்காரவீடுமடந்தையருஞ்
சங்காதமோகெடுவீருயிர்போமத்தனிவழிக்கே.

இ - ள். (உலகத்தாரே) ஏற்பவர்க்கு இட்டது - இரப்போர்க்கு அளித்ததின்பயன், பொங்குஆர - பொங்குதல்பொருந்த, வேலையில் - கட லினமீது, வேலைவிட்டோன - வேற்படையையேவினவனாகிய முருகக் கடவுளின், அருள்போல் - திருவருள்போல, உதவ - உதவும்பொருட்டு, எங்கு ஆயினும்வரும் - எவ்விடத்தாயினும் வரும், (அவ்வாறு) இடாமல் வைத்த - கொடாமல்வைத்த, வங்காரமும் - பொன்னும், உங்கள் சிங்கார வீடும - உங்களுடைய அழகியவீடும், மடந்தையரும் - மாதரும், உயிர் போம் - உயிர்செல்லுகின்ற, அத்தனிவழிக்கு - அந்த ஒப்பற்ற வழிக்கு, சங்காதமோ - துணையாமோ. எ - று.

கெடுவீர் என்பது தன்மையில் கெட்டேனென்பதுபோல முன்னிலை யில் வரும் இரக்கப்பொருடருவ தோரிடைச்சொல். அன்றிவிளியெனி னுமமையும். உலகத்தாரே, ஏற்பவர்க்கிட்டது முருகவேளின் திருவருள் போல எவ்விடத்தும் உங்களுக்குதவும், மற்றைப்பொருள்கள் உங்களுக்குத வா என்பது கருத்து. வங்காரம் - பொன். இது திசைச்சொல்

60. சிந்திக்கிலேனின்று சேவிக்கிலேன்றண்டைச்சிற்றடியை
வந்திக்கிலேனொன்றும்வாழ்த்துகிலேன்மயில்வாகனனைச்
சந்திக்கிலேன்பொய்யைநிந்திக்கிலேனுண்மைசாதிக்கிலேன்
புந்திக்கிலேசமுங்காயக்கிலேசமும்போக்குதற்கே

இ - ள். புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கு - மனோ துக்கங்களையும் தேகதுக்கங்களையும் ஒழித்தற்பொருட்டு, மயில்வாகனனை - மயில்வாகனத்தையுடைய முருகக்கடவுளை, சிந்திக்கிலேன் - நினைக்கிலேன், நின்றுசேவிக்கிலேன், - நின்றுசேவியேன், தண்டைச்சிற்றடியை - தண்டையையணிந்த சிறிய திருவடியை, வந்திக்கிலேன் - வணங்கிலேன், ஒன்றும் வாழ்த்துகிலேன் - சிறிதும் துதிக்கிலேன், சந்திக்கிலேன் - கூடிலேன், பொய்யை நிந்திக்கிலேன் - பொய்க்காரியங்களைப் பழிக்கிலேன். உண்மை சாதிக்கிலேன் - உண்மையைச்சாதிக்கிலேன். எ - று.

மனோதுக்கம்-வியாகுலம் முதலாயின. தேகதுக்கம், பிணிமுதலாயின. சந்தித்தல் - ஆலயங்களிற்சென்று திவ்வியமங்கள விக்ரஹங்களைத் தரிசித்தல் முருகக்கடவுளை மனமுதலிய முக்கரணங்களானும் வழிபட்டேன்,யான் எவ்வாறு உட்புறக்க வலைகளை யொழித்துய்வேன் என்பது கருத்து.

61 வளையற்றவுணர்சிரமற்றுவாரிதிவற்றச்செற்ற
புளையற்றவேலவன்போதித்தவாபஞ்சபூதமுமற்
றுளையற்றுணர்வற்றுடலற்றுயிரற்றுபாயமற்றுக்
களையற்றிருளற்றெனதற்றிருக்குமக் காட்சியதே.

இ - ள். பஞ்சபூதம்அற்று ஐம்பெரும்பூதங்களும் அற, உளைஅற்று-சொல்லற, உணர்வுஅற்று - அறிவற, உடல்அற்று - உடம்பற,உயிர்அற்று-பிராணனற, உபாயம்அற்று - தந்திரமற, களைஅற்று - வரம்பற, இருள் அற்று - அந்தகாரமற, எனதுஅற்று - எனதென்பதற, இருக்கும் - தானேயாயிருக்கிற,அக்காட்சியது-அந்தஞானத்தையுடையதாகியதத்துவநிலையை, வளைஅற்று - க்ரௌஞ்சமலைபிளந்து, அவுணர்சிரம்அற்று - அரக்கர்தலைகள் அறுபட்டு, வாரிதிவற்ற - கடல் வறளும்படி, செற்ற – வென்ற, புளைஅற்ற வேலவன் - குற்றமற்ற வேலாயுதத்தையுடையவனாகிய முருகக்கடவுள், போதித்த ஆறு - எனக்கு அறிவுறுத்தினவாறு (என்னவியப்பு)எ-று.

தத்துவநிலையையுணரவே, பஞ்சபூதாதிகள் தாமே யொழியுமாதலால் இவ்வாறுகூறினார். முருகக்கடவுள் எனக்கறிவுறுத்தின உண்மைஞானம் பஞ்சபூதாதிகளை எனக்குப் பொய்யாய்த் தோற்றுவித்தது என்பதுகருத்து.

62 ஆலுக்கணிகலம்வெண்டலைமாலையகிலமுண்ட
மாலுக்கணிகலந்தண்ணந்துழாய்மயிலேறுமையன்
காலுக்கணிகலம்வானோர்முடியுங்கடம்புங்கையில
வேலுக்கணிகலம்வேலையுஞ்சூரனுமேருவுமே.

இ - ள். ஆலுக்கு - சிவபெருமானுக்கு, அணிகலம் - ஆபரணமாவது, வெள்தலைமாலையே - வெண்மையாகிய சிரமாலைகளே, அகிலம் உண்டமாலுக்கு - உலகத்தைவிழுங்கின திருமாலுக்கு, அணிகலம் - ஆபரணமாவது, தண் அம் துழாயே-குளிர்ந்த அழகிய துளசிமாலையே, மயில் ஏறும் ஐயன் - மயிலின்மேலேறுகிற கடவுளுடைய, காலுக்கு-திருவடிக்கு, அணிகலம் - ஆபரணமாவது, வானோர்முடியும் - தேவர்களுடையமகுடங்களும், கடம்புமே-கடப்பமலர்மாலையுமே, கையில்வேலுக்கு-அவன்கையிலுள்ள வேலாயுதத்துக்கு, அணிகலம், ஆபரணமாவது, வேலையும்-கடலும், சூரனும்-சூரபன்மனும், மேருவுமே - க்ரௌஞ்சமலையுமே, எ - று.

ஆல்உ எனப் பிரித்து, கல்லாலின்நிழலி லெழுந்தருளி யிருக்கிற சிவபெருமான் எனப்பொருள் கொள்க. அன்றி ஆலம் ஆல்எனக்குறைந்து நின்றதெனக்கொண்டு விஷத்தைப்பருகினவன் எனினுமாம். உ - சிவன். தேவரிடையறாது மிடைந்து வணங்கலால் வானோர் முடியுமென்றும், கடல்முதலிய மூன்றையு மழித்த ஆற்றலுண்மையால், வேலையுஞ் சூரனும மேருவும் என்றும் கூறினார். மேரு - ஈண்டுக் கிரௌஞ்சமலைக்காயிற்று. சிவபெருமான் முதலியோர்க்குப் பிறவாகிய அணிகலங்களுளவாயினும் இவை சிறந்தனவாதலால் இவ்வாறு கூறினார்.

63. பாதித்திருவுருப்பச்சென்றவர்க்குத்தன்பாவனையைப்
போதித்தநாதனைப்போர்வேலனைச்சென்றுபோற்றியுய்யச்
சோதித்தமெய்யன்புபொய்யோவழுதுதொழுதுருகிச்
சாதித்தபுத்திவந்தெங்கேயெனக்கிங்ஙன் சந்தித்ததே.

இ - ள். பாதிதிருவுரு - பாதியுருவம், பச்சென்றவர்க்கு - பச்சென்றிருப்பவராகிய சிவபெருமானுக்கு, தன்பாவனையை-தனது ஞானபாவனையை, போதித்தநாதனை-அறிவுறுத்தின இறைவனை, போர்வேலனை - போர்க்குரிய வேலையேந்தினவனை, சென்று போற்றி உய்ய - யான்போய்வணங்கிப்பிழைக்க, சோதித்த மெய்யன்பு - (அந்நாளில் அவர்) பரீக்ஷித்த உண்மையன்பு, பொய்யோ-பொய்யன்புதானோ, அழுதுதொழுது உருகி-(அந்நாளில் மெய்யன்புடையவர்போல்) அழுது பணிந்துருகி, சாதித்த புத்தி - சாதித்த மனமானது, எங்கேவந்து-எப்படிவந்து, எனக்கு இங்ஙன்சந்தித்தது-எனக்கு இவ்விடத்துக்கூடிற்று. எ - று.

பச்சென்று என்பதில் என்று பண்பில்வந்தது. பச்சைநிறமுள்ள உமாதேவியை ஒருபாகத்துடையவராதலால் பாதித்திருவுருப்பச் சென்றவர் என்றார். அக்காலத்தில், முருகக்கடவுளை அழுது தொழுதுருகிச்சாதித்த

மெய்யன்பானது இக்காலத்தில் இல்லையாயிற்றாதலால், மெய்யன்பர்போல நடித்தற்குக் காரணமாகிய மனம் அக்காலத்தில் எனக்கெப்படி யுண்டாயிற் றென்பது கருத்து.

64. பட்டிக்கடாவில்வருமந்தகாவுனைப்பாரறிய
வெட்டிப்புறங்கண்டலாதுவிடேன்வெய்யசூரனைப்போய்
முட்டிப்பொருதசெவ்வேற்பெருமாடிருமுன்புநின்றேன்
கட்டிப்புறப்படடாசத்திவாளென்றன் கையதுவே.

இ - ள். வெய்யசூரனை - கொடியசூரபன்மனை, போய்முட்டி பொருத - சென்றுதாக்கிப் போர்புரிந்த, செவவேல்பெருமாள்-செவந்த வேலாயுதத்தைத்தாங்கிய முருகக்கடவுளின், திருமுன்புநின்றேன் - சந்நிதிக்கெதிரில் நின்றேன், பட்டிக்கடாவில்வரும்-களவையுடைய எருமைக்கடாவின் மேலேறிவருகின்ற, அந்தகா - யமனே, உன்னை-உன்னை, பார்அறிய - உலகமறியும்படி, வெட்டி - துணித்து, புறங்கண்டு அல்லாது - முதுகுகண்டன்றி, விடேன் - விடமாட்டேன், சத்திவாள் - சத்தியாகிய வாளானது, என்கையது - என்கையினிடத்தது, கட்டிப்புறப்படடா - நீ உன்விருது முதலியவற்றைக் கட்டிக்கொண்டு வெளிப்படடா. எ - று.

பட்டி-வஞ்சம் எனினுமாம். பட்டிமையென்பது ஈறுகெட்டுப் பட்டியென நின்றது. சத்திவாள் - ஆற்றலாகியவாள் எனினும் பொருந்தும். கட்டியென்பதைக் கட்ட எனச்செய்தெனெச்சத்திரிபாக்கி, என்னை உன் கைப்பாசத்தாற் பிணிக்க என்றுரைத்தலு மொன்று கூற்றுவனே, முருகக் கடவுளது சந்நிதியில் நிற்கிறேன், அவரது வல்லமையாகிய வாளும் என் கையினிடத்தது ஆதலால் நீ என்மீது வருவையாயின் தோல்வியடைவா யென்பதுகருத்து.

65. வெட்டுங்கடாமிசைத்தோன்றும்வெங்கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும்பொழுதுவிடுவிக்கவேண்டுங்கராசலங்க
ளெட்டுங்குலகிரியெட்டும்விட்டோடவெட்டாதவெளி
மட்டும்புதையவிரிக்குங்கலாபமயூரத்தனே.

இ - ள். கராசலங்கள் எட்டும் - கைம்மலைகளெட்டும், குலகிரி எட்டும் விட்டு ஓட - அஷ்டகுலமலைகளையும் விட்டோடவும், எட்டாத வெளிமட்டும் புதைய - (கட்புலனுக்கு) எட்டாத ஆகாயம் வரைக்கும் மறையவும், விரிக்கும் - விரித்த, கலாபம் - தோகையையுடைய, மயூரத்தனே - மயிலையுடையவனே, வெட்டும் - கொலைசெய்கின்ற, கடாமிசைத் தோன்றும்-எருமைக் கடாவின்மேலேறிவருகிற, வெம் கூற்றன்-கொடிய

யமனானவன், விடும கயிற்றால் - வீசுகின்ற தன்கைப்பாசத்தினால், கட்டும் பொழுது - (என்னைப்) பிணிக்கும்போது, விடுவிக்கவேண்டும் - என்னை அவனகையினின்றும் விடுவித்தருளவேண்டும். எ - று.

கைம்மலைகள் எட்டு - அஷ்டதிக்குயானைகள். அவை:—ஐராவதம், புண்டரீகம், வாமநம், குமுதம், அஞ்சநம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் என்பன. இவற்றிற்கு முறையே பெண்யானைகளாவன-அப்பிரமை,கபிலை பிங்கலை,அநுபமை,தாமிரபர்ணி,சுதந்தி, அஞ்சனை,அஞ்சனாவதி எனபன. குலகிரிகள் எட்டாவன-கைலை,இமயம,மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம, நீலகிரி,கந்தமாதநம என பன. மயிலதன்தோகையைவிரித்தலாலுண்டாகிற காற்றினால்அஷ்டதிக்கு யானைகளும்அஷ்டதிக்குமலைகளைவிட்டோடினவென்றதாயிற்று. யானைகள் ஓடினதுபோல மலைகளும் ஓடினவெனப்பொருளகொள்ளின் ஓடுதல்நிலைபெயர்தலாகக்கொள்க. அன்றி யானைகளும் மலைகளும பூமிபாரத்தைத் தாஙகுவதை விட்டு ஓடவெனினும் அமையும். வெட்டுதல-கொம்பினால் குத்துதலென்றலுமாம். கூற்றுவன் என்னைத தன்பாசததால பிணிக்கிறமரணகாலத்தில்,அவன் கையினின்றும் என்னை விடுவிக்கவேணடு மென்பது கருத்து.

66. நீர்க்குமிழிக்குநிகரென்பர்யாக்கைநில்லாதுசெல்வம்
பார்க்குமிடத்தந்தமின்போலுமெனபர்பசித்துவந்தே
யேற்குமவர்க்கிடவென்னினெங்கேனுமெழுந்திருப்பார்
வேற்குமரற்கன்பிலாதவர்ஞானமிகவுநன்றே

இ - ள். யாக்கை நீர்க்குமிழிக்கு நிகர் என்பர் - சரீரமானது நீர்க்குமிழிக்குச் சமானமென்பார்கள், செல்வம் - செல்வமானது, நில்லாது-நிலைத்திராது, பார்க்கும் இடத்து-இதனை ஆராய்ந்து பார்க்குமிடத்தில், அந்தமினபோலும என்பர் - அந்தமின்னலை நிகர்ககு மென்பார்கள், (இவ்வாறு நிலையாமையையுணர்ந்துபிறர்க் கறிவுறுத்தினவர்கள்) பசித்து வந்து ஏற்குமவர்க்கு இட என்னின்-பசித்து வந்து இரப்பவர்க்கு இடவேண்டு மென்றால், (விருப்பமின்றி) எஙகு ஏனும் - எவ்விடத்துக் காயினும், எழுந்திருப்பார் - எழுந்து போவார்கள், (ஆதலால்) வேல்குமரன்கு - வேலையேந்திய குமாரக் கடவுளிடத்து, அன்பு இல்லாதவர் - பத்தியில்லாதாருடைய, ஞானம் - ஞானமானது, மிகவும் நன்று - மிகவும் அழகிது. எ - று.

முருகக் கடவுளிடத் தன் பில்லாதவர் பேசும் ஞானம் வாசாஞானமேயன்றி மெய்ஞ்ஞான மன்றென்பது கருத்து.

67. பெறுதற்கரியபிறவியைப்பெற்றுநின்சிற்றடியைக்
குறுகிப்பணிந்துபெறக்கற்றிலேன்மதகும்பகம்பத்
தறுகட்சிறுகட்சங்க்ராமசயிலசரசவல்லி
யிறுகத்தழுவுங்கடகாசலபன்னிருபுயனே.

இ-ள். மதம் - மதத்தையும், கும்பம் - கும்பஸ்தலத்தையும் உடைய, கம்பம் - கட்டுத்தறியிற்கட்டப்படுகிற, தறுகண் - அஞ்சாமையும், சிறுகண் - சிறியகண்களுமுள்ள, சங்க்ராமசயிலம - போரமலையினிடத்துப்பிறந்த, சரசவல்லி - சரசநாயகியாகிய தெய்வயானையை, இறுகத்தழுவும - இறுக ஆலிங்கநம்பண்ணுகிற, கடகம் - கடகத்தையணிந்த, அசலம - மலைபோன்ற, பன்னிருபுயனே - பன்னிருதோள்களை யுடையவனே, பெறுதற்கு அரிய பிறவியைப்பெற்றும்-அடைதற்கரிதாகிய மானிடப்பிறவியையடைந்தும், நின்சிற்றடியை - உனசிறியதிருவடியை, குறுகி - அணுகி, பணிந்து - வணங்கி, பெற-(பெறுதற்குரிய வீடு பேறறைப்) பெறுவதற்கு, கற்றிலேன் - கற்றேனில்லை, எ - று.

சயிலம் என்பது சங்க்ராமமென்னும் விசேடணத்தால் யானையையுணர்த்தி, அது, சரசவல்லியென மேல்வருதலால் ஐராவதத்தையுணர்த்திற்று. கும்பஸ்தலததை மத்தகமென்றுங் கூறுதலுண்டு. மானிடப்பிறவி பெறுதற்கரியதென்பதை, "பெறுதற்கரிய பிறப்பீது" "எறியுங்கடலினுகத் தொளையிலியாமைக் கழுத்துப்புகுவதுபோற், பொறிவெம் பிறவியநேகத் தாற் புருடன் விவேகியெனப்பிறந்து" என்றற்றொடக்கத் தனவற்றாற் காண்க.

68. சாடுஞ்சமரத்தனிவேன்முருகன்சரணத்திலே
யோடுங்கருத்தையிருத்தவல்லார்க்குகம்போய்ச்சகம்போய்ப்
பாடுங்கவுரிபவுரிகொண்டாடப்பசுபதிநின்
றாடும்பொழுதுபரமாயிருக்குமதீதத்திலே.

இ-ள். ஓடும்கருத்தை - ஓடுமியல்புள்ளமனத்தை, சமரம் சாடும் - யுத்தகளத்தில் பகைவரையழிக்கின்ற, தனிவேல் - தனிமையாகிய வேற்படையையுடைய, முருகன் - முருகக்கடவுளின், சரணத்திலே - திருவடியின்கண்ணே, இருத்தவல்லார்க்கு - இருத்தவல்லவர்க்கு, (பதமுத்தி சித்தியாயிருத்தலேயன்றி) உகம்போய் - யுகமுடிவுபெற்று, சகம்போய் - உலகம்முடிவுபெற்று, பாடும்கவுரி-பாடாநின்றகவுரியானவள், பவுரிகொண்டாட - (தானும்) பவுரிக்கூத்தை மெச்சாநிற்க, அதீதத்தில் - தத்துவாதீதநிலையில், பசுபதி - சிவபெருமான், நின்று ஆடும்பொழுது - நின்று நடனம்பண்ணும்போது, பரமாய் இருக்கும் - பரமுத்தியுஞ் சித்தியாயிருக்கும். எ - று.

பவுரி - ஒருவகைக்கூத்து, இதுவலமிடமாகச் சுழன்றுமேவது. தத்துவாதீதம்-தத்துவங்களைக்கடந்தநிலை, பசுபதிநின்று ஆடும்பொழுது என்றது சருவசங்காரகாலத்தை. ஒடுங்கருத்தை யிருத்தவல்லார் - யோகிகள். முருகக்கடவுளின் திருவடியின்கண்ணே தம்மனத்தை யிருத்தவல்லார்களாகிய யோகிகளுக்குப் பதமுத்திகளேயன்றிச் சருவசங்காரகாலத்தில் பரமுத்தியும் கிடைக்குமென்பது கருத்து.

பசு - ஆன்மா, பதி - இறைவன்.

69. தந்தைக்குமுன்னந்தனிஞானவாளொன்றுசாதித்தருள்
கந்தச்சுவாமியெனைத்தேற்றியபின்னர்க்காலன்வெம்பி
வந்திப்பொழுதென்னையென்செயலாஞ்சத்திவாளொன்றினாற்
சிந்தத்துணிப்பன்றணிப்பருங்கோபத்ரிசூலத்தையே.

இ - ள். தந்தைக்கு-(பரமசிவனாகிய தன்)பிதாவுக்கு,முன்னம்-முன்னே, தனி-ஒப்பற்ற, ஞானவாள் ஒன்று-ஞானவொளியொன்றை, சாதித்தருள் - உபதேசித்தருளிய, கந்தச்சுவாமி - முருகவேள்,என்னைத் தேற்றிய பின்னர் - என்னை ஞானோபதேசத்தால் தெளிவித்த பிறகு, காலன் - யமனானவன், வெம்பிவந்து - கோவித்துவந்து, இப்பொழுது-இப்போது, என்னை என்செயல் ஆம் - என்னை யென்ன செய்யலாம், தணிப்பு அரு கோபம் - தணித்தற்கரிதாகிய கோபத்தையுடைய, த்ரிசூலத்தை - (அவனது) த்ரிசூலத்தை, சத்திவாள் ஒன்றினால் - (அந்தக் கந்தசுவாமியின்) சத்திவாள் ஒன்றைக்கொண்டே, சிந்தத்துணிப்பன் - உதிரும்படி துண்டித்து விடுவேன். எ - று.

சாதித்தல் - உள்ளத்தழுத்தல் எனினுமமையும். த்ரிசூலம்-முத்தலைச்சூலம். சிவகுருவாகிய கந்தவேள் எனக்கு ஞானோபதேசம் செய்தருளினமையால், இயமன்வந்து என்னை யென்ன தீமையிழைக்கலாகும், அவனது முத்தலைச் சூலத்தைக் கந்தச்சுவாமியுடைய சத்தியாகிய வாளொன்றினால் துணித்து விழுத்தி அவனைத்தோல்வியடையச்செய்வேன் என்பதுகருத்து.

70. விழிக்குத்துணைதிருமென்மலர்ப்பாதங்கண்மெய்ம்மைகுன்றா
மொழிக்குத்துணைமுருகாவெனுநாமங்கண்முன்புசெய்த
பழிக்குத்துணையவன்பன்னிருதோளும்பயந்ததனி
வழிக்குத்துணைவடிவேலுஞ்செங்கோடன்மயூரமுமே.

இ - ள். விழிக்குத்துணை - என் கண்களுக்குத் துணையாவது, செங்கோடன் திருமென் மலர்ப்பாதங்களே-திருச்செங்கோட்டையுடைய முருகக்கடவுளுடைய அழகாகிய மெல்லிய தாமரைமலர்போன்ற திருவடிகளே, மெய்ம்மை குன்றாமொழிக்குத் துணை - (எனது) உண்மைகுறையாத மொழிக்குத் துணையாவது, முருகா எனும நாமங்கள் - (அவனுடைய

முருகா என்னுந்திருநாமங்களே, முன்பு செய்தபழிக்குத்துணை - யான் முற்பிறப்பிற்செய்த பாவத்தை நீக்குதற்குத் துணையாவது, அவன் பன்னிருதோளும்-அவனுடைய பன்னிருபுயங்களுமே, பயந்த-யான் அஞ்சுதற்குரிய, தனிவழிக்குத்துணை - தனிவழிக்குத்துணையாவது, வடிவேலும் மயூரமுமே - அவனது வடித்தவேலும் மயிலுமே. எ - று.

வடியென்பதைப் பெயராக்கிக் கூர்மையெனப் பொருளுரைப்பினும மையும். முருகக்கடவுளின் திருவடிகள் தமது அன்புமிகுதியால் உருவெளித்தோற்றமாய்க் கட்புலப்படுதலால் விழிக்குத்துணை திருமென்மலர்ப்பாதங்கள் என்றும், அவர்திருநாமங்கள் வாக்கிலிருத்தலால் மொழிக்குத் துணை முருகாவெனுநாமங்கள் என்றும், தீயாரைவெருளும் படைகளோடு கூடிய அவர் திருத்தோள்கள் வினைக்குப்பற்றுக் கோடாகிய புத்தியிற் பதிந்திருத்தலால் முன்பு செய்த பழிக்குத்துணையவன் பன்னிருதோள்கள் என்றும், வேலுமயிலுந்துணை யென்பது தனிவழியிலுண்டாகும அச்சத்தைத் தவிர்த்தலால் பயந்த தனிவழிக்குத்துணை வடிவேலுமயூரமும் என்றும் கூறினர். முருகவேளின் திருவடிமுதலியவை என் கண்முதலியவற்றிற்குத் துணையாகு மென்பது கருத்து.

**71.** துருத்தியெனும்படிகும்பித்துவாயுவைச்சுற்றிமுறித்
தருத்தியுடம்பையொறுக்கிலென்னுஞ்சிவயோகமெனுங்
குருத்தையறிந்துமுகமாறுடைக்குருநாதன்சொன்ன
கருத்தைமனத்திலிருத்துங்கணடீர்முத்திகைகண்டதே.

இ - ள். உடம்பை துருத்தி என்னும்படி-உடம்பை (கன்மயோகஞ் செய்வோரே, தோலினுற்செய்யப்பட்ட) துருத்தியென்று சொல்லும் படி, வாயுவைகும்பித்து - காற்றைக்கும்பித்து, சுற்றி - சுழற்றி, முறித்து - முறியப்பண்ணி, அருத்தி - ஐமபுல ஆசையை, ஒறுக்கில் என் ஆம் - அடக்கினல் என்னபயனுண்டாம், சிவயோகம் என்னும் - சிவயோகமென்கிற, குருத்தை அறிந்து - குருத்தையுணர்ந்து (அதிற்பயின்று), முகம்ஆறுஉடை- ஆறுமுகங்களேயுடைய, குருநாதன்சொன்ன - குருதேசிகன் உபதேசித்தருளிய, கருத்தை - தாற்பரியத்தை, மனத்தில் இருத்தும் - (நீங்கள் உங்கள்) உள்ளத்தில் நிறுத்துங்கள், (அப்படிசெய்வீராயின்) முத்திகைகண்டதே - மோக்ஷலாபம் கைகூடினதேயாகும், எ - று.

கும்பித்தல் - பிராணவாயுவைச் சமப்படுத்தியடக்கல். கன்மயோகத்தால் பயனில்லையாதலால், உடம்பைத் துருத்தியெனும்படி கும்பித்து வாயுவைச்சுற்றி முறித்தருத்தி யொறுக்கிலென்னும் என்றும், சிவயோகமானது குருத்துப்போலத் திருவருளால் வளர்தலால் சிவயோகமெனுங் குரு

த்து என்றும் கூறினர். கைகண்டது - சித்தித்தது. கன்மயோகஞ்செய்வோரே, சிவயோகத்திற்பழகி, முருகவேள் திருவாய்மலர்ந்தருளிய வுபதேசவுண்மையை மனத்திலிருத்துங்கள், இப்படிசெய்வீர்களாயின், உங்களுக்கு மோக்ஷலாபம் சித்திக்கும் என்பது கருத்து.

**72.** சேந்தனைக்கந்தனைச்செங்கோட்டுவெற்பனைச்செஞ்சுடர்வேல்
வேந்தனைச்செந்தமிழ்நூலவிரித்தோனைவிளங்குவள்ளி
காந்தனைக்கந்தக்கடம்பனைக்கார்மயில்வாகனனைச்
சாந்துணைப்போதுமறவாதவர்க்கொருதாழ்விலையே.

இ - ள் சேந்தனை - சேந்தனை, கந்தனை - கந்தனை, செங்கோட்டு வெற்பனை-திருச்செங்கோட்டு மலையையுடையவனை, செம்சுடாவேல் வேந்தனை - செவந்த ஒளியுள்ள வேற்படையையுடைய இறைவனை, செந்தமிழ் நூல்விரிதத்தோனை-செந்தமிழ் நூல்களை (அகத்தியருக்கு) விரித்துரைத்தருளினவனை, விளங்கு வள்ளிகாந்தனை - (அழகினால) பிரகாசிக்கிற வள்ளிமணாளனை, கந்தக் கடம்பனை - பரிமளமுள்ள கடப்பமலர்மாலையையணிந்தவனை, கார்மயிலவாகனனை - கரியமயில்வாகநத்தை யுடையவனை, சாந்துணைப்போதும் - இறசகுமெல்லையளவும, மறவாதவர்க்கு - மறவாம விருப்பவர்க்கு, ஒருதாழவு இல்லை - ஒருகுறைவிலலை, எ - று.

சேந்தன் - செம்மைநிறமுள்ளவன், கந்தன் - ஆறுருவுமொன்ருகக் கூடினவன், அன்றி, பகைவரையழிப்பவன் எனினும், தெய்வப்பெண்ணின் தரிசநத்தால்ஸ்கலிதமான சிவவீரியத்தால் உற்பவித்தவன் எனினும் அமையும். சாந்துணைப்போது - இறக்குங்காலத்தில் என்றலுமொன்று. முருகவேளை மரணகாலத்தில் மறவாதவாக்கு ஒருகுறைவுமில்லையென்பது கருத்து.

**73.** போக்கும்வரவுமிரவும்பகலும்புறம்புமுள்ளும்
வாக்குமவடிவுமுடிவுமில்லாதொன்றுவந்துவந்து
தாக்குமனோலயந்தானேதருமெனைத்தன்வசத்தே
யாக்குமறுமுகவாசொல்லொணாதிந்தவானந்தமே.

இ - ள். அறுமுகவா - ஷண்முகா, போக்கும்வரவும் - போதலும் வருதலும், இரவும்பகலும் - அல்லும்பகலும், புறம்பும் உள்ளும் - வெளியும் உள்ளும், வாக்கும் - சொல்லும், வடிவும் - உருவமும், முடிவும் - இறுதியும், இல்லாது ஒன்று - இல்லாததாகியஒருபொருள், வந்துவந்துதாக்கும்-வந்துவந்து (என்னைப்) பொருந்தாநிற்கும், மனோலயம்தானேதரும் - (எனக்கு)மனவொடுக்கத்தைத் தானேயுண்டாக்கும், என்னைத் தன்வசத்தே ஆக்கும் - என்னைத்தன் அதீநப்படுத்தும், இந்த ஆநந்தம் சொல்லொணாது - இந்தப்பேரின்பத்தின் தன்மையைச் சொல்லவொண்ணாது, எ - று.

ஒன்று-திருவருள். ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுளே, போக்குவரவுமுதலிய விவகாரங்கள் இல்லாத உனதிருவருள் என்கிற ஒருபொருள், பலகால்வந்து என்னைத்தாக்கித் தன்வயப்படுத்தி மனோலயத்தையுண்டாக்கிப் பேரின்பத்தைத் தராநின்றது என்பதுகருத்து.

74. அராப்புனைவேணியன்சேயருள்வேண்டுமவிழ்ந்தவன்பாற்
குராப்புனைதண்டையந்தாடொழவேண்டுங்கொடியவைவர்
பராக்கறல்வேண்டுமனமும்பதைப்பறல்வேண்டுமென்றால்
இராப்பகலற்றவிடத்தேயிருக்கையெளிதலவே.

இ - ள். (சீவன்முத்திநிலையிலிருத்தற்கு) அராபுனை வேணியன்சேய் அருள்வேண்டும் - பாம்பையணிந்த சடையையுடைய சிவபெருமானுக்குப் புதல்வனாகிய முருகக்கடவுளது திருவருள்வேண்டும், அவிழ்ந்தஅன்பால் - விரிந்தஅன்பினால், குராபுனை - குராமலரையணிந்த, தண்டை-தண்டையோடுகூடிய, அம் - அழகிய, தாள் -(அவனது) திருவடியை, தொழல்வேண்டும் - வணங்கவேண்டும், கொடியஐவர் - கொடுமையையுடைய (புலன்களாகிய) ஐவரது, பராக்கு - புறத்தொழில், அறல்வேண்டும் - கெடுதல்வேண்டும், மனமும்பதைப்பு அறல்வேண்டும் - மனமும்துடித்தலையொழியவேண்டும், என்றால் - என்னுமிடத்து, இராப்பகல் அற்றஇடத்து- இராப்பகல்களில்லாத அந்தஇடத்தில், இருக்கை- இருத்தல், எளிது அல்ல- எளிதாகிய காரியமன்று, எ-று.

இராப்பகல்களற்றுச் சதோதயமாகிய இடத்திலிருத்தற்கு முருகக்கடவுளது திருவருள்முதலியனவேண்டும் என்பது கருத்து.

75. படிக்கின்றிலைபழனித்திருநாமம்படிப்பவர்தாள்
முடிக்கின்றிலைமுருகாவென்கிலைமுசியாமலிட்டு
மிடிக்கின்றிலைபரமானந்தமேற்கொளவிம்மிவிம்மி
நடிக்கின்றிலைநெஞ்சமேதஞ்சமேதுநமக்கினியே.

இ - ள். நெஞ்சமே - மனமே, பழனிதிருநாமம் - (முருகக்கடவுளது) திருப் பழனியென்னும் திருநாமத்தை, படிக்கின்றிலை - படனம் பண்ணுகின்றிலை, படிப்பவர்தாள்-படனம் பண்ணுவோருடைய திருவடியை, முடிக்கின்றிலை - சிரத்தில் முடிமாலையாக அணிகின்றிலை, முருகா என்கிலை- முருகாவென்று (அவனை) அழைக்கின்றிலை, முசியாமல் இட்டுமிடிக்கின்றிலை- வறியார்மெலியாமல் உணவுமுதலிய வற்றைக்கொடுத்து நீவறுமையடைகின்றிலை, பரமானந்தம்மேற் கொள்ள - பரமசுகம் அதிகரிக்க, விம்மிவிம்மி- அழுதழுது, நடிக்கின்றிலை - கூத்தாடுகின்றிலை, இனிநமக்கு தஞ்சம் ஏது- இனிநமக்குப் பற்றுக் கோடாவதுயாது. எ - று.

பழனி - முருகக்கடவுளது ஆறு திருப்பதிகளில் ஒன்றாகிய திருவா வினன்குடி. மனமே, நீ முருகக்கடவுளது திருப்பதியாகிய திருவாவினன் குடியை நினைத்தல் முதலிய வற்றைச் செய்கின்றிலை, இனிநமக்குத் தஞ் சமயாது என்பது கருதது.

**76.** கோடாதவேதனுக்கியான்செய்தகுற்றமென்குன்றெறிந்த
தாடாளனேதென்றணிகைக்குமரநின்றணடையந்தாள்
சூடாதசென்னியுநாடாதகண்ணுந்தொழாதகையும்
பாடாதநாவுமெனக்கேதெரிந்துபடைத்தனனே.

இ - ள். குன்று எறிந்ததாடாளனே-க்ரௌஞ்சகிரியைப் பிளந்த ஊக்கமுடையானே, தென்தணிகைகுமர - தென்றணிகையில் வாழ்கின்ற குமாரககடவுளே, நின் தணடை அமதாள் - உன் தண்டையணிந்த திரு வடியை, சூடாதசென்னியும - (முடிமலராகத்) தரிக்காத தலையையும, நாடாதகண்ணும்-(உன் திருவடியை) நோககாத கண்ணையும், தொழாதகை யும - (உனதிருவடியைக் கூபபி) வணங்காதகையையும், பாடாதநாவும் - (உன்திருவடிப்புகழைப) பாடாதநாவையும், எனக்கே தெரிந்துபடைத்த னன் - எனக்கே ஆராய்ந்துபடைத்தான், கோடாத வேதனுக்கு - (தன் முறைமையிற்) கோடுதலில்லாத பிரமனுக்கு, யான் செய்த குற்றம் என் - நானசெய்த பிழையாது. எ - று.

முருகக்கடவுளே, உனதிருவடியைச் சூடாத சென்னிமுதலிய வற் றைப் பிரமன் எனக்குப் படைததனன், அவனுககு யான்செய்த குற்றம் யாதோ அறிகிலேன் என்பது கருத்து.

**77.** சேல்வாங்குகண்ணியர்வண்ணப்பயோதரஞ்சேரவெண்ணி
மால்வாங்கியேங்கிமயங்காமலவெள்ளிமலையெனவே
காலவாங்கிநிற்குங்களிற்றான்கிழத்திகழுத்திற்கட்டு
நூலவாங்கிடாதன்றுவேலவாங்கிபூங்கழனோக்குநெஞ்சே.

இ - ள். சேல்வாங்கு கண்ணியர் - சேல் மீனின்தன்மையைக் கவர்ந்து கொண்ட கண்களையுடையமாதரது, வண்ணம்-அழகாகிய, பயோ தரம் - ஸ்தனங்களை, சேர எண்ணி - தழுவக்கருதி, மால் வாங்கி ஏங்கி - மயக்கங்கொண்டு ஏக்கமுற்று, மயங்காமல் - திகையாமல், வெள்ளிமலை எனவே - வெள்ளிமலையென்றே சொல்லும்படி, கால்வாங்கி நிற்கும்-கால் களைக்கொண்டு (நிற்பதுபோல) நிற்கிற, களிற்றான் - வெள்ளை யானையை யுடையவனாகிய இந்திரனுக்கு, கிழத்தி - மனைவியாகிய இந்திராணி யின், கழுத்தில் கட்டும் - கழுத்திற் கட்டிய, நூல் - மங்கலநாணை வாங்கிடாது-வாங்காமலிருக்கும்படி, அன்று-அக்காலத்தில், வேல்வாங்கி

(அவனுக்குப் பகைவராகிய அசுரர்மீது) வேலெடுத்தவனாகிய முருகக் கடவுளின், பூகழல்-தாமரைமலர் போன்ற திருவடியை, நெஞ்சே நோக்கு-மனமே கருதுவாயாக (நோக்கினால் முத்திசித்திக்கும்.) எ - று.

இந்திரனது யானை வெண்ணிற முள்ளதாதலால் வெள்ளிமலையென, என்றார். வெள்ளிமலை - கைலாயம். கிழத்தி - மனையுறமெல்லாவற்றிற்கும் உரியவள். வாங்கி - வாங்கினவன். பூங்கழல் - அழகாகிய திருவடியெனினுமாம். திருவடிக் கழகாவது அடைந்தாரை யுய்வித்தல். மனமே, பந்தத்துக் கேதுவாகிய மாதர்மயக்கத்தையொழித்து, முத்திக்கேதுவாகிய முருகக்கடவுளின் திருவடியைக் கருது வாயென்பது கருத்து.

78. கூர்கொண்டவேலனைப்போற்றுமலேற்றங்கொண்டாடுவீர்காள்
போர்கொண்டகாலனுமைக்கொண்டுபோமன்றுபூண்பனவுந்
தார்கொண்டமாதருமாளிகையும்பணச்சாளிகையு
மார்கொண்டுபோவரையோகெடுவீர்நும்மறிவின்மையே.

இ - ள். கூர்கொண்டவேலனைப்போற்றுமல்-கூர்மையைக்கொண்ட வேற்படையையுடைய முருகக்கடவுளை வணங்காமல், ஏற்றம் கொண்டாடுவீர்காள் - (உங்களால் அணியப்படுவனமுதலிய வற்றால்) நும் உயர்ச்சியைக்கொண்டாடுவோர்களே, போர்கொண்டகாலன் - போர்த்தொழிலைத்தனக்குரிமையாகக் கொண்டயமன், உமை கொண்டுபோம் அன்று - உங்களைத் தன்கைப்பாசத்தால் கட்டிக்கொண்டுபோகிற அந்தமரணகாலத்தில், பூண்பனவும்-(உங்களால்) அணியப்படுமவற்றையும், தார்கொண்டமாதரும்-பூமாலையையணிந்தமடவாரையும்,மாளிகையும்-வீட்டையும்,பணச்சாளிகையும் - பணப்பையையும், ஆர்கொண்டுபோவர் - எவர் கொண்டுபோகக் கடவர், ஐயோகெடுவீர் - ஐயோகெடுவீர்காள், நும் அறிவின்மைஏ - உமது அறிவில்லாமையிருந்தவாறு எனனே. எ - று.

ஐயோ, கெடுவீர், ஏ, மூன்றும் இரக்கப் பொருள் தருமிடைச் சொற்கள். ஏற்றம் - நானே உயர்ந்தவனென்னும உள்ளக்கிளர்ச்சி. பூண்பன முதலிய வற்றால் உங்கள் மேன்மையைக் கொண்டாடி, முருகக்கடவுளை வணங்காதிருக்கின்றீர்களே, உங்களைக்காலன் கொண்டுபோம்போது இவைகள் உங்களோடுவருமோ,ஐயோ,உங்களறியாமையிருந்த வாறென்னையென்பது கருத்து.

79. மத்தமங்கையர்செங்கயற்பார்வையிற்பட்டுழலுஞ்
சித்தங்குலைந்தனைத்தீர்த்தருள்வாய்செய்யவேன்முருகா
கொத்தார்கடம்புபுடைசூழ்திருத்தணிக்குன்றினிற்குங்
கந்தாவிளங்குமராவமராவதிகாவலனே.

இ - ள். செய்யவேல் முருகா - செவந்த வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளே, கொந்து ஆர்-பூங்கொத்துகள் நிறைந்த, கடம்பு-கடம்ப மரங்கள், புடைசூழ் - பக்கங்களில் வளர்ந்த, திருத்தணிக்குன்றில் நிற்கும் - திருத்தணிமலையில் நிலைத்திருக்கிற, கந்தா - கந்தனே, இளங்குமரா - இளமையாகிய குமரவேளே, அமராவதிகாவலனே-அமராவதிநகரத்துக்கு அரசனே, பந்து ஆடும் - பந்தாட்டமாடுகின்ற, மங்கையர் - மாதர்களுடைய, செங்கயல் - செவந்த சேல் மீன்போன்ற, பார்வையில் பட்டு - கண்ணாகிய வலையிலகப்பட்டு, உழலும் - சுழல்கின்ற, சிந்தாகுலந்தனை - (என்) மனோவியாகுலத்தை, தீர்த்தருள்வாய் - நீக்கியருள்வாய். எ - று.

அமராவதிக்குக் காவலன் இந்திரனேயாயினும், அவன் அவ்விடத்து நிலைபெறச்செய்தவர் இவராதலால் அமராவதி காவலனே என்றும், கண் பிறழ்ச்சியாலும் உருவத்தாலும் நிறத்தாலும் மீனை ஒத்திருத்தலால் செங்கயற்பார்வை "என்றும், செவ்வரிபடர்ந்திருத்தலால் செங்கயல் என்றும் கூறினார். உழலல் - மான்போலவும் மீன்போலவும் உழலல். இதை, "வலைத்தலைமானன்ன நோக்கியர் கண்ணின் வலையிற்பட்டு" எனவும், "காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து வீசின போதுள்ள மீனிழந்தார்" எனவும் வருவனமுதலியவற்றாற்காண்க. சிந்தா ஆகுலம் என்க் பிரிக்க. முருகக்கடவுளே, மாதர்மயக்கத்தினால் வருந்துகின்ற என்மனவருத்தத்தை நீக்கியருளவேண்டும் என்பது கருத்து.

80. மாகத்தைமுட்டிவருநெடுங்கூற்றன்வந்தாலென்முன்னே
தோகைப்புரவியிற்றோன்றிநிற்பாய்சுத்தநித்தமுத்தித்
த்யாகப்பொருப்பைத்த்ரிபுராந்தகனைத்த்ரியம்பகனைப்
பாகத்தில்வைக்கும்பரமகல்யாணிதன்பாலகனே.

இ - ள். சுத்தநித்த முத்தி - சுத்தமும் நித்தமுமாகிய முத்திப்பொருளை, த்யாகப்பொருப்பை - (தன் அன்பர்க்குக்) கொடுக்கின்ற மலையை, த்ரிபுராந்தகனை - திரிபுரநாசகனை, த்ரியம்பகனை - முக்கண்ணனை, பாகத்தில்வைக்கும்-(தன்வலப்) பாகத்தில் வைக்கின்ற, பரமகல்யாணிதன் பாலகனே - மேலாகிய மங்கள குணங்களையுடையவளாகிய உமாதேவியின் புதல்வனே, மாகத்தை முட்டிவரும்-ஆகாயத்தை முட்டிவருகின்ற,நெடுங் கூற்றன் வந்தால் - நீண்டயமன் (இறுதிக்காலத்து எருமைக்கடாவின் மீதேறி) வந்தால், என்முன்னே - எனக்கெதிரில், தோகைப்புரவியில் - மயிலாகிய குதிரையின் மீது ஏறிவந்து, தோன்றி நிற்பாய் - (அப்பொழுது) தரிசனம் தந்து நிற்பாயாக. எ - று.

முன்னொருகால் ஒருவரால் தோல்வியடைந்தவன், பின்பு அவன் புதல்வர் முதலானோரைக்காணினும் அஞ்சுவனாதலால், பரமசிவனால் முன்னொருகால் தோல்வியடைந்த கூற்றுவன் முருகக்கடவுளைக் கண்டால் அஞ்சுவனென்பது கருதி இவ்வாறு வேண்டிக் கொண்டனர்போலும். மாகத்தை முட்டியென்றது அவனுருவப் பெருமையை வற்புறுத்தற்கு. முருகக்கடவுளே, இயமன் தன்வாகனத்திலேறி வருங்காலத்தில் நீயும் உன்வாகனத்தின் மீதேறி எனக்கெதிரே வரவேண்டுமென்பது கருத்து.

81. தாராகணமெனுந்தாய்மாரறுவர்தருமுலைப்பா
லாராதுமைமுலைப்பாலுண்டபாலனரையிற்கட்டுஞ்
சீராவுங்கையிற்சிறுவாளுமவேலுமென்சிந்தையவே
வாராதகலந்தகாவந்தபோதுயிர்வாங்குவனே.

இ - ள். தாராகணம் எனும் - நக்ஷத்ரகூட்டமென்கிற, தாய்மார் அறுவர் - தாய்மார் அறுவரும், தரும்முலைப்பால் - தந்த முலைப்பாலை, ஆராது-உண்டு அமையாமல், உமை - உமாதேவியின், முலைப்பால் உண்ட - முலைப்பாலையுமுண்ட, பாலன்-பாலகனாகிய முருகக் கடவுளின், அரையில் கட்டும் - அரையில் கட்டப்பட்ட, சீராவும்-திருவரைக் கச்சும், கையில் சிறுவாளும் - திருக்கரத்திலுள்ள சிறியவாளும, வேலும் - வேலாயுதமும், என் சிந்தைய - என்மனத்தின்கண்ண, (ஆதலால்) அந்தகா - யமனே, வாராது அகல் - என்னைநாடிவராது நீங்கு, (வருவையாயின்) வந்தபோது - வந்த அப்பொழுதே, உயிர்வாங்குவன் - உன்னுயிரைக் கவர்வேன். எ - று,

தாராகணமெனுந்தாய் மாரறுவர் என்றது கார்த்திகைப் பெண்களை. இயமனே, முருகவேளின் திருவரைக் கச்சுமுதலியன என்மனத்திலுள்ளன, ஆதலால், என்னிடத்து வராதொழி, வந்தால் உன் உயிரைக்கவர்வேன் என்பது கருத்து.

82. தகட்டிற்சிவந்தகடம்பையுநெஞ்சையுந்தாளிணைக்கே
புகட்டிப்பணியப்பணித்தருளாய்புண்டரீகனண்ட
முகட்டைப்பிளந்துவளர்ந்திந்த்ரலோகத்தைமுட்டவெட்டிப்
பகட்டிற்பொருதிட்டநிட்டூரசூரபயங்கரனே.

இ - ள். புண்டரீகன் அண்ட முகட்டைப்பிளந்து - பிரமாண்ட முகட்டைக் கிழித்து, வளர்ந்து-பெருகி, இந்த்ரலோகத்தை முட்ட வெட்டி - இந்திரலோகத்தை முட்டும்படியெட்டிச்சென்று, பகட்டின் பொருதிட்ட - இக்களும் போலவந்து போர்புரிந்த, நிட்டூரசூரபயங்கரனே - நிஷ்டூரனாகிய சூரனுக்கு அச்சத்தையுண்டாக் கினவனே, தகட்டின் சிவந்த கடம்

யையும் - தகடுபோலச் செவந்த கடப்பமலர் மாலையையும், நெஞ்சையும், என் மனத்தையும், தாள் இணைக்கே-உன் இரண்டுதிருவடியின் கண்ணே, புகட்டி-பொருந்தச்செய்து, பணிய-வணங்கும்படி, பணித்தருளாய்-என்னை நியமித்தருள்வாயாக. எ - று.

மூட்டவெட்டியெனப்பிரித்து, முழுதும்அழித்து எனவுரைப்பினுமாம். தகட்டின்-தகட்டினும் என்றுரைத்தலுமொன்று. தகடு-இலை, அது இளந்தளிருக்காயிற் றென்று கொள்ளினும் கொல்லுலையிற் காய்ந்த சிவந்த இருப்புத்தகடென்று கொள்ளினும் அமையும். சூரசங்காரனே, என்மனம் உன் திருவடியின் கண்ணே யழுந்தும்படி நீபணித்தருளல் வேண்டும் என்பது கருத்து. நிட்டூரன்-வன்சொல்லன்.

83. தேங்கியவண்டத்திமையோர்சிறைவிடச்சிற்றடிக்கே
பூங்கழல்கட்டும்பெருமாள்கலாபப்புரவிமிசை
தாங்கிநடப்பமுறிந்ததுசூரன்றளந்தனிவேல்
வாங்கியனுப்பிடக்குன்றங்களெட்டும்வழிவிட்டவே.

இ - ள். தேங்கிய-(செல்வமுதலிய வற்றால்) நிறைந்த, அண்டத்து இமையோர் - சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்களுடைய, சிறைவிட - சிறைமீட்க, சிற்றடிக்கு - தனது சிறிய திருவடியின்கண், பூங்கழல் கட்டும் பெருமாள் - பொலிவாகிய வீரக்கழல் கட்டிய முருகவேளின், கலாபப்புரவி - தோகையையுடைய குதிரையாகிய மயில, மிசைதாங்கிநடப்ப- தன்மீது இறைவனைச் சுமந்து நடத்தலும், சூரன் தளம்முறிந்தது-சூரனது சேனையானது முறிபட்டது, தனிவேல் வாங்கி அனுப்பிட - ஒப்பற்றவேற்படையை இறைவனெடுத்தனுப்பவே, குன்றங்கள் எட்டும் - மலைகளெட்டும், வழிவிட்ட - வழிவிட்டன. எ - று.

சிற்றடியென்றார் கழல் கட்டற்குரிமையின்மை விளக்குதற்கு. முருகக் கடவுளை மயில்வாகநந்தாங்கிச் செல்லவே, சூரனது சேனைமுறிபட்டது, அக்கடவுள் வேல்விடுக்கவே மலைகளெட்டும் வழிவிட்டன என்பது கருத்து.

84. மைவருங்கண்டத்தர்மைந்தகந்தாவென்றுவாழ்த்துமிந்தக்
கைவருந்தொண்டன்றிமற்றறியேன்கற்றகல்வியும்போய்ப்
பைவருங்கேளும்பதியுங்கதறப்பழகிநிற்கு
மைவருங்கைவிட்டுமெய்விடும்போதுன்னடைக்கலமே.

இ - ள். மைவரும் கண்டத்தர்-(விஷத்தால்) கருமை பொருந்திய கண்டத்தையுடையவராகிய சிவபெருமானுக்கு, மைந்த - புதல்வனே, கந்தா-கந்தனே, என்றுவாழ்த்தும்-என்று உன்னைத் துதிக்கின்ற, இந்தக்கை

வரும் தொண்டு அன்றி - இந்தக்கைவந்த தொண்டையே யல்லது, மற்று அறியேன்-வேறொன்றைச்செய்ய அறிந்திலேன், கற்ற கல்வியும்போய் - நான் கற்றகல்விகளும் நீங்கி, பைவரும் கேளும்-பசியராகிய உறவினரும், பதியும் - வீட்டிலுள்ளாரும், கதற - கதறும்படி, பழகிநிற்கும் - பழகியிருக்கிற, ஐவரும்கைவிட்டு - ஐவரும் நழுவவிட்டு, மெய்விடும்போது - இந்த உடலை விட்டு நீங்கும்போது, உன் அடைக்கலம் - நான் உன் அடைக்கலம்.

கைவரும் தொண்டு-பழகினதொண்டு. பை-பசுமை. அது இவ்விடத்து பற்றுடைமை மேலது. இவவாறன்றித்துன்பம என்னும் பொருள்தரும் பைதல் என்பது பை எனக்குறைந்து நின்றதெனக்கொள்ளினும் அமையும். பழகி நிறகும ஐவா-பிறந்த நாள் முதலாக இடையறாது பழகி நிற்கிற ஐம்புலங்கள். முருகக் கடவுளே, உன்னைக் கந்தாவென்று வாழ்த்துதலாகிய இந்தத்தொண்டையன்றி வேறுதொண்டுசெய்ய அறியேன், ஆதலால் நான் இந்தவுடம்பைவிட்டு நீங்குமபோது நீயே யெழுந்தருளி என்னைக் காத்தருளவேண்டு மென்பது கருத்து.

85. காட்டிற்குறத்திபிரான்பதத்தேகருத்தைப்புகட்டின்
வீட்டிற்புகுதமிகவெளிதேவிழிநாசிவைத்து
மூட்டிக்கபாலமூலாதாரநேரணடமூச்சையுள்ளே
யோட்டிப்பிடிதெங்குமோடாமற்சாதிக்குமயோகிகளே.

இ - ள். விழிநாசிவைத்து-கண் பாாவையை நாசிநுனியில்வைத்து, மூட்டி - மூலக்கனலை மூள்விதது, கபாலம மூலாதாரம நேர்அண்ட-கபாலத்துக்கும் மூலாதாரததுக்கும்நேரேபொருந்தும்படி,மூச்சை-சுவாசத்தை, உள்ளே ஓட்டி - உள்ளிடததே யோடப்பண்ணி, எங்கும் ஓடாமல் பிடித்து-மற்றெவ்விடத்தும் ஓடாமல் பற்றி, சாதிக்கும் யோகிகளே-யோகம் சாதித்தமையாலுண்டாகிய யோகிகளென்னும் பெயர் பூண்டவர்களே, காட்டில் குறத்திபிரான் - காட்டிலுள்ள குறத்தியாகிய வள்ளிநாயகிக்குத் தலைவனாகிய முருகவேளுடைய, பததே-திருவடியின்கண்ணே, கருதனை புகட்டின் - மனத்தைப்பதித்தால், வீட்டில் புகுதல் - மோக்ஷவீட்டிற் பிரவேசித்தல், மிகஎளிது-மிகவும் எளிதாகும். எ - று.

கபால மூலாதார நேரண்ட மூச்சையுள்ளேயோட்டலாவது-சுஷுமநாநாடியின்வழியாக மூச்சையுள்ளே செலுத்தல். எங்குமோடாமற் சாதித்தலாவது - இடைபிங்கலைகளின்வழியே இயங்கவொட்டாதுதடுத்தல். யோகிகளே,நீங்கள் சாதிக்கும் யோகத்தால் வீடுபேற்றையடைதல் மிகவுமரிது, முருகவேளின் திருவடியின் கண்ணே உங்கள் மனத்தை யழுந்துவித்தால் அதனையடைதல் மிகவும் எளிது என்பது கருத்து.

86. வேலாயுதன்சங்குசக்ராயுதன்விரிஞ்சனறியாச்
சூலாயுதன்றந்தகந்தசுவாமிசுடர்க்குடுமிக்
கர்லாயுதக்கொடியோனருளாயகவசமுண்டென்
பாலாயுதம்வருமோயமனோடுபகைக்கினுமே.

இ - ள். வேலாயுதன் - வேற்படையையுடையவன், சங்கு சக்ரா யுதன் விரிஞ்சன் அறியா சூலாயுதன் தந்த கந்தசுவாமி - சங்கு சக்ராயுதங் களையுடைய திருமாலும் பிரமனும் அறியாத சூலாயுதத்தையுடைய வனா கிய சிவபெருமான் ஈன்றருளிய கந்தசாமி, சுடர்குடுமிகாலாயுதக் கொடி யோன் - ஒளியுள்ள உச்சிக்கொண்டையையுடைய கோழிக் கொடியை யுடையவன், (அவனது) அருள் ஆய - திருவருளாகிய, கவசம் உண்டு - கவசம் (என்மீது) உளது, (ஆதலால்) யமனோடுபகைக்கினும் - யமனுடன் பகைத்தாலும், என்பால் ஆயுதம் வருமோ-என்னிடத்து (அவனது) சூலா யுதம் வந்து என்னை ஊறு செய்யுமோ. எ - று.

குமரவேளின் திருவருளாகிய கவசம் பூண்டிருக்கிறேன் ஆதலால், இயமனது கைச்சூலம் வந்து என்னை யூறுசெய்யாது என்பது கருத்து.

87. குமராசரணஞ்சரணமென்றண்டர்குழாந்துதிக்கு
மமராவதியிற்பெருமாடிருமுகமாறுங்கண்ட
தமராகிவைகுந்தனியானஞானதபோதனர்க்கிங்
கெமராசன்விட்டகடையேடுவந்தினியென்செயுமே.

இ - ள். குமரா - குமரவேளே, சரணம் சரணம் என்று - அடைக் கலம் அடைக்கலமென்று, அண்டர் குழாம் துதிக்கும் - தேவசமூகங்கள் தோத்திரம் பண்ணுகிற, அமராவதியில் பெருமாள் - அமராவதிபட்டண ததிலெழுந்தருளிய குகப்பெருமானுடைய, திருமுகம் ஆறும் கண்ட - ஆறு திருமுகங்களையுஞ் சேவித்த, தமர் ஆகிவைகும் - அவரடியாராயிருக் கிற, தனியான ஞானம் - ஒப்பற்ற ஞானத்தையுடைய, தபோதனர்க்கு- தபோதனர்களுக்கு, இங்கு - இவ்விடத்தில், எமராசன் விட்ட-யமராஜன் (இறுதிக்காலத்தில்) அனுப்பிய, கடையேடுவந்து - முடிவேடுவந்து, இனி என் செய்யும் - (அவரை) இனியென்னதுயர் செய்யும். எ - று.

கடையேடு - ஆயுள்முடிவுவரையப்பட்ட ஓலை. தமர்-பற்றுடையார். முருகக் கடவுளின் திருமுகத்தைத் தரிசித்த தபோதனரிடத்து, யமனோலை செல்லா தென்பது கருத்து.

88. வணங்கித்துதிக்கவறியாமனிதருடனிணங்கிக்
குணங்கெட்டதுட்டனையீடேற்றுவாய்கொடியுங்கழுகும்
பிணங்கத்துணங்கையலகைகொண்டாடப்பிசிதர்தமவாய்
நிணங்கக்கவிக்ரமவேலாயுதந்தொட்டநிர்மலனே.

இ - ள். கொடியும் கழுகும் பிணங்க - காக்கையும் கழுகும் ஒன்றேடொன்று பிணங்கவும், அலகை துணங்கைகொண்டாட - பேய்கள் துணங்கைக் கூத்தாடவும், பிசிதர்தம்வாய் நிணம்கக்க - அரக்கர் தம்வாயால் உதிரத்தைக்கக்கவும், விக்ரமம்-வெற்றியையுடைய, வேலாயுதம் தொட்ட-வேற்படையைப் பிரயோகித்த, நிர்மலனே - பரிசுத்தனே, வணங்கி-(உன்னைப்) பணிந்து, துதிக்க - தோத்திரம் பண்ண, அறியா - அறியாத, மனிதருடன் இணங்கி - துட்ட மனிதரோடு நட்புச்செய்து, குணம் கெட்ட - (அவ்விணக்கத்தால்) நற்குணமழிந்த, துட்டனை - துஷ்டனாகிய என்னை, ஈடேற்றுவாய் - கடைத்தேற்றுவாயாக. எ - று.

துணங்கைக்கூத்து - இருகையுமுடக்கிப் பழுப்புடை யொற்றியாடுவதோர் கூத்து. அது "முடக்கிய விருகைபழுப்புடையொற்றித், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பதனாலினிது விளங்கும். அசுரகுலகாலனே, உன்னை வணங்கியுய்ய வறியாத துட்டரோடிணங்கித் துட்டனாகிய என்னையீடேற்றியருளல் வேண்டு மென்பது கருத்து. துட்டரோடிணங்கினவருந் துட்டராவார் என்பதை, "நிலத்தியல் பானீர்திரிந்தற்றாகு மாந்தர்க், கினத்தியல்ப தாகுமறிவு" என்பதனாலுணர்க.

89. பங்கேருகனெனைப்பட்டோலையிலிடப்பண்டுதனை
தங்காலிலிட்டதறிந்திலனோதனிவேலெடுத்துப்
பொங்கோதம்வாய்விடப்பொன்னஞ்சிலம்புபுலம்பவரு
மெங்கோனறியினினிநான்முகனுக்கிருவிலங்கே.

இ - ள். பங்கேருகன் - பிரமன், என்னை - அடியேனை, பட்டோலையில் இட - தனதுபட்டோலையிற்பதிய, பண்டு - முற்காலத்தில், தம்காலில் தனையிட்டது - (முருகக்கடவுள்) தன் காலில்விலங்கிட்டதை, அறிந்திலனோ - அறியானோ, தனிவேல் எடுத்து - ஒப்பற்ற வேலையெடுத்து, பொங்கு ஓதம்வாய்விட-பொங்குகின்ற கடல் வாய்விட்டலறவும், பொன்னஞ் சிலம்பு புலம்ப - அழகாகிய க்ரௌஞ்சகிரிபுலம்பவும், வரும் - வந்த, எம்கோன் அறியின்-எம்மிறைவனாகிய அந்தமுருகக்கடவுள் அறிவானாயின், இனி-இனி, நான்முகனுக்கு - பிரமனுக்கு, இருவிலங்கு - இரண்டுவிலங்குகள் உளவாகும். எ - று.

பட்டோலை - கணக்கேடு. பொன்னஞ் சிலம்பு - பொன்மயமாகிய மலையெனினுமமையும். புலம்பல்-இரங்கல். பிரமன் இனித்தன்கணக்கேட்டில் என்னைப்பதிப்பானாயின், முருகக்கடவுள் முன்னரிலிட்ட ஒருவிலங்குபோல, இக்காலில் இருவிலங்கு பூட்டப்படுவன் என்பது கருத்து.

**90.** மாலோன்மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலானதேவனை மெய்ஞ்ஞானதெய்வத்தை மேதினியிற்
சேலார்வயற்பொழிற்செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலாயிரங்கண்படைத்திலனேயந்தநான்முகனே.

இ - ள். மாலோன் மருகனை - திருமாலுக்கு மருகனை, மன்று ஆடி மைந்தனை - அம்பலத்தாடுவோனுக்குப் புதல்வனை, வானவர்க்கு மேலான தேவனை - தேவர்களுக்கு மேலாகிய கடவுளை, மெய்ஞ்ஞான தெய்வத்தை - உண்மை ஞானத்தையுடைய தேவதையை, மேதினியில் - உலகத்தில், சேல் ஆர்வயல் பொழில் செங்கோடனை - சேல்மீன்கள் நிறைந்த கழனிகளும் சோலைகளும் சூழ்ந்ததிருச்செங்கோட்டையுடையவனை, சென்றுகண்டுதொழ - போய்த்தரிசித்து வணங்க, அந்த நான்முகன் - அந்தப்பிரமன், நாலாயிரம் கண்படைத்திலனே-(எனக்கு) நாலாயிரங்கண்களைப்படைத்தானில்லையே, எ - று.

மன்று - பொது. அதுசிற்சபை பொற்சபைமுதலியவை. மெய்ஞ்ஞானதெய்வம் - மெய்ஞ்ஞானத்தைத் தருந்தெய்வம் எனினுமாம். வயல் பொழில் - வயலிலுள்ளபொழில் என்றலுமொன்று. திருச்செங் கோட்டிலெழுந்தருளிய முருகக் கடவுளின் பேரழகைக் கண்டுவணங்குதற்கு, பிரமன் எனக்கு நாலாயிரங்கண்களைப்படைத்தானில்லையேயென்பது கருத்து.

“செப்பத்திலுன்னைத்தொழவாயிரங்கண்ணுஞ்செல்லும்பொல்லேன்
தப்பத்தவறத்தொழுதாலுஞ்சொக்கர்தடம்புயத்துக்
கொப்பத்திரண்டகொங்காயுன்னவயவமொன்றுக்கொன்று
முப்பத்திரண்டுகண்வேண்டுங்கண்டாயென்முகத்திலுக்கே”

எனப்பிறர் கூறுதலுங்காண்க.

**91.** கருமான்மருகனைச்செம்மான்மகளைக்களவுகொண்டு
வருமாகுலவனைச்சேவற்கைக்கோளனைவானமுய்யப்
பொருமாவினைச்செற்றபோர்வேலனைக்கன்னிப்பூகமுடன்
றருமாமருவுசெங்கோடனைவாழ்த்துகைசாலநன்றே.

இ - ள். கருமால் மருகனை - கரியதிருமாலுக்கு மருகனை, செம்மான் மகளைக்களவுகொண்டுவரும் மாகுலவனை-செவந்த மான்மகளாகிய வள்ளிநாயகியைக் களவுசெய்து வந்த மிகப்பெரிய மேன்மையையுடையவனை, சேவற்கைக்கோளனை-சேவற்கொடியைக் கைக்கொண்டிருப்பவனை, வானம் உய்யபொரும் மாவினைச் செற்றபோர்வேலனை - தேவருலகுய்யும்படி போர்புரிந்த சூரனாகிய மாவினைக்கொன்றபோர் வேலையுடையவனை

கன்னிப்பூகமுடன் தரும் ஆமருவுசெங்கோடனை-இளங்கமுகமரங்களோடு டன் வளர்கின்ற ஆச்சாமரங்களும் பொருந்திய திருச்செங்கோட்டையுடையவனை, வாழ்த்துகை-வாழ்த்துதல், சால நன்று-மிகவும் நன்மையாம்.

தருமா என்பதை முன்பின்னாகச் சொன்னிலைமாற்றி மாதருஎனவைத்து மாமரம் எனவுரைத்தலுமொன்று. இதில் கருமான்,செம்மான், மாகுலவன், கைக்கோளன், வேலன், செங்கோடன் எனச்சாதிப் பெயர்கள் சொன்னய மாய்வருதல்காண்க. கருமான் - கொல்லன், செம்மான்-சக்கிலியன், மாகுலவன்-வேடன், கைக்கோளன்-தந்துவாயன் (நெய்வோன்) வேலன் - வெறியாடுவோன் (பூசாரி). செங்கோடன் - செங்கோட்டு மலையிலுள்ளவன், (குறவன்). யாவருக்கும் முருகக் கடவுளைவாழ்த்துதல் மிகவும் நன்மையாகும் என்பது கருதது.

92 தொண்டர்கண்டண்டிமொண்டுண்டிருக்குஞ்சுத்தஞானமுந்
தண்டையம்புண்டரிகந்தருவாய்சண்டதண்டவெஞ்சூர் [டக்
மண்டலங்கொண்டுபண்டண்டரண்டங்கொண்டுமண்டிமிண்
கண்டுருண்டண்டர்விண்டோடாமல்வேல்தொட்டகாவலனே.

இ - ள். சண்டம் - வேகத்தையும், தண்டம் - தண்டாயுதத்தையும் உடைய,வெம்சூர்-கொடிய சூரனானவன், பண்டு-முற்காலத்தில்,மண்டலம் கொண்டு மண்ணுலகை கவர்ந்து,அண்டர் அண்டம்கொண்டு-தேவருலகையும் கவர்ந்து, மண்டிமிண்டக்கண்டு-நெருங்கி நெருக்கக்கண்டு, அண்டர்-தேவர்கள், உருண்டு விண்டோடாமல் - (அச்சத்தால்) உருண்டுதம்முலகைவிட்டோடா திருக்கும்படி,வேல்தொட்டகாவலனே-வேலைப்பிரயோகித்தரக்ஷகனே,தொண்டர்-அடியார்கள்(ஆகியவண்டுகள்),கண்டு அண்டி-கண்டுநெருங்கி,மொண்டுஉண்டுஇருக்கும்-முகந்துபருகியிருக்கிற,சுத்தஞானமுபரிசுத்தஞானமாகிய தேனையுடைய,தண்டை-தண்டையணிந்த,அம்-அழகிய, புண்டரிகம்-தாமரைமலர்போன்றதிருவடியை,தருவாய்-எனக்குந்தந்தருள்வாய் சண்டதண்ட - வேகமாகிய சேனையையுடைய என்றலுமொன்று. சுத்தஞானமெனுந் தண்டையென்றும் பாடமுண்டு. இதற்கு பரிசுத்தஞானமென்கிற தண்டையெனவுரைக்க. புண்டரிகத்துக்குத் தேன்சிறந்தமையாயால் முற்பொருளே நற்பொருளாதலமையும். தண்டையென்னும் விசேடணத்தால் புண்டரிகம் திருவடிக்காயிற்று. முருகவேளே, உன்னன்பர்க்கருளுந் திருவடியை யெனக்குந் தந்தருளவேண்டு மென்பது கருத்து.

93 மண்கமழுந்தித்திருமால்வலம்புரியோசையந்த
விண்கமழ்சோலையும்வாவியுங்கேட்டதுவேலெடுத்துத்
திண்கிரிசிந்தவிளையாடும்பிள்ளை திருவரையிற்
கிண்கிணியோசைபதினாலுலகமுங்கேட்டதுவே.

இ - ள். மண்கமழ் - மண்பரிமளிக்கிற, உந்தி - நாபியையுடைய, திருமால் - திருமாலின், வலம்புரி ஓசை - வலம்புரிச்சங்கின் ஓசையை, அந்தவின் - அந்தவின் உலகத்தில் உள்ள, கமழ் சோலையும் - பரிமளிக்கிற சோலையும், வாவியும் - அங்குள்ள தடாகமும், கேட்டன - கேட்டன, திண்கிரிசிந்த - வலியமலையுந்திருமபடி, வேல் எடுத்து விளையாடும் - வேலை யேந்திவிளையாடுகின்ற, பிள்ளை - குழந்தையாகிய முருகரது, திருஅரையில் - திருவரையிற்கட்டிய, கிண்கிணி ஓசை - கிண்கிணியின ஓசையை, பதினாலு உலகமும் - பதினான்கு லோகங்களும், கேட்டன - கேட்டன. எ - று.

கேட்டல்-புலப்படல். திருமாலின் பாஞ்சஜந்யத்தின் முழக்கம் விண்ணுலகொன்றினுமே கேட்டது, முருகர் திருவரைக்கிண்கிணிச் சத்தம் பதினாலுலகிலுங் கேட்டதெனபது கருத்து. திருமால் வலம்புரியோசை யந்தவிண்கமழ்சோலையும வாவியுங்கேட்டது என்றது, திருமால் கிருஷ்ணவதாரத்தில் தேவரைவென்று, அவருலகிலுள்ள மலர்மரங்களையுங் கொடிகளையுங் கொணர்ந்த வெற்றியைக்குறித்தது. அன்றி, பாரதம் பதினெந்தாம் நாட்போரில முழக்கிய சஙகோசையைக் குறித்ததெனினும் அமையும். வேலெடுத்துத் திண்கிரிசிந்த விளையாடும் பிள்ளைதிருவரையிற் கிண்கிணியோசை பதினாலுலகமுங்கேட்டது என்றது, முருகக்கடவுள், பதினாலுலகத்தாரையும் தன்னுளடக்கிக் கொடுமைசெய்த சூரன்முதலிய அசுரரை யழித்த வெற்றியைக்குறித்தது.

**94.** தெள்ளியவேனலிற்கிள்ளையைக்கள்ளச்சிறுமியெனும்
வள்ளியைவேட்டவன்றாள்வேட்டிலைசிறுவள்ளைதள்ளித்
துள்ளியகெண்டையைத்தொண்டையைத்தோதகச்சொல்லை
வெள்ளியகித்திலவித்தாரமூரலைவேட்டநெஞ்சே. [நல்ல

இ - ள். சிறுவள்ளைதள்ளி - (மாதருடைய) சிறியவள்ளைத்தண்டை த்தள்ளி, துள்ளியகெண்டையை - துள்ளிய கெண்டைமீனையும், தொண்டையை - கோவைக்கனியையும், தோதகச்சொல்லை-(ஆடவர்க்கு விருப்பத்தையுண்டாக்குகின்ற) வஞ்சகவார்த்தையையும், நல்லவெள்ளியகித்தில-நல்லவெண்மையாகிய முத்தையொத்த, வித்தாரமூரலை - (ஒளிப்)பெருக்கையுடைய நகையையும், வேட்டநெஞ்சே-விரும்பினமனமே, தெள்ளிய - தெளிந்தெடுத்தற்குரிய, ஏனலில் கிள்ளையை - தினைப்புனத்துக் கிளியை, கள்ளச்சிறுமியென்னும் வள்ளியை - குறச்சிறுமியென்கிற வள்ளிநாயகியையுவேட்டவன் - விரும்பினவனாகிய முருகனது, தாள்வேட்டிலை - திருவடியை விரும்பினாயில்லை - (இனியாயினும் விருமபுவாய்) எ - று.

வள்ளை - காது; கெண்டை - கண், தொண்டை - அதரம்; [illegible] - பல், கிள்ளை - வள்ளிநாயகி, தினைப்புனத்துக்கும் கிள்ளைக்கும் பொருந்துமென்பார், புனம் என்றதற்கேற்பக் கிள்ளையென்றார்.

"பரிவுசெய்தாண்டம் பலத்துப்பயில்வோன் பரங்குன்றின்வா
யருவிசெய்தாழ்புனத் தைவனங்கொய்யவு மிவ்வனத்தே
பிரிவுசெய்தாலரி தேகொள்கபேயொடு மென்னுமபெற்றி
யிருவிசெய்தாளி னிருந்தின்றுகாட்டு மிளங்கிளியே" எனவும்,

"பேயோவெயினரமுதாலயத்திற்பிறந்தவுன்னை
யேயோதினைப்புனங் காவலவைத்தா ரெழுபாருமுண்ட
வாயோன்றிருவுந்தி பூத்தோனரங்கன் மணிவரைமேல
ஆயோவெனுங்குர லந்தோபுனத்தை யழிக்கின்றதே" எனவும்,

"வனமார்குடிலைப் பகைக்குரலாமென வாணன் றஞ்சைப்
புனமார்குளிரிப் புடைப்பொலியாற கிள்ளை போயின மீண்
டினமாமெனவந்திவ் வேனலெல்லாம் வவ்வு மென்பதற்கோ
கனமாகுறுங்குழ லிமொழியாதொழி காரணமே. எனவும்,
பிற இடங்களிலுங் கூறப்படுதல் காண்க. பந்தத்துக்கேதுவாகிய மாதராசை
யைப்பற்றி யுழலும் மனமே, இதனையொழித்து முத்திக்கேதுவாகிய முரு
கக்கடவுளது திருவடியை விரும்பி யடைவாய் என்பது கருத்து.

95 யான்றானெனுஞ்சொலிரண்டுங்கெட்டாலன்றியாவருக்குந்
தோன்றாதுசத்தியந்தொல்லைப்பெருநிலஞ்சூகரமாய்க்
கீன்றான்மருகன்முருகன்க்ருபாகரன்கேள்வியினாற
சான்றாருமற்றதனிவெளிக்கேவந்துசந்திப்பதே.

இ - ள். தொல்லை பெருநிலம் - பழமையாகிய பெரியபூமியை, சூக
ரம் ஆய் - வராகவுருவங்கொண்டு, கீன்றான மருகன் - தோண்டியெடுத்தருளிய
திருமாலுக்கு மருகன், முருகன - முருகன், க்ருபாகரன - கருணாகரன,
(அவனது) கேள்வியினால் சான்று - உபதேசத்தால அமைந்து, ஆரும்
அற்ற - ஒருவருமில்லாத, தனிவெளிக்கேவந்து சந்திப்பது - வெறுவெளி
யில் வந்து கூடுவதாகிய இந்தநிலை, யான்தான எனனும் சொல் இரண்டும்
கெட்டால் அன்றி - நான்தான என்கிற சொற்களிரண்டும் ஒழிந்தாலல்
லது, யாவருக்கும் தோன்றாது - எவருக்கும் உண்டாகாது, சத்தியம்-இது
உண்மை, எ - று.

க்ருபாகரன் சான்றாருமற்ற தனிவெளிக்கே வந்து சந்திப்பது, யான்
றானெனுஞ்சொல்லிரண்டுங் கெட்டாலன்றி, கேள்வியினால் யாவருக்கும்
தோன்றாது சத்தியம என்றந்வயித்து, முருகக்கடவுள் சாட்சியொருவரு
மில்லாத தனிவெளியில் வந்து சந்தித்தல் யானதான என்னுஞ் சொல்லிர
ண்டும் ஒழிந்தாலன்றி நூற்கேள்வியினால் யாவராககாயினு முண்டாகாது.
இதுஉண்மையென்று பொருளுரைப்பினுமாம். 'யான்-பசு, தான்-பதி,
இவ்விரண்டுங் கெடுதலாவது - சிவபர ஐக்கியம். நான் தான் என்னும்

வேற்றுமையற்றாலன்றிச் சாத்திரஞானத்தால் முருகக்கடவுளது காட்சியுண்டாகாதென்பது கருத்து. இண்டான் என்பது இன்றான் என நின்றது.

96. தடக்கொற்றவேண்மயிலேயிடர்தீரத்தனிவிடினீ
வடக்கிற்கிரிக்கப்புறத்துநின்றோகையின்வட்டமிட்டுக்
கடற்கப்புறத்துங்கதிர்க்கப்புறத்துங்கனகசக்ரத்
திடர்க்கப்புறத்துந்திசைக்கப்புறத்துந்திரிகுவையே.

இ - ள். தடக்கொற்ற வேள்மயிலே - பெரியவெற்றியையுடைய முருகக்கடவுளது வாகனமாகியமயிலே, இடர்தீர - எனதுன்பம் நீங்க, தனி விடின் - (என்னை அத்துன்பத்தினின்று)நீக்கித் தனியே விடுவையாயின், நீ - நீ, வடக்கில் கிரிக்கு அப்புறத்து - வடமலைக்கப்பால், நின்தோகையின் வட்டம்இட்டு - உன்கலாபத்தோடு சுழன்று, கடற்கு அப்புறத்தும்-பெரும்புறக்கடலுக்கு அப்பாலும், கதிர்க்கு அப்புறத்தும் - இருசுடர்களுக்கு அப்பாலும், கனகசக்ரத்திடர்க்கு அப்புறத்தும்-பொன்மயமாகிய சக்ரவாளகிரிக்கு அப்பாலும், திசைக்கு அப்புறத்தும் - அஷ்டதிக்குகளுக்கு அப்பாலும், திரிகுவை-(நீ மனக்களிப்போடு) சஞ்சரிக்கக்கடவை.

இவ்வாறன்றி, மயிலே, முருகக்கடவுளுக்கு வாகனமாயிருத்தலாகிய துன்பமநீங்க உன்னைத்தனிவிடின் வடமலை முதலியவற்றிற் கப்புறஞ்சென்று சஞ்சரிப்பாய் எனவும், முருகக்கடவுளைக்கொணர்ந்து எனக்கெதிரில் தனியேவிடுவையாயின, நீயதேச்சையாய்த் திரியக்கடவை யெனவும்உரைத்தலும் கூடும. வடக்கிற்கிரி-மேருமலை. கனகசக்ரத்திடர் என்றமையால், கடல்என்பது பெரும்புறக்கடலென் றுரைக்கப்பட்டது. திடர் - மேடு, அது இவ்விடத்து மலைக்காயிற்று.

97. சேலிற்றிகழ்வயற்செங்கோடைவெற்பன்செழுங்கலபி
யாலித்தனந்தன்பணாமுடிதாக்கவதிர்ந்ததிர்ந்து
காலிற்கிடப்பனமாணிக்கராசியுங்காசினியைப
பாலிக்குமாயனுஞ்சக்ராயுதமுமபணிலமுமே

இ - ள். சேலின்திகழ்வயல் - சேல்மீன்களால் விளங்குகின்ற கழனிசூழ்ந்த, செங்கோடைவெற்பன் - திருச்செங்கோடை மலையையுடையானது, செழுகலபி - செழுமையாகிய மயிலவாகனமானது, ஆலித்து - களித்து, அநந்தன் பணாமுடிதாக்க - ஆதிசேடனுடைய பணாமுடிகளைத் தாக்குதலால், அதிர்ந்து அதிர்ந்து - ஒலித்து ஒலித்து, காலில்கிடப்பன -(அம்மயிலின்) காலிற்கிடப்பன (யாவையெனின்) மாணிக்கராசியும் - மாணிக்கத்தொகுதியும், காசினியைப்பாலிக்கும் மாயனும் - உலகத்தைரக்ஷிக்கிற திருமாலும், சக்ராயுதமும் - (அவனது) சக்ராயுதமும், பணிலமுமே - சங்கமுமேயாம், எ - று.

முருகரது மயில்வாகனமானது களித்துத்தாக்குதலால், ஆதிசேடன் முடியினின்றுதிர்ந்த மணிகளும், அவன்மீது துயிலுந் திருமாலும், அவனுயுதங்களும் அதின்காலின்கண் தங்கிக்கிடப்பன வென்பது கருத்து.

98. கதிதனையொன்றையுங்காண்கின்றிலேன்கந்தவேன்முருகா
நதிதனையன்னபொய்வாழ்விலன்பாய்நரம்பாற்பொதிந்த
பொதிதனையுங்கொண்டுதிண்டாடுமாறெனைப்போதவிட்ட
விதிதனைநொந்துநொந்திங்கேயென்றன்மனம்வேகின்றதே.

இ - ள். கந்த - கந்தனே, வேல்முருகா - வேல்முருகனே, கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன - நற்கதியைச் சிறிதும் காணுமாற்றலில்லேன், நதிதனை அன்ன - கான் யாற்றுநீர்ப்பெருக்கையொத்த, பொய்வாழ்வில் அன்பு ஆய் - (இவ்வுலகப்) பொய்வாழ்க்கையில் அன்புடையோனாய், நரம்பால்பொதிந்த - நரம்பாற்கட்டிய, பொதிதனையும்கொண்டு (உடம்பாகிய) பொதியையுங்கொண்டு, திண்டாடுமாறு - கலங்கும்வண்ணம், என்னைப்போதவிட்ட - என்னைத்திரியவிட்ட, விதிதனை - விதியை (நினைந்து), நொந்துநொந்து - வெறுத்துவெறுத்து, இங்கே - இவ்விடத்தே, என்றன்மனம் வேகின்றது - என்மனமானது வேகாநின்றது, எ - று.

என்மனம்வேகின்றது இவ்வேதலைக்கண்டதன்றி நற்கதியொன்றுங் காண்கிலேன் எனவுரைப்பினுமமையும். பிரபஞ்சப்பொய்வாழ்க்கை வினைக்கீடாகத்தோன்றி அது அறவிட்டதே விரைந்தழிதலால், அதனை, மிகுமழை காரணமாக வுண்டாகி அதுவிட்டளவில் நீங்கும் கான்யாற்றுநீர்ப்பெருக்குக்கு உவமையாக்கினார். பொதி-சுமை. கந்தவேளே, கதியொன்றும் காணுமாறறலிலேனாய், உலகப்பொய்வாழ்வில உழன்று வருந்தாநின்றேன் என்னை நீயேகாத்தருளவேண்டுமென்பது கருத்து.

99. காவிக்கமலக்கழலுடன்சேர்த்தெனைக்காத்தருளாய்
தூவிக்குலமயில்வாகனனே துணையேதுமின்றித்
தாவிப்படரக்கொழுகொம்பிலாததனிக்கொடிபோற்
பாவித்தனிமனந்தள்ளாடி வாடிபதைக்கின்றதே.

இ - ள். தூவி - தோகையுடைய, குலம் - உயர்வாகிய, மயில்வாகனனே - மயிலைவாகனமாக வுடையவனே, தாவிப்படர - தாவிப்படர்வதற்கு, கொழுகொம்புஇல்லாத - கொழுகொம்பில்லாத, தனிக்கொடிபோல் - தனிமையாகிய கொடியைப்போல, துணைஏதும்இன்றி - உதவிசிறிதும் இல்லாமல், பாவித்தனிமனம் - பாவிகளில் இணையற்ற (என்) மனமானது, தள்ளாடி வாடி பதைக்கின்றது - அசைந்து வாடித் துடிக்கின்றது; (ஆதலால்) காவிக்கமலம் - செந்தாமரைமலர்போன்ற, கழலுடன்சேர்த்து - உன்திருவடியோடணைத்து, என்னைக் காத்தருளாய் - என்னை ரக்ஷித்தருள்வாயாக.

தூவிக்குலம் என்பதற்கு இறகினாற்சிறப்பையுடைய, இறகின்றொகுதியையுடைய, எனவுமுரைத்தல் கூடும். கொழுகொம்பு - படர்கொடிகள் பந்தர்க்கேறுமாறு அவற்றிற் கிடையே நடப்படுவதோர்கழி. காவி - காவிக்கல். அது இவ்விடதது அதின் நிறமாகிய செம்மைக்காயிற்று. இவ்வாறன்றி காவிக்கமலக் கழல் என்பதற்கு, நீலமலர்களையணிந்த தாமரைமலர்போலுந் திருவடி யெனினுமாம. மயில்வாகனனே, உதவியின்றி வாடுகின்றேன் உன்திருவடியை யெனக்குதவியாகத் தந்தருளவேண்டும என்பது கருதது.

100. இடுதலைச்சற்றுங்கருதேனைப்போதமிலேனையன்பாற்
கெடுதலிலாத்தொண்டரிற்கூட்டியவாகிரௌஞ்சவெற்பை
யடுதலைச்சாதித்தவேலோனபிறவியறவிச்சிறை
விடுதலைப்பட்டதுவிட்டதுபாசவினைவிலங்கே.

இ - ள். கிரௌஞ்சவெற்பை-க்ரௌஞ்சமலையை, அடுதலைச்சாதித்த-வெல்லுதலைச்சாதித்த, வேலோன் - வேலாயுதன், இடுதலைசற்றும் கருதேனை-ஈகையைச்சிறிதும நினையேனை, போதம இல்லேனை - ஞானமில்லேனை, அன்பால் - தன்பேரன்பினால், கெடுதல் இலலா - கெடுதியற்ற, தொண்டரில் கூட்டிய ஆறு - அடியாரோாடு சேரததவாறென்ன வியப்புடைதது, (என்னெனின்) பிறவி அற - எனபிறப்பு அறவொழிய, இச்சிறைவிடுதலைப்பட்டது - இந்தச்சிறையானது எனனைவிட்டது, பாசவினை விலங்குவிட்டது - பாசவினை விலங்கானதுகழன்றொழிநதது. எ - று.

சாதித்தல் இவ்விடத்துச் செய்தலுக்காயிற்று. வேலாயுதக்கடவுள் என்னைத் தன்னடியாரோடு கூட்டியருளலும், என்பிறவிப்பற்றொழிந்ததென்பது கருத்து. இதனால அடியார்பெருமை வற்புறுததப்பட்டது. சிறை தநுகரணபுவந போகங்களாகிய காவல். விடுதலைப்பட்டது ஒருசொற்றன்மையது.

நூற்பயன்.

சலங்காணும்வேந்தர்தமக்குமஞ்சாரியமன் சண்டைக்கஞ்சார்
துலங்காநரகக்குழியணுகார துட்டநோயணுகார
கலங்கார்புலிக்குங்கரடிக்குமயானைகருங்கந்தனன்னூ
லலங்காரநூற்றுளொருகவிதானகற்றறிந்தவரே.

இ - ள். நன்னூல் - நல்லநூலாகிய, கந்தர் அலங்காரம் நூற்றுள் - கந்தரலங்காரத்தின் நூறுபாடல்களுக்குள், ஒருகவிதான்கற்று - ஒருபாடலையாயினும் கற்று, அறிந்தவர் - அதினபொருளை யுணர்ந்தவர், சலமகாணும்வேந்தர் தமக்கும்அஞ்சார - இவ்வுலகததில் தீராக் கோவத்தையுடைய அரசருக்கும் அஞ்சமாட்டார், யமன்சண்டைக்குஅஞ்சார் -(முடிவுக்காலத்தில்) இயமனது போர்க்கு அஞ்சமாட்டார், துலங்காநரகக்குழி அணுகார்-

(இறந்தபிறகு)விளங்காத நரகக்குழியையடையார், துட்டநோய்அணுகார்- கொடுமையாகிய பிறவிப்பிணி யணுகப்பெறார், புலிக்கும் கரடிகளும் யானைக்கும் - துட்டமிருகங்களாகிய புலிக்கும் கரடிக்கும் யானைக்கும், கலங்கார்- மனங்கலங்கமாட்டார். எ-று.

முருகக்கடவுள் விஷயமாகிய கந்தரலங்காரம் என்னும் இந்நூலினுள் ஒருபாடலையாயினும் கற்று அதின்பொருளை யறிந்தவர்களுக்கு இம்மையில் ராஜபயம் முதலிய துன்பங்களும் மறுமையில் நரகத்துன்பமும் இல்லையென்பது கருத்து.

கந்தரலங்காரம் முற்றுப்பெற்றது.

---

சிலபிரதிகளிலே

## அதிகமாகக் காணப்பட்ட செய்யுள்கள்.

---

1. திருவடியுந்தண்டையுஞ்சிலம்புஞ்சிலம்பூடுருவப்
பொருவடிவேலுங்கடம்புந்தடம்புயமாறிரண்டு
மருவடிவானவதனங்களாறுமலர்க்கண்களுங்
குருவடிவாய்வந்தென்னுள்ளங்குளிரக்குதிகொண்டவே.

இ-ள். திருவடியும் - (குமாரக்கடவுளுடைய)திருவடிகளும், தண்டையுஞ்சிலம்பும் -(அத்திருவடிகளிலணிந்த) தண்டைகளுஞ் சிலம்புகளும், சிலம்பூடுருவப் பொருவடிவேலும் - கிரௌஞ்சகிரியை யூடுருவப்பொருத கூர்மையாகிய வேலாயுதமும், கடம்பும் - கடப்பமலர்மாலையும், ஆறிரண்டு தடம் புயமும் - பன்னிரண்டு பெருமையாகிய திருப்புயங்களும், வடிவு மருவு ஆன ஆறுவதனங்களும் - அழகு பொருந்துதலான ஆறுதிருமுகங்களும், மலர்க்கண்களும் - தாமரைமலர்போலும (பன்னிரண்டு) திருக்கண்களும், என்னுள்ளங்குளிரக் குருவடிவாய்வந்து-எனதுமனங்குளிரக் குருவடிவாகித்தோன்றி, குதிகொண்ட - குதித்தல்கொண்டன. எ-று.

குமரவேளின் திருவடிமுதலியன எனக்குக் குருவடிவாய்த் தோன்றி என்மனங் குளிர வீற்றிருந்தன என்பது கருத்து.

2. இராப்பகலற்றவிடங்காட்டியானிருந்தே துதிக்கக்
குராப்புனைதண்டையந்தாளருளாய்கரிகூப்பிட்டநாள்
கராப்படக்கொன்றக்கரிபோற்றநின்றகடவுண்மெச்சும்
பராக்ரமவேலநிருதசங்காரபயங்கரனே.

இ-ள். கரிகூப்பிட்டநாள் - (கஜேந்திரன்என்னும்) யானையானது (ஆதிமூலமேயென்று)கூப்பிட்டநாளில், கராப்படக்கொன்று அக்கரிபோற்றநின்ற கடவுள்மெச்சும் - (அதனைக்கவ்விய) முதலையை யழியக்கொன்று

அந்த யானை துதிக்கின்ற திருமாலும் மெச்சுகின்ற, பராக்கிரமவேல நிருத சங்கார (நிருத) பயங்கரனே-பராக்கிரமத்தை யுடையவரே, வேலாயுதத் தையுடையவரே, அசுரரையழிப்பவரே, அசுரருக்குப் பயத்தைச்செய்பவரே, இராப்பகலற்ற இடங்காட்டி - (இரவென்றும் பகலென்றுந் தோன்றாமையால்) அவ்விரவும் பகலுமற்ற இடமாகிய ஞானநிலையைக்காட்டி, யான் இருந்தே துதிக்கக்குராப்புனைதாள் அருளாய் - யான் (அந்நிலையில்) இருந்தே துதிக்க நும்முடைய திருவடியைத் தந்தருள்வீர். எ-று.

முருகக்கடவுளே, ஞானநிலையாகிய இராப்பகலற்ற இடத்திலிருந்து உன்னைத் துதிக்கும்பொருட்டு, உன்னுடைய திருவடியை எனக்கருள் செய்யவேண்டும் என்பது கருத்து.

3. செங்கேழடுத்தசினவடிவேலுந்திருமுகமும்
பங்கேநிரைத்தநற்பன்னிருதோளும்பதுமமலர்க்
கொங்கேதரளஞ்சொரியுஞ்செங்கோடைக்குமரனென
எங்கேநினைப்பினுமங்கேயென்முன்வந்தெதிர்நிற்பனே.

இ - ள். பதுமமலர்க்கொங்கே தரளஞ்சொரியுஞ் செங்கோடைக்குமரன் என எங்கே நினைப்பினும் - தாமரைமலரினின்று தேனும் முத்துஞ் சொரியப்பெறும் திருச்செங்கோட்டுமலையிலுள்ள குமாரக்கடவுளென்று (யான்) எவ்விடத்திலே நினைத்தாலும், அங்கே - அவ்விடத்தே, செங்கேழடுத்த சினவடிவேலும் - செம்மையாகிய நிறஞ்சார்ந்த சினத்தையுடைய கூர்மையாகிய வேற்படையும், திருமுகமும் - (ஆறு) திருமுகங்களும், பங்கே நிரைத்த நற்பன்னிருதோளும் - இருபக்கத்தும் வரிசையுற்ற நல்லபன்னிரண்டாகிய திருப்புயங்களும் (கொண்டு), என்முன் வந்தெதிர்நிற்பன் - (அக்கடவுள்) எனக்குமுன் வந்து எதிர்நிற்பார்.

திருச்செங்கோட்டுமலையில் எழுந்தருளிய முருகவேளையென்று யான் எவ்விடத்து நினைத்தாலும், அவ்விடத்தே அவர் தமது வடிவேல் முதலிய வற்றொடு எனக்கெதிரே தோன்றிநிற்பர் என்பது கருத்து.

4. ஆவிக்குமோசம்வருமாறறிந்துன்னருட்பதங்கள்
சேவிக்கவென்றுநினைக்கின்றிலேன்வினைதீர்த்தருளாய்
வாவித்தடவயல்சூழுந்திருத்தணிமாமலைவாழ்
சேவற்கொடியுடையானேயமரசிகாமணியே

இ - ள். வாவித்தடவயல் சூழுந்திருத்தணி மாமலைவாழ் சேவற்கொடியுடையானே அமரசிகாமணியே - குளங்களையுடைய பெருமையாகிய வயல்கள் சூழப்பெறும் திருத்தணிகையாகிய பெரியமலையில் வாழும் சேவற்கொடியையுடையவரே தேவர்க்கு முடிமணியானவரே, ஆவிக்கு மோசம்வருமாறறிந்து உன அருட்பதங்கள் சேவிக்க என்று நினைக்கின்றிலேன் வினைதீர்த்தருளாய் - (உடலோடுகூடிய) உயிருக்கு அவ்வுடலை விட்டுப் பிரிதலாகிய மோசம்வருமாற்றையறிந்தும் நுமது அருளையுடைய திருவடிகளைச் சேவிக்கவென்று நினைக்கின்றிலேனாகிய வென்னுடைய வினையை நீக்கியருள்வீர், எ - று.

குமாரக்கடவுளே, உடம்பைவிட்டு என்னுயிர் நீங்குமேயென்றுணர்ந்து உன்திருவடியைச் சற்றும் நினையாதேனாயினும், நீயென்னைக் கைவிடாமற் காத்து என்வினையை யொழிக்கவேண்டும் என்பது கருத்து.

5\. கொள்ளித்தலையிலெறும்பதுபோலக்குலையுமென்ற
னுள்ளத்துயரையொழித்தருளாயொருகோடிமுத்தந்
தெள்ளிக்கொழிக்குங்கடற்செந்தின்மேவியசேவகனே
வள்ளிக்குவாய்த்தவனேமயிலேறியமாணிக்கமே.

இ - ள். ஒருகோடிமுத்தந் தெள்ளிக்கொழிக்குங் கடல் செந்தில் மேவியசேவகனே - ஒருகோடி பரிவினவாகிய முத்துக்களைத் தெள்ளிக்கொழிக்குங் கடலையுடைய திருச்செந்திற் பதியிற்பொருந்திய (அசுரரையழித்த) வீரரே, வள்ளிக்குவாய்த்தவனே - வள்ளிநாயகியாருக்கு வாய்த்தநாயகரே, மயில்ஏறிய மாணிக்கமே - மயில்வாகனத்திலேறிய ஒரு மாணிக்கம் போல்பவரே, கொள்ளித்தலையில் எறும்பதுபோலக் குலையும் என்றன் உள்ளத்துயரை ஒழித்தருளாய் - (இருதலைக்)கொள்ளி யிடத்துள்ள எறும்பு போலவலையுமெனது மனத்துயரை நீக்கியருள்வீர். எ-று.

முருகக்கடவுளே, இருதலைக்கொள்ளியினுள் அகப்பட்ட எறும்புபோலத் திகைக்கின்ற என்மனத் துன்பத்தை நீக்கியருளவேண்டும் என்பது கருத்து.

6\. சூலம்பிடித்தெமபாசஞ்சுழற்றித்தொடர்ந்துவருங்
காலன்றனக்கொருகாலுமஞ்சேன்கடல்மீதெழுந்த
வாலங்குடித்தபெருமான்குமாரனறுமுகவன்
வேலுந்திருக்கையுமுண்டேநமக்கொருமெய்த்துணையே.

இ - ள். கடல்மீது எழுந்த ஆலங்குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன் - பாற்கடலில் உண்டாகிய நஞ்சையுண்டருளிய இறைவராகிய பரமசிவனுடைய குமாரராகிய ஆறுமுகக்கடவுளுடைய, வேலும் திருக்கையும் ஒரு மெய்த்துணைநமக்கு உண்டே - வேலாயுதமுந் திருக்கரமுமாகிய ஒப்பற்ற மெய்த்துணைநமக்கு உண்டே, (ஆதலின்) சூலம்பிடித்து எமபாசம் சுழற்றித்தொடர்ந்துவரும் காலன்றனக்கு ஒருகாலும் அஞ்சேன் - சூலாயுதத்தையும் (பாம்பினைச்சுப்பல்லிலொன்றாகிய) எமன்போலும் பாசத்தையுஞ் சுழற்றிக்கொண்டு தொடர்ந்துவருங் கூற்றுவனுக்கு யானொருகாலும் அஞ்சேன், எ - று.

முருகக்கடவுளது வேலாயுதமும் அதையேந்திய கையும் எனக்கு மெய்த்துணையாயிருத்தலால், யான் இயமனுக்குச் சிறிதும் அஞ்சேன் என்பது கருத்து.

உ

சிவமயம்.

ஸ்ரீஸத்குருவேநம:

# சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர்

# பதிற்றுப்பத்தந்தாதி.

## மூலமும் - உரையும்.

இஃது

சென்னை கநக்காத்தப்பர் கோயில்

சிவத்யானபஜனை உபாத்தியாயரும்,

ஸ்ரீசிவசமயத்திருத்தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வே[illegible] சி[illegible]களு[illegible]வில[illegible]

[illegible]பாசா[illegible]னைாகிய

அருட்கவி

தி - ஊ - பா - கங்காதர நாவலரவர்களால்

இயற்றப்பட்டு,

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியால்

சென்னை சூளை:

ஆனூர் - எதிராஜமுதலியாரவர்களது

பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

நந்தன ஹு தை மாதம் 18உ

ஷை சுவாமி சந்நிதியில் ஷை நாவலரவர்களால்

அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.

189[illegible]-ஹு.

உ

சிவமயம்.

ஸ்ரீஸத்குருவே நமஃ

சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர்

# பதிற்றுப்பத்தந்தாதி.

மூலமும்-உரையும்.

## விநாயகர் வணக்கம்.

நேரிசை வெண்பா.

அண்டர் பணிமயிலை அண்ணல் திருவடியிற்
றண்டமிழா லந்தாதி சாற்றவே - தொண்டர்நிதம்
பத்திசெயும் வித்தகமெய் அத்திமுக வுத்தமநல்
சித்தியனை நெஞ்சே - நினை.

(இதன் பொருள்)

ஸ்ரீசிவாநந்திய சாட்சாத்கார வள்ளலாகிய பரமசிவனின் வடிவிலோர் கூறாகிய உமை, கேதாரமாக வுருப்பெற்றுத் தபஞ்செய்ததும், தேவர்களால் வணங்கி பாடல்பெற்ற ஸ்தலமாகியும் விளங்குகின்ற திருமயிலையென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் அடியார்களுக்காகத் திருக்கோலங்கொண் டெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீசிவபெருமான் செம்பொற்கமலத்திற் றெள்ளிய தமிழினால் பதிற்றுப்பத்தந்தாதி யென்னுந் தொடையலாகிய பாமாலையைச் சொல்ல, அன்பர்கள் அனுதினமும் இடைவிடாது சிந்திக்கும் ஈஸ்வரனுயும், தானெனு மமதையிலாழ்ந்திருந்த கயமுகாசுரனைவென்று தேவர்களிடரைத் தீர்த்தவராயும், நம்பினவர் விக்கினங்களைத் தடுக்கின்றவராயும், நித்தியசிவபோகத்தை அநுக்ரஹிப்பவராயும், பிரணவசொரூபராயும், அறிவானந்த சுழுத்தியினிடத்தே பரிணமிக்கின்றவராயுமிலகும் கற்பகவிநாயகமூர்த்தியென்னும் ஆனைமுகக்கடவுளை, எடுத்தநூல் முடியும்பொருட்டு என்மனமே நினைப்பாயாக—என்பதாம்,

## நூல்.

நெஞ்சொடு கிளத்தல்.

எங்கும் பரமா யிலகுஞ் சிவபெருமான்
றங்கவரு டங்கத் துதியாம - லங்குமிங்கு
மோடியலை புன்மனமே யுண்மைநிலை கண்டெழிலைத்
தேடிசதா வாழ்வதனிற் - சேர்.

(இ-ள்.) அண்டாண்ட கோளகையென்னும் எல்லாவிடத்தும் வியாபகமாய் யாவும் வல்ல கடவுளாய் ஒளிரும், சிவபெருமானுடைய அற்புதமெய்வாழ்வினிற் சுகித்திருக்கும்படியான நல்லறிவினையடைய சதாகாலத்தும் வணங்காமல் வானூடுபறக்கின்ற பட்டத்தைப்போன்று பலவிடத்துந் திரிந்து அலைந்துழலும் ஓ மடநெஞ்சே! அனேக திருத்தொண்டர்களனுபவித்த நன்னிலையைக்கண்டுணர்ந்து எக்காலத்துமழியாத திருவருளினையடைவாயாக—எ-ம், (1)

சேர்ந்தார் வினைதுடைக்குஞ் சின்மயனைப் போற்றுமற்
றோர்ந்தா ருலகிலுண்டோ நீயநெஞ்சே - கூர்ந்தமதி
யிலலாம லையோ யிருமபிறவி வேராறுமோ
நலலார்பாற் கிட்டியருள் - நாடு.

(இ-ள்) உலகபாசபந்தமெனும் வலையைநீக்கி உள்ளத்திலன்புடனாராட்டிப் பின்பற்றிய அன்பர்களின் பவத்தைப்போக்கும் சிவபிரானுடைய திருவடியை வணங்காமல் மாயாசமுத்திரம் போன்ற தீமையினின்று கரையேறினவர்களியாவரேனுமுண்டோ இல்லையே? இதைச் சற்றேனுமுணராமலும், பொய்யாகிய நியாயசோரணங்களை உள்ளது உள்ளபடியாக கண்டுதெளியும் புத்திகோசரமில்லாமலும் ஜென்மஜன்மரோயினுடைய பூடற்றுப்போகுமா? அந்தோ தீயவழிககு முதன்மையனாக வோடித்திரிகின்ற துஷ்டப்பேயான ஓ மனதே! தெய்வஞானபக்தியை யாபரணமாக அணிந்திருக்கின்ற நல்லன்பர்களையடைந்து நன்மதியைப் பெறுவாயாக—எ-ம். (2)

நாடுதற்கு முத்திநெறி நாட்டுவதற் கும்புகழ்ப்பா
பாடுதற்கும் இச்சையிலாப் பாழ்மனதே - கூடுவிட்டுச்
சோதிவெளி யாங்காற் றுணையுளதோ துதியமா
நீதிமறை சொலவழியி - னில.

(இ-ள்) பரமவாழ்வினையூட்டும் நலலன்பர்களைச் சேருவதற்கும், பொய்யுடலைநீக்கும் ஞானமுத்தி சாதனையினிலைப்பதற்கும், சிவானந்தவள்ளலாகிய பெருமான்திருப்புகழைப் பாடுவதற்கும் விருப்பமற்று தீயவாபாசத்திலே நடித்துழலும் வீணாவீணனைப்போன்றலையும் மனதே! உனைத்தாங்கியிருக்கும் புன்குரம்பையென்னும் பழுககூட்டினிடத்து வ்யாபித்திருக்கின்ற சிவமாகிய ஆன்மப்பருடன் வெளிப்படுங்காலத்து, நீ வெகுவாக நம்பியிருந்த தன, கன, இன, வாசனைகளிற் சிறிதேனும் உனக்கு உதவியாகுமா இல்லையே? ஆதலா லிவையனைத்தும் பொய்யெனவெறுத்து பரிசுத்தம் பொருந்தி விளங்கும் வேதாப்பியாச ப்ரமாணத்தின் போதனைசக்தியினைப் பெற்று அந்நெறியுணர்த்தும் நற்பாதையில் சதானுஷ்டாபரனாக நிற்பாயாக.

நில்லாத மட்குடத்தை நிச்சயமீ தென்றுபல
பொல்லாத தீயவழி புக்கினையே - கல்லாத
நெஞ்சே யுனைப்போன்ற நிட்டூ ரியாவருளர்
அஞ்சாத தென்னோ - வறை.

(இ-ள்.) எவ்வளவுகாலம் யாபந்துசெய்து வைத்திருக்கினும் ஓர்நாளைக்கு மரணமென்னுங் கூற்றுவனின் பாசவலைக்குட்சிக்கி நிமைநேரமேனும் நிலைபெறுமலோடிப்போகின்ற மண்பாண்டத்தை நெடுங்காலம் அழியாதிருக்குமென்ற நம்பிக்கைக்கொண்டு பலவிதமான துன்மார்க்கபோதனையினும், பிறவியைத்தருகின்ற மூவாசையாகிய கெட்டநடையினும் புகுந்தாயே நல்லறிவினையூட்டி சேணுடாகள் வசிக்கின்ற கைலையெனு மோக்ஷநிலையை யடையும்படியான ஞானக்கல்வியையுணர விருப்பமற்று, சாதுக்களாகிய மஹான்களை மதியாதலையும் ஓ தீயமனமே! உனதெண்ணங்களை யாராய்ந்து பார்க்குமிடத்து இவ்வுலகின்கண் ஜனித்த மக்களில் உனைப்போன்ற பாப வருவையுடையார் எவருண்டு இல்லையே? இதனால் அனித்தியமாயுள்ள கையினிடத்தமுந்தி யிளைத்தாயே யல்லது பாசபந்தத்திற்குட்பட பயங்கரமில்லாமற்போனதென்னோ மந்தபத்தியோ அதையுணர்ந்துசொல்வயாக-எ-ம்.

அறைவதனைப் போனடவா தாடிமூ வாசைச்
சிறைபட்டை யோசி ரிழந்தாய் - கறைநீங்க
நற்றவஞ் செய்யாம னம்பனருள் வாய்த்திடுமோ
பெற்றவரே தேவரெனப - பேசு.

(இ-ள்.) நன்னெறியை வளர்க்குங் கல்வியினையுணர்ந்தும் அந்நிலையின் அதிரகசியமாகிய பரமார்த்தங்களைப் பிறர்க்குப்போதிக்கின்ற ஸ்திரமையொன்றேயல்லது அந்நூலினிடத்துள்ள அம்சங்களில் ஆயிரத்திலோர் பங்கேனும் நடந்துகொள்ளாமல், காற்றினிடத்திலே சுழலுகின்ற பட்டத்தைப் போல மண், பெண், பொன் என்னு மித்த மூன்றுபந்தத்தி லகப்பட்டு நீ யடையவேண்டிய நற்பாக்கியங்களை யெல்லாம், வாளாய் போக்கடித்துக் கொண்டனையே ஓ மூடமனமே! உன்னால வினைந்த பாவமற பரமபிரானாகிய சிவானந்தனை நினைந்து மனப்பூர்த்தியுடன் வணங்காமல், நித்யாபமோக்ஷமென்னும் அறிவாதீத ஞானபொக்கிஷமானது கிடைக்குமா இல்லையே? ஆதலினால் உலகமாய்கையின் தீயவாசனையாவுந்துறந்து ஒப்பற்ற திருவருளை யடைந்தவர்களே மக்கட்பிறவிகளுக்குள் தலைமையாகிய தெய்வமென த்யானித்து அன்னோர்களின திவ்யசரித்திரத்தை மொழிவாயாக—எ-ம். (5)

பேசுமறை யாவும் பெரிதுணர்ந்தும் முத்திசுக
தேசுவிளங் காவிடிலென் சித்தியோ - நேசச்

சிவனுமந் தன்னையே சிந்தைசெய் தேத்தில்
பவனும மில்லையுற் றுப் -' பார்.

(இ-ள்.) பேரின்பசுகத்தைக் கொடுப்பதும், மூதுணர்ந்தவர்களால் திருவாய்மலர்ந்ததும், பலவித பேதமற்றதுமாகிய சன்மார்க்கமென்னும் வேதங்களனைத்துந் தெளிவுற்றும், தெய்வீகானந்தபோகத்தின் ஸ்வயம்ப்ரகாஸமானது ஜொலிக்காமற் போகுமேயானால் நீயடைந்த யோகத்தின் பயனுண்டுமோ இல்லையே? ஆதலால் என் மூடமனமே! பொருளைப் பொருளாகப் பாவித்து திருவருளை விரும்பியுழைப்பதுவே எலலா நன்மையையும் பயக்குமென்பவைபோல, அடியார்களுக்குத் தாரகமாகவும், அன்பில தாயைப் பார்க்கினும் விமரிசையுள்ளவராகவும், அன்பர்க்கெளியவராகவும் விளங்கி தீயவையாகிய மாயையினின்று தடுத்தாட்கொள்ளும் சிவபெருமானுடைய திருக்கோலங்களை மஹான்களாற செவ்வனேதெரிந்து இடைவிடாது வந்தனைவழிபாடு சோாவின்றி நடாத்துவையாகில் பாவமெனனுங் கூற்றனுடைய வலையினுட்பட் டழிந்தாயென்னும் பேரிலலாம லுன்னைவிட்டகலும் இந்தச் சற்காரியபோதனையைக் கவனிப்பாயாக—எ-ம். (6)

பார்த்தவிட மெங்கும் பரிபூர ணப்போதங்
கோர்த்தநிலை மாறுமற் கூடுவாய் - சீர்ததிமிகு
வானாடர் போற்றுமுயர் வஸ்துவினி லுற்றவரே
கோனாமெய்ஞ் ஞான - குரு.

(இ-ள்.) மனமே! உனனுளிருந்துநோக்கும் நிலைகளிலெல்லாம் சர்வாந்த்ரீயனாகிய சிவானநதபோதமே நிறைந்துள்ளது. இதின் வல்லமையையறிந்து அபபெருமானாகிய அறிவாதீத சுயம்புவினிடத்திற்கலந்து என்றுஞ் சாகாநிலையிலின்புற்ற பெரியோாகளாகிய சாதுக்களே வியபிசாரதோஷமென்னும் அநித்தியமுள்ள வுலகவாசனையற்ற ஞானதேசிகராவார். அம்மஹாத்துமாக்களை விண்ணவர்களும் அஞ்சலிசெய்வார்கள் ஆதலான் சன்மார்க்கமாகிய சைவபோத நெறியினிடத்து சிறிதும் வழுவாதபடி சச்சிதானந்த வரம்பினிலுய்வாயானல் நீயுலகின்கணுதித்தமைக்கு வோர் நற்பயனைத் தரும் இதை யுணர்வாயாக—எ-ம். (7)

குருவருளை வேண்டிற் குருபரனு மாவாய்
குருவருளை வேண்டார் குருடராம் - குருவருளை
நம்பார்க் குழைத்த னலமில்லை னாகுதலால்
வெம்பாமுன் மெய்ப்பொருளை - மேவு.

(இ-ள்.) அஞ்ஞானத்தினாற் றடிப்பேறியிருக்கின்ற மாயவிருளைத் தலையெடுக்காது மெய்ப்போதனையை க்ருபைபாலித் தநுக்ரஹஞ்செய்யுங் கரு

ஞசமுத்திரமாகியும், உலகத்தாருக்கு பத்தி, முத்தி, வைராக்கியமென்னும் பிரகாணங்களைப் பதியவைப்பதற்கோர்மதியாகியும், எழுந்தருளியிருக்கின்ற தேசிகருடைய வாக்கியத்தினருளைப் பரிபாலித்தால் ஞானானந்த ப்ரம்மவடிவமாவாய். அவ்வாக்கியத்தினுண்மையைவிரும்பாது விர்தாகோஷியஞ்செய்து ஆரவாரித்துத் தீமையை விளைவிக்கும் பொருளீட்டும்பக்ஷத்திற் குருவாகவிருப்பவர்கள் விழியிருந்தும் பார்க்க சக்தியற்ற அந்தகராம், ஆதலால் தீயமனதே! இவையனைத்தும் அருமைத்தேசிகருடைய திருவாக்கை மனனஞ்செய்கின்றவர்களுக்கே சொல்லத்தக்கவையாம், அவநம்பிக்கையுள்ள பேதையராகிய பாமரர்களுக்கு உழைப்பவையெல்லாம் ஆற்றிற் கரைத்த புளியையொக்குமேயல்லாது ஓர்காலத்தும் பிரயோசனத்தைத் தாராவாம். அப்படிப் பயனற்ற காரியத்திற்காட்பட்டு துக்கமென்னும் புணரியிலிறங்கி கசிந்துவாடுவதற்கு முன்னமே பரப்ரமசொரூபியாகிய சிவபிரானின்றிருவருளை பின்பற்றுவாயாக—எ-ம். (8)

மேவினார்க் கல்லால் விலகுமோ பண்டைத்துயர்
தாவினார் வாழ்வதிலை தாரணியிற் - பாவால்
பலனுளதோ வென்றாற் பனகம்வாய்த் தேரை
நலமிலெனச் சொல்வார் - நயந்து.

(இ-ள்.) சதானந்தனாகிய சாட்சாத்கார பரமேஸ்வரனின்றிருவருளுற்றவர்களுக்கல்லாமல் மற்றவர்களுடைய மனவிருணீங்குமோ? நீங்காவாம். இஃதன்றி ஜெனமவியாதியினை முயற்சியெடுத்து சாதுசங்கத்தையடுத்து ஆதமவிசாரணைச் செய்து நிவர்த்திக்காது மாயாமலக்கண்மூடி அதன்பின்னேதிரிந்ததனுடைய வீண்டம்பாகாரத்தில் விழுங்கப்பட்டவர்கள் மறுமையினும் இம்மையினும் நற்சாபினையடையார், தீயொழுக்கத்திற்றலைப்பட்டார்கள் புன்மாக்கள் மகிழ்வனவாக வெடுத்தோதும் பிரபந்தத்தினாலியாதேனும் நன்மையுண்டாமோ வென்றாயத்துணருங்கால் நல்லரவத்தின் வாய்க்குட்சிக்கிய தேரையைப்போல் அஞ்ஞானத்திற் சிறப்புற்றோங்கும் மனதினிடத்தில நன்மைவிளையாதென்பதுபோன்று அவர்கள்பாடும் யாப்பின்பயனு மவ்வாறெனக் கற்றோர்களாகிய மஹான்கள் தெளிவுற வெடுத்துரைப்பார், மந்தபுத்தியுள்ள ஓ மனக்குரங்கே! இதினலத்தை யுணர்ந்து ஞானவழியி னடந்துகொள்வாயாக—எ-ம். (9)

நயந்தபதம் வேம்பானா னாடியுரைப் போரை
வியந்துதுதி செய்வாரோ வீணர் - பயந்ததெலாம்
பொய்யாய்ப்போ மல்லாற் புனிதகுணம் வாய்த்திடுமோ
வையகத்தின் வாழ்வே - வசை.

(இ-ள்.) திருப்பணிப்பூண்ட அடியார்களுடைய பிறவியென்னுங்கடலை வற்றச்செய்து சாகாதமெய்ப்பதவியினையும் பரமாத்மனுடைய திருசரணாரவிந்தத்தின் புகழையும், மகத்துவந்தங்கிய திருவிளையாடல்களையும், நல்லோர்களால் சொல்லக்கேட்குந்தோறும் மகாவினைத்துவம்பொருந்திக் கசப்பாகக் காணப்படுமேயானால், அவ்விநந் தூர்ச்சிந்தையுள்ளவாபாற்சென்று, நன்முத்திசாதனைகளையும், தெய்வவியாபகதியையும், பரமேஸ்வரனின் திருச்சாழலையும், கல்யாணகுணங்களையும், அவரடியாரடைந்த பெருமையையும், அன்பர்களின் திவ்யசரிதையையும் வெளிப்படுத்தும் சன்மார்க்க தேசிகருடைய வார்த்தையைசெவியுற்றேனும் அதினந்தரங்களை அதிசயமுற்றுவீணாசையிற் பித்துக்கொண்டலையும் பாமரா விசுவாசத்துடன் வணங்கி ஆராதிப்பாரோ? இல்லையாம், முடிவாக அப்பாமராகளாகிய தெய்வபயமற்றவர்களை நம்பி நடத்தியவைகளெல்லாம் மிருதையாகுமேயல்லாது நற்பேறணுகுமோ? அணுகாவாம் ஏனெனில், மாயகைசிறைபட்ட உலகத்திலிடப்பது சந்தோஷங்கொண்டனுசரிகருநு சுகங்களெல்லாம் இட்டாமை நல்லோரென்றும் இடானாப் பாவியென்றழைக்கும் நிலைநிக்கிருப்பிடமாயிருப்பதால், ஓ பாபிஷ்டியாகிய மனமே! நீராலோசித்து உத்தமவழியைப்பின்பற்றிச் சுகம்பெறுவாயாக—எ-ம். (10)

வசைபாடி வாங்கி மகிழ்ந்தே யுழலும்
பசையாற் சுகமுளதோ பார்க்கின் - நிசமே
நினையார்க ணேசம் நெறிதருமோ கண்டுமே
வினைமீற லென்ன - விதி.

(இ-ள்.) குற்றம் விளைவிக்கும் பொருளைவேண்டி கொடுத்தானைக்கொண்டாடியும், கொடாதானை நிந்தித்தும், தானுக்கனியாதபழத்தைக் கல்லாலடிப்பதைப்போல் வற்புறுத்தி இதம்பேசி, யதினாலடைந்த சொற்பநிதியைப் பெற்று வெகுவாய்ப்புகழ்ந்து களிப்புற்றலையும் பாவமனமே! அப்படி இல்லாதவற்றையெல்லாம் புகன்று ஈட்டியபொருளினாற் றுன்பம்வந்துறுமேயல்லாது யாதானுமோர் போகமுளதோவென் றூராயுமிடத்து, தாசிக்கும் உனக்கும் பேதமின்றியிருக்கின்றமையினாலே, கிஞ்சித்துஞ் சந்தோஷமில்லையாம், இநநெறியினுடைய வுண்மையைக் கருதாதவர்களுடைய தீயவன்பானது நற்கதிகொடுக்குமோ? இவையாவுந் தெள்ளனேவோர்ந்தும் தெய்வதாசிந்தனையற்றுந துன்மார்க்க வலையாகிய பாவவழியிற்சென றுழல்வதென்னதோஷம்—எ-ம் (11)

விதிவிலக் கன்னியமா வீண்செயல்த டித்து
மதியிழந்து வாடலென்ன மாண்பு - பதிவேண்டி
யுன்னை யறிந்தே யுயர்நிலையுந் தான்கற்று
மன்னுமறை போலென்றும் - வாழ்.

(இ-ள்.) பெரியோர்களாகிய கற்றவர்களால் வெறுக்கப்பட்ட பஞ்சகுற்றங்களிற் பிரவேசித்தும், நன்னெறியை யாரப்பெற்றும்படியான பயனற்ற தாக்கிருத்தியங்களில் கனத்தும் நீதிசாஸ்திரங்களைப் போககடித்தும், காலத்தைப்பட்டுவதென்ன மகத்வம். இவைகளாவும்நீத்து சிவபிரானுடைய திருவருள் பொலிந்திருக்கின்ற கைலையென்னும் ஞானபூமியையடைய விருப்பமிருக்குமேயாமாகில், ஓ மனமே! அஞ்ஞானத்தைத் தூரவச்செய்கைக் கடந்து, உன்னை நீயென்றறிந்தும், உனக்கு வழிகாட்டியாக விருக்கின்ற ஆத்மபோதத்தின் ஸ்தானத்தையும், சாதுக்கள் பட்டிருகென்றுணர்ந்து அவ்வானந்த ஸ்வயம் பிரகாசமாய்விளங்கி காலமும் அழிவின்றி வாழ்வாயாக

வானுளே யாவும் மறலியுடன் மண்ணுளவும்
வீணுளே போல விடுத்தனையே - தானானே
கேடுசெய்ய வெண்ணினுமே யாமுமுற பாழ்மனமே
நன்மைசெய்வ தெந்நாள் - நவில்.

(இ-ள்.) எல்லாபபிறவியினு மரணமையுடைத்தான பரமசிவ ஸ்தானத்தை யெடுத்தும், அநுசரிக்கத்தக்கவையாகிய மெய்ஞ்ஞானபோதத்தை யிழந்து, நன்மையடையும் நவடபொழுதாகும் யோகப்பொழுதினை வயதையெல்லாம் மறலியாகிய யமனும், பிரிதிவு எனனும் மண்ணும் பொசிக்க வியர்த்தாளாக்கினையே, இஃதன்றியுனது வலிமையும் செருக்கும் தேகபலமும் ஒடுங்கிய காலமாகு மரணத்தருவாயில் ஏதுந்தெரியாமலும் ஓவாத துயருந்து சொல்லவியலாதலும் விழிப்பையையுமடையல் தேனிரன்செய்வாய இதைச்சிறிதேனுங் கவனியாமல் என்னுருத்தரற் றிவ்விதந் தீயசொள்ளைக் கூடன்டங்காளியாருய, பாவசதிலாழந்த ஓ பாழ்நெஞ்சே! உனதாயுளையெல்லாம் வாளாப்போககுவையாயாகில சிவானந்தபோகத்தையடையும் ஞானமுத்திசாதனையென்னும் நற்காந்திரமறிந்து புண்ணியதிசை புருவதெந்தகாலம் இதனையுணர்ந்து சொல்லுவாயாக—எ-ம். (13)

நவிலுமெய்ஞ் ஞானியரி னூட்டமேயோ ராமற்
றுவிதவில்லா யாதொன்றை யிட்டாய - புவிமாயங்
கண்டிருந்து மின்னங் கவலையிலா தேனோசொல்
பண்டைதுயர் பற்றறுமனம் - பார்.

(இ-ள்.) திருவருணிறைந்த மஹான்களாற் சொல்லும், அறிஞர்களென்னுந் தேவர்களினுடைய நீதிநூல்களையுணர்ந்தும் அவர்கள் விதித்த விதிவிலக்குகளை கவனியாது நல்லொழுக்கம், தீயொழுக்கம், அல்லது அகப்பற்று, புறப்பற்று என்னும் இருவினையால உண்டுந்தியை யவைகளுக்கு நத்தஞ்செயதாய, பாவச்செயலுக்குத் தலையாட்டித்திரியும் ஓ துஷ்டமனக்குர

ங்கே! நீ மகா மேன்மையாகப் பாராட்டிவரும் உலகமும், அதனுள் தோற்றுஞ் சகலவஸ்துவும் மித்தையென்பதாக அனுபவகாட்சியாகப் பார்த்திருந்தும், இன்னமுந் தெய்வசம்பிரதாயத்தையடைய எண்ணமற்றிருக்கின்றதென்னவிந்தையோசொல, அப்படி பரமபிரானுடைய கருணையின்மீதிச்சையிருக்குமேல், ஊழ்வினையென்னும் பிறவித்துன்பமானது வந்தணுகுமுன்னமே நற்கதியினையூட்டும் தேசிகராகிய குரவனைக்கண்டு தீக்ஷைபெற்று சுயக்யானதீபத்தைக் கவனித்துப்பார்ப்பாயாக—எ-ம். (14)

பார்க்குஞ் சிவவடிவைப் பார்க்காம லேயுளமும்
வேர்க்கவே வேறுவழி மேவினையே - ஏற்கா
சடலம்பொய ஞானமெய் சாயா வடிவாற்
றிடங்கொண்டு என்றுந்துதி - செப்பு.

(இ-ள்.) சர்வசைதந்யமாகவிருந் தெலலாபபொருளிடத்தும் வியாபித்து உள்ளும் புறம்புமாக நின்றுன்னைச் சதாகாலமும் நோக்கியிருக்கும் ஆன்மவடிவாயும், அறிவாதீதமாயும் இருக்கின்ற சத்யஞானக்ஞான அபேதவஸ்துவினைநோக்காது கருத்தயரவியாத்தமும் பேதமும், மயக்கமுமான துன்மார்க்கத்திற சென்றுயே ஓ மனமே! நீ நம்பியிருந திரவுபகலில்லாதுழைக்கும் மண்கோட்டையாகிய புன்குரம்பை மித்தையே, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யதார்த்தநிலையாகிய மெய்ஞ்ஞானசாதனை யொன்றே நித்யமுள்ளது. ஆதலான் உலகவீணமயக்கத்தால அவபக்தியைக் கோடலின்றி எக்காலத்தும் அழிவென்பதில்லாத சிவானந்தபோகத்தி னுண்மையினை யாராயந்து தவமுஞற்றி, வைராக்கிய சித்தனாக நெறிபெற்று அபபழம்பொருளின் திவ்ய தோத்திரத்தை மறவாது சொலவாயாக—எ-ம். (15)

செப்பு மறுகுணத்தாற் சித்திவரா தென்றுரைத்துங்
கைப்பொருளைப் போக்கடித்த காரணம்போல்-மெய்ப்பொ
வேண்டா ருளரோ வெறும்பித்துக் கொள்ளாமற் [ருளை
றூண்டா மணிவிளக்கை - சூழ்.

(இ-ள்.) சொல்லப்படுகின்ற காம, குரோத, மத, லோப, மாச்சர்ய, மோகம் என்னும் ஆறுகுணத்தை பின்பற்றி யதன்வழியேயலைந்து காலங்கழிப்பதனால நலல சார்பினையடைவதற் கியலாதென பன்முறைபோதித்தும் ஒருவன்கரத்திற்சிக்கிய தனத்தை வேவெர்களடித்துப் பறித்துக்கொள்ள வீணேயிழந்து மதிவழுவி துக்கிப்பவன் செய்கையைப்போன்று நித்திய நிராதார சுயம்பாகிய பரமசிவத்தின் திருவருளாகிய பொக்கிஷத்தை அறுகுணத்தினிம்சையால் பஞ்சபூதவேடுவர்களுக்கு தத்தஞ்செய்து சஞ்சலக்கடலிலழுந்துவதுந் தன்மமோ? சாகாவரத்தையருளும் நித்யானந்தபோக

த்தை விரும்பாத பேதையருமுலகிலுண்டுமோ? அக்குணத்தைப் போன்றவர்களிருக்கினு மவர்களுக்கு நேராக உண்மைமகிலைக்கும் மெய்ஞ்ஞானபோதத்திற் பற்றுதலில்லாது வாயாற்பர்தரிட்டு கண்ணில்லான் பார்த்தானந்தித் தானென வாளாய்பிதற்றி மயக்கமேயிட்டு அவகாலமாகாதவண்ணம் ஓ மனமே! கங்குல் பகலற்றதும், ஆத்மானந்த வள்ளலாயும், சகல கேவலங்களையுங் கடந்ததாகவும் நிற்கின்ற சிவபெருமானுடைய திருவருளென்னுஞ் சைதந்யத்திற் சதாசேர்ந்திருப்பாயாக—எ-ம் (16)

சூழ்ந்த சமுத்திரம்போற் றொல்லைபவ மேமூடி
வாழ்ந்தே னெனமகிழும் வன்னெஞ்சே - ஆழ்ந்த
நெறியறியார்க் கேதுமெய்நி லையறியார்க் கென்சீர்
குறியறியார்க் கேதுகுணங் - கூறு.

(இ-ள்.) உலகந்தனனைச் சுற்றிக்கொண்டிருக்கின்ற புணரியாகிய கடலைபோல அழுக்காறுடைய பழையவினையே மிகுந்தும், இனத்தவர்களாகிய சார்ந்தவர்களுககுச்செய்த துரோகத்தினலவாகள் பலவிதமாக தூஷிக்கும் நிந்தையான பழிக்குட்பட்டும், இவைகளைச் சற்றேனும் யோசியாதபடி சுகமுற சுகிதநேனென்று இறுமாபபுற் றயங்களிந்திருககும் ஓ பாவமனதே! பெரியோர்களாலும், குருவருளாலும், நீதிவழியைக் கற்றுந்தெளியாதவருக்கு உண்மையான ஞானபோதனை விளங்குதலுண்டுமோ? அல்லது அம்மஹான்களால விதிக்கப்பட்டுள்ள குணத்தைப் பின்பற்றுதவருக்கு எவ்வகையாகிய சிறப்புகளேனும் பொருந்துவதுணடுமோ? கறறவர்கள், பெரியவாகள், தேசிகர் இவர்களுடைய குறிப்பறிந்து நடந்துக்கொள்ளாதவருக்கு பண்பாகிய நற்சீருணடுமோ? இலலையாம் ஆதலால உண்மைவழியினை யோர்ந்து சொலலுவாயாக—எ-ம். (17)

கூறுங்காற் பொய்க்குரம்பை குப்பை மலபாண்டம்
வீறாக துணிபு விருமபினுல் - பேறுதரும்
நலமேலோர்த் திருவாக்கை நம்பிதொழு தேத்திநெஞ்சே
அல்லோன்போ லேநில் - அழகு.

(இ-ள்.) ஓ மனமே! நீ யெடுத்திருக்கப்பட்ட பொய்த்தேகத்தைப் பற்றி சொல்லப்படுகிறபோது மேடுநிறைந்த ஊத்தைக்குடமாம், இஃதைப் புண்ணியதேகமாக்க விருப்பமுற்றுல் ஆந்துமலாபத்தையும், மோக்ஷமாகிய கைலைசுகத்தையுங் கொடுக்கநதக்கவர்களாகிய மூதுணர்ந்தோர்களென்னும் ஞானிகளால் திருவாய்மலர்ந்துள்ள உண்மைவாக்கியமாகிய சத்போதனையையும் திருவருணிறைந்த அடியார்கள் கூட்டத்தையும், அவநம்பிக்கையின்றிசேர்ந்து விசுவாசித்து, அவர்களாற் போதிக்கப்படுகின்ற சச்சிதான

ந்த விலக்கணங்கள் திகழும் பரமசிவனின் செவ்வைநிறைந்த பாதாரவிந்தத்தை இடைவிடாது சிந்தித்து பூர்ணசந்திரனைப்போற் பிரகாசித்து நின்ற நிலைமாறாது நிற்பாயானால் நீயெடுத்த பிறவியானது சிறப்புடைத்து—எ-ம்.

அழுகுசெய் வேசியென அந்தகா ரத்தில்
பழகினு னன்மதியுள் பாய்ந்திடுமோ - விழலாய்ப்
பிறந்துழன்றே சாதல் பெருமையோவன் பர்பாற்
சிறந்தருளை வேண்டியன்பு - செய்.

(இ-ள்.) அநித்தியமாகிய வாழ்வில் பலைந்துழலும் ஓ மனப்பேயே! பலமாந்தர்களு மிச்சையிருந்து பொருள்தாகம், பார்த்தவர்க ளுள்ளஞ்சகி யாது வலிய சாமார்த்தியத்திலிழிந்து பலராலுந் தன்னேகத்தை தந்தனுசெய் வதுடன், தானுமியாவமிழந்து முடிவில் படுபாவியாவன்றே இக்கதியா னது நெருங்கியென்று துயர்ப்படுத்துகின்ற விலையாது கண்டோர் கைவிந ழாதபடியுந், தன்னுலை வரப்போகின்ற தூர்வியாபாரத்திற்குப் பறம்பாகா மலும், வேளைக்கொரு ஆடையும், பணிகளுமணிந்து மதமென்னும் ஹீனக் கடலிற் றுயில்வனைப்போல பஞ்சபாதகங்களை விளைவிக்கும் அஞ்ஞானவிரு ளினிடத்து உன்னுபூர்வனாயினுங் கண்டதோட்சி கொண்டதே கோலமெ ன்று தடிப்புறறிருந்தால் பிறவாமுத்தியையையும் விவேகமான துன்னுள் பரவுமோ? அந்தோ பரிதாபம், அருமையினுமருமையான ஜனனமெடுத்து வாளாய்த்திரிந்து பலசங்காண மண்ணிற்கும், பற்பலபறவைகட்கும் இறை யாகுதல் மஹாஜ்யேஷ்டமோ? இல்லையாம், ஆதலாற் பரமனையபோதத் தைப்புகலும் சாதுக்களாகிய திருப்பணித்தொண்டர்களையடுத்து மகத்துவம் பொருந்திய சிவபிரானின் கருணையைப்பெற் றுய்யும்வண்ணம் இனமுமற வாது பக்திசெய்வாயாக—எ-ம். (19)

செய்யும் வகையறியாய் செப்புங் கலைதெளியாய்
பையபைய வேயலைந்து பாழாவாய் - மெய்யிஃதென்
றோரா யுணர்வறிய வுண்மையினு நில்லாய்வீண்
வாதாட்ட மல்ல - வழி.

(இ-ள்.) அகங்காரத்திற்கு முதல்வனுகிற்கும் ஓ மனக்குரங்கே! தியாகபாச வுலகின்மயலைப் பற்றறுகக மஹான்களால் கைக்கொண்ட நன்னடைகளை யநுசரித்து அவ்விதிகளை நடந்தும் வழிதெரியாய், அல்லது அவர்களாற்சொல்லும் நீதிநூற்களினுண்மையினுந்துணியாய் மந்தபுத்தி மேலிட்டு பலகாலுந்திரிந்து விருதாகோஷியனுசெய்து யாதும் பயனின்றி வீணே மடிவாய், இவ்வசனத்தை உண்மையென்று நம்பிசசொல்லாய், அல்லது அறிவிற்கெட்டாத சுயம்பிரகாசச் சாழலிலேனும் நிற்கமாட்டாய், நீ செய்வன

வியாவும் பிரயோசனமின்றிய காரியமாகமுடிய வீண்செறுக்கா லிறுமார்ந்து வழக்கிட்டு யாவரையும் மாய்மாலஞ்செய்வதலலவே ஞானவழி, நீதிமொழி ஆதலான் இததுர்நடத்தையையணுகாது நானெனுமாணவமையைவிட்டகன்று பாத்வதியானஞ்செய்து விதேகமுந்தியிற் புகுவாயாக—எ-ம். (20)

வழியிஃதென் றோர்ந்து மருடர் அருளாற்
பழியுடம்பெ டுக்காமற் பார்த்தே - அழியுமுனம்
சித்த மதைத்திருத்தி சின்மயமாய் நிற்பதுவே
எத்தவத் தோர்க்கும - இறை.

(இ-ள்.) தெய்வசாம்பிரதாயத்தையடையும் சன்மார்க்கப்பாதை யின்னதென்று பிரமாணவாயிலாயத்தெரிந்து பூர்வசன்மத்தினின்றேவப்பட்ட கன்மவினைகளைத்தீர்க்கும் பரமசிவனின் றிருக்கருணையால் பாவதேகத்தைப் பலமுறையெடுத்தழியாத நன்னிலையைக் கண்டுணர்வாயாக ஹீனத்துவத்திலாழ்ந்திருக்கும் ஓ தீயநெஞ்சே! நீ எடுத்திருக்கின்ற பிறவியானது மரியகைக்கும், ஏமபாசத்திற்கு முட்பட்டு மாயவதற்குமுன்னமே நித்திய ஜீவாதாரபரம்பொருளைக்காட்டும் அறிவைச் சீர்ப்படுத்தி சுகாரம்ப தேஜோன்மயமாய் நிலைபெற்று வாழ்வாய, இந்நெறியொன்றே நிறைந்த தவஞ்செய்யும் எவ்வகை நல்லோர்களுக்கு முரிய இலக்கணமாம், இதைத் தெரிந்து சீர்த்தியடைவாயாக—எ-ம். (21)

இறைவ னெனும்பெருமா னெங்கும் நிலைப்பான்
கறையில்லார் காண்பார்கள் காட்சி - பறைவதற்
காகாப் பழம்பொருளை அண்டிடவே நெஞ்சேநீ
மோகாதி யததை - முனி.

(இ-ள்.) சகல காருண்யமூர்த்தியாகிய பரமசிவனெனுங்கர்த்தா எவ்விடத்தினுந்தங்கி பிரகாசித்திருப்பான் அப்பரமவஸ்துவை ஹீனத்துவத்தை விளைவிக்கும் மாயாமலக்கண் மூடாமலும், பாவச்செய்கை யில்லாமலும், சர்வசைதாய ஆத்மானுபவத்தில் நிரதிசயானந்த நிஷ்டாபரராக விளங்கும் நல்லோர்கள் பிரத்தியட்சமாயக்கண் டானந்திப்பார்கள், உன்மத்த குணமாகிய பொய்வேட்கையினுலுழலும் ஓ மனமே! வாக்கினுற் சொல்வதற்கியலாத ஸ்வயம்ப்ரகாஸ சுசஞானதீபமாயும், அறிவாதீதமாயும், சகல கேவலங்களையுங் கடந்ததாயும், ஆன்மசோதியாயும், நித்திய சிவமாகியும் நிறைந்துள்ள சிவானந்தவள்ளலின் றிருவடியினன்பிற் கூடவேணுமாயின் இறைவனுக் கன்னியமாகக்காட்டும் தியாகத்தைப்போன்ற காம, வெகுளி, மயக்கம் இவையாவுந் தலைக்காட்டாதபடி வெறுத்து ஸத்காரியநிலையைப் பின்பற்றுவாயாக—எ-ம். (22)

முனிந்தார் புகழும் முனியார் பவமும
கனிந்தார் அருளுங்கைக் கொண்டார் - துனிவகலா
ஐம்புல வேடுவர்க்கா ளாவதுவுந் தன்மமதோ
வம்புசெறி பாழ்மனமே - வா.

(இ-ள்) உலகஆகடியததிற் பிணைப்படுத்துந் துன்பத்திரையாகிய புறப் பற்றென்னும் ஆறுகுணமும், மூவாசையும், மற்றும் வீண்டம்பாகாரங்களை யும், வெறும்பித்தும் பாவமயக்கமுமென விகழ்ந்து சிறிதும் வேண்டாது, முற்றுந்துறந்தவர்களாயும், தன்னையறிநதவர்களாயுமுள்ள நல்லோர் நித்யா னந்த வைபவமென்னும் (புகழுடம்பும்) இவ்விதிவிலக்குகளை அனுசரித்தும் இவையாவும் மெய்யென்றகந்தையில் மீறிக்காவித்தும் சாதுக்களின் நற்போ தனைகளை அலட்சித்தும், மும்மலவலையையாற் கட்டுப்பட்டு சிதைந்தும், கரை யேறுவதற்கான முக்கிய கருத்தையிழந்தும், தெய்வசாம்பிரதாயத்தைப்பற்றி யங்கலாய்க்கும் எண்ணமற்றும், கண்ணிருந்தும் பிறவியந்தகனைப்போன்று அந்தகாரமாகிய வீணாசைகளில் பூர்ணயுசுவிளங்குமென மனப்பால் குடித் தலைந்து பொய்க்காமியங்களை வெறுக்காத புல்லர்கள் நரகமென்னும் பிறவி யாகிய (துன்பவாதனையும்) சர்வக்ஞானபூரண ரஹிதர்களாக வோயாது பக வானின் திருப்புகழிலந்தியந்தமுடன் விருப்பமுற்ற அடியார்களாகிய திருத் தொண்டர் (பேரின்பகருணையும்) பெற்றுய்தார். துன்மார்க்க செய்கைநிறை ந்து வாதாடி வாளாய்மடியும் ஓ பாழ்மனமே! கொடியவினைநீங்காத ஐம் பூத வேட்கையிலாழ்ந்து மரணமென்னுங் கூற்றனின் வாய்க்கிரையாதலுன் புண்ணியமோ? இனியேனும் பிறவாத முத்திநெறியையளிக்கும் பெரியோ ர்களைக் கண்டடைந்து உனது தீக்கருமங்களைக்கெடுத்து நற்குணமுற்று வா ழ்க என்போதனையைப் பின்பற்றிவருவாயாக—எ-ம். (23)

வாராயோ நெஞ்சேநீ மாண்புலவும் பேரறிவைப்
பாராயோ நீதி பகராயோ - தீராத
ஊழ்வினையென் றேதிடினு முத்தமரா லுற்றுணர்ந்து
வாழ்வதுவே நல்ல - மதி.

(இ-ள்.) பாவவிருளி லிறுமாப்புற்றலையும் புன்மனக்குரங்கே! இங்ங னங்கூறும் நன்மொழிகளைகேட்டு பின்பற்றி வருகாயோ? மாட்சிமை புலவிய கருத்தின்வழியாகிய சுகானந்தபோகத்தை அகக்கண்ணினுலுற்று நோக்காயோ? உண்மைநிறைந்த வேதாந்த மனோகோசரமென்னும் ஞானு நீதி புதைப்பொருள்களை ஞாயவாயிலா யாராய்ந்து அஞ்ஞானமாகிய தீக் கருமங்களொழிய புகலாயோ? நீங்காத பூர்வஜன்மவிதியிருப்பதால் மெ ய்ப்போதனை சக்தியனுக லெவ்விதத்திலு மியலாதென உலகமக்க ளோர்கா லேற்றுரைக்கினும், அவ்வார்த்தையின் மயக்கத்தா லழியாதபடி நிரதிச

யானந்தமாகவும், களங்கமற்றவர்களாகவும், பலவிதபேதாம்ஸங்களில்லாதவர்களாகவும் விளங்கும் பெரியோர்களையடுத்து, "முயற்சித்திருவினையாக்கும்" என்ற முதுமொழிக்கிணங்க சிரத்தையெடுத்து சிவானுபோகவமுதையுண் டகங்களித்தலே நல்ல விவேகமாம். ஆதலான் என் மூடமனமே! இதனையுணர்ந்து உனது ஹீனச்செயகை யாவையுங்கெடுத்து சுகித்திருபடாயாக—எ-ம். (24)

மதியா ருளந்தனிலே மாசறுமோ வன்மைத்
துதியா ருளததிற் றுலங்கா - பதியார்தம்
உள்ள மதுநரகென் றோதுமறை யைத்தெளிந்து
கள்ளமன தேசிலையைக் - காண்.

(இ-ள்) எல்லாவஸதுவையும நிருமித்தாளும் வல்லவனாகிய சிவபெருமானுடைய திருவருளை நினையாதவாக ளகத்திற்றழும்பேறியிருக்குந் தீமையானது நீங்குமோ? பரப்ரமத்தின் திவ்ய கல்யாணகுணங்களை நினைந்து வந்தனைவழிபாடு செய்யாதா ரிருதயத்திலுண்மை ஞானோதயம் பிரகாசிக்காது, இவ்வாக்கியார்த்தங்களிற் கருத்துறாதவர்கள் நெஞ்சமும், தெய்வதியானமில்லாத வுணமையும், அழுக்காறடைந்ததும், பாவம்நிறைந்ததுமான நரகமென வெளிபடுத்தும் ஞானோபதேச பிரமாணத்தைத் தெள்ளென வுணர்ந்து பொல்லாமயக்கங்களியாவையுந்துறந்து நின்மல ஸ்வயம்பாகிய பரிபூரணத்தில் விளைப்பூச்சியாயத்திரியும் ஓ வஞ்சமனப்பேயே! உனதாண்மைகளெல்லாமொடுங்க மெய்ப்போகததைக் காணக்கடவாய—எ-ம். (25)

காண்பதற்கு வேதாந்த கல்வியெனுங் கண்ணுண்டு
பூண்பதற்கு நல்லருளே பொககிஷமாம் - ஆண்மை
மனமே யிதுசமையம் வள்ளல் சிவன்றாள்
தினமுமற வாதுசிந்தை - செய்.

(இ-ள்.) மெய்ஞ்ஞான ஒளியெனும் அறிவாதீதத்தையும், ப்ரமவஸ்துவாகிய ஆன்மசொரூபததையும், 'உள்ளங்கை நெல்லிக்கனிபோற்" டார்த்து பூர்த்தியடைவதற்கானதும், வேதங்களினுடைய அம்ஸங்களைத தெளிவுறும்படி முடிவைப்புகட்டுவதுமாகிய ஞானக்கலைகளென்னும் நேத்திரமிருக்கின்றது. அவையடைந்தபின் திருவருளென்னுங் கருணையாகிய திரவியவாபரண மணிவதற்கிருக்கின்றது. இவையாவும் நினையாது உலகப்பொய்ச்சிந்தையி லகம்பலிததுக் கெட்டலையும் ஓ நெஞ்சமே! இந்த நேரமே சற்கருமத்தை பரிபாலிக்கத் தகுதியுள்ளது, ஆதலான் கைநெகிழவிடாது ஆன்மசோதியுள்ளவனாயினும் சலிப்புறாமல் வைராக்கிய சிந்தையுடனே சிவபிரானுடைய திருவடியை சதா அஞ்சலிசெய்வாயாக—எ-ம். (26)

செய்யும் வினைகளுனைச் சேருமே யல்லாது
பொய்யெனவே பொழுது போக்காதே - துய்யகலை
நாடித் தியானமுட னற்றவத் தோராருகிற்
கூடி மகிழ்தற் - குணம்.

(இ-ள்.) ஓ மனமே! நீ உலகின்கணவதரித்து மண்ணிற் புதைபடுகின்றவனாயினு நடத்திவந்த கருமங்களெல்லாம் முடிவிலுனைவந் தெய்யுமே யல்லாது வேறொருவராலினுஞ்செல்லாது, இந்த யதார்த்தவாகிய தோரணையை பொய்யென்றிகழ்ந்து வீணே யுனதாயுளைக் கெடுக்காதே? இதை மெய்யென்பதாக வுள்ளத்திற பதியவைத்து நன்னெறியற்றதும், ஆதமலர்பமிலாததுமான ஆபாசங்கணிறைந்த நூல்களை வாசியாதுவிடுத்து மெய்ப்பொருளாகிய தெய்வவிலாசங்களுறைவிடமானதும், மஹான்களாகிய முநியஞானிகளாற் றிருவாய்மலர்ந்ததும் யாதாமொரு சங்கற்பங்களும் பிராந்தியுமற்றதாயும் விளங்கும் உத்தமசுருதிகளைத் தேடியவையினிடத்துள்ள விதிவிலக்குகளை மனனஞ்செய்து அந்நிலை யிடைவிடுவில மங்கலடையாது, மெய்யுளத்தோரும் சாசசன சஹவாசருமாகிய சாதுக்களைநெருங்கி நன்னடை, பக்தி, விஸ்வாசம், தீயவைவெறுத்தல், தன்னை யாவுமாயப் பார்த்தல் முதலியவைகளிற் சிறந்து ஆனந்தமுற்றிருத்தலே நன்மைபயக்கு மோர் முதலங்கமாம், இஃதை வழுவாது பின்பற்றிசுகித்திருப்பாயாக—எ-ம். (27)

குணங்குடியாய்க் கொண்ட குருசின் மயனைக்
கணமும் நினையாக்கன் மத்தால் - நிணங்கொண்ட
தேகப் பிணியறுமோ தெய்வ கதிவருமோ
ஆகமத்தை நீகண் - டறி.

(இ-ள்.) உண்மையாகிய பக்திநிறைந்த அடியார்களுடைய வுள்ளத்திற் கன்றைப்பிரியாக் கறவைப்போல இடைவிடாது ஆனந்தமயமாக வறிவாதீதமுற்று நடனஞ்செய்து விளங்குபவனாகவும், குருமூர்த்தமாகவும், பக்தாபிஷேகனாகவும், வ்யாபித்துள்ள சின்மயானந்தசொரூபமாகிய பரமசிவனை மாத்திரைப்பொழுதேனுஞ் சிந்தனைச்செய்யாத பாவத்வினையால் புழுக்கள் மலிந்த மாமிசமூட்டையாகிய சரீரத்தினால் விளைந்த நோயானது நீங்குமோ? அல்லது அத்தியச்சுமையினால் முத்திமோக்ஷமெனும் ப்ரம்மசுகங்கிடைக்குமோ? கிட்டாவாம், ஆதலான் அற்புதத்தியுள்ள ஓ பேயமனமே! தெய்வவாக்கினையொத்த முதுமொழிகளைத் தெளிவுடன் கண்டறிந் தவ்வரம்புகடவாதபடி சின்மாத்திரனாகிய வொப்பற்ற ஞானசூரியனைப்போல் விளங்குவாயாக—எ-ம். (28)

அறிவான் விளங்குவதே யல்லாது வேறு
வெறியான் மயக்கல் விபரீதம் - நெறியிலா
வானரத்தைப் போலுமனமே மனனுக்கு வந்தெதிர்த்த
ஹீனனைப்போ லாமே - யிது.

(இ-ள்.) சர்வசைதன்ய சுகாரம்ப பரமானந்த வள்ளலாகிய சிவமானது ஆத்மானுபவத்தினும் சகல பேதங்களற்ற அறிவினிடத்திலே வியாபித்தும் விசிம்பித்தும் காண்பதற்குரித்தான வஸ்துவேயன்றி, பற்பல விடம்பென்னும் மயக்கத்தினாற்கலங்கி மாறிகுலைந்தலைவதும், விபரீதமான வாடாசமொழிகளிற் பிணைப்பட்டுத்திரிவதும் மஹா அதிசயமே, வீணசெயலுக்குத் துணையாகிய ஓ மனமே! உனது அதி சாமர்த்தியெல்லாம் ஓரிலையினுந் தங்காது பல்லிடத்தும் பல்லிளித்துழலுங் குரங்கைப்போலும், உண்மையும், பத்திகூர்மையும், புஜபலமும், நற்கீர்த்தியுமில்லாத மமதையுடைய வோர் பாமரன் பின்வருங்கதியை சற்றேனும் யோசியாதபடி விருதாயிலயுத்தத்திற் காரவாரங்கொண்ட வார்த்தை மாறுமுன் பலராலுமடிபட்டுயிரமடிந்தானென்பதைப்போன்று சித்திரபிரத போனகந்நையுன்ன வகையற்று விடங்குடித்திறக்கத் தீயவுலக வ்யாபாரத்திலே இழிவாகிய பேதங்களினிடத் துஞ்சிக்கி நொக்குண்டைபே யின்றென்ன விபரீத, இசசெய்கையைக்கடந்து மெய்ஞ்ஞான பாதையை நெருங்கி என்றுஞ்சுகப்படாதோ—எ-ம். (20)

இதுவோ அதுவோவென் றேங்கிபல காலு
முதுமையடைந்தக்கால முடியா - வதுவையில்
பொற்றாலி கட்டநற புதுதிபறறு வென்பதைபபோற
சற்றேனும் வெட்கமுண்டோ - சாற்று.

(இ-ள்.) உலகமக்களாற் சொல்லப்படுகின்ற பல வேதபோதங்களினு மலைவுற்று, இந்தவஸ்துவோ அல்லதேல் அந்தவஸ்துவோ யதார்த்தமுள தெய்வமென சந்தேகிப்பதன்றி பலவாறுமுண்மையறியாது கலங்கி உனதாயுட்களையெல்லாம செலவழித்து வயோதிகமடையுங்வேளையில் பாவசங்காரமூர்த்தியை யடையமறவுறகிபதுவோ? அப்படி வாயக்குமென்று யூகிப்பது இல்லறவாழ்க்கையை நடத்தவிருப்பமுற்றவொருவன் ஏராளமான தனத்தை விரையப்படுத்தி உலகோர் முன்னம் வேதவிதிப்படி சடங்குகளியாவு முடித்துக்கொண்டு மணவறையில் வீற்றிருக்கு சுரநந்நவாச்சியத்தொனியின் கோஷத்தினால் திருமாங்கல்யஞ்சூட்ட கிடாபயமற்று பிறகு பலர்பார்க்க தனது புத்தியிற் கேவலத்திற்காக வெட்கமுற்றவனைபபோல "இளமையிற்கல்" என்ற பிரமாணநூதவழுவி முதுமையிலாசரிக்கலாமென்று யௌவனமும், புத்திகோசரமுடையதும ஆகிய பருவத்தை காமாதுரோகத்தினிற்

போக்கி ஆத்மலாபத்தை சிதைவுபடுத்தி தெய்வகொள்கையினுக்கும் மாறுட்டஞ்செய்ய வாளாயமடிந்தழிகின்றதையே இக்கொடுமையைபபற்றி நாணமிருக்கின்றநா சொல்வாடாக, பாவத்திற்கு வழிகாட்டியாயிற்கும் ஓ மனக்குரங்கே! உனது தீயச்செயகைகளற்று ஜீவாத்மனுகவிளங்கும் பரமசிவனேயிடைவிடாது சேவைசெய்து கைலையெனு மோக்ஷபதவியை யடைவாயாக.

சாற்றும புகழ்மலிந்த சாதுக்க ளென்ஞான்றும்
போற்றும் புநித்கழல் புந்திமகிழ் - தேத்தாமல்
வாய்க்குமோ கைலை மணக்குமோ ஞானமலர்
போக்குமோ மும்மலதநின் - பொய்.

(இ-ள்) பூதலத்தினிச்சையென்பதில்லாமல் மெய்ஞ்ஞான சொரூபராய் விளங்கி யாவராலும் புகழ்ந்து வியககத்தக்க முதியவறிவுடையவரால் ஒருகாலமின்றி முக்காலு மிறைஞ்சிநிற்கும் திருவடிகமலத்தை சிந்தித்து பஞ்சபூதியமு மொருநிலைப்பட்டு நற்பேறடையும்படி வணங்காமல் சிவசம்பிரதாயமாகிய கைலையெனு மோக்ஷபதவிகிடைக்குமோ? அப்பெரும்பாகியத்தையீயும் அறிவாதீததநின் வாசனையாகிய அருளென்னும் பூங்கொத்தானது பரிமளிக்குமோ? இவ்வாறின்றி யடையாத அந்தகாரத்தின் செறுக்கானது ஆணவம், காமியம் மாய்கை யென்னும் மூனறநித்தியமாகிய யீனத்துவத்தை மாய்த்துவிடுமோ? ஒருக்காலு மியலாததாம். ஆதலான், ஓ மூடமனமே! திருவருளாளர்களை யடைந்து முத்திநிலைகளை விசாரித்து தீபவகையற்று நித்தியாபரோட்சனுக இருப்பாயாக—எ-ம் (31)

பொய்யடிமை யில்லாத புண்ணியர்பாற் சென்றுனது
வெய்யவினை யோட்டும் விதமறிந்து - துய்யவரு
ளூட்டும் வெண்ணீறும் உருத்ராக்ஷ மும்அணிந்து
நாட்டுவாய் பக்தி - நலம்.

(இ-ள்) ஓ மூடத்துவம்பொருந்திய மனமே! உலகத்திற் காணப்படுகின்ற திருத்தொண்டர்களுக்குள் விசேடித்த பிரமாணத்தரும், பொருளைநாடி வெளியரங்கத்திலொடிக்கின்றவிதமே அந்தரங்கத்தி லெழிலில்லாதவர்களைப் பொன்றுதவரும் உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் பகவத்விஷயமாகிய ஸத்காரியத்திற் றத்தஞ்செய்து, சுகாதீதப்பெரும்பாதையினிடத்துப் பிரவேசித்திருப்பவரும் மனத்திலொன்றாய் வாக்கிலொன்றாய் முடியாத நற்சிந்தையுடையவரும், யாதொரு பேதங்களிடத்து செலவாதவரும், அநித்தியமாகிய அஞ்ஞானசன்மங்களிற் பிணைப்படாதவருமாகிய அன்பரிடஞ்சென்று உனது மௌட்டியயிருளாகிய கொடியநோயை நிவர்த்திச்செய்வதற்குபாயந்தெரிந்து பரிசுத்த நிலையினைக்கொடுத்தும், பாவத்துயரைநீக்கியும் அறி

வை சுயம்பாக்குவிக்கும் விபூதி துளிதமெனும் பஞ்சாட்சரத்தையும், கண்டிகையும்புனைந்து சமயதீக்ஷை, குருதீக்ஷை, விசேஷதீக்ஷையென்னு மூவித தீக்ஷையும்பெற்று சிவபெருமானுடைய திருக்கல்யாணகுணங்கள் நிறைந்தும் ஞானமிர்தமுமாகிய சங்கீர்த்தனங்களைப்பாடி மெய்வாழ்வினிற் புகுவாயேயானால் பிறவியெடுத்ததற்கு நன்மையைத்தரும். இதை யுணராது பக்தியை மறந்து முத்தியடையலாமென்ற மந்தபுத்தியை நிவர்த்திச்செய்வதே பயனுடைத்து—எ-ம். (32)

நலமிஃ தெனவோர்ந்து நற்றவஞ்செய் யாமற்
கலைகளறிந் துங்கதையு ரைத்தும - பலனோ
பனைபோல் பவமுண்ட நெஞ்சேகற் றோர்மேற்
சினங்கொண்டால் வந்துறுமோ - சீர்.

(இ-ள்.) தெய்வதாபக்தியே எல்லாநன்மைகளுந் தருமெனறு பெரியோர்கள் வாக்கியங்களினாலும், குருக்களின் போதனையினாலும், அனேக திருததொண்டர்களடைந்த பெரும்புகழ்ச்சியினாலும், செவவனேதெரிந்தும் உண்மையினளவை விபரீதசங்கற்பங்களாகிய பிராந்திநீங்க வெளிபடுத்தும் சுருதிகளறிந்தும், யுக்தியினிடத்தநுசரித்தும், பிறர்க்குச் சரித்திரசங்கிரஹமாகப் புகன்றும், மெய்ஞ்ஞான பாக்கியமாகிய சுவர்க்கபோகமடைவதற்கினிய ஆராதனையைக் கைககொள்ளாமற்போனால் மேற்கூறிய விஷயங்களினால ஆதபாநின்மலமாம் பயனைசேருமா? இஃதல்லாமலும் பனைமரமோாகிய பிரமாணத்திற்கிணங்க தீயவினையைப்புரிந்து தடித்திருக்கின்ற ஓ மனப்பேயே! நற்சார்பினையெடுத்தோதுங் கறறவாகளென்னுஞ் சாதுக்களின்பேரிலே அவர்களுக்காக்கும்பயனைச் சற்றேனுமுணராத மமதையென்னுங் கர்வத்தினாற் கோபங்கொண்டவமதித்தவாகளை விலகுவாயேயானல் பெரும்புகழான ஞானப்சாரபோகமானதுவந் துன்பாலடையுமோ? அல்லது உனதஞான மெனனு மகந்தையாகிய பிறவிநீங்குமோ? நீங்காவாம், ஆதலான் நல்லவர்களை உருவததினாலுஞ் செல்வத்தினாலுமறியாதபடி குணனுபவ நீதிவார்த்தையினு மொழுக்கங்களினுமுணர்ந்து கைநெகிழவிடாது பின்பற்றி யிறைவன் சிறப்பை யவர்களாற்றெளிந்து தெய்வநிழலிலடைவாயாக—எ-ம். (33)

சீரணுகும் ஞானஞ் செழித்தோங்கு முண்மைநிலைப்
பேரணுகும் ப்ரம்ம மதுபேசும - காரணுகுந்
தீவினையை வாட்டிவிடுஞ் சின்மயமா வாயிதனை
பாவித்தா லன்றோ - பலன்.

(இ-ள்) பரப்ரமானநத சொரூபராகிய பெரியோர்களிட மபயமடைந்தால் அழகுபொருந்திய மோக்ஷநெறியானது தழைத்துவளரும், சிறபபுள்ள

யதார்த்தபாதையென்னு மூதறிவினிடத்திற் கலக்கவைக்கும் முடிவாக பக்தியாகிய ஜீவாமிர்த மேலீட்டுங்கால் சர்வவியாபகத்தினுமுலாவிவரும் அறிவாகிய சிவம் உன்னிடத்து சமூர்த்தியிற்கலந்து ஒப்புறவாகிப் பூரணானந்தவுதயத்தினுள் உசாவும் ஓவலக்காரமும் வாய்மதமுங்கொண்டழிகின்ற பேதைமனமே! இதனாலிருணிறைந்த பாவதமையுங்கடக்கச்செய்யும் சுத்தசைதந்ய தெய்வவடிவமுடையாவாய். இந்த உத்தமவாகப்பெய்ந்த கடமானது மண்ணிலடைப்படுமுன்னமே சிந்தித்துணர்ந்திட்டாலல்லவோ பிரயோசனந்தரும், ஆதலால் அஞ்ஞானமும் பாவமுமான ஹீனகுணமான ப்ரமாற நறபலனைத்தருஞ் சாதுக்களையடைந்து பிறவாமுத்தியோகம் ஞானசாதனையைக் கேட்டுத்தெளிவாயாக—எ-ம். (34)

பலனை யிழந்தேனான படுந்துயர்போ லுந்தன்
கலனை யிழந்தகணி கைபோன்ம - நிலை தளர்ந்து
வாடுமுனந் தேகமது மாறுமுன மாற்றானுங்
கூடுமுனம் பேரறிவைக - கூடு.

(இ-ள்) வெகுகாலயாக வருந்தமுற்று நிலத்தைப்பண்படுத்தி பருவமறிந்து விதைவிதைத்து பறவைகளினாலும் மிருகங்களினாலும் சேதமாகாதபடி காபந்துசெய்து இரவுபகலாக காத்துவந்த வேளாளன் அந்தப்பயிர்களிபாவு முற்றியபின் அறுபடுககாலத்திற் சிலதஸ்கரர்கள் செலவுசெய்து கொய்தபோது எல்லாஞ்சாவியாகப்போனதைக்கண்டு உழைப்பெல்லாம் இழக்கலானதென் றெவ்வண்ண மனங்கலங்கித் துக்கிப்பானோ அதைப்போலவும், அணிந்திருக்கின்ற ஆபரணங்களை பறிகொடுத்த மங்கையானவள் புலம்பித் தேகம்வாடுவதுபோலவும், பாழாகிய வெண்ணத்தினிற் சிககுண்டு வாதைப்படும் ஓ மனமே! மஹான்களடைந்த சமாதிநெறியிற் பிறழாது காமாந்தகாரமென்னு மஞ்ஞானச்செய்கையால் நிலைதளருவதற்குமுன்னமே மாமிஸமூட்டையாகிய தேகத்தினங்கங்கள் பழுதடையுமுன்னமே சத்துக்களோடுங் பாவசக்ரமயானது மிகுந்து தென்றிசைக்கோனென்னுங் காலனாகிய மரணசத்துருவானவ னெருங்குமுன்னமே பெரியோரால் சிந்தித்து தன்னைத்தானே ஒப்புக்கொடுத்து ஆனந்தப்பரவசமுற்ற சிவானந்தபோகமெனுந் திருவருளை நினைந்து தியானித்து மெய்வாழ்வினையடைவாயாக, ஏனெனில் மேற்குறித்தவண்ணமியாவையுங்கெடுத்து அறிவுமங்கியபின் சுவர்க்க வெண்ணமானதுவந் தடுத்தபோழ்தும் பயனில்லை—எ-ம். (35)

கூடுவிட் டாவி கூக்குரலிட் டேகுமெனப்
பாடுவிட்டே முன்னோர் பறைந்தாரே - சேடுவிட்டா
லென்றுஞ் சுகமிலையென் றெவ்விடத்துங் கேட்டுமிகத்
தின்றுகுடித் தாய்என் - செயல்.

(இ-ள்.) பொய்யுடம்பாகிய கூட்டினிடத்துத் தங்கியிருக்கும் ஆன்மாவானது உலகபோகங்களாகிய வ்யாபாரத்தில் மலைத்து அனுபவித்த சகலதோற்றங்களையும் நீத்து பெருமூச்செறிந்துபோகுந் தனுபவகாட்சியாமென கற்றவர்களென்னும் ஞானிகளாகிய மஹான்கள் மூவாசையென்னும் பாபவலையையும், அவ்வாசையினால் விளைகின்ற பற்பல சிந்தைகளையும், அச்சிந்தையினால் வந்தடைகின்ற சாபத்தையும், அச்சாபத்தினால் தெய்வதாபத்திற்குண்டாகுமிடையூறுகளையும், சிறிதுநேரமும் வேண்டாது இப்புவனபேதங்களைக் கடந்தும், பின்னவர்களும் அத்தீபஹிம்சையாற் கெட்டலைந்து பழியுடம்பெடுக்காமல் நற்குணமுள்ளவர்களாய் அனந்தானந்த நீதிநூற்களை உலோகோபகாரமாய் வெளியிட்டிருக்கின்றனரே, அதனைப்பிடித்தலையும் ஓ மூடப்பேயே பெரியோர்கள் திருவாய்மலர்ந்த வாக்கியங்களைக் கேட்கச்செவியும், நினைக்க அறிவும், நடக்கயுக்தியும், இல்லாவிடினும் பெருமைபொருந்திய நல்வினையைக் கைக்கொள்ளாமற் றீமையிற்சிக்கின கன்மநெஞ்சகராகிய வெளிடம்பராகட்கு இம்மையிலுலகோபுகழும் மறுமையில் திவ்யஸ்வரூபமகிழ்ச்சியையும் கிடைப்பதுண்டோமோ வென்று எந்தவிடத்தினும் நற்பெருமையும் வீண்செருக்கும் இல்லாத நல்லவர்கள் நாவினாற்புகலக் சாதாரகேள்வியுற்றும், சிறிதேனுங் கவனியாதபடி பயனற்ற சரீரங்களைச் சுமைபோற்றாங்கியது போதாமையெனப் பழக்கமானது ஒழுக்க உணர்ச்சி கொடுத்ததும், மதியையும் மானத்தையும், விவேகத்தையும், செல்வத்தையும், பக்தியையும், நல்லோர் ஸ்நேகத்தையுந் தூரப்படுத்துகின்ற மயக்கமாகிய மதுவையுங் களிப்பாகப் பருகினையே இதென்னகிரியை வியர்த்தமாய் மடிவதற்காகவோ நீயுலகில் ஜனித்ததனை இவைநீங்கி நல்வினையைச்செய்து புகழ்பெறுவாயாக—எ-ம்.

செயலால் வருவதுவோ செப்பொண்ணு; பாவ
மயலால் வருந்துவது மாண்போ - வயலதனை
முட்செறிதல் போலவே முத்திவழி விட்டிழிதற்
பட்டம் பறந்திடுதற் - பாங்கு.

(இ-ள்.) துன்மார்க்கச்சிந்தையில் மலைவுற்றலையும் ஓ நெஞ்சமே! நீயங்கீகாரஞ்செய்து நடத்துகின்ற குணக்கேட்டினால் வந்தடைகின்ற ஹீனத்துவமோ சொல்லிமுடிவுறாத கன்மமாம், இஃதனுடன் அலகையைப்போல பின்றொடர்ந்து வாதிக்கும் மாயகையோ எல்லாவற்றினுந் தீதையுடையது, இதைச் சற்றேனுங்கவனியாததுஞ் சிறப்புள்ளதோ? உனது நிர்சிந்தனை வ்யாபாரமானது வளர்ந்தோங்குகின்ற மருநிலத்தின் தானியக்கதிரை முள்ளானதுநெருங்கி அக்கதிரின் வித்தினைக்கெடுத்ததுபோலவும், காற்றாடியானது மேகத்திலூடுருவிப்பாய்ந்து வாயுவற்றவுடன் நிலையுமற்று கண்ணிற்குப் புலப்படாதவிடத்தில் விழுந்ததைப்போலவும், நற்கருணையாகிய

மெய்வாழ்வினையிழப்பதும், நன்மையுடையதோவென கண்டுதெளிவாயாக; ஏனெனில் பயிர்வளமைகருன்றியதைப்போலவும், காற்றடி திசையறியாது விழுந்தமைப்போலவும், பிறவியெடுத்தநின் பயனடையாது மாயவது பெருந்துக்கமும் மகிமையற்றதுமெனத் தெளிந்தரனை பூஜிப்பாயாக—எ-ம். (37)

பாங்கறியா தேயுழன்ற பாவச் சுமையதனைத்
தாங்கவெளி தாமோ தாரணியி - னீங்கா
மவுனமதைக் கொள்ளென்றால் வாதாடும் பேயே
கவனமிலை யோபலநூற் - கற்று.

(இ-ள்.) அழகுநிறைந்த மெய்ஞ்ஞானவொளியினைப்பெற்ற மூதுணர்ந்தோர்பாற்சென்று நன்மையைத்தருகின்றனவாகிய திருவருளில் மூழ்காமல் வீண்டம்பாகாரத்திற் பட்டிமாட்டைப்போலத் திரிந்தலைந்து மமதையென்னுமிருளிற் றவித்ததினாலடைந்த வினையாகிய பிறவியென்னும் பாரமாகிய மூட்டையைத் தலைமேற் சுமந்துகொண்டனையே? ஐயோ விதனுபத்திரவத்தைப் பாவவுலகிற் சகிக்கமுடியுமோ? இவையாவுந்தொலைந்து பரிசுத்தம் பொருந்திய நிருவிகற்ப சமாதியிலடங்கி நிஷ்டாநுபூதியனாயிருக்க முயற்சிசெய்யென்றால் அஞ்ஞானம்நிறைந்து விருதாவான காரியத்திற்கு முதலவனாகின்று இது என்னுடையது, இதைப்போன்ற திரந எண்திக்கிலுமிலையென்றாக ஆபாசமாகிய வார்த்தையைப்புகட்டி யோலியாய்த் தலைவிரித்தாடும் அலகைக்குணம்போன்ற ஓ மனமே? உலகத்தார்முன் அனேக சாத்திரங்களைக் கற்றவனென் றகந்தைக்கொண்டனையே, இச்செருக்கினாலும் பிறனைத் தூஷிப்பதாலும், தன்னைத்தானே மதிப்பதினாலும், மூவாசைக்கட்டிற் பிணைப்பட்டிருப்பதினாலும், நல்லோரிடம் வியர்த்தமாகிய வார்த்தையை பிரயோகிப்பதினாலும் விதிவிலக்குகளை மீறுகின்றதினாலும் உண்டாகின்ற தீனமயாந்தோஷத்தைப்பற்றி நினையாமற்போனதென்ன மிடிமையுடையதென்றுணர்ந்து இவ்வித துர்வ்யாபாரத்தைக் கடக்கவிட்டு பரமசிவனின் திருவடியைச் சிந்திப்பாயாக—எ-ம். (38)

கற்றளவில் நிற்கக் கருதாதே ஞதனையோர்
கற்றவனென் றெண்ணவோநீ காதலித்தாய்-பற்றனைத்தும்
நீங்கிச் சிவானந்த நிட்டையினி னின்றறிவிற்
றூங்கினு லன்றோ - சுகம்.

(இ-ள்.) ஓ இடும்பிலழியும் பாவமனமே! குருஸ்தானத்தில் மகாபய பக்தியோடு வாசித்தறிந்த நூலினுடைய போதனையளவில் நிலைத்திருக்க எண்ணமற்றதென்னவோ? மாயாசமுத்திரமாகிய தீயவாசனை நிறைந்ததும், பேதைக்குணமுடையதுமாகிய இவ்வுலகத்தார் மஹா பாண்டித்ய

முள்ளவனென்று மதிக்கவோ நீ இச்சைப்பூண்டு சற்கருமங்களை நீக்கி துற்கருமங்களி லறிவைபபோக்கி கெட்டலைந்தாய. அகப்பற்று, புறப்பற்றென்னும் இருவித மணத்தையும் நகாாதபடி அவ்வாசனையின் வேரறுத்து மயலைத்தாண்டி நிராதாரமாயிருக்கின்ற சுகரூப சாஸ்வதானந்த போகத்தைத் தரும் பரமசாதனையி லசைவற்றுநின்று துரியாதீத வஸ்துவாகிய ஆன்மாவென்னுஞ் சிவத்துடன் ஒப்பற்று நிதநியாதீத சுகமாகிய பேரின்பத்திற் சயனித்தாலல்லவோ நன்மை, இஃதனைக்கடாது வெறும்பித்துக்கொண்டனையே யிஃதென்ன விபரீதம்—எ-ம். (39)

சுகமாவ தொன்றுதோன் றுந்துா ரத்தே
அகஞ்சலித் தாலனுப லாகா - புகலரிய
விஞ்சைதமி ழுண்டு விளங்குவையா மாகிற
பஞ்சைபோல வீயும் - பவம.

(இ-ள்.) பிர்மானந்த போகமென்பதொன்றே யாவுக்குமேலாயுள்ளது. அப்பழம்பொருளானதை யடையவிரும்பாதவாக்கு எட்டாவடிவாயும், காணற்கும் சொலலற்கும், கடினமான நிலையில் வியாபித்திருப்பது, சுவாநுபவ நெறியிற் பிறழாதவரும், மெய்யை மெய்யாகவும், பொய்யைபபொய்யாகவும், பாவனைசெய்யத்தகுதியுள்ளமாதவரும்,ஸ்தூலக்காட்சிமாறாது ஒருபடித்தாய் நிற்கின்றவரும், தன்னைப்போல் மறறபிராணிகளையும் ஸ்நேகிக்குங் குணம் வழுவாதவருமாயுள்ள புங்கவாகளாகிய நலலோர்களருகி னடிப்பதுமான அறிவானந்த பெரும்பாக்கியமென்னுஞ்சிவம் அம்மஹான்களுக்கு எளிதிலுள்ளது. இவ்வஸ்துவாகிய சச்சிதானந்த பரமேஸ்வரனின் சரணாவிந்தத்தை சேர விச்சிக்கின்றவர்க ளுள்ளமானது பிராரததுவ ஜன்மமென்னும் பிராந்தியின் வயத்திலகபபட்டு நாநாவிதமாக கலங்குமேயானல் பெருமானருளா நின்ற சிதாகாஸத்தை யடைவதற்கியலாது. ஆதலால டாவஇருளிலலைகின்ற ஓ மனக்குரங்கே! சொல்வதற்கரிய ஞானமலிந்ததும், ஆதிகாலத்திற் சமஸ்கிருதபாஷைக்குத் தமிழ்ப்பாஷை குறைநததென காசியிலுள்ள ஆரியர்வாக்குவாதஞ் செய்தபோது அவ்வாரியரை மேற்கொணடு செயம்பெற்று வந்தவராகிய அகத்தியமுனிவரால் புகழடைந்ததுமாகிய தமிழ்ப்பாஷையாகுஞ் சிறந்த கல்வியினிடத்தெழுகின்ற மதுரததைக்குடித்து தேஜோஸ்வரூபமாக பிரகாசிப்பையேயானல் உன்னை நெடுங்காலமாக வாதித்துவந்த பாவமெனுங் கூற்றனுகிய மரணமதனுகாமல் காற்றினிலகப்பட்ட இலவத்தைப்போல்பறக்கும். இஃதனுண்மையை நினைந்து தானெனுங் கர்வப்பேயின்சிரசை அறிவென்னுஞ் சிவபெருமானுடைய பாதத்தில் மிதிக்குமுபாய மறிந்தடங்கிநிற்பாயாக—எ-ம்.

இங்ஙனங்கூறிய வேதாந்தக்கடலென்னும் ஞானக்கலைக் கற்றவர்கள் அன்பு, அடக்கம், பொறுமையுள்ளவர்களாகவும், அவையில்லார் செறுக்கு, பொருமை ஒருவனையொருவர் அவமதித்தல், மற்றுமுதலிய துர்க்குணத் திற் றலைப்படுவாரென்ற முதுமொழியை நோக்கி மனதிற்கு போதிக்கப் பட்டது (40)

பவமென்னுங் கூற்றன்றன் பாசங் களைந்து
சிவமென்னு மெய்ப்பொருளைச் சேர்ந்து - தவஞ்செய்தார்
வல்லமையைச் சொல்லவே மாநிலமுங் கொள்ளாதா
ரெல்லா ரினும்பெரியோ - ரெண்.

(இ-ள்) ஊழ்வினையென்று முன்னோர்களாற் கூறப்பட்டுள்ள தீமை யென்னு மரணமாகிய காலனுடைய வலைக்குட்பிரவேசிக்காம லவ்வழியை யடைத்து பங்களாசனபாபுவ், நித்தியமோக்ஷத்தை யருளாநிற்பவனும், ஞானஸ்வரூபியும் அறிவிற்கினிய சுகியுமாயுள்ள சிவப்ரகாசவடிவினிற்கல ந்து, அழியும் பொய்யுடம்பினை சவுகரியத்தைக் காவாதவராய் அழிவின்றி மெய்யைப்பூண்டு பற்றுகளாகிய வீணாசைகளிற் சிறிதும் விருப்பமற்றவராகி தன்னைத்தெரிந்த தலைவனாகிய பரப்பிரம்ம ஸ்வயம்புவைக் கண்டுகளிக்க நிஷ்டைபுரிந்த நல்லோர்களுடைய நெறியாகிய சாமார்த்தியத்தின் மகத்துவ த்தை வெளியிடுதற்கு இப்புவனமும் போதாமையாதலான் அநித்யதேகந் திலும், பற்பல தீயவாபாசத்திலுஞ் சந்தோஷமுற்று மலைக்கும் யாவருக் கும் முன்னவரென்று கருதுவாயாக. ஓ மூட மனமே! பொய்யாசைக்குட் பட்டவர்கள் வெறும்பித்தரென்றும், மெய்யாசையாகிய அறிவானந்த வாத்ம போகத்தைப பின்பற்றினவர்கள் முத்தரென்றுந்தெளிந்து நற்சார்பினையடை வாயாக—எ-ம் (41)

எண்ணிக்கை யில்லா திடருற்ற பேதைமையாங்
கண்ணுக்குட் சிட்டாய்க் கலங்கினையே - புண்ணிறகை
யிட்டாற் குணமோ யிறைவன் றிருவருளை
விட்டாற் குணமோ - விளம்பு.

(இ-ள்.) உலகமாய்கையென்னுந் தீமையை விலக்கும்படி கிஞ்சித்துங் கொள்கையற்று மேலுமேலுந் துன்பத்திரையால்மூடப்பட்ட அறிவில்லாத அகங்காரமென்னும் வலைக்குள் புள்ளினத்தைப்போன்று நலமிழந்து வாதை யுற்றனையே? ஓ துன்மார்க்கநெஞ்சே! தேகத்தின்மீது கண்டிருக்கும் இர ணத்தின்பேரி லடிக்கடி கையாடிக்கொண்டுவந்தாற் சுகப்படுமோ அதைப் போல அகந்தையிற்றடிப்பேறி தவநாளைப் பவநாளாகக் கைக்கொண்டு அங் குமிங்கு மங்கலாய்த்துத்திரிந்து சாட்சாத்கார பரமசிவனின் கருணையாகிய

பொற்கமலத்தை மறந்தால் நற்பதவிகிடைக்குமோ? இவ்விரண்டம்ஸத்தை யுமாலோசித்து நற்பாதையைப் புகலுவாயாக. இஃதனால் அஞ்ஞானமாகிய புண்ணை கடவுளுடைய அருளென்னும் மருந்தினால் சுதநிகரிக்கவேண்டும்.

விளமபுஞ் சுகவடிவில் மேவாது நேருங்
களங்கமகற் றுதகுன் நெஞ்சே - விளங்காமற்
பாழுக் குழைந்ததுப் பரிதபித்தா லுள்ளத்திற்
சூழுமோ நித்ய - சுடர்.

(இ-ள்.) மனுநீதியாகிய சற்சமயங்களை தெற்றெனவிளங்கவைந்த மஹான்களாற் சொல்லப்படுகின்ற பேரொளிபபிழம்பான சிவபெருமானுடைய பூரணானந்த நீழலிலடையாவண்ணம் தடுக்கின்ற அஞ்ஞான தசையினையுடைத்தாகிய மலபந்த கன்மத்தைக்கடக்காது இழிவையே ஓராபரணமாகத்தரித்து புத்திசிதைவுற்றும் அனுவளவேனும தெய்வநாபக்தியி ன்பிப்பிராயத்தை யுளத்திற்றுக்காது பீத்தைத்துருத்திக்காகவும், முடிவிற் பின்பற்றவியலாத சுற்றம், தனம், மற்று வெளிடம்பத்திற்காகவும், உனதாயுளெல்லாங் கஷ்டப்பட்டு சாகுங்காலந்திற் பாவசங்காரா, சிவசங்கரா, ஆத்மரட்சகா, பக்தவச்சலா, பரமபுருஷா, ஆபத்பாந்தவா, பக்தானுகூலா, பரமதயாளா, கருணைமூர்த்தி அபயமபயமென்றின்னங் கோடானுகோடி வார்த்தையினால் அலறி அலறி அழுதழுது புலம்புவாயேயானல, இளமையிற்றவறிலும் பால்யதிசையிலேனுங் கவனமின்றி விழலாகிப எண்ணததையேவைத்து நசுங்குண்ட ஆசையின் ஆயிரங்கூறி லொருகூறேனுஞ சன்மார்க்கவிஷயத்திற் றத்தஞ்செய்யாத பெரும்பாவத்தினால், அஃதாவது தெய்வகோபத்தினால் மரணத்தறுவாயில் நித்யவாழ்வென்னுங் கைலையாகிய சிவானந்தவொளிபானது பாதகம்நிறைந்த வுன்மேற்சாயுமோ? ஓ மூடமனமே! சொல்லுவாயாக; இஃதனால எந்தவிஷயத்திற்கும் பரமபெருமானுகிய காத்தவ்யனின் துணையே சிறப்புடைத்து இவையின்றி நடத்துவதியாதும் பயனின்மையுள்ளதென்றுணர்ந்து தேகம் நாசமடையுமுன் நீ நடத்துங் கிரியைகளனைததிற்குந் தெய்வசிந்தனையைக் கைவிடாமற் பின்பற்றவேண்டும்—எ-ம். (43)

சுடரில் மனையதுபோற் சூதும்வா தும்பல்
விடரிற் றிகைத்தின முற்றால் - கடமதுவுங்
கல்லோ மலையோ கருதிலையோ யெனனவுகை
பல்லோர் தொழும்பொருளைப் - பற்று.

(இ-ள்.) விளக்கென்னு மொளியில்லாத விலலத்தைப்போன்று தேகமாகிய வீட்டிற்கு தெய்வபக்தி, மெய்ஞ்ஞானபோதம், சாதுக்கள்ஸ்நேகம், நன்னையுறியுஞ் சுபாவம், தன்னைத் தலைவனுகிய பரமசிவமென்னும் ஜீவாத்மா

விற்கு ஒப்புக்கொடுத்தல், நற்சிந்தை, கொடியவையென்னுங் குற்றங்களைதல், யாவையுமொன்றாய்நோக்கல் முதலிய எண்குணத்தை அறிவென்னுஞ் சுடரினால் பாவனைசெய்தால் நன்மைப்பயக்குமெனு முதியோர்வாக்கினை யிகழ்ந்து பொய், நிந்தை, வஞ்சம், கோள், வெகுளி, மயக்கம், துர்க்கிருத்தியம், பொறாமை, நற்செய்கையிலசதி, தெய்வதூஷணை, நல்லோர்க்கிடர் குருதுரோகம், பரஸ்திரீவாஞ்சை, அகந்தை, மது, கொலை, அடக்கமின்மை, திருப்பணியில்வெறுப்பு, அசங்கதவார்த்தை, பெரியோராகிய கற்றவரையவமதித்தல், வாக்கிலொன்று, மனத்திலொன்று, தீயவிஷயத்தில்முன்னேடல, வீண்குதர்க்கம், சாதிபேதம், மதவைராக்கியம் இவைமுதலியது மின்னும் பலவித கெட்டநடத்தையாகிய பாவப்புணரியிலிறங்கித தவித்துமீளாத இழிவைக் கைக்கொண்டலையும் ஓ மனப்பேயே! உனைத்தாங்கிய யிந்த வூத்தைப்பாண்டமானது எவ்விடத்தும் அசையாதிருக்கின்றதும், போட்டவிடத்தும் பிறந்தவிடத்துங்கிடக்கின்ற கருங்கல்லா, அன்றேல் சிமிலமென்னும் பர்வதமா, இதை யெவ்வளவுங் கவனியாது உன்மத்தனாய் மமதையாலழிந்து காலங்கழிக்கின்றனையே? இஃதென்னவகுபபு. நீ இதுகாறும் ஆசித்ததுவும், நேசித்ததுவும், பூசித்ததுவும், ரோசித்ததுவும் எல்லாங் காட்டிலெறித்த நிலவைப்போன்று பயனற்றதே, மகாகேவலம், மகாபாபம், மகாவெட்கம், ஐயோ முடிவாய்பார்க்கின் பெருந்துக்கம், ஆதலா லிவையாவு மொருங்கே நிவர்த்திசெய்து நாலவர்சுமந்து பல்லோரழ, ஈழக்காட்டிற்கொண்டுபோய் தாழப்போடுமுன்னம் சர்வசைதந்யனுகவும், எல்லாருககு மிறைவனுகவும், அவரவர்களுளத்தைப்போற் காட்சிக்கொடுத்து காக்கும் முத்தொழிற்றலைவனுமாகிய சிவபெருமான்றிருவருளைததேடி நல்வழிவுய்வாயாக; இஃதனால் தீமையாகிய பிறவியணுகும் விஷயததில் பயமும், பக்திவிஷயத்தில கர்த்தவ்யன்தயவும், தன்னையறியும் ஸ்திரமும் எவ்வாற்றானும் வந்தடையும்—எ-ம். (44)

பற்றென்ப தென்றும் பரிசுத்த மாக்குமுயர்
வெற்றியுண் டென்றார் விலகாரோ - உற்றமொழி
நம்பார்க் குணர்த்தவே ஞானியினு மாகாது
வம்பரென் றுள்ளே - மதித்து.

(இ-ள்.) அநித்தியத்தை விளைவிக்கின்ற பொய்போகத்தைத்தள்ளி அறிவாதீத பொக்கிஷத்தைக் கண்டுகளிக்கும் சிரவணுதியோன் றுண்டாயின் அவ்வுண்மையே சாட்சாத்கார ஞானோதய சிதாகாஸத்திற்கூட்டி தெய்வமயமாக்கும், இந்த பெருமைபொருந்திய நிலையினால் எடுத்ததேகத்தின் பயனைப்பெறலாமென்று சாசுவதபோகத்திற் காட்பட்டு அமிர்தவாரியை அள்ளிப்புசித் தானந்தித்தவர்கட்கு பாசபந்தத்தாலும், உலகோராலும், மற்றெவ்வித வாபாசவிடையூறுகளினாலும், அப்புண்ணிய புருஷன் பொறிகலங்கி நின்ற

ஸ்தானத்தைவிட்டுப் பிறழுவரோ? இல்லை. இதை ஞாயவாயிலாயாராய்ந்தும், அனுபவித்தும், போதிக்கின்றமையை விசுவாசியாத காதகராகிய பாதருக்குச் சமானமாய் வெறும்பித்துக்கொண்ட ஓ மனப்பேயே! பொய்யாசையாகிய மூவாசைப்பகட்டில் மலைத்துத்திரிந்தும், தெய்வசிந்தனையற்றும், நல்லவாக்கியங்களைச் செவியினிடமாய்க்கேட்டும், கனிவில்லாது "குலத்தைக் கெடுக்குங் கோடரிக்காம்பைப்போல்" தீமைக்கே தன்னையும் தனதெல்லா சுவாதீனத்தையுந் தத்தஞ்செய்து இருட்கண்மூடி திசைதெரியாதலைந்து உண்மையென்பதை கிஞ்சிததேனு முள்ளத்திற் றங்கவிடாமலலைக்கழிப்புறறிருக்கின்றவர்கட்கு சகலகேவலமுங்கடந்த முனிவர்களாலும் கற்பிக்கமுடியாதாம். ஏனெனில நன்மையாகிய திருவருள் கசக்கவும், இன்மையாகிய பாவச்செய்கை இனிப்பதினால இவை நடுப்பநற்கியலாதென்றும், தீயரைபார்க்கவும் சேரவுங்கூடாதென்பதைபபற்றி முன்னோருரைத்த முதுமொழியிருப்பதினாலதையோர்ந் துணர்ந்தடங்குவாயாக—எ-ம். (45)

மதித்திடிற் றெய்வம் மன்னுமே யல்லாற்
சிதைத்திடி லேஜங்மந் தீமை - பதைத்துட
லேகுமென் றெண்ணி யியாவுமுன் னேதுறந்தார்
வேகுதலோ வந்த - விதம்.

(இ-ள்.) மஹான்களாற் றிருவாய்மலர்ந்துள்ளனவாகிய அற்புத சரித்திரம்ஸங்களை யுளமென்னுங் கேணியினிடத்திற் றங்கும்படிசெய்து உள்ளவையை யுள்ளபடியாக அறிவிற்பொலிவுற்றால் பரப்ரம்மமாகிய கர்த்தா ஆங்குப்பிரகாசித்து வரம்புகடந்த வாழ்வையூட்டுவான். இவ்வழியைவிட்டுத் துர்க்கிருத்தியமே சதாமோக்ஷானந்தம் என்று முக்காலத்தும் அதன் அநித்தியத்தையுணராமலும் நற்சார்பினை நீங்கியுமிருப்பாயானால் நீ யெடுத்ததேகமும், அனுபவித்த பொருட்சார்பும், பயனற்று இலவங்காத்த கிள்ளைபோலாகி உடலும் கருவிகரணவிந்திரியங்களுந் திகிலுற்றயர்ந்து இடுகாட்டிற் பலர்காண அனல்பட்டுவெந்து சாம்பராவதற்கோ உலகினிடத்துதித்து வீண்பிணக்கில் மயங்கியவகை ஓ மூடமனமே! இவ்வண்ணம் நிறைவேறுமென்றல்லவோ கற்றறிந்த ஞானிகள் மாயாசமுத்திரத்தைக்கடந்து சைதந்ய சிவானந்தவாழ்விற் கலப்பதற்கு முதன்மையாக யாவையும்வெறுத்து நிதய சமாதியிற் புகுந்தார். ஆதலால் பொய்தேகமழிந்து இழிவாகிய பிறவிச்சுமையைத்தாங்குவதற்கு முன்னந் திருவருளினை சிந்திப்பாயாக—எ-ம். (46)

விதனங்க ளுண்டு விபரீதஞ் சாற்றி
மதங்களைத் தூற்றிவா யாடில் - பதங்காண
லுண்டோமண் சித்ர முயிர்பெறு தென்பரலாற்
கண்டதென்ன கன்மங் - கருத்து.

(இ-ள்.) தானென்னு மயக்கத்திற்சிக்கி பற்பல தீயச்செய்கையிலழிந்து பரமவள்ளலுடைய கோபமென்னும் வேதனையாகிய பாவக்கள்ளைக்குடித்து அலகைபோற் றலைவிரித்தாடி சைவமென்னும் அறிவாதீதமாகிய சன்மார்க்க நியாயதோரணைகளின் பொருளறியாது வாளாய் வேறுபாடாகவும் அதிசயமாகவும் கேட்போர்க்கும் அடுத்தோர்க்கும் பறையறைந்தும், தேகமாகிய மட்குடத்திற் றங்கியிருந்து கெடுக்காநின்ற மதத்தையனுசரித்து நற்போதனையினு லடக்கவகையற்று தனத்தாசையினாற் கணக்கிலடங்காத தெய்வமதமென்று பேணாநாட்டி தன்னிலக்கணத்தைத் தெரிந்துகொள்ளச் சக்தியற்று தெய்வவிலக்கணமிதுவென நாநாவிடத்துந் தூஷித்தும், அடாதவிதிகளைக்கொண்டு பழிகூறியும், வியர்த்தமாகக் குதர்க்கஞ்செய்தும் சாவசைதாய பஞ்சாட்சர நின்மலானந்த தயாளுவாகியும், சீவனுஞ்சிவமுமாய்விளங்கும் பரமசிவத்தின் திருவடியைத்தரிசிக்க முடியுமோ? அடங்காத ஆண்மையுடைத்தாகிய ஓ மனக்குரங்கே! சட்டசாந்துவினாற் சிருஷ்டிக்கப்பெற்ற பதுமையானது காற்றென்னும் ஆவியினாலெழுந்திருக்க முடியாதென்று சொல்லுவாரோயல்லது வேறல்ல. இஃதைப்போல் நீ நடத்தியவையெல்லாந் தீயவையேயொழிய அதினாலென்னபயனை அனுபவத்திற்பார்த்தாய் சொல்லுவாயாக; இதனால் தெய்வபழிப்பில் சுகமில்லையெனவும், மணபதுமை உயிர்பெறுதென்றுப்போதித்து இவை நீங்கச் சாதுக்களையடையவேண்டும்—எ-ம். (47)

கருத்ததனுக் கெட்டாக் கருணும் பரனைத்
திருத்தமொடு போற்றா திருந்தாய் - பருத்தவுன்
தேகமதற் கேயுழைத்துச் சீரற்றால் புல்லர்மகிழ்
போகமதற் கூணே - புகல்.

(இ-ள்.) நினைக்கின்ற சங்கற்பங்களுக்கும் புத்திக்குந் தட்டுப்படாததிருவருள்பொருந்திய பரமசிவத்தை நிருவிகற்ப சமாதியென்னும் நிஷ்டையிற் பூர்த்தியாகி வணங்காமல் தீயகுணத்திற் பிணைப்பட்டு ஏக்கத்தினு லிளைத்தாயே? ஐயோ பாவச்செய்கையில் முதல்வனா யங்குமிங்கும் பல்காட்டித் திரிந்த ஓ மனப்பேயே! பெருமிதமாய் பலபக்ஷணங்களையுங்கொன்று தின்று குடித்து பெருத்ததலைத்தைப பாத்திரத்திற்கே முடிவுவனாயினு மேவல்செய்து மெய்போகத்தினுடைய இன்பத்தைக் கடக்கவிட்டால் கீழ்மக்களென்னும் வேடுவர்களாகிய பஞ்சபூதங் களிப்பெய்யும் நரகமாகிய சர்ப்பத்திற்கு ஆகாரமாகும்படி ஜனித்தனையோ சொல்வாயாக; ஏனெனில் மனம், வாக்கு காயத்திற்கு அரமாயுள்ள பரமாத்மனை பூஜியாதவர்களின் செய்கையும், குணமும் உருவினிடத்து நல்ல பூச்சியும், உள்ளத்தினிடத்து நஞ்சுண்டென்பதைப் போலுமாம். ஆதலால் மனமே! இஃதையுணர்ந்து தெய்வதா விசுவாஸத்தைவிட மேலானதொழி லொன்றேனுமில்லையென்றுநம்பி அவனடிக்கன்பனை முயற்சிசெய்—எ-ம். (48)

புகன்ற நெறிகடந்து பொய்த்தேவைப் பூசித்
தகமகிழ்ந்த தென்அற்ப நெஞ்சே - சுகம்வேண்டிற்
சுத்தசுகா ரம்பச் சுயம்பின் றிருவருளை
நித்தமற வாது - நினை.

(இ-ள்.) சிறுமைக்குணத்தை யுடைத்தான ஓ மனமே! பெரியோர்கள் அளவுகடந்தும் கைமாறின்றியும் கஷ்டமெடுத்து ஆக்யாபித்த நீதிசாத்திரமாகிய வேதாந்த கலையைநீங்கி அறிவானந்த தெய்வமாகியும், சதாகாலத்தும் அழிவின்றிய நித்தியசிவமாகியும் விளங்காநின்ற பரப்பிரமத்தைக்கண் டஞ்சலி செய்தானந்திக்காமல் வாளாய் பிறந்துமடியுந் தெய்வங்களை அனுஷ்டித்துக் களிப்புற்றதென்ன மமதையோ? எக்காலத்தினுந் தளர்தலில்லாவவும் உம்பர்கள்வசிக்கின்ற கைலையென்னும் மோக்ஷமாகிய ஞானதேகமடைய விருப்பங் கொண்டால நிறையற்ற பரிசுத்தமுடையதும் ஆனந்த தொடக்கத்தையுடையதும் சர்வந் தானாகவுடையதுமாகிய ஒப்பற்ற பெருவெளியென்னும் சிதாகாயமாகிய சிவபிரானுடைய செல்வம்பொருந்திய கருணையை இடைவிடாது சிந்திப்பாயாக; ஏனெனில் மரணமென்னுங்கூற்றன் நிமைநேரமும் நீங்காது தனக்கடிமையாகப் பார்த்துக்கொண்டே பின்றிரிகின்றமையால் கடவுளடியை மறவாதுசிந்தித்தால் மறலியணுகானென்றும், தெய்வத்தை மறந்தவுடன் பாசவலையைவீசக் காத்திருக்கின்றானென்றும் பயமுறுத்தி இஃதனால் பத்தியை மறக்கப்போகாதென்று போதிக்கப்பட்டது—எ-ம். (49)

நினைப்பதொன்று செய்து நிலைப்பதொன்று மாகில்
வினைப்பதுமை யோடு விழலே - முனைப்புள்ளா
ருளரோ வுலகின்மிசை வுத்தமர்கள் வேண்டாக்
களறிற் படுத்தகதை - காண்.

(இ-ள்.) நல்லோர்களிடத்து சிற்சில நல்வாக்கியங்களைக் கேட்டவுடன் சொல்லிமுடியாத சந்தோஷத்தை யளாவி அந்நேரத்திற் சிந்தித்திருக்கின்றவையொன்று, அவை நீங்கியபின் செய்துமுடிக்கின்ற பாவனையொன்று, இப்படியிருக்குமானால் தன்மார்த்த மோக்ஷ நினைவென்பதில்லாத பாவப்பிடாரியென்பதுடன் நீ முடித்தவை யாவும் விருதாவாம். இன்னும் விசேடமாக வுத்தேசிக்குமிடத்து இந்தத்தேகத்தைக் கெடுத்து சன்மார்க்கநெறியைத் தடுத்து பாவப்புதலொனு நரகத்தில விடுத்து, குரு, பெரியோர், தெய்வம், இவர்கள் சாபத்தையடுத்தமையினால் உம்போல பகைவனு மிவ்வுலகினி லுண்டோ? இல்லை. நீ தேகத்தை யலங்கரித்தும், உண்டும், குடித்தும், ருசித்தும், போகித்து மகிழ்கின்ற தீயவாசனையெல்லாம் மஹான்களாகிய ஞானிகள் தங்காத போர்க்களத்தில் யாதுந் தெரியாதபடிபோய் மரித்தவன் காரணத்தைப் போலாம். மனமே! இதைக் கண்டுணர்ந்து நடப்பாயாக—எ-ம். (50)

காணுங்கண் ணில்லாக் கலதிகட் கேயாகும்
தோணுமப பொருளைத் துதியாதே - ஆண்பிள்ளை
யென்றெப் படியழைப்ப திங்குனைப்பா யீனமற
நின்றவிட மாறுது - நில்.

(இ-ள்.) சகல கேவலங்களையும் நீங்கி யருளாற் றன்னையுள்ளபடி யறிந்தும், முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநின்ற பரிபூரணர்களுக்கு மாயவுபாதியின்றயவும், விருப்பமும், வேண்டுமோ? இல்லை. ஊனக்கண்ணிற்கு முன்னங் காணப்படுகின்ற நியவஸ்துவையும், துர்ச்சனர்களாகிய பக்தாபரணமற்றவர்களையும் பொருளீட்டும் வகைக்காய் சேர்ந்து புகழ்ந்து வணங்காதே ஏனெனில், உள்ளதை யுள்ளபடியாகவும், நலவனை நல்லவராகவும், தீமையைத் தீமையாகவும், பாவனைசெயது ஞானவரம்பின் பெருமையைப் பார்ப்பதற்கு விழியற்ற மூதேவிகளாகிய பாமரர்க்கேயுடைத்து. இவ் வியாபாரத்திலேயே சங்கேதமுற் றுனதாயுளையெல்லாங் கழிப்பாயே யானால், பிறவிகளுக்கெல்லாம் ஜ்யேஷ்டனென்றும், தலைமையுள்ளோனென்றும், கற்றவனென்றும், எந்தநெறியைப் பின்பற்றி யழைக்கக்கூடுமோ யிருப்பது நீ செய்த வீணுடம்பரங்களையும், பழித்தொழிலையு முணர்ந்து இவ்விடத்திற் புகலுவாய். ஓ பாழ்நெஞ்சே! உன்னால் விளைந்த தோஷமானது அனலின் மெழுகைப்போலத் தேய்வுற்ற யதாஸ்தானமாகிச் சிவானந்த த்யானத்தை இடைவிடாது சிந்தித்து, குருவாக்கியத்தை மனனஞ்செய்து நித்திய பேறினிடத்துக் கொண்டகொள்கை யகலாது சதா கலந்துவாழ்வாயாக—எ-ம்.

நில்லாது பல்லோர்பா னேடியென் விண்டனையோ
பொல்லாப் பகட்டிற் புதைந்தாயே - வல்லாண்மை
செய்வதுவோ நீதி தெரிந்ததுவோ தீயவழி
உய்வதுவோ பாருன்னை - யுற்று.

(இ-ள்.) தீயவழிக்கு முதற்றுணைவனாக ஓடுகின்ற ஓ மனப்பேயே! ஒப்பற்ற வஸ்துவென்னுஞ் சச்சிதானந்த ப்ரணவ ஸ்வரூபமாகிய அகண்டாகார பரமசிவத்தை, சகல மனுவ்யர்குலங்களையுங் களைந்து வாழாதபடி,பலவிடத்தும் அல்லது பலரிடத்தும் அங்கலாய்த்து ஓடி யெப்பொருளை யுணர்ந்தாய். மூடிவாக துன்மார்க்கமிருந்த பொய்யாபாசத்திற் பிணைபட்டனையே? உண்மையாகிய ஞான வறிவைப் போதிப்பவனைப் பகைத்தும், தூஷித்தும், ஹீனத்துவ சமர்த்திற்புக்கினையே? இவ்வகையற்ற கருமத்தை முடிப்பது நியாயமாகவும், துர்க்கிருத்தியத்தி லுயிர்வாழ்வதுவே யுணர்வாகவுங் கண்டனையாக்கும், இச்செயலை யெல்லாம் நிவர்த்திசெய்தும், ப்ரதிபா மாத்திரையாகிய மாயவுலகையுந் துறந்து, பார்க்கப்பட்ட மெய்ஞ்ஞான ஆன்மசிவரூபத்தினை மாறாது காண்பாயாக—எ-ம். (52)

உற்றதவஞ் செய்தார்க் குலகோ ரடிமையெனக்
கற்றமொழி வுண்மைக் கடக்காதே - சுற்றமெலாஞ்
சூழவழு தேநால்வர் தூக்கியிடு காடிடுவர்
தாழ விதுவோ - சரி.

(இ-ள்) குற்றமற்ற தவமென்னும் நிட்டையை நடத்திய முனிவர்களாகிய புங்கவர்களுக்கு, அஞ்ஞானமெனுங் காமாந்தகாரமாகிய முப்பசையின் வயப்பட்டிழிந்திருக்கும், புன்மாக்களாகிய பாமரர்கள் தொழும்பராவாரென நல்லோர்களால் போதிக்கப்பெற்ற நீதிமொழியைமறந்து வியர்த்தமாகாதே. பாழாகிய துஷ்டகிருத்தியமுள்ள ஓ மூடநெஞ்சே! இவ்வித நின்மல ஸ்வயம்புவின் திருவருளைப்பற்றும் நன்னிலையை சூறையிடுவாயேயாகில், இடைநடுவில்வந்து சூழ்ந்த பந்துக்களென்னு முறவினர்களியாவரும் நெருங்கித் துக்கித்து ஓலமிட நாலுபேர் சுமந்து சுடுகாட்டிற் றாழ பள்ளத்திற் புதைப்பது நீ யெடுத்த அருமையான ஜனனத்திற்குத் தன்மமாகுமோ? ஆதலாலந்த முடிவிற் காயத்தமாவதன் முன்னரோ தேவர்கட்குத் தலைவனாகிய பரமசிவத்தை நோக்கிச் சாதனைப்புரிந்து சீர்பெற்று வாழ்வாயாக—எ-ம். (53)

சரியென் றுணர்த்துஞ்சன் மார்க்கங்கல் லாமண்
பரியா னதிகடக்கும் பாவி - தெரியாச்
சிவயோகந் தன்னைச்சிந் திப்பையே யாகி
லெவர்தா னுனக்காவ - ரீடு.

(இ-ள்.) பிரமானந்தவடிவமாகிய சிவத்துடன்கலந்து நித்யாபரோட்சமென்னுஞ் சுகத்தை யனுபவித்தலொன்றே யாவற்றினு மேலான நெறியுடையதெனப் பெரியோராகிய தேசிகரால் சொல்லப்படுகின்ற ஆன்மவுபகாரணிலையாகிய வேதாந்தவழியைக்கற்காமல், சர்ச்சன ஸ்நேகத்தைக்கடந்து, குறிகுணமில்லாது, ததாகாரமாக விளங்குஞ சச்சிதானந்த போகத்தை யடையலாமென்று மமதையால் தடிப்புற்று, ஞானசாதனையி லிச்சையற்றிருப்பது, மெய்க்குதிரையை வேண்டாது மண்ணினலமைத்த பொய்க்குதிரைமீதேறி ஆற்றிலிழிந்து, நடுவே மண்ணெலாங்கரைய யாதாமொரு உதவியற்று மாய்ந்தவனைப்போலன்றோ? ஆதலால் கருதுவதற்கரிய சிவநிட்டையை வழுவாது நினைந்து பூரண வுதயத்தைப்போல் பிரகாசிப்பாயே யாகில், புழுக்கூட்டிற்கே யுழைத்து கறங்குபோ லலைபவரில் எவரும் உனக்கு முன்பாக ஒப்பாகார். இஃதனை யுணர்ந்து தீயவைத்தள்ளி நற்சார்பினிற் புகுவாயாக.

ஈடெனக் காரொன் றெதிர்பேசு மட்டியுடல்
நீடூழி காலம் நிலையுளதோ - பாடனைத்தும்

பார்த்தும் இரக்கமிலாப் பாவி புலிபசுத்தோற்
போர்த்ததமைபோ லென்னவுன்புத் - தி.

(இ-ள்.) தனதாத்ம ஞானத்தில் கணப்பொழுதேனும் விஸ்ராந்தியடையும போதமற்று, பொய்யாகிய ஹீனத்தை வருவிக்கின்ற மாயையினுடைய வலையுட்பட்டுத தன்னையறியாத கொடுமையினாலும், மற்றுந் தான் சேகரித்துப் புளகாங்கிதமானதும், தன்னை யாட்கொள்ளுவதும். தீமையை விளைவிப்பதுமாகிய பொருட்சார்பினில் மதிகுலைந்து, எனக்கு நிகரொங்கு மில்லையென்று பெரியோர்களாகிய கற்றவர்களைச் சன்மானியாது நேரிட்டு, வாத்தைவாயைக் காவாமற் புன்சொற்களாகிய அடாத மொழிகளை வெளியிடும் புல்லனுடைய தேகம் நெடும்பொழுது மாயாநபடி நீடிக்க யாதேனும் வகையுண்டோ? அஞ்ஞான விருளினிடத்திற் புதைந்து, யமவலையிற்பட் டழிந்தவர்கள் கொடுமையை, சரித்திர சங்கிரஹத்தாலும். பின்னுமனுபவத்தாலுஞ் செவ்வனே கண்டும், சற்றேனுங் கிருபையில்லாத பாவநெஞ்சமே! புலியானது பசுவின்றோலைப போாததுக் கொண்டமைப்போன்று, வெளிக்கு மஹா பக்தன், மஹா ஞானி, மஹா பாண்டித்யன், மஹா கவிஞனெனக் காட்டி, உள்ளதநில் துன்மார்க்க குணத்தைவைத்துத் திரிகின்றையே, இஃதென்ன மாயக்கருத்து. ஏனெனில் கற்றளவி னிற்காததினாலும், பிறர்க்குப் போதிக்கின்றநெறியைக் கடப்பதினாலும், இஃது தகுதியல்லவே பாாக்குங்கால் வெளிவேஷமாக யிருக்கின்றதென வற்புறுத்தி மனதிற்கு நன்மையைக்கூறியது—எ-ம். (55)

புத்தியற் றேயலையும் புன்க ணுடைநெஞ்சே
நித்தியனுக் குன்னை நிவேதிப்பாய் - முத்தி
வழிவிலகி நின்றால் மறுமையின்ப மில்லை
விழியிருந்துஞ் சென்றதென்ன - வேறு.

(இ-ள்.) பிரமசூரியனது ஞானப்ரகாசமான கிரணங்களுக்குச் சகலவுலகங்களுஞ் சிறுமையுடையதெனவும், சுகதுக்கங்களினால் விளையும் அற்பபோகத்தைக்கடந்து நிற்கின்றதே நிரதிசயானந்தவாழ்வெனவும, இங்ஙனங் கூறியவியாவுங் குருவினருளென்னுந் தீவிரதரபக்குவத்தினாலையந்திரிபறத் தெளிவாயெனப் போதித்த நற்குணத்தையெல்லாஞ் சூறையிட்டுப் பிறவியெனும்நோயை வருவித்துக்கொண்டு பரதவிக்கின்ற ஓ மனபபேயே! மேலானவின்பசாகரத்தைக்கொடுத்தும், எல்லாவாத்மாக்களிடத்தும் நிறைந்துள்ள அறிவாதீத வஸ்துவென்னுஞ் சிவசுயம்பாகிய என்அப்பனுக்கு உன்னை தத்தஞ்செய்வாய். ஏனெனில் திவ்ய ஞானுக்ஞான பரவெளியாகும் மோட்ச சாம்பிரதாயத்தி னிட்டையை வெறுத்தால் வருபிறவியினுக்கு யாதொரு சுகமுமில்லையாவாம். இஃதன்றி பெரியோர்களாகிய கற்றவர்களாற் சொல்

லக்கேட்டும், கண்ணிருந்தும் நிலையறியாது படுபள்ளத்தி லிழிந்தவனைப்போல ஹீனத்துவசெய்கைக்குடன் படுங்காளியாய் பேதமாகிய வலைக்குட்பட்ட தென்னவோ? சொல்வாயாக—எ-ம். (56)

வேற்றுமைக ளெல்லாம் வினைக்கிடமே யல்லாது
தோற்றும் வகையுளவோ சூதாகும் - காற்றி
லிவ்வமபஞ் சாமுன் எழிலார சிவனின்
பொலந்திகழும் பொன்னடியைப - போற்று.

(இ-ள்.) அகத்தும் புறத்தும் வியாபகமாய்த் துரியவாழ்வாய் விளங்கும் பரமாத்மரூபனைப் புகழ்ந்து மாயக்கூட்டங்களுக் காணாமலும், தன்னைப்போற் பிறரையும் ஸ்நேகிப்பதே எல்லாதன்மத்தினும் விசேடித்ததென்றுணர்ந்துஞ் சுருதியைக் கவனியாமலும், பன்மாக்களால் வெளிபடுத்தயாக வாய்ப்பறை சாற்றிவரும் மதபேதம், ஜாதிபேதம், குலபேதம், உற்பத்திபேதம், பந்தமோக்ஷபேதம், தேவபேதமென்னும் இன்னுமநேக விபரீதமான பேதங்களையெல்லாம் தலைமேற்சுமந்து வீணுபாசத்திற் றடிப்பேறியலைகின்ற ஓ மனக்குரங்கே! இஃதனை சுருதி, யுக்தி, அனுபவமென்னு மூவகையினலாராயுமிடத்து உள்ளதையெல்லாமொழிந்து பிரகாசிந்துவருஞ சிவசொரூபத்திற்கும், அவ்வரப்பினைக் கடவாதநின்ற குரு, பெரியோர், மற்றும் நல்லவருக்கும, வேதாந்த சாரம்சத்திற்கும், துரோகமெனும் வினைப்பூச்சிபாவதே யல்லாது முன்கூறியுள்ள விருதாவான கொள்கையிற்காணும நன்மை ஒரு சிறிதேனுமுண்டோ? இல்லையாம். முடிவாக யாவரையுமொப்பகடும் வஞ்சனை பிணடமாம் இஃதனுல் வந்தமைவது பாவமூட்டை யென்னும் பிரவிரகமாம். ஆதலினல் நீ மேத்திருகின்ற அருமையான ஜனனமரணமா வாயுவிடத்திற் சிக்குண்ட பஞ்சைபபோல தரிதபிக்க மரணகூற்றன் வருமுன்னம் ஞானவெளி நிறைந்தநுமம், எந்நாளுமழியாதநும், உலகபாசபந்தங்களனைத்தும் மாயையைக்கடந்தநுமாகிய பிரமானந்த போகத்தைவிரும்பி சிவபெருமானுடைய பொற்கமலத்தை இடைவிடாது அஞ்சலிசெய்து வணங்கி சாஸ்வதமாம பெரும்பேற்றை யடைவாயாக—எ-ம். (57)

போற்றி வணங்கப் புண்ணிய மேவளரும்
நாற்றிசை யோரும் நமஸ்கரிப்பர் - கூற்றனின்
றென்று மருகிலவர அஞ்சுவா னிஃதுண்மை
இன்பத்தைப் போலின்ப - மில்.

(இ-ள்.) எக்காலத்தும் உண்மையாய் விளங்கும் அறிவானந்த தெய்வமாகிய நித்தியசிவவருளைப பெறுமாறு இழிவையும், ஹீனத்தையுந்தாரகின்ற வல்கவாசனையைக்கெடுப்பாய் ஏனெனில், இந்த ஞானதேவை யாராதிபபது

ற்கு இச்சையே தடையாக இருப்பதினு லிவையொழித்து திரிகரண சுத்தியோடும் ஆராதித்துக் கும்பிடுவைகாற் பாவமெனு மகாவகாரப்பிறவியின் வலிமையொடுங்கி சைதந்யமாகிய பூரணபோதம் உனக்குட்செழிக்கும், போதமானது செழித்தோங்கி ஆத்மாநுபவத்திற் சபலித்தால் சரியை, கிரியை, யோகம், ஞானம், அல்லது அறம், பொருள், இன்பம், வீடு என்னுமிந் நான்குலக்ஷத்தாரு முனக்குளடங்கி வந்தனைவழிபாடுசெய்வர். இத்தகைய பேரின்பநிலையாகிய மகத்தான மோக்ஷலாபத்தை அஞ்ஞானதசையாற் றடிபடுத்திடாமற் பின்பற்றி அப்பாக்கியத்தைப் பெறுவாயேல் இப்போது மெப்போதும் காலனெனும் பிறவியாகிய சாத்தானுனைப் பாலணுகாது விரைந்தோடுவன். இச்சுயாதீன சுயம்ப்ரகாச சிவசொரூபத்தினைப்போன்றதும், ஆனந்தத்தையுடைய மெய்ப்பாதையுளதும் வேறில்லை ஓ பாழாமனக்குரங்கே! இம்மொழியை ஞாயவாயிலாக ஆராயுமிடத்து யதார்த்தமுடையதே இதை நிச்சலனமின்றி பெற்றுக்கொள்வாயாக—எ-ம். (58)

இல்லாத வற்றையெலா மீண்டுண்டுண் டெண்ணுவது
கலலாய்வ தென்ற கதையாமே - செல்லாத
வார்த்தையினைக் கூறி வலக்காரங் கொண்டலைந்தாய்
சீர்த்தியுள்ள வுத்தமனே - சேர்.

(இ-ள்.) தேசவிடயங்களைப்புணர்ந்தும், உலக வ்யாரமென்னுந் தீயநடையாகிய கொடியாற் சுற்றப்பட்டும், நிலையற்ற மாயவகங்காரத்திற் சிக்கியும், அறிவாகிய ஸ்வயம்ப்ரகாச நிருமலவடிவிற்கலக்காத அன்னியவஸ்து வியாவையும் அடிக்கடி இமைநேரமுமோயாது பிரார்த்தித்தும், சிந்தித்தும், அனலின்மெழுகாய் வாளாயிளைப்பது மணற்சோற்றிலிடத்து கலலாய்ந்த கதையொக்குமல்லவா? மறையிடத்தும், மஹான்களிடத்தும், அனுபவத்திடத்தும் உட்படாத பற்பல வாபாசங்களை வாயாடித்தனமாகிய சமத்காரத்தினால் மொழிந்து தானெனுஞ்செருக்கைப் பணியாகப்பூண்டு புத்திசிதறி உண்மையையுணராது கெட்டொழிந்தாயே? வீண்பித்தேறிய ஓ மூடமனமே! இனியேனு மிவ்வித தொல்லையிலிழிந் தழியாவண்ணம் சேதனயோகீஸ்வரரென்னும் நற்றவரையண்டி உயிர்பிழைப்பாயாக—எ-ம். (59)

சேரு மிடமறிந்து சேராத குற்றமதா
லாரும் வெறுப்ப தரிதல்ல - நேரும்
உணர்வதுசி தமபோ லுனைநீயா ராய்ந்து
கணமுமற வாதருளைக் - கா.

(இ-ள்.) திருவருளைப்பெற்று அறிவாஞ் சுத்தாகாரத்தினிற் சுளிபபுற்றுவிங்காநின்ற நிலையாகிய பரமபொருளின் யதாஸ்தானத்தை யின்னவழியி

னாற் கண்டடையலாமெனு முழுநம்பிக்கையுடன் பற்றுத ஆண்மையினால் அஃதாவது விவேகமென்கின்ற சண்டமாருதத்தால சங்கற்ப மென்கின்ற முகிலைப்போக்காது குரூரமான தீயவினையால ஆளப்பட்டு மிகுதியான பாவ நரகையேந்திய சினத்தாலும், நன்னெறியினில் விருப்பமற்ற துர்ச்சன காமுகரிடத்து கூட்டுறவுபெற்றதினாலும், இந்நன்மையையுணராதவர்களும், பஞ்ச புலன்வழியேசென்று திசைப்பவர்களுமாகிய எவரும உன்னைவிட்டு நீங்குதல், அல்லது அருவருத்தல், அருமையும் பெருமையுமான காரியமல்ல. தீய சஹவாசத்தால் துற்பலனும், சாதுக்கள் சஹவாசத்நால் நற்பலனும் வந்து நெருங்குமென வறிவது எவ்வளவு மேலானதாகுமோ அவ்வண்ணமே, ஓ பாழ்மனமே! நீ நாடலும், தேடலும், கூடலும், கோடலும், ஆடலும், வாடலுமாகிய ஒவ்வொருவிஷயங்களையு முள்ளது உள்ளபடி பாகுவிசாரித்து மெய்ஞ்ஞான போதமாகிய சிவசாயுஜ்யமென்னு முண்மைபதவியை இடைவிடாது நினைந்து நினைந்து ஆக்கித்து, எக்காலத்து மழிவற்ற அருணமிர்தத்தைப்பெற்று ஆன்மாவுன் நிசயானந்தத்திற்கலக்கும் நெறியைக் கூர்ந்துகொள்வாயாக—எ-ம். (60)

காவற்செய் தோன்பலனைக் கைக்கொள்ளக கண்டமைபோ
மேவுமுன் சீரவ விதமாமே - சேவைசீ [ன்
செய்யா திருக்குமுன் சிநனைநர கென்பதனாற்
றுய்யறிவால என்றுந் - துதி.

(இ-ள்.) நிலமாகிய தரையினைப் பண்டுத்தி பயிர்விளைவித்தவேளாளன் அவ்விதை முற்றும்வரையிற் பாதுகாத்து வந்ததினாலதின் உழைப்பாகிய பலனைப்பெற்று ஆரம்பத்தி லனுபவித்த துக்கமேலீட்டாமற் களிப்படைந்தமைபோன்று, ஓ தீயசுபாவமுள்ள மனமே! உன்னிலமாகிய இருதயத்தில் ஞானநெறியெனனும் வித்திட்டு அறிவெனனும் ஜலத்தைப்பாய்ச்சி அருளென்னும தானியத்தையறுந்து எந்நாளினுங் குறைவுபடாத சுகபோகநிழலாகிய சிவபெருமானென்னும் சீவாதமாவுடன் ஆனந்த பரவசமுற்றிருப்பாய். வேளாளனுடைய உபமான மெவ்வண்ணமுள்ளதுவோ அதேநிலை யுன்னுடையதெனவும் விசுவாசிப்பாய். இப்பாரதத்துவ த்யான போதன சக்தியை இதுகாறும் அஞ்ஞான விறுமாப்பினால் நினையாதிருக்கின்ற உனதுள்ளம மகா கொடிய செய்கைநிறைந்த இருளாகிய பாவவுலகமெனப்படுதாக நலலோர்களுடைப்பதா லினியேனும் பரிசுத்த எண்ணத்தைப பெறும்பொருட்டு சதாவந்தித் தொழுதுவாயாக—எ-ம். (61)

குருசுப்ரதீ பத்தை
பபா ருலகில் மகிழார் - உதிப்பதிஃ

தொடங்குமிட மீதென்றுற் றுற்றுப்பார்ப் பார்க்கே
கெடுங்குண மில்லாகுங் - கேள்.

(இ-ள்) இருப ஸ்தானத்திற் றுலங்குஞ் சுழுத்தியவஸ்தைக் கருவிகளாகிய பிராணவாயுவினை ஆன்மாவெனும் பசுவாகிய சிவத்துடன் கலந்து நிற்கும் ஒப்பற்ற பேரறிவைக் கண்டு வணங்கும் ஞானிகளுடைய உள் அன்பாகிய புட்பமலர் தூவி பரிமளிக்கின்ற பயங்களை குணங்கள் விளங்கும் மெய்வடிவைக் கண்டு சேவைசெய்வாயாக, நோய், வஞ்சனை, கொலை, களவு, பொறாமை, இவையாவுங் குடித்தனமாக சஞ்சரிக்கின்ற இத்திய வாழ்வுகளில் வாராந்தங் கொள்ளார் ஏனைமேல், நன்மை, தீமை, பிறப்பு, இறப்பு, துக்கம், சந்தோஷம், வாழ்வு, தாழ்வு, ஞானம், மோகம், புகழ்ச்சி, இகழ்ச்சி, யென்னுமின்னுமுள்ள யாவும், வருதலும், சாதலும், அஃதாவது தோன்றுதலும், அடங்குதலும் மேற்கூறிய மேநானத்திற்குரிய பலகைகணமென வொடாது நோக்கினவர்க்கு, அதிர்ஷ்டமதை விளைவிக்கும் பிறவி யெனு மருளான கருத்தின்றி, சுபக்யான வடிவாயிருப்பார்கள் ஓ மூட நெஞ்சே! இந்தியாயத்தோரணையானது வியர்த்தமாகப் புலப்படுமேயாயாயின் சாதுக்களையணடி அத்தியர்த்த கதிவிருப்பு டையராகி டைய அநிலையையதிச் சுகித்திருப்பாயாக—எ-ம். (62)

கேள்வியொன் றில்லாது கேண்மைகொளுமபாழ்நெஞ்சே
வேள்விவ்ளர்த் நாலும் வினைபபோமோ - நீள்புவியின்
கன்மவழி நீங்கியே கங்குலற நின்றசிவ
நின்மலன்பூந் தாளைநே - சி.

(இ-ள்) பரிசுத்த ஞானமான திருஷ்டியிற்கலந்து சிவமுற்றித் தன்மையாகிய நல்லவாகளைச் சேவித்து வெகுவாயிருக்கின்ற வாஞசிரம பேதங்களியாவையும், வேரோடறுக்கவும, சூக்ஷுக்கமிவற்றிற்குத்தலைமையாயுள்ள தேகாதிபந்தங்களணைத்தையுங் கீழ்ப்படுத்தவும், உள்ளனவாகிய மனமொழிகளில் யாதொன்றுஞ் செவியான தங்கீகரியாது. தெய்வாதீனமென்னும் பெரும் பாக்கிய வறிவாகிய சுவர்க்கபோகத்தை அடைய விச்சைபூண்டு வியர்த்தமாயலையு மூடமனமே! நீ ஜனித்ததுமுதல் விதுகாறும் தொன்றுதொட்டு பழகிக் களித்துவந்த துன்மார்க்க கிரியையான துன்னைவிட்டுத் தொலைய, ஆயிரம், கோடி, பதுமம், மகாபதுமம், என்னுங் கணிதங்கொண்டு, யாகாதி செய்திடினும் அக்கொடியபிறவியாமலகை நீங்குமோ? நீங்காவாம். ஆதலால் உயாவுயொருநியமம் ... த்து அனுஷ்டித்த பாவவழியினின்றுவிலகி, சகல கேவலங்களையுங் கடந்து அத்த... வின்றி, நித்தியாவஸ்தையிலிருக்கும் பரமசிவனெனுந் தொடக்கற்ற வஸ்துவின்... வனின்திருவடியை முக்காலு மறவாது சிந்தித்துக் கூடுவாயாக—எ-ம். (63)

நேசிக்கார் தன்பா னெருங்கியென் சொல்லினும்
பூசிக்கா ரென்றே புகலுமறை - யோசிக்க
நேரமிலை யோவையோ நீசத்தொழிலிதுவோ
ஆரணத்தி னோர்கண் - டடை.

(இ-ள்.) இறைவருடைய ஞானாகாரப் பொருளென்னும் பரமசிவத்தை விசுவாசித்து ஆசரிக்கும் அன்பாளரது மருட்டுக்கேது மில்லாதவரிடங் கலந்து அப்பெருமானுடைய இலிங்கமிற் றிவ்ய சல னணுருணங்களைப் பல முறைப் போதித்தகாலத்தும அவர்களுடைய உள்ளம்பொருந்து வணங்காரென சொல்லப்படுகின்ற வேதப்பிரமாணத்தைக் கவனிக்கப் பொழுதில்லையோ? அந்தோ பெருந்துக்கம் காம, வெகுளி, மயக்கமென்னு மூன்றுகுற்றங்களைக் களைந்து நித்தியாபரோட்ச நிலையென்னும் பிறவாமுத்தியைப் படையச்செய்வதும் ஈனக்கிரியையோ? தீமையை யிச்சிப்பதும் புகழ்வதும், நன்மையை வெறுப்பதும் இகழ்வதும், பலவகையிற் கேட்டடைகின்றதன் சுபாவமாதலால் எது தீமை, எது நன்மையென வெடுத்துரைக்கும் வேதாகமங்களினுபாய வறிவையுணர்ந்து ஓ மூடநெஞ்சே! சன்மார்க்கவழியைப் பின்பற்றி வாழ் வாயாக—எ-ம். (64)

அடைவியினுஞ் செல்லா யதியிருளைப் போக்காய்
படைக்குமுறு னென்று பறப்பாய் - தடைசெய்ய
நற்குணந் தாவியே நாடோறுஞ் சிந்தித்துக்
குற்றமில மாதவத்தைக் - கொள்.

(இ-ள்.) பஞ்சபூதங்களாலாகிய வுடம்புடனலைந்து சம்பாதித்த குற்றங்கள் நீங்கும்படியாகவும், ஆபாசமாகிய பேச்சுவார்த்தைகளைச் செவியிலிட்டுக் கேட்காமலும், தீயவென்னுந் தெய்வநிந்தனைமற்ற பாமரர்களை நேசிக்காமலும், அவர்கள் காற்றுபடாமலும், பஞ்சபாதகங்களை மிகுந்துணிவுடனடாத்தி யகமகிழுஞ் சண்டாளர்களைக் கண்ணினாற் பார்க்காமலும், வழுவமைதியுள்ள வீணுபயமொழிகளென்னும் அநுசாரங்களுலவித்திரியும் பதியை மிதியாமலும், பலவித குரோதமடைய தூஷணைக்குந் துதர்க்கத்திற்குஞ் செவிசாய்க்காமலும், மனமான தலையாதடங்குஞ் சூட்சியான சகல கேவலங்களைக்கடக்க காட்டகமாகிய வனத்தினுக்கும்பிரவேசிக்கின்றாயில்லை, இதிற் பயனில்லையென லௌகீகத்தினிடத்திற்றங்கி வைதீகத்தை நடத்தலாமென்கிலோ இடையில்வந்த மூவாசையென்னு மாற்றானொலைப் [illegible] ன்ற துர்க்கருமமயக்கையும் வெறுத்தாயில்லை. வீண் [illegible] டிப்புற்று, பொய்யாந்திய நடத்தையாகிய யத் [illegible] திறகு நான் [illegible] ன் அதிகாரி, சாமாத்தியன், எனக்கு நிகரின், மூம [illegible] ாயகுமெங்கு மொழுகுவருளரோவென ஆலோசனித்து

வாட்டமிடுவாய் ஐயோ? பொல்லாங்கான காரியத்திற்கு முதற்பங்காளியாகத் தலையிட்டுத்திரியும் ஓ மனக்குரங்கே! இத் தாவ்யாபாரத்தை வெறுக்கவேணுமெனாயின் சாதுக்களை ஸ்நேகித்து அவர்களால் நல்லுபதேசம்பெற்று அன்னிலையைக் கடவாதுநின்று சதானுஷ்டானுக விளங்கி பாவமற மௌனநீதம சிபடேரின்பசுகமென்னுஞ் சிவானந்த ஸ்வயம்புவை த்யானித்து ஞானரமாதியைக் கைக்கொள்வாயாக—ட-ம். (65)

கொண்டானை யேகொல்லுங் கோதையரின் பின்சென்று
உண்டதுயர போதா முனுகனெஞ்சே - அண்டர்
அடியார் பரவிதொழு மண்ணலமே லாசைப்
பிடித்தா லருளுநய்வாய் - பேறு.

(இ-ள்.) இலவாழ்க்கையினின்று தருமத்தைக் கைக்கொள்ளும்வண்ணம் உலகோர், சுற்றம், அன்னை, தந்தை முதலிய விபாவருங்காணவும், விவாகப்ரமாணத்திற்கிணங்கவும், அவரவர்கள் சக்திக்கிசைந்த பொருள் விரையஞ்செய்து கொணர்ந்த பதிதனியாகிய பெண்ணால, அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நான்கு நற்பேற்றையுங் கைசோரவிட்டு, அப்பெண்ணினுக்கியாபனைக் குட்பட்டு, தெய்வதாபக்திமுதல் மற்றுமுண்டான சத்விஷயங்களையும் இழப்பதுடன், அம்மங்கையின் வாக்கினுக்கனாதரம நினைத்தவுடன் கொழுநனின் உயிரைக குடிக்குந் தந்திரோபாயங்களறிந்த மாதரின் அற்ப உறவைக்கொண்டு ஈன்னிலையெலலாம் பாழாக்கித் துன்பமுற்றலைந்து தடுமாறியேங்கியது என்னமதியோ? கர்த்தவயனுகிய பரமசிவத்தின் உபகாரங்களைச் சற்றேனு முணராமல் நன்றியில்லாத கெடுபூண்டாய முளைத்திருக்கும் ஓ மனப்பேயே! அமமங்கையரா லிதுவரையினு மனுபவித்த சுகம மிகுதியுமேனமையுடையதே. இத் துர்க்கருமத்தினின்று நீங்கி, தேவரும், திருத்தொண்டரும், இடைவிடாது வணங்கும் நெறியறிந்து, தெய்வதாபக்தியைக் கெடுக்கும் ஸ்திரீகளின் பேரிலுள்ள ஆசையில், ஆயிரத்தி லோர்பங்கு சிவபெருமானுகிய நமது அப்பன்மீது வைப்பாயே யாமாயின் நித்தியானந்த சுகமெனுங் கைலைவாழ்வைச் சேர்ந்து ஜெனனம் வந்ததற்கோர பயனையடைவாய்—எ-ம். (66)

பேறுற்ற முதறிஞர் ப்ரம்மமய மாகினரேல்
வீறுற்ற கொள்கையினை மேவினும் - றாறுற்ற
பொல்லா மயல்போம் புநிதவாழ்வு வந்தெய்யும்
நல்லாரைப் போற்றுமென் - நாண்.

(பூ...)னைந்திருக்கும் புன்குரம்பையை, புகழும் ...ணம் விசேடித்த நற்கீர்த்தியாகிய மகுடம் ...முடைய தேகமெனத்

தெற்றெனக்கொண்டு, அநித்தியவ்யாபாரங்களைந் துடைத்து, ஞானஅறிவைப் பூண்டொழுகி மெய்வரம்பாகிய பரமானந்த வெள்ளத்திலமிழ்கி, நிகரிலாத தெய்வசாம்பிரதாயத்தை யடைந்த ஞானிகளாகிய முன்னோர் அவர்களுடைவித்த பற்றுதலென்னு முண்மையாற திருவருளாகும் விஸ்வாசத்தின் பலனைக்கைக்கொண்டு தேவர்களானார்களென்றும், அனேக அற்புதங்களை நடாத்தி, உலகோர்க்கனந்தன்மை கருதின் பத்தி, முத்தி, வைராக்கியமென்னுஞ் சாதனைகளையும்புகட்டி நறகீர்த்தியாகிய பழம்பைப் பெற்றாகளென்றும், நெடுங்காலமுத லின்றளவும் சுருதிகளினாலும், பெரியோர்களாகிய குருமூர்த்தங்களினாலும் வெளிப்படுகின்றமையினால மனதிருத்திடமுள்ள ஓ மனமே! மஹா பெருமையும், புண்ணியமும், சாயுபதவியும், முன்னோர்கள்விரும்பி அனுஷ்டித்துவந்ததுமாகிய ஆத்மானுபவ விதேகமுத்தியைய பலவிடம்பாலாகிய ஹீனத்துவமென்னு மஹங்கார உலககேவலங்களை அறிவாகும்வாளினாற வென்று, அப்பெரும்பாக்கியமாகுஞ் சிவானந்தவெள்ளத்தி லின்புற்றடைவாயேயாகில் பழிக்கிடமாகிய தீயவாசனையென்பதும், தனக்கு நிகரிலையேனும் அஹங்காரமயக்கமும் உன்னை நெருங்காது அவைநெருங்காம லடங்குமாயின் பிறவாமுத்தியானது வந்தடையும். ஆதலால் இந்தன்மைகளைச் சதா த்யானித்து பரஞ்சோதியென்னுஞ் சின்மயவிலக்கணம்பொருந்திய சச்சிதானந்த வஸ்துவைக்கண்டானந்தித் தாராநிற்குஞ் சாதுக்களின் திருவடியை நமஸ்கரித்து உன்மந்தகுணத்தைபபோக்காம லாபாசமியாயத்திற் சிக்குண்டலைந்து வாளாய மணனுகின்றாயாகின்றையே! ஐயோ என்னகேவலமாகிய வெட்கமுடையது. இஃதனையணாந்து சன்மார்க்க ஞானாசாரியனைத்தேடிக் கண்டடைந் துபதேசம்பெற்று சுகித்துவாழ்வாயாக—எ-ம். (67)

நானென்ப தெங்கே நாடபெறும் புந்தோனு
மூனென்ப தாகு முணைக்குங்கால - தேனதனை
வண்டறுதே டற்போல் மனமே யறிவுற்று
லண்டாது பாவ - அலே.

(இ-ள்.) உலகமுழுமையும் அதினகணடங்கிய சாவலக்ஷணங்களையும் கவனிக்கினறபோது மஹா அதிசயமுடையதாகவும், இஃதினுண்மையைக் கள்ளமின்றிக்காண்பது அறிவின் யதார்த்ததம்தொழிலாகவும், இந்நிலையி னுட்பட்டிருக்கின்ற தன்னையும், ஜகத்தையுமுள்ளவாறு தரிசித்து ஆன்மபோகமெனுஞ் சிவசாயுஜ்ய விதேகதேகத்தைக் கிட்டியகாலத்தில் என்றும் நீங்காது ஸ்வயம்ப்ரகாஸமாக நிலைத்திருக்கும் அகண்டாகார பரப்ரமத்துள் விழுங்கப்படுவாயென்றும், அறிவுடையோா திருவாய்மலர்ந்திருக்க, இ[illegible] யாது பொய்யாடம்பர செருக்கிலமிழ்ந்து இது என[illegible] னுடையது, என்சுபாதீனம, முடிவில மூட[illegible] அது அவ [illegible]டிக்கொண்டு எமன்

யேரிற் பெரிதுபோட்டு நேர்ந்துப்போவேன் என்றும், நான் நான் என்பது அகங்காரமென்றுணராது நானே பெரியவன், நான் தனுஷ்டிகன், நான்கற்றவனென்று தருப்பேறியிருக்கின்றதையு மன்றுநோக்கும்போது உனது வீணலாக்கியங்களையும், அதநியும், தேவாலமேறிடயதுருந்தியும், தசையாகமுடிகின்றதெயல்லது நானென்ற வாக்கியம் எங்கே நீடித்திருக்கிறது. கேட்டைகணிறைந்த மண்கேட்டை மடச்சுமந்தலையும் ஓ மனப்பேயே! காட்டினிடத்திருக்கின்ற வண்டாகிய சிறு குன்றையான மலையினிடத்துள்ள இனிமையுடையதேனைத் தேடிக்கண்டடைவதற்கு தேர்சனமாக சாதுக்களாகிய மஹாத்துமாக்களோடி தீக்ஷைபெற்று ஆனமசுகத்தைப் பெறுவாயேல் பிறப்பிறப்பென்னும் சமுத்திரத்தின் நோயாகிய துன்பம் உம்பாலணுகாது இஃதனையேர்ந்து சதா மனனஞ்செய்வாயாக—எ-ம். (68)

அலைவாய்த் துரும்பா யகப்பட் டிளைத்தும்
நிலைவளை யென்னுந் துகைவென் - றொலையா
அகங்காரம போக்க வபிராமதி யுண்டாற்
சுகங்காணு மின்பத் - தொழில.

(இ-ள்.) கடற்றிரையினிற் சிக்கியலையுந் துரும்பைப்போன்று, டாபகிருந்தியத்தினாலும், நற்சிநேக மில்லாமையாலும், தாய், தந்தை, குரு, பெரியோர், இவர்களைச் சன்மானிபாததினாலும், வீண்பகட்டிற் புகுந்தமையினாலும் வந்தடைந்த தோஷதநின்பிணியால் மெலிந்தும், ஓ மூட மனமே! பரமாத்மரூபமாகிய சிவபிரானைக் கிஞ்சிதும் நினையாத பெருமையென்னவோ? அறிகிலேன். நீக்கப்படாத அஞ்ஞானவிருளை மாற்றுதற்கான போதிவென்னும் பக்தியமிர்தத்தை அன்பென்னுங் கரத்தாளள்ளிப் புசிப்பாயேயாமாயின் மெய்ப்போகமாகிய சுவர்க்கலாபம் உனக்குவாய்க்கும். எல்லாத்தொழிலினும் இஃதுவொன்றே சிறப்புடைய செய்கை—எ-ம். (69)

தொழிலாகக் கொண்டு துறந்தார்கள் போலப்
பழிவென்று ரியாவரிட் பாரில - அழிவில்லா
ஆத்துமனைப் போற்றி அகண்டபரி பூர்ண
தாந்திரிய டைந்தார் - சதா.

(இ-ள்.) மஹான்களாகிய முதியவரா லெழுதியுள்ள சுருதியி னிலைப்பெறும்படி, சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியபிஷேகம், முதலியவை நடத்தியும், அவர்களாலாக்யாபித்த அறநெறி சாராம்ஸங்க[illegible]ன்னே தெளிந்தும், அவலம்பிக்காது கருத்திலுற்ற வண்ணம் நம[illegible]யும், [illegible]ன்முறைப்படி புலன்வழிகளை வென்றும, மெய்ஞ்ஞான[illegible]பதத்திற் புகுவ[illegible]ாசையென்னுந் தீயவைகளைக்கட்டறப்போக்கு

வதுவே முக்கிய கருமமாக நினைந்து, ஆபாசவியபிசாரமுடைய யாவையும் வெறுத்து நீங்கினவர்கட்கொப்பாக, இம்மயற்சூழ்ந்த பூமியினிடத்து பிறவியின் நிந்தையையும், மரணமாகிய காலனையும், வெறுத்துக்கொண்டவர்கள் எவர், அப்புண்ணிய ப்ரபுக்களாகிய நலலறிவுடையோர் குற்றமென்ப தடையாத அறிவானந்த தெய்வமாகிய சிவப்பொருளை நமஸ்கரித்து மாயாசம்பந்தங்களை ஞானாக்கினியாற் றகித்து, ஒப்பற்ற சுயஞ்சோதிய சுவர்க்கலோகத்தைப்பெற்று, பரமரூபத்தோடு கலந்து எக்காலத்தும் பிறவியென்பதின்றி சதா ஆனந்தத்தைப்பற்றி வாழ்ந்தார்கள். துர்ச்செயலுக்குத் துடைத் தட்டித் திரியும் ஓ மனக்குரங்கே! இதையறிந்து நற்சார்பினை இடைவிடாது அனுஷ்டிப்பாயாக—எ-ம். (70)

சதானந்த வாழ்வைத் தரும்பரமன் றானை
நிதானந் தெரிந்தோர் நீங்கார் - உதாரகுண
முள்ளோன் றனக்குமுன் றொன்றுமெதிர் நில்லாப்போல்
தள்ளுவாய் வீண்செயலைத் - தான்.

(இ-ள்.) எல்லாம் வல்லபொருளாகவும், ஒப்பற்ற வஸ்துவாகவும், சர்வவ்யாபகமூர்த்தியாயும், கன்றைவிட்டுப்பிரிய மனமுறவக்காக் கறவைப்போன்று அன்பர்களென்னுந் திருத்தொண்டர்களைவிட்டகலாதுநின்று எக்காலத்துஞ் சந்தோஷத்தையே விளைவிக்கும் மோக்ஷமெனுஞ் சுவர்க்கபோகத்தை க்ருபைபாலித்தருளும் காருண்யகற்பமாகிய சிவபெருமான் பூங்கழலை வந்திப்பதினாலடையப்படும் ஆத்மலாபத்தின் நிலையைச் சுருதி, யுக்தி, அனுபவம என்னுமிம் மூன்றினுண்மையால் உணர்ந்தோர் இபபெருஞ்சுகத்தை நிமைநேரமாயினும் விட்டுவிலகார். ஆதலால், துறவிக்கு மன்னனும், கற்புடைய மங்கைக்கு ஆபரணமும், மரிக்க அஞ்சாதவனுக்கு உயிரும், தயாளம் பக்தி அன்பு வணக்கமுடைய ஏழைக்கு ஈகையில்லாத தனுஷ்டிகனும், கல்லாது சாதுக்களினாற் கேள்வியுற்று நன்னடையுள்ளவனுக்கு சற்றுமந் நெறியை கைக்கொண்டு நடவாதவனும், இதைப்போன்ற பலநியாயங்களும் அவைகட்கு துரும்பாக காணப்படுவதைபபோல அந்தகாரம்பொருந்தியலைகின்ற ஓ மனப்பேயே! வியர்த்தமான ஆபாசநியாயதோரணைகளினால் தடிப்பேறுந வண்ணம் உனது தீக்கருமங்களையும் அதன்பேரில வைத்திருக்காநின்ற பற்றுதலாகிய வீணாசையையும் உடனே நிவர்த்திச்செய்வாய்—எ-ம் (71)

தானு முணர்வாற் சருவந் தெளிந்துமெய்ஞ்
ஞானு மமிர்தத்தை நாடினல் - வானோர்
குலவும் பதியிற் குறைவின்றி வாழ
நிலஞ்சூழும் பொய்ம்மயலை - நீக்கு.

(இ-ள்.) அண்டசராசர புவனபேதங்களாகிய சகல கேவலங்களையுந்தனித்து, ஆனந்தாதீத சுபம்ப்ரகாஸமாகநின்று திருவிளையாடற்செய்கின்ற பரம பொக்கிஷத்தை எல்லாமாய், இல்லதுமாய், உள்ளதுமாய் வ்யாபித்திருக்கின்ற மெய்ப்போதனையாகிய நல்லறிவினால் தோற்றம், ஒடுக்கம், குறைவு, நிறைவு, பொய், மெய், நன்மை, தீமை, இன்னுமுள பல வ்யாபாரங்களையுஞ் செவ்வனே தெளிந்து உண்மையும், ஞானமும், பரகதியுமாகிய அறிவானந்த வஸ்துவென்னும் சிவபெருமானையும் உள்ளதுள்ளபடியறிந்து, ஞானாமிர்தமென்னும் போனகத்தைப்பொசித்து தெய்வகுழுஉக்கள் சூழாநின்ற கயிலையென்னும் நித்தியாபரோக்ஷ மோனசமாதியினிடத்து நிலைபெற்றோங்கவும், உலகத்தாரை யடிமைகொள்ளும் அநித்தியமாகிய மாயையை நிவர்த்திச்செய்வாயாக; ஏனெனில் அஞ்ஞானத்தினிடத்து பேறவாகொண்டலைந்துந் தியங்கும் மூவாசையின்சூழ்ச்சியால் தெய்வநாசிர்மையும், சாதுசங்கமும், சற்குருபோதனையும், வேதசாஸ்திர நியாயதோரணைகளும், வேற்றுமையாகவும், தொல்லையாகவும், வெறுப்பாகவும் காணப்படுவதன்றி அழுக்காறுனதுன்னை எக்காலத்துங்கெடுத்து பாவச்செய்கையில வீழ்த்திக்கொல்லுமென்று பெரியோர்களாகிய ஞானிகள் வெளிப்படையாகப் பறைநதிருப்பதினால் இதனிடத்துள்ள நற்காரியங்களை அங்கீகரிந்து துர்க்காரியங்களை முற்றும்போக்குவதே எல்லாத்தன்மத்திலும் விசேடித்த தன்மமாகும்—எ-ம். (72)

நீக்கினா ரென்றும் நெறியுற்றார் மூவாசைப்
போக்கினா ரென்றும் புகழ்பெற்றார் - தேக்கினார்
வஞ்ச நமனென்னு மாற்றான் றனைவென்றார்
நெஞ்சேகண் டிஃதை - நினை.

(இ-ள்.) சகல காருண்ய பெருந்தகையாகிய சிவானந்தவாழ்வே மஹா சிறப்புடைத்து. இப்பாதையை யகன்றால் வந்தடைகின்ற துன்பமாகும் பிறவியைப்போன்ற நரகம் வேறின்றென வுள்ளத்தில் மதிப்புற்று சர்ச்சன சஹவாசத்தையும், நீதியாகிய ஆத்மபோத வேதாந்தத்துறையென்னும் அறநெறியையும், தெய்வதாபக்தியெனும் திவ்யாபரணத்தையும் பின்பற்றாத கயவர்களாகிய பாமரர்களின் ஸ்நேகத்தையும்வெறுத்த நல்லோர் எக்காலத்தும யாதாமொரு வருத்தங்களணுகாத உத்தமநிலையிற் புகுந்தவர்களாவர். ஹீனதொழிலுக்குக் காவற்காரனாகநின்று ஆணவம, காமியம, மாய்கை என்னுமிம் மூன்றுபாசத் தடிப்புற்றிழியாமல் தெய்வபலமே விசேடம், ஜன்மபலமானது துர்ப்பலமேயென் றொருங்கே அவ்வழியை அனுபவசக்தியினாற் றெள்ளென வோர்ந்து கட்டறவிடுத்தவர்கள் பொய்யுடம்பைநீத்துப் புகழுடம்பணிந்து மெய்ஞ்ஞானவாழ்வை அனுசரித்தவர்களாவர். இவ்வரம்பினைக் கடவாமலும், மாயவலையிலிழிந்து பிறவியை வருவித்துக்கொள்ளாமலும், உண்மை

போதத்திற் கட்டுப்பட்டவர்கள் இரவுபகலென்றுண்ணாது களவதனிலே புத்தியைநாட்டிப் பலவிடத்துஞ் சாய்வுகாலத்தைநோக்கித் திரிகின்றவனைப்போன்றவனும், நல்லார்-தீயார், இளையோர்-முதியோர், தனத்தோர்-சினத்தோர் என நினையாதவனுமாகிய உயிர்க்கொல்லியா மரணமென்னுங் காலனையும், அவனால் விடப்பட்ட பாசவலையையும் செயித்தவர்களாவர். இந்தச் சத்திய வசையினிடத்துக் கிஞ்சித்தும் விஸ்ராந்தியடையாதவண்ணம் அரவந்தைப் பார்க்கினும் விசேடித்தவிதமாய் வாக்கினும், மனத்தினும், காயத்தினும், தீய விஷத்தை தரித்திருக்கும் ஓ மூடமனப்பேயே! மேற்கூறிய திருவாக்கிய அடலங்களின் ஸத்காரியங்களை யுபேக்ஷிக்காமல் பகவத்யான மனனஞ்செய்யவும், அத்திருப்பணிதொண்டர்களை அணுகவும், அவர்கள் வசனத்தைச் செவியாற்கேட்டும், விழலாகாத நன்னிலையினை யிடைவிடாது புகவுங் கருதுவாயாக—எ-ம. (73)

நினையார்க் கரனருணி லைக்குமோ தொல்லைத்
தினைசூழ வேதியங்குஞ் சிந்தாய் - உனையொப்பார்
காணேன் ஒருவரையுங் கன்மத்தால் வாடுபவர்
வேணேன்னின் செய்கை - விடு.

(இ-ள்.) பொய்யை மெய்யாகக் காட்டிநடிக்கும் மாயையினிடத்தழுந்தியும், "உட்சுவரிருக்க புறஞ்சுவருக்கு மண்ணணைப்பாரை" யொப்ப விதேகமுத்தியைத்தருகின்ற ஆன்மாவினழகாகிய சிவபோக பக்தியையணியாது புழுக்கணிறைந்ததும், மாதர்களுக்கும், மாயைக்கும், அடிமையானதுமாகிய தேகத்தைப பலவித ஆடையாபரணத்தினு லலங்கரித்தும், பட்டிமாடாகவும், ஓரிடததுந் தஙகிபுசிக்காத ஆடாகவும், இல்லிக்குடமாகவும், இருக்கின்றவர்களுக்கும், பரமசிவத்தைப்பூசிக்க அவரது திருக்கல்யாண குணங்களைச் செவியாரக்கேட்டு விஸ்வாசிக்க, குருவாக்கியத்தைச் சதாகால மனுஷ்டிக்க எண்ணமற்றவர்களுக்கும், சிற்சபையாகிய இருதயகமலத்திலே தாண்டவஞ்செய்பவரும், பாபசங்கார கர்த்தாவுமாகிய தயாளுவினுடைய கருணையானது வாய்க்குமோ? உலகவாசனையாகிய தினையென்னுஞ் சிறியதானியத்தைப்போல அந்தகாரமெனும வினையானது நெருங்கக் கொடியதென் நிலைதனைவிட் டகலும்வழியானது கிட்டாமையினால் ஆற்ற முடியா தங்கலாய்த்தலையும் ஓ துஷ்டநெஞ்சே! துர்ச்செயலுக்குட்பிரவேசித்தும், தீர்க்காலோசனை செய்யாமற்றொடங்கிய கியாயமானது முற்றுப்பெறுமற் பலகால் துக்கித்தும், சத்காரியங்களை வெறுத்தும், மதியிழந்து பரிதபிக்கின்றவர் இபபுவியினிடத்து உன்னைப்போன்ற அறிவிலியும் அகங்காரியுமுள்ள எவரையும் பார்த்திலலேன். ஆதலினால் உனது துர்பபோதனையும், வழுவைத்தருகின்ற ஆபாசங்களையும், இனியொருக்காலும் விரும்

யேன். மஹாபெருமையாக இதுகாறு மலைத்திருந்த போலியாயகுணங்களியாவையும் இன்றோடே கடப்பாயாக; ஏனெனில பெருமானுடைய பற்றுள்ளவர்களே நல்லோராவார். இதைவிலகினோர் கல்லாதவரென்றும் பாவியென்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றார்—எ-ம். (74)

விடுவாயே யீசன் மெய்ப்பதஞ் சேரத்
தொடுவாய்நல் வின்பநதி தங்கும் - சுடுவாய்மா
வித்தாரம் பேசவரும் வீண்பகட் டையுடனே
உத்தாரஞ் சொல்லா - தொழி.

(இ-ள்.) நிரதிசயானந்த போகத்தை யடைந்த பெரியோர்களாகிய மஹான்கள் உடல், பொருள், ஆவி இம்மூன்றையுந் தத்தஞ்செய்து ஞான முத்தி சாதனையைப் பின்பற்றினோர்களென்றும, அந்நிலையை விரும்பினவர்கள் உலகாடம்பர ஸ்லாக்கியத்தை அருவருத்தார்களென்றும், பொய்ம்மையிற் பொழுதுபோக்கி ஆயுளை வியர்த்தமாக்காதபடி சதாதியானமுற்றிருந்தார்களெனறும், பஞ்சபுலவேட்கையெனும் ஆனையை அறிவென்னுந் திருவருட்சங்கிலியினு லிறுகக்கட்டி விதேகதேகத்தை யணிந்தார்களென்றும, தன்னைப்போல மற்றயாவரையும் ஸ்நேகித்து மெய்வாழ்வினை யுபதேசித்தார்களென்றும, வேதாப்பியாசத்தினால் விளங்குகின்ற தன்மத்தை நல்லோர்களாகிய அடியார்கள் சொல்லப் பலமுறையுங் காதினாற்கேட்ட ஓ மனக்குரங்கே! அந்நற்சாற்பினிறபுக அவர்களால் தீயவையெனத் தள்ளப்பட்ட பஞ்சமாபாதகங்களையும மற்றுமிடும்பாகிய செருக்கையும், தானெனு மகங்காரத்தையும் நிவர்த்திசெய்வாயேயாமாயின் அளவற்றபூரணஞானோதய ஸ்வயம்ப்ரகாஸ வள்ளலென்னுங் கிருபாமூர்த்தியாகிய பரமேஸ்வரனின் தெள்ளிய திருவருணிழலை யணுகுவாய், அஃதனு லனித்தியங்களெல்லாம் சூரியன்முன் பனியெனமறைய புவனங்களெலலாம் புகழ்ந்து வணங்கத்தக்கவிதமாய் முத்தனெனும பேரானதுவிளங்கும். இஃதனைக் கைக்கொள்ள வகையறியாது புன்கண்மூடி பொய்யைவிளைவிக்கும தன, கன, வஸ்து வாகனாதிகளை மஹா சிறப்பாய்நினைந்து துர்ப்பாதையினிடத் தின்பமுற்று, நற்றவத்தாரை யொரு சிறிதுமதியாமல் வலக்காரமாக யெங்கும் புகழ்ந்து பறைந்து அவித்து அதனால் வந்தடைகின்ற சாபத்தையறியாது விழிக்கின்றையே? இவையாவுமொழிய சாதுக்கள்பாற்சென் றருள்பெற்று நின்றநிலை வழுவாதபடி யதாஸ்தானமாகிய சிவத்துடனகலந்து பிறவியெனுந் துக்கநரகத்தைத் தகிப்பாய். இவ்வனைங்கூறிய மொழியை வியர்த்தமாக வாலோசியாமலும், வீணுபாசங்களைப் பிரயோகியாமலும் துர்க்கிருத்தியங்களைத் தவிர்ப்பாயாக—எ-ம். (75)

ஒழிவின்றி யோடுகின்ற வுத்தமயில் பேயே
அழிவின்றி நிற்றலரி தாமே - கழிவின்றிக்
கண்ணுதலின் பாதங் கருதத் தகுதியலால்
எண்ணுவ தெல்லா - மிழுக்கு.

(இ-ள்.) குரங்கானது தன்கைக்குக்கிட்டிய சிறுபொருளை யெடுத்துக் கொண்டு பார்ப்பவர்கள் அப்பொருளின்மீது விருப்புற்றனர்களெனவோ அல்லதனைப் பறித்துக்கொள்வார்களெனவோ அல்லது கோரணிகுணத்தினாலோ ஒவ்வொரு கிளைகளைத் தாவியும், பல்லிளித்தும், ஊஞ்சலாடியும், பலகாரமென்றெண்ணி பாம்பின் முட்டையையெடுத்து சிறிதுநேரம் விளையாடியபின்னர் பாம்பின்றலையைக் கண்டமாத்திரம் மஹாபயமுற்று தரையிலூன்றிக் கொல்லுமவளையினும் நகைத்து ஒரு நிமைப்போழ்து மோரிடத்திலுந் தங்காதபடி யலைவதற்கொப்பாக, பலவிடறலான துஷ்டசெய்கைக்குப பின்னிடையாது திரிந்து நற்குணமற்ற ஓ மனவலகையே !. நீ இவ்விதத் தீக்கருமததிற் பிரவேசித்துத் தடிததுவிழுவையேயானால் சாகாப்பதவியாகிய சிவசாயுஜ்யமெனனும ஞானானந்தத்தில் மூழ்குவது மஹா கஷ்டாத்தியமாகுமே? முக்குணன, முத்தொழில், முமமூர்த்தி, முச்சுடர், முப்பொருள் முக்கண்ணன் எனனுஞ் சிவபெருமானுடைய சரணாரவிந்தங்களைச் சதாகாலத்துஞ் சிந்தித்தொழுகுவதே மாட்சிமையுளளது, இவையல்லாத பாபகனமாஙகளில் மலைதது தெய்வநாபக்தியானது சிதைசித்துமற்ற நீ நினைப்பதெல்லாம் முடிவில் மஹா பொல்லாப்பை விளைவிக்கின்ற ஹீனமாக இருக்கின்றது, இஃதையோர்ந்து நற்சார்படைவாயாக—எ-ம். (76)

இழுக்குவரு மென்றெத் தனையோபோ தித்தும்
அழுக்கா றதைத்துடைகக லாகா - புழுக்கனிறை
நாற்றக் கடமதனை நாடோறும் நம்பினல்
ஆற்றற் றருமோ - வஃது.

(இ-ள்.) புவனபேத வ்யாபாரத்தினு லெக்காலத்துஞ் சுகமென்பது கிட்டாதெனவும், ஆத்மானுபவ நிர்ச்சிந்தையில்லாமற் பெருமைநிறைந்த மோக்ஷானந்தம் வாய்க்காதெனவும், பலவிடம்புகளாற் றழைத்துநின்ற பொய்க்கூடும், பொம்மலாட்டமும், தன்னைத் தெளியாதவளையினு மசுத்தமும், துர்க்கந்தமுமுள்ள தேகத்தை வெகுவாக மதித்துச் சிரத்தையோடு காத்துவருவதினு லியாதாமொரு பயனையடைவதற்கியலாதெனவும், எவ்வண்ணமாகக் கடத்தை போஷித்துவந்த காலத்திலும், சற்போதனை, தெய்வபயம், ஆன்மசுகம், பேரறிவு, உண்மைநிலை, சர்வத்தையுந் தன்னையுந் தானுகடாத் தானெனித்தல், முதலிய நற்சார்புகளிலலையேல் பிரபஞ்ச துர்க்கிருத்தியம[illegible]

ஆளாவதன்றி வேறுபிரயோசனங் கருதற்பாலன்றெனவும் சுருதி, யுக்தி, அனுபவம் என்னு மூன்று விதேகமுத்தி யிலக்கணத்தினால் எண்ணிறந்த காரணார்த்தங்களை எடுத்தெடுத்துக்காட்டியும், அஞ்ஞானமாகிய உலகபாசபந்தத்தையே சிறந்த தொழிலாகத் தலைமேற்றாங்கித்திரிகின்ற துஷ்டநடபடியினால் பிறவியெனுந் துன்பத்திரையைத்தடுக்கவும், அல்லது மரணமென்னுங் கொடியகாலனை வெல்லவும், ஓ மனப்பேயே! உன் மந்தாசாரத்தினால முடியுமோ? முடியாதாம். என்னெனில் பொய்யைச் சத்தியத்தினாலும், மித்தையை நித்தியத்தினாலும், அஞ்ஞானத்தைப் பக்தாமிர்த ஞானபோனகமாகிய வேதாந்த நற்போதனையினாலும், இருளை ஒளியினாலும், அகந்தையல்லது தானெனு மமதையை சாதுக்கள் ஸ்நேகத்தினாலும், வெல்லவேண்டுவதே தீர்க்கமான காட்சியாயிருத்தல்போல் பரமேஸ்வரனின் நியமனத்தைக் கைசோரவிட்டால் ஆத்மஞானமும், புகழாகிய விதேகதேகமும் வாய்க்காவாம் ஆதலான் மெய்வரம்பினையுடைய மஹான்களைத்தேடி நமஸ்கரித்து சுத்தசைதந்யத்திற்கலக்க அதி சுவிதாணமான போதிவைப்பெற்றுச் சுகித்தலே விசேடமென நினைந்தடங்குவாயாக—எ-ம். (77)

அதுவிது வென்றங்க லாய்த்தே யிருந்தாய்
பொதுவினடிக் கும்புங் கவலைப் - புதுமையல்லோ
எல்லா மவன்மயமென் றேதமறச் சிந்தித்தா
லொல்லாமை யாவும் - உறும்.

(இ-ள்.) சர்வம் ப்ரமமயமாகவும், அகண்டாகார வடிவாகவும், தோற்றம்-ஒடுக்கமாகவும், தேஜோன்மய ப்ரபுடீக விலாசமாகவும், காண்பார்க்குக் காட்சியாகவும், காணார்க்கிருளாகவும், தூரம் சமீபமாகவும், அறிவுஞ்சிவமாகவும், எல்லாச் சொரூபமாகவும், நின்மலஞான மூர்த்தியாகவும், அன்பர்க் கின்பனாகவும், வம்பர்க்குத் துன்பந்தருபவனாகவும், உள்ளத்தை யுள்ளபடி பார்க்கின்றவர்களுளத்திற தீமையைக் கடிந்து ஆத்மானந்தமெய்ந்நிலையைத் தருபவனாகவும் விளங்குகின்ற நித்தியாபரோக்ஷ ஸ்வயம்புவை, நெறிபிறழாது உன்மத்த பாவச்செய்கையை விளைவிக்கும் தானெனு மமதையாகிய கொடிய பாவியின் பின்னே அலையாதுநின்று மனனஞ்செய்ய வகையறியாது, இதுதானே தெய்வம், அதுதானே கர்த்தா, பார்த்தவரார், கேட்டவராரென்று பல விடம்பினால்கண்டெறியா திறுமாந்து, உன்கெடுபுத்திபோன வழியெல்லாஞ் சென்று பிதற்றிப் பித்தேறினையே. இதுவும் ஓர் ஜென்மந்தானோ? ஆள்அழகாயிருந்தால் தாவிளை. அகந்தை, அழிம்பு, பொறாமை, செருக்கு, முதலான ஈனச்செய்கையில் மாத்திரம் தம்பி தலையெடுத்தாற் பெருமை யுடைத்தென்னும் அறிவிலிகளுக்குத் தலைவனைப்போல், உன்னிலக்கணத்தைக் காண அல்லது வழித்துச் சிந்திக்க சக்தியற்று, அகங்காரமேலிட்டழியும் ஓ மனப்பே

யே! நீ வீணா வீணனுக்கு வெளிடம்பன் டங்காளியென்டன போன்று நீ நினைப்பதுவும், நடப்பதுவும், களித்ததுவும், இளித்ததுவும், மஹா அதிசயமாக விருக்கின்றதன்றோ? மகாகேவலம், இங்ஙனம் கூறியவண்ணஞ்சச்சிதானந்த விலக்கணங்கள் பொருந்திய நமது அப்பனாகிய சிவபெருமானை இதுகாறும் செயதுவந்த தூக்கருமங்களழிய குருவாக்கிய பரிபாலனஞ் செய்து சதாநியானிப்பாயேயானால, மூடததன்மையால வெறுப்புற்றிருந்த நற்கியானமும், ஜீவாதார பாமசமாதியும, அறிவானந்த தெய்வமாகிய நித்தியபோகமும், புகழும்புமம உன்பால் வநதடையும. இந்நெறிநய நீக்குவதற்கு மேற்பட்ட இழிவும, பிறவியும், பாவமும், துக்கமும், வேறின்மையா லதியாவசீகமாய்க் கைகொள்ளுவாயாக—எ-ம். (78)

உறுதியொன் றுண்டாயி லுண்மைவெளி யாகு
மறுதிவரை துன்பமணு காது - இறுதியி
லீசன் றிருவருளி னின்பந்து ளாழ்குவாய்
பேசி லிதுபெரிய - பேர்.

(இ-ள்.) மாயாமலக்கண்ணெனும் அந்தகாரமாகிய மயக்கத்திற்பிணைப் பட்டிருக்கின்ற போகங்களின்மீது அணுவளவும் இச்சிந்தமில்லாதபடி, எல்லாங் கடந்ததாகவும், எங்கும் நிறைநததுவுமாகிய பரமேஸ்வரனின் திருவடி நீழலடைவதே சாத்தியெனத் தெளிந்து, வலிமையுள்ள பற்றுதலொன்றிருக்குமாயின், அப்பற்றுதலின் ஐக்கிய பாத்திரமாகிய அறிவினிடத்து சுயஞ்சைதாய ப்ரமவடிவமானது யதார்த்தமாகக் காட்சியாகும், இப்புண்ணிய நிலையினால் உனது மலதேகம நின்மலமாகநின்று முடிவுவரையினும் சீவனமுத்தனாகவிருப்பாய், அந்நிலையிற் புகுதாததற்கு முன்னம் பலவிடத்தும் வாதுசெய்து க்ஷீணநிசைக் குட்படுத்திய அஞ்ஞானமாகிய மாயை சிறிதுநேர மண்டாமல், தீயின்மெழுகென மறைநதோடும. இஃதனால் மண்ணில் மறைந்தானென்ற வார்த்தைசிதைந்து பரமததோடு ஒப்பற்று, இரண்டறக்கலந்து நீடூழி தேவசொரூபமாகச் சுகித்திருப்பாய இப்பெரும் பாக்கியத்தைப புகலுங்கால் எப்பிறப்பினுஞ் சிறப்புடையதும், மகத்துவமுளதும் சாகாப்பதவியுமெனச் சொல்லாதமையும ஆதலான இடும்பினலழிகின்ற ஓ மனக்குரங்கே! இனியேனும விருதாவான துர்ச்செய்கையினாற் றியங்காமல் சர்ச்சன சஹவாசத்தையடுத்து ஆத்மலாபம்பெற்று நித்தியானந்தபோகத்திற் காட்படச் சிந்திப்பாயாக—எ-ம. (79)

பேர்பெற்றார் நால்வர் பெருமை மிகுமடியார்
ஆர்பெற்றார் பூவி லறிந்திலேயோ - கார்பெற்றார்
காகம் நரிநாய் கழுகுக்கும் நல்விருந்தாம்
போகமெனச் சொன்னதெலாம் - பொய்.

(இ-ள்.) வேதஏடுகளினாற் காவேரியோட்டத்தைத்தடுக்கவும், நெருப்பினின்று பொன்மயமாயெடுக்கவும், ஆண்பனையானது பெண்பனைபோற் காய்க்கவும், பாண்டியனுடைய வெப்புநோய்தீரவும், திருமயிலாப்பூரில் சிவநேசருடைய குமாரத்தி பூம்பாவை அரவந்தீண்டி மடிந்தபின் தகனஞ்செய்த அஸ்திகள் அங்கப்பூம்பாவையென உயிர்பெற்றெழுந்திருக்கவும், சமணர்களை உயிர்க்கழுவேற்றவும், இன்னமனந்த அற்புதங்களைச்செய்து திருப்பதிகங்கள்பாடிய ஆளுடைய பிள்ளையாரென்னும் **திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள்,**

பாடலிபுரத்தின் பல்லவராஜனும் சமணருங்கூடி நீற்றறையிலிட அந்நீற்றறையானது இளவேனில சந்திரன், தென்றல் பொய்கைபோலிருக்கவும் நஞ்சுகலந்த சாதத்தை அமுதம்போல் போசித்தும், கொல்லும்படியாகச் சமணராலவிடப்பட்ட மதம்பொருந்திய யானையானது வலஞ்செய்து தாழ்ந்து போகவும், கல்லோடு சேர்ந்துக்கட்டி கடலிலேவிட்டகாலத்து அக்கல்லே தெப்பமாகவிருந்து கரையிற்சேர்க்கவும், அப்பூதிநாயனருடைய பிள்ளையென்னும் நாவுக்கரசனை சர்ப்பந்தீண்டி மடிந்ததை யெழுப்பவும், நெடுங்காலந் திறக்கப்படாமலடைக்கப்பட்டிருந்த வேதாரண்ய ஆலயத்தின்கதவம் திறக்கவும், திருப்பனுவலோதி அற்புதங்களைச்செய்தருளிய **திருநாவுக்கரசரென்னும் அப்பமூர்த்திஸ்வாமிகள்,**

காவேரிநதியானது வழிவிடாது அலைபுரண்டு வருவதைத்தடுத்து நடந்தும், திருப்புக்கொளியூரில் முதலைவிழுங்கிய ஐந்துவயதுடைய பிள்ளையை உயிர்ப்பிக்கவும், பரவைநாச்சியார்பாற் சாட்சாதகார பரமசிவமாகிய கர்த்தியனைத் திருமணத்தூதுவிடுத்தும், திருப்பணிக்காகக் கொடுக்கப்பட்ட செங்கல்லானது தலையணைவைத்திருந்து சயனித்தபோழ்து கனகமாகிய பொன்னாகவும், பக்தர்களுடைய மனச்செருக்கடங்க நியாயதோரணைகள் புகன்றும், சேரமான் பெருமானாயனார் கைலைவந்தடைய அஸ்வங்கொடுத்தும், அனேக அற்புதங்களைச்செய்து திருப்பதிகங்களைப் பாடியவருமாகிய நம்பியாரூரர், தம்பிரான் தோழரென்னும் **ஆலாலசுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்.**

பெருகிவந்த வையையையழைத்தும், செழியனாகிய பாண்டியன் தனத்தால் திருக்குருந்தடியிலாலயமமைத்தும், காட்டிலிருந்த நரிகளைக் குதிரையாகச்செய்தும், சிவபெருமானாகிய நடேசமூர்த்தி எழுதி கைநாட்டுச்செய்த அருள்வாசகமென்னும் திருக்கோவைபாடியும், சற்றுமுணர்வின்றி வாதுக்குவந்த பௌத்தர்கள் நாவையடக்கியும், ஈழதேயத்து ராஜன்குமாரத்தி பிறவி யூமையாகவிருந்ததையைநீக்கிய புத்தர்களுடைய கேள்விகளுக்கு அம்மூகையைக்கொண்டு உத்தரவளித்தும், அப்புத்தருடன் மன்னனையும் சைவமார்க்கத்திற்குட்படுத்தியும், புத்தர்கள் ஊமையை நிவர்த்திசெய்தும், அனேக மகிமைகளைப் புரிந்தவருமாகிய திருவாதவூரரென்னும் **மாணிக்கவாசக ஸ்வாமிகள்,**

ஆகிய இந்நான்கு சமயாசாரிகளும், மற்றும் நாயன்மார்களாகிய அன்பர்களும், திருக்கூட்டத்தாரும் குற்றமற்ற ஸ்வயம்புவாகிய பரமசிவத்தைக் கல்லாலடிக்கீழ்க்கண்டு நற்பாக்கியம்பெற்றார். இமமஹான்களைப்போல ஞானமுத்திசாதனமெனும் விதேகலாபத்தை அனுபவித்தவர்களுண்டோ? இத்தகைய நற்கதியை ஒருசிறிதுமவேண்டாது பொய்மயமென்னும் அஞ்ஞானமாகிய அகங்காரத்தை விளைவிக்கும் கொடியஆசையை வெகுவாய்நம்பி இறுமாந்து செருக்குற்றலையுமபாவிகளாகிய சண்டாளர்கள் எடுத்ததேகம் பரமானந்த வள்ளலுக்குழையாமல வீணுடாச வலையிலிழிந்து காகம், நாய், நரி, கழுகு இவைமுதலிய பறவைகளுக்கு ஆகாரமாகுமேயலலது மகா கெம்பீரமுடன் எல்லாச்சுகங்களையு மனுபவிந்தோம, எங்களைப்போற் சௌக்கியநிலையினைக் கைக்கொண்டவரொன் றிறுமாந்து தலைக்கெட்டு வெளியிட்டவியாவும் வெறும்பித்துநிறைந்த மிதநையேயன்றி யதார்த்தமல்ல; ஆதலால் எடுத்தபிறவி பயனைப்பெறுவதில் அதிக சந்தோஷமும், ஹீனமும வரும்பகைத்தில சற்றேனும் இடங்கொடாதபடி அரவிலகி நிற்பதற்கான விடாமுயற்சியும வேண்டுவதால் ஓ தீயமனமே! இங்ஙனங்கூறிய மஹான்களின் சிறபை நினைந்து நற்பேறடைவ யாக—எ-ம். (80)

பொய்ப்புல னைந்தாற பொருளறிவ தேதெங்குஞ்
சையென வேதிரிந்து சாக்காடி - லுய்தால்
வரும்பய னென்றுகும் வள்ளலடி வாழ்ந்தின்
றரும்பயன்முன் றோசாட் - சி.

(இ-ள்.) மித்தையிற் றடிப்பேறியிருக்கும் இந்திரியவிஷயங்களாகிய பஞ்சபூதத்தினுல் சகல கேவலங்களுமற்ற சசசிதானந்த பரமேஸ்வரனைக் கலக்கா நின்ற ஆத்மாதீதனுகிய அறிவைக் கிட்டுவதற்கான ஸத்கருமடரிபாகத்தைக் கைக்கொள்ளவியலுமா? முப்படைசையென்னுந தீயசெயற்கைக் குடன்பட்டு மெய்ஞ்ஞான வரபைக்கடந்து ஹீனத்துவத்தை விாத்திச்செய்யும் பொருளைப பலவகையினுந்தேடி அலகைபைப்போன் றலைந்ததால் உனது ஆசையை பலரும்நோக்கி சீ, சீ, யென்றிகழ ஆயுளையெல்லாங்கெடுத்து நல்லோர் வாக்கியத்தையைத்தடுத்து, துஷ்டகுணதநைமடுத்து, ஆபாசமொழிகளைத்தொடுத்து நரை, திரை, விணை, மூப்பு, சாக்காடென்னும் முட்புதர்க்குளிறங்கிழு லடையப்போகின்ற பிரயோசனமென்னவோ? இவைகளையாராய்ந்து பரமேஸ்வரனின் திருச்சரணாரவிந்தத்தைச் சிரத்தையோடு வணங்குவையாகில் இத்தியானத்தினுல் வந்துசோாநின்ற சிவானந்த வாழ்வென்னும் மோக்ஷசாம்பிராதாயத்திற்குப் புங்கவர்களாகிய முநியோரே காட்சிப்ரமாணமாக யதாஸ்தானத்திலுள்ளவர். ஆதலால் பாழுக்குழைந்துப் பல்காலும்வாடும் ஓ மூடமனமே! இதையுணர்ந்து சீரடைவாயாக—எ-ம். (81)

சாட்சிபுகல் நூலைச் சத்தியமாய்ப் பின்பற்றிக்
காட்சி யனைக்காண்பர் காரணர்கள் - மாட்சிமைசே
ரத்தனூர் பொற்கழலை யண்டினர்க்கில் லைபிறவி
பத்தியொடு போற்றிப் - பணி.

(இ-ள்.) பெரியோர், குருக்கள், அறிவுடையோர், நடுவுநிலை, பரோபகாரம், ஒற்றுமை, மற்றும் நற்குணபரணர்களாற் றிடச்சித்தமுடன் சொல்லாநின்ற வேதாம்ஸாரத்தைப் பிரமாணவாயிலாக நம்பிய விவேககூர்மையுடைய தலைமையர், அப்பெரும்பொருளை உள்ளதுள்ளபடியாகக்கண்டு விதேகமுத்தியெனும் ஞானசமாதியிற் றங்கியிருப்பார், ஞானப்பெருமையுடைய சிவநாயகன் செம்பொற்கமலத்தை யல்லாது பிறவிநோய்க்கு வேறு மருந்தில்லென நினைத்து சதா வந்தனைவழிபாடு நடத்தி ஆகுலித்த அடியார்களுக்கு ஜனன பாயமான தொருகாலு மணுகாதாம், ஆதலினால் மனப்பாற்குடித்து, கெடுபுத்தி கொண்டலையும் பாவநெஞ்சே! இவைகளை யுணர்ந்து திருக்கூட்டத்தாருடன் உள்ளன்போடுவணங்கித் துதிப்பாயாக; ஏனெனில், தெய்வத்தையும் குருக்களையும் இகழ்தலையும், மறத்தலையும் பார்க்கின் தோஷமாகிய சாபம்வேறின்மையால் நிமைநேரமும் வழுவாது துதித்து மெய்வாழ்விற்புகுதல் கடமையாம்—எ-ம். (82)

பணிசெய்தார் யாவர்பற் றின்றிநின் றோர்கள்
பிணியுய்தா ரியாவர்பே தையாம் - துணிவுய்தா
ரெக்காலுந் தஞ்சா ரெமனுக்கு மஞ்சார்காண்
முக்காலு நிற்பார்முத் - தி.

(இ-ள்.) மனோவிசாரங்களாகிய அகப்பற்று புறப்பற்றென்னுங் கேவலங்களைத் தொலைத்து, பரமபிரான் பூம்பதத்திற்குச் சதாமறவாது திருப்பணியாகிய பக்திவழியை நடத்தினவர் எப்புண்ணியாத்துமாவோ அவர்கள்தான் உலகவெறும்பித்தாகிய புத்தியீனங்களெனு மிழிவைநீக்கிச் சைதந்ய சுகானுபூதியராக விளங்கினவராவர், இவைகளைக் கவனியாமலும், கற்றவர்கள் சொன்மொழியை அலட்சியமாகக்கருதி ஜன்மவியாதியென்னும் பிறவி நரகிடத்துட்பட்டவர்க ளியாவரோ அப்படிபோவிகள் பேடியாகிய அறிவற்ற மிருகத்துக்கு ஒப்பாவர்; கடக்கவியலாத மாயாசமுத்திரமாகிய துர்ச்செயலை மகாதைரியத்தோடு நீக்கின மஹானுபாவர்களாகிய வேதாந்த ப்ரபுக்கள் எல்லாரையும் வருத்த தலையெடுத்தாடுகின்ற சர்ப்பத்தைப்போன்ற தீயமூவாசையாமயக்கத்தினு லெந்நாட்களிலு மிடரலடைந்து வாளாய்மடியார், உயிர்க்கிறைவனென்று பலராற் சொல்லாநின்ற மரணமாகிய காலனுக்கும் பயப்படமாட்டார். மூன்றுகாலத்தும் சர்வசைதந்யவொளியாகிய ஸ்வயம்புவினுடன்

கலந்து மெய்ஞ்ஞான மோக்ஷானந்தத்தி லழிவின்றியிருப்பார்; இதைச் செவ்வனே ஆலோசித்து நடப்பாயாக—எ-ம். (83)

முத்திக் குகந்த முதல்வன் றனைநினையா
தெத்திக்குஞ் சென்றிங் கிளைத்தாயே - சித்திபெற
வேண்டிற னுன்னுள் விளங்கும் பரஞ்சோதி
வீண்டம்ப மற்றடைவாய் - வீடு.

(இ-ள்.) சகலகாருண்ய கர்த்தவ்யனும், அறிவானந்த சுழுத்தியினிடத்து விளங்குபவனும், மோக்ஷமெனுங் கைவல்யாகிய ஞானத்திற்கதிபனும், கேவலமெல்லாங் கடந்துநிற்பவனும், சுயம்ப்ரகாஸ பரமமுமாகிய சிவபொருளைச் சிந்தைசெய்யாமற் பாழுக்குழைத்து, "கூத்திக்கிட்டு குரங்கானுன், வேசிக்கிட்டு விரகானுன்" என்ற உலகவாக்கிற்கிணங்க, நல்லோர்களை அவமதித்தும், கற்றவர்களைக் கண்டபோது வெளிபாசமும், காணுதபோது துவேசமாக தூஷித்தும், செய்வனவற்றைத் திருத்தமாகச் செய்யாது ஓரிடத்தும் தங்காது பலதிசையும் பல்வெணணத்துடன் ஓடிப்பலனற்று ஓட்டாண்டியாக மெலிந்தனையே? வீண்பொறுமை குடிகொண்ட ஓ மனக்குரங்கே! நீ நற்பாக்கிய ஞானவரம்பை, பக்தாமிர்தத்தை, தெய்வகதியை, மெய்ப்புகழை, அடையக் கருதுவாயாகின் அந்நன்மையைத் தருகின்றதும, தீயவையாகிய இழிவுகளைத்தடுப்பதுமாகிய பரப்ரமவஸ்துவென்னும் அறிவு நீ தங்கியிருக்கின்ற ஸ்தானத்தினிடமே வ்யாபித்திருக்கிறது, அவ்வான்மாவாகிய சிவத்துடன்கூடிக் களிப்புற்று நிலைப்பெறுவாயேல அப்பரமாகிய கர்த்தா வுன்னுடன்கலந்து ப்ரகாசிப்பான்; ஆதலால் இப்பெருங்கதியைப்பற்றுது வியபிசார தோஷத்தைக் கொடுக்காநின்ற வைபவஸ்லாக்கிய விறுமாபபைவிட்டு நீங்கிப் பரம்பொருளை உண்மையுடன் தியானஞ்செய்து இங்ஙனங்கூறிய ஆத்மலாபமாகிய திருவருளிற் கூடுவாயாக—எ-ம். (84)

வீடடைந்தார் தன்னை வினையாகும் வெம்பிறவிப்
பூடடைந்தோங் காது புனிதமே - கேடடைந்
தெங்குந் திரிந்தென் னியம்பியென் னன்னூற்
றங்கினுமி யாவுந் - தடை.

(இ-ள்.) பொய்யாடம்பரத்தைக் கிஞ்சித்தும் விரும்பாமல் வெளிப்படட்டினுழையாமல் சதா தன்னையாரொன்றும், தான் செய்யவேண்டுவ திதுவென்றுராய்ந்து, செய்வனவற்றில் நன்மையைக் கவனித்தும், அகப்பற்று புறப்பற்றின்றி சுகிர்தபோகத்தைப்பெற எக்காலத்துஞ் சோர்விலாமல் தன்னவனன்னியனென யோசியாமல் பார்த்ததெல்லாம் பரமரூபமெனத் தியானித்த புண்ணியராகிய ப்ரபுக்கள் அவர்கள் கைக்கொண்ட நீதிசாராம்ஸத்தினுக்குத்

தக்கவிதமே விதேகமுத்தி, ஞானசாதனை, நிதநியசமாதி, பூர்ணவிம்பம், பிற வாதிருத்தல் என்னு மின்னுமனந்தவித மகிமைநிறைந்த மோக்ஷசாம்பிரதாயத்தின் திருவருளில விழுங்கப்பட்டார்கள்; அ மைஹாத்துமாக்களைத் தீமைக்கே துடைதட்டிநதிரியும் பாழாகிய ஜனனநோயின் பூண்டானது தலைகாட்டாதாம், அந்நிலையையுடைந்தான நலலோர் உலகி லவதரிப்பதினுல் எல்லாவற்றிற்கும் சிறப்பும், பெருமையும, அருமையும், வலிமையும, மகத்வமும், புகழையுமுடையதே? மேற்கூறிய செயற்கையிற் சிறிதேனுமில்லாது வீணும்பிறவியைச் சுமந்து அப்பிறவியிணைப் போஷிக்க எவ்விடத்திலுஞ்சென்று பொருள்தேடியும், அப்பொருளைப் பெற்றுக்கொள்ளுமவனாயினும் முகஸ்துதியாகப் பொருந்தாமையெலலாம பொருந்துமெனபுகன்றும், நற்பேறருளத்தக்கவையாகிய சிறநத சுருதிகளையாராய்நது வுள்ளத்தினிடதது நிலைத்திருந்தும் யாது பிரயோசனத்தைக் கொடுககும், ஓ டாபகிருத்திய மனமே! நித்தியலாபத்தைத்தருகின்ற பக்தியும, தெய்வதாசிநதையுடைய அடியாரினமீது ப்ரீதியும், தியாடததையி லருவருப்பும, ஆபாசமொழிகளில் வெறுப்பும், நல்லோர்களை மதிததலும், ஸத்விஷயத்திற் பின்னிடையாத தயாளவைராக்கியமும், உனக்குளிருந்தால் பெரியோராகிய முதியவரடைந்த பெருமபொருளாகிய சிவானந்தவாழ்விற் கூட்டுறவாவாய்; இவைபாவு முன் செருக்குடையமந்தபுத்திக்கு விரோதமாகக் காணப்படுமாகில் நீ நிறைவேறிய துர்க்கருமஙகளே முதன்மைபாகவிருந்து ஆந்மலாபமில்லாமற்றடுக்கும். ஆதலால் வியர்த்தமாகியதீவினையிற் பிரவேசியாது நல்வினையைச் செய்வாயாக—எ-ம். (85)

தடையாக்கும் நெஞ்சேமா சஞ்சலங்க ணீக்கி
நடையாக்குங் காலமென்றோ நாடு - கொடையார்
தனக்குத் தனந்தரும்பாய் சாற்றுவர்போ லுன்னை
முனந்தந்து தெய்வருளில் - மூழ்கு.

(இ-ள்) அஞ்ஞானவிருளினுற் றிரைத்துப் பொலலாத நரகமாகிய மரணதுனபததிற் காட்டட்டு, சாதுக்களுடைய ஸ்நேகத்தையும், தயாளசிநதையையும், ஸதகாரியங்களையும், தெய்வபக்தியையும், அனுஷ்டிக்காமற் றடுத்து, துன்பத்தை விளைக்காநின்ற பிறவியாகிய ஜனனதோஷமானதணுகி கண்கலக்கங்கொண் டலைகின்ற ஓ டாழ்மனதே! இத்துயரநதிரையிலிருந்து விலகி, அருணிறைநத அடியார்சூழ்ந்து ஆராதித்து ஆனந்திக்கும் வழியிலுட்படுத்தும் நலலநாளைப்பெறுவ தெநதததினமோவென் றங்கலாய்த்து, எல்லாவற்றிற்கும் தெய்வதாசாம்பிரதாயமே விசேடித்ததென முற்றும வைராக்கியமுடன் பின்றொடர்வாயாக, ஏனெனில், செல்வமாகிய பொருளைத் தன்வனாயினுமே அனுபவித்து "பொன்காத்தபூதத்தைப்" போன்று,- ஒருவருக்கு மீயாது புதைததுவைத்து, ஓ தனமே! ஓ பணமே! நீ யில்லாதவர்க

ளென்கண்ணுக்கு நடைபிணமே! உன்னையல்லாது வேறொன்றை மதிப்பதில்லை பத்திரம், சாக்கிரதை, என்னைவிட்டெங்கும் ஓடாதே, நான் வரும்போது என்னோடுவந்தாய், என் ஆடம்பரத்தில வேசிக்கும் உனக்கும் பேதமின்றிச் சுகமுற்றிருந்தாய் சுடுகாட்டிற்குப் போகின்றகாலத்தி லிங்கேநில்லாது என்னோடுவருவாய் என்று தண்டஞ்சமர்ப்பித்து மகிழ்கின்ற லோபியைப்போலிராமல், (வரையாதுகொடுக்கும்) ஈகையாளராகிய தர்மதாதா தான் படைத்திருக்கும்பொருளைத் திரணமாக நினைத்து தன்னை வந்தடைந்த யாவருக்கும் இல்லையென்ற வாக்கியத்தைப் பிரயோகியாமல் பஞ்சபூதமுஞ் சந்தோஷமுறவளித்தும், தன் பொய்யுடம்பானது மறைந்தாலும், புகழுடம்பானது எக்காலத்தும் நிலைபெற்றுய்யும் நற்கருமங்களை ஒருவர் சொல்வதற்கு முன்னமுடித்து ஆனந்தித்துப் பின்னவர்களெல்லாம் வாழ்த்திவணங்கவும், இம்மையின் சுகபோகங்களைநடத்தி மறுமையின் வாழ்வாகிய அறிவானந்த கயிலாயமென்னும மோக்ஷபாக்கியத்தை யடைவானென நல்லோர்களாகிய கற்றவர்களாலும் சுருதிகளாலும் கூறப்படுவதைப்போல, மாற்றுனுகிய மரணகாலன்வந் திடையூறு செய்வதற்குமுன்னமே உடல், பொருள், ஆவி மூன்றையுந் தெய்வமாகிய பரமசிவத்துக் குன்றனைத் தத்தமாகக்கொடுத்து ஆன்மசோதியாகிய திருவருள் வெள்ளத்திலிறங்கிச் சாஸ்வதாபதத்திற் சுகித்திருப்பாயாக; (தவஞானியானவன்) உலகவாழ்வைப்பற்றிகவனியாமலும், அறிவினரால் நடத்தும் தொந்தரைகளுக்கு மனம்வருந்தாது தனது பஞ்சபுலனை ஒருங்கே நிலைநிறுத்தி மெய்ப்பொருளைப் பெற்றுக்கொள்ள விருப்பமடைவது போல தனவந்தனுகிய (கொடைநாயகன்) ஒருவருடைய தூண்டுதலையும் வேண்டாது தன்மத்தை செய்யவேண்டுபவனுகின்றான், இஃதனுல் பிறவியெனுஞ் சமுத்திரத்தைக்கடக்க, (தவசியையும் - தனுஷ்டிகனையும்) லோபியையும்- பாவியையும் உருவகஞ்செய்து மெய்ஞ்ஞானவரம்பு உபதேசிக்கப்பட்டது.

மூழ்கிச் சமுத்திரத்தில் முத்தெடுப்பா ரையொத்துள்
ளாழ்கியா னந்தத்தை யாசரிப்பாய் - வீழ்காமுன்
தாளாண்மை நீகொண்டு சந்ததமும் வாழாத
கோளாண்மை கொண்டனைகுற் - றம்.

(இ-ள்.) முத்துச்சலாபங் குளிக்கிறவர்கள் கடலினடிவாரத்திறங்கி முத்தைக் கண்டடைவதற்கொப்பாக நித்தியானந்த போகமாகிய பரமபிரானின்றியானவாரியிலமிழ்ந்து ஞானவறிவென்னுந் திருவருளை நரகமென்னு மரணத்திலகப்படுவதற்கு முன்னமே அனுஷ்டிப்பாய். ஓ மூடநெஞ்சே! நற்பலனிற் புகுவதற்கான விடாமுயற்சியைப்பெற்று எக்காலத்தும் நீடிக்கின்ற மோக்ஷமென்னுங் கைலையில் விண்ணவர்களுடன் சுகித்திருக்க விருப்பமற்ற துர்க்கிருத்தியமான கொடுமைகளிற் பிரவேசித்து அதின்பலனுகிய பாவமூட்

டைகளுச் சுமைத்தாங்கியாகவிருந்தது பெருந்தீமையென்றுணர்ந்து தெய்வாராதனையை யிடைவிடாது சிந்திப்பாயாக—எ-ம். (87)

குற்றங்கூறுது குவலயத்தைப் பாராது
பற்றினரோ விஞ்சைமலி பாக்கியராம் - சுற்றிசுற்றி
பலவிளிக்கும் வானரம்போற் பாவந் தலையேற்றிற்
புல்லியரொன் றேசொல் - புரை.

(இ-ள்.) புயல்காற்றுனது நாசாபக்கந்தினு மலையச் செய்வதைப்போல் பார்த்தவரையெல்லாமபழிகருந் தன்மத்திறகொப்பாக ஓரிடத்தினும் நில்லாது பல்லைக்காட்டித்திரியுங் குரங்கானது நகைப்புண்டவா கல்லாலெறிய அடிபட்டு பலதிசையு மோடிவதைப்போன்று பொருளில்லாக்காலத்து தாழ்த்தியும், செல்வமுள்ளகாலத்து வாழ்த்தியும், காலங்கடக்கின்ற இப்பூமியினிடத்து தன்னையறியாது பொல்லாமயக்கங்களாகிய பற்பல ஆசைபபேயானது முதன்மையாகக் குடிகொள்ளுமேயாமாயின் ஹீனசெய்கைக் குடன்பட்டமையால் கீழ்மகன், சண்டாளன், டாபிஷ்டி, தெய்வதுரோகி, குருதுரோகி, வீண்பிள்ளை, அன்னியன் எனறே புகலுவதுடன் கன்மப் பிறவியென்றும், எந்தக்காரியத்தினும் மனலூஞ்சற்படப் பிழைசொல்லாமலும், உலக ஆடம்பரமாகிய சகலகேவலங்களை நோக்காமலும், ஆத்மானுபவமாகிய நித்திய அறிவாகிய சிவபோதத்திற் கலந்தவர்களே ஞானம்நிறைந்த அருள்பெற்றவர்களென்றுங் கூறுவாயாக; இஃதனுல் தெய்வபயமில்லாதவர்கள் தீமையையும், திருவருள்பெற விருப்பமுள்ளவர்கள் நனிலையை யாராய்ந்து, பேதை, பித்து, குழந்தை இவர்களைப்போன் றெதினும் பற்றின்றி சிதாகாஸமாகிய ப்ரமானந்தத்தையே நோக்கி இருப்பாரென்று கூறப்பட்டது—எ-ம்.

புரையனைத்துந் தீர்ந்தார் புகழுள்ளா ரெங்கும்
பரையிற் றழைத்துப் பரவும் - கரையில்லா
அத்தனடி வேண்டா தலைவதேன் சூளைபோற்
பித்துமல்ல மாதுட்டப் - பேய்.

(இ-ள்.) சத்காரிய பரிபக்குவர்களென்னு மடியவர்களுள்ளத்திற் கலந்து நிற்கின்ற குருவாக்கியத்தைப் பரிபாலனஞ்செய்து துரியவடிவாகிய சிவபோகத்தைச் சதாசிந்தித்த நல்லவர்கள் ஊழ்வினையென்னும் பிறவித்துன்பத்தையும், உலக வ்யாபாரங்களாகிய கொலை, காமம், மது, சூது இவைகளுடன் நரை, திரை, வினை, மூப்பு, சாக்காடுகளையும்வென்று எக்காலமு மழிவின்றி நிறைந்துள்ளதும், சர்வலக்ஷணமும், நாநாவித மயக்கமில்லாததுமாகிய புரையென்னும் முப்பத்தாறு தத்துவங்களைக்கடந்துநின்ற ஞானேதய பூரணத்திற் சிதையாதவண்ணம் நிலைபெற்றுநீடி புகழ்மேவிய சின்மயதேக

த்தைப்பெற்று வாழ்வார்கள். எல்லையில்லாதெங்குந் தேஜோன்மயமாகிநின் றனைத்தையுங்காக்குஞ் சிவபெருமானின் றிருவருளைக் கிஞ்சித்துமிச்சையில் லாமல் பணவாசைபிடித்தும், காமாதுரோகத்திலிழிந்து மலைகின்ற வேசை யைப்போல பொய்யாடம்பரத்திற்கே யிரவுபகலெனறின்றி யுழைத்துத் தெ ய்வநாபக்தியையும், சாதுக்களின் ஸ்நேகத்தையுமவெறுத் தங்கிங்குமோடி யிளைப்பதென்ன? ஓ மனக்குரங்கே! உனதறிவீனத்தை யோசித்துப் பார் க்குங்கால் அஞ்ஞானம்பொருந்திய மாய்கையென்னும் பைத்தியகுணமென்ப துன்னிட்த்துள்ளதல்ல தலைவிரிந்தாடும் மஹா அகங்காரங்கொண்ட அல் லகையாஞ் சாத்தானென்றே சொல்லல்வேண்டும். ஆதலான் பைசாசத்தை மணிமந்திரத்தாற் செயிப்பதைப்போலப பிறவித்துன்பத்தினையைப் பக்தியி னால் வெல்லல்வேண்டுமெனும் முன்னோர்களின்பிரமாணத்தைச் சிந்தித்து வழிபடுவாயாக—எ-ம். (89)

பேய்பிடித் தாட்டுவிக்கும் பெண்ணைமா மாந்திரிகர்
மாய்ப்பா ணிகராய் மயல்வென்று - வாய்மைபெற
நின்று ரறிவுடையார் நித்தன் கருணையதைத்
தின்று ரவர்க்கே - செயம்.

(இ-ள்.) பிசாசென்னு மிருட்பெயர்புனைந்த பூதபிரேத சாந்தான் குடி கொண்டு நாநாவகையினுந் துன்பத்திற்காளாகிப் பாதவிக்கு மழகுடைய பெண்ணின மயக்கத்தை அதிதீவரபக்குவர்களாகிய நல்லோர் விரும்பாத மாரணம், தம்பனம, மோகனம், ஆகருஷணம, உச்சாடனம், வசீகரம், உத் துவேஷணம், பந்தனம் என்று சொல்லப்பட்ட அட்டகன்மங்களையுந் தெரி ந்த தந்திரமுடையவனும், அபக்குவனுமாகிய மந்திரசாலனைகொண்டு நிவ ர்த்திச்செய்வதுபோல சுருதி, யுக்தி, அனுபவமாகிய விம்மூன்றையும் பரம குருவாக்கியத்தா லனுஷ்டித்து, ஆகாமியங்கணிறைந்த வுலகவாசனைகளைத் துறந்து நிராகார ஸ்வயம்புவாய் விளங்குபவர்களே நற்றவர்களென்னும் பேருடையராவர்; சர்வசைதந்ய பெருமானாகிய சிவபோக மெய்யறிவாகும் ஞானக்கனியின் றிருவருளையுண்ட மஹான்களுக்கே நிரதிசயானந்தவாழ்வும், சர்வபிராணிகளையுங் கொலைசெய்யாநின்ற மறலியை நிக்கிரஹம்பண்ணும் வலிமையுமுண்டாம். இதையுணராது இடறிற்றவிக்கும் ஓ மனப்பேயே! அன்னோர்களன்பை யென்றுந் தியானித்து பரமசிவனின் பாததாமரையை மறவாது நினைத்துத் தீயபற்றுகளைச் சங்கரித்து கதிபெறக்கரையேறுவாயாக.

செயங்கொள்ள சிந்தை தெளியாது கூற்றன்
பயங்கொள்ள வெங்கே படித்தாய் - சுயம்பின்
செம்மைப்பா ரமற் செருக்குற்று லாம்பயனென்
எம்மையினுங் காணே - யிதம்.

(இ-ள்.) நிருவிகற்பசமாதி நிலைமையோர்ந்து அறிவானந்த தெய்வமாகிய சிவாநந்தனுடன் கலந்துவாழ, மாயாபோகத்தினால் விளைகின்ற இச்சையையும், விடயவாசனைகளிற் செல்லாநின்ற இந்திரியங்களையும், பாமதஷணங்களையும், வீண்குதாக்கமும் அகந்தையும் ஆடியமும் கடவுளாகியசின்மாத்திர வறிவுகலங்கு மிடும்பாகிய சாதிவேற்றுமைகளையும், கனவிலும் விரும்பாமற் பொய்யென்றகற்றி, தலையெடுக்காது கொன்று மெய்ப்போக பாவனுதீதத்தைக் கைக்கொள்ள புத்திவிளங்கா துழலுகின்ற ஒ மனக்குரங்கே! மரணகாலத்து எமனென்னும் மாற்றனவந் துயிர்க்கொள்ளை யடிப்பானே, அவ்வாதைக் கென்செய்வதென் றங்கலாய்த்துப் புலம்பி அச்சமடைவதற்குமாத்திர மெவ்விடத்துக் கற்றுததெளிந்தாய்? சாவான்மாக்களுள்ளும் வழிபட்டு ததாகாரவஸ்துவாய் நிறைந்துள்ள பரமசிவத்தின் திருவருளை நோக்காது, தானெனு மமதையிலழிந்தால நீயடையப்போகின்ற பிரயோசனமென்ன? ஒன்றுமில்லையே: ஐயோ பெருங்கேவலம். எபபிறவியினும் எந்நிலையினும், எக்கலையினும், எப்பொருளினும், இந்த ஹீனச்செய்கையைச்சொல்லப பார்த்திலேன், ஏனெனில மருந்துக்காணுலும் நலலவெண்ணமில்லாமற்போனதினால் எந்த ஜனனத்தினும் தெய்வப்பற்றுதலாகிய ஆன்மபோதனையை விரும்பாதவர்களில்லை—எ-ம். (91)

இதமென்ப தில்லா தியம்பச் சுருதி
கதம்போன் றுள் ளத்திற் கரவோ - மதஙகொண்ட
யூகபத்தை நற்பாகன் யூகித்து வெல்லுநெறி
காதலாய்க்கற் றுத்தீக் - கழி.

(இ-ள்.) பரிபூரணனந்த விலாசமாகிய சிவானந்தவறிவைப் பெற்றுக்கொள்ள நல்ல கொள்கையற்ற வியர்த்தமான கன்மங்களை நிலைபடுத்திப்புகல வேதங்களேதேனுஞ் சாட்சியமுண்டோ? அப்படியில்லாததை மெய்யென்பதாகச் சிந்திததிருக்கின்ற ஓ மூட நேஞ்சே! உண்மையைப பரிபாகித்த நல்லோருணர்த்துகின்ற வார்த்தையைக் கேட்டு, விஷமபொருந்திய சாப்பத்தைப்போன்ற விதயத்தின் கொடுமையாகிய அஞ்ஞான செருக்கையகற்றி பிரமபிரானுக் குன்னைத் தத்தஞ்செயயாமல், மாய்கையினிடத்து மறைதலேனோ? மகாவலிமைபொருந்திய யானையை பாகனுனவன் விவேகமென்னும் பகுத்தறிவுகொண்டு செயிக்காநின்றவழியெவ்வண்ணமோ, அதைப்போன்று சாதுக்களிடஞ்சென்று நன்மார்க்கபோதனையை யுணர்ந்து, உனதுள்ளததிற் றடித்திறுமாந்திருக்கின்ற துர்க்கன்மங்க ளியானையையுங் கடப்பாயாக—எ-ம்.

கழிகைப் பிடிக்கவிரு கண்க ளிருளப்
பழிகைப் பிடிக்கப் பவமோ - எழிற்கைப்

பிடியென் றுரைத்தக்காற் பின்வாங்கும் நாயே
மடிவதற் கேனிந்த - வாய்.

(இ-ள்.) அருமையாம் பிறவியாகிய மானிட ஸ்தூலத்தையெடுத்தும், நற்சுகாதிதய பெருமபொருளாகிய நித்யானந்த வறிவென்னுஞ் சிவசொரூபத்திற் கலந்துவாழ, பக்தியாம் பற்றுதலைவிரும்பாது மித்தையாம் பாவச்செய்கையி லுனதாயுசையெல்லாஞ் செலவழித்து, வல்லமையொடுங்கி, கையில் தடி பற்றி, இரண்டுவிழியின் பிரகாசங்களுமங்க, உலகவாசனையிலபூரித்து நடத்திய அக்கிரமமென்னு நிந்தையைக் கரதிலேந்தி வாளாய் மடிவதென்ன வூழ்வினையோ? இங்ஙனங்கூறிய தீமையாகிய ஹீனத்தை வெறுத்து பரமசிவமாகிய ஆதமரட்சகனின் றிருவருளைப்பற்றிக்கொள்ளக் கடவாயென்று பலமுறை போதித்தகாலத்து அந்நன்மை பொருந்திய விதேகமுத்தியைக் கவனியாது கன்மநெறியைத தருகின்றதாகிய அஞ்ஞானச்சேற்றிலிழிந்து பிறபபிற்காளாகி யலைவதென்னவோ? வெள்ளெலும்பைக்கடித்த வுறுதியாற் பல்லினிடத்திருந்தொழுகிய வுதிரத்தைக்கண்டு மகா வுசிதமென்று கடித்துத்தின்னுஞ் சுணங்கனைப்போலப் பாவச்செய்கையினிடத்திழிந்தும், பொய்யுளவுறைையெல்லாம மெய்யென்பதாகக்கருதியும், அலைகின்ற ஓ மனக்குரங்கெனனும் நாயே! தெய்வசிந்தையில்லாதபடி மோக்ஷானந்தம் வாய்க்குமோ? வாய்க்காவாம். இஃதனை நினையாமல் மிததையாகிய மூவாசைப்பகட்டிற் பிணைப்பட்டு மண்ணில்மறைந்து போவதற்கு விருதாகோஷ்டஞ்செயது வாதாடி வலத்காரஞ்செய்து செருக்குற்றிறுமாந்து ஊத்தைவாயினூற் பலவாறு பிதற்றித்திரிந்து மலைபபதினு லியாது பிரயோசனந்தரும். ஆதலா னிவையொழிய தனனைப்போற் பிறனை ஸநேகித்து தெய்வதூஷணம் வீண்குதர்க்கமுதலியவைகளிடத்து மனஞ்செல்லாது, சர்வாந்த்ரீதவனெல்லாகிய பரமசிவததை அபயமடைவாயாக—எ-ம். (93)

வாயாடி வந்தார் மருட்டிவிடக் கற்றதனு
லாயாது மாய்ந்தோமென் றல்மேலோ - நோயாம்
பிறவியது நீங்கிப் பேரின்பம் வாய்ந்து
புறங்கூறு தார்க்கே - புகழ்.

(இ-ள்.) ஓ பாவச்செய்கை யுடைய நெஞ்சே! கைவல்ய ஞானும்ஸங்களையுணர்ந்து போதனுசக்தியுள்ள நல்லவர்களாகிய கற்றவர்களுண்பாலடைந்து உண்மைவழியாகிய ஜீவாதாரத்தை யுணர்த்துங்கால் உனதறிவீனமாகிய மயக்கத்தா லன்னோர்களின் வார்த்தையைச் சன்மானியாமலும் "மனம்போனபோக்குக்கோர் வழியுமில்லை" என்ற முதுமொழிக்கிணங்க சில்றூற்களை வாசித்தோமென்ற வகந்தையினுலும், உள்ளமானது மருளும்படியாக வீணு பாசங்களை அவலம்பித்து பிறர்கேட்க, என்னைபோல் வாசித்தலும், பூகித்

தலுமுதலிய சாமர்த்தியமுள்ளவ ரெவருளர், யானறியாத தொன்றேனு முல கின்கணுண்டா வெனமொழிதும், மகா நுண்மையுள சுருதிகளெல்லாங் கற்று வல்லமையுள்ளேனெனவுந் தனக்குத்தானே கர்வித்திருக்கு மகந்தை சிறப்பைத்தருமோ? தராதாம். ஆனால் நலவொழுக்கமாகிய விரதானுஷ்டான பக்தியினால் ஊழ்வினையென்னும ஜனனபிணியினின்றுவிலகிச் சமரச நிலையையடைந்து, வல்லமைபேசாமல் சச்சிதானந்தபொருளாகிய அறிவானந்த ஸ்வயம்ப்ரகாஸமென்னுஞ் சிவபெருமானுடன்கலந்த மஹான்களுக்கு எக்காலத்து மகிமையுளதாம். ஆதலான் ஓ தீயமனமே! உனதாண்மையையும் வீண்கொள்கைகளையு மொருங்கே நிவர்த்திச்செய்து நற்பாத்திரமாகிய நிரதிசயானந்த மெய்வாழ்வினைப பின்பற்றி சுகிப்பாயாக—எ-ம். (94)

புகழ்படைத் தாரோ பூண்டநிலை மாறு
ரிகழ்படைத்த ஜென்மவிச் சையேன் - திகழ்படைத்த
தெய்வீகத் தாளைத் தினமு மறவாது
செய்பணி யாற்சேவை - செய்.

(இ-ள்.) ஆண்டான் அடிமையென்னு மிருவித நன்மைகளையுணர்ந்து, அகப்பற்று புறப்பற்றின்றி உலகாதீதனாகின்று தன்னையும் தனக்குள் வ்யாபித்திருக்கின்ற நித்தியசிவமாகிய அறிவானந்த தெய்வத்தைத்தரிசித்து மெய்ப்போகத்தையடைந்து புகழுடமெடுத்த நல்லவாகளே தனதுள்ளமகிழவெகுவாங் கஷ்டாததியமுடன் சேகரிததணிந்திருக்காநின்ற ஞானாபரணத்தின் விதேகமுத்தியை நிமைநோமேனும் விட்டு நீங்கார், இங்ஙனங்கூறிய நன்னெறியான தில்லாது விழலாயப்பிறந்து வீணுடம்பாததிற் புத்தியை தத்தஞ்செயது, ஹீனமும், நிநதையும, பழிபபும், கொடுமையும், அகந்தையும், இறுமாப்புங் குடிகொண்ட பாவ பிறப்பினிடத்து விருதாவான ஆசையாதுக்கு, ஓமூடமனமே? இவையொழிய முன்சொன்ன பெரியோர்களாகிய மஹான்களெடுத்த நிததியானந்த தேகத்தைப்பெற வுனக்குள் பற்றுதலிருக்குமாயின், அம்முதியவரா லியற்றியுள்ள பரமாணங்களை குருமூர்த்தத்திற் றெளிந்து இடைவிடாது மனனஞ்செய்து வணங்கி வாழ்வாயாக—எ-ம். (95)

சேவைசெய் வாயேற் சின்மயம தாவாய்நீ
கோவையஃ துள்ளவரைக் கூறியே - பாவையென
நின்றறிவி னீடிநனி நித்யாப ரோட்சமதி
லின்றுமுத னீங்கா - திரு.

(இ-ள்.) மோட்சமாகிய ஞானானந்த போறிவென்னுஞ் சிவத்தைச்சந்திப்பதற்கான பலநிலைகளுள்ள ஆகம வுபநிடதங்களியாவுந் தெள்ளெனவுணர்

ந்து, நாநாவிடத்து மனம்வழுவி யலையாத சிரத்தையாகும் பற்றுதலுடனே வணங்குவையாமாயின், பரப்ரம சொரூபமாக நிற்பாய், ஓ நீயமனக்குரங்கே ? அப்பழம்பொருளாகிய பெருமானின் மங்களகுணங்கள் நிறைந்த வற்புதாம்ஸங்களை யெலலாம் அன்பென்னுஞ் சரடிற்கோர்தது அருளென்னு மனததிற்கலந்த பாமாலையாகிய பூங்கொத்தை, ஆத்மா வியாபித்திருக்கின்ற வரையினுஞ் சூடி சித்திரப்பதுமையான தெவ்வண்ண மசைவின்றிகிடக்கின்றதோ, அம்மேரையாக வேதாந்தக் கடலினிடத்தினின்று என்றுஞ் சாகாத மெய்ப்போகததிற் கலந்து, இனறுதொடங்கி அப்பரமஞானசந்தோஷமாகிய சிவத்தைவிட்டுப் பிரியாமலிருப்பாயாக—எ-ம். (96)

இருமைக்கும் வித்தா யிலகுசிவத் துக்கா
யொருமைக் குணங்தெளிந்துண் மையென் - றருவிநீர்
வீழ மனங்கசிந்து வித்தகம தாகினுற்
ருழவரு மூவுலகுந் - தான்.

(இ-ள்.) இரண்டு தனமையாகிய இம்மை, மறுமைக்கும், கிருபையூற்றென்னும் வல்லபமபொருந்தி விளங்கும், சிவமாகிய மோக்ஷ சம்பிரதாய அருள்விதையைபபெற்று, பஞ்சபூதமுதலிய சமஷ்டிவடிவங்களெல்லாம் பலபேதங்களாக வலையாதபடி ஒனறுசேர்த்து தெய்வதா பக்தியைவளர்க்கும் பண்புடைத்தான முக்குணங்களையு மொற்றுமைசெய்து ஞான அறிவினிடத்து தங்கி கண்ணீர்சொரிய நெஞ்சமனது தனது தியவினையாகிய பிறவியின றுன்பத்திற்காகவழுது, நிரதிசயானந்தவடிவென்னுஞ் சுயம்புவிற்கலந்து வாழ்குமானல், உலகந்தாரையெல்லாந் தன்வயப்படுத்தி வணங்கச்செய்துவைத்திருக்கும மூவாசையென்னு மூன்றுலோகமும் உன்னை நமஸ்கரிக்கும். ஆதலான் பாவச்சுமைகொண்ட ஓ நெஞ்சமே ! உலகமாய்கையாகிய வீணாசைகளை யடிமைக்கொண்டு, உன்னைச் சிவபெருமானுக்கு அடிமையாக்கக்கடவாய், ஏனெனில் தெய்வபயமில்லாரை மாய்கையாகிய பாவச்சாத்தானடிமைக் கொள்ளுவானென்று முன்னோர்கள் திருவாய்மலர்ந்த முதுமொழி சாட்சியம்பகர்வதினு லவ்வழிக்காளாகுமுன் நற்சீரைத்தேடிக்கண்டடைவாயாக—எ-ம். (97)

தானென்றும் நானென்றுந் தன்னதெனை தென்றுலகிற்
கோனென்றும்வானென்றுங்குற்றமென்றும்-தேனென்றும்
வாக்குரைத்தி டும்பால் மகிழ்வதெலாம் பொய்யாமெய்த்
தேக்குஞ் சிவன்கழலைச் - சேர்.

(இ-ள்.) பரிபூரணத்தினிடத்தெழுந்த சொருபமெனவும், உதிரம், நிணம், மச்சை, சவ்வு, தசை முதலிய கடத்தை நானெனவும், தனக்குப் புறம்

பாக நிற்கின்றவையெல்லாம் யதார்த்தமாய் சுயாதீனமுள்ளதெனவும், காணப்படுகின்ற சகல வஸ்துவுக்கும இறைவனெனவும், பெருமை பொருந்திய ஆகாயவடிவமெனவும், உலகவாசனை பந்தங்களென்னும் ஆகாமியங்களை இன்பமுளதெனவும், பேரறிவை விர்த்திசெய்யாநின்ற சர்ச்சன சஹவாசத்தைத் தீமையெனவும், பொய்யாகிய வினையினிற் புதைபட்டு மமதையாகிய ஆழிக்காற்றினுற்றியங்கி வசனித்து திரிவதனைத்து மித்தையாய்முடியும். ஓ மனப்பேயே! அடியார்கட்கின்பம் நகரு மான்மசோதியாகியும், உண்மை நிறைந்து தெளிவுற்ற ஞானாமிர்தமாகியும் விளங்கும் சிவபெருமானென்னும் அறிவானந்தவள்ளலின் றிருவடிக்கமலங்களை அஞ்ஞானமாகிய துர்க்கிருத்தியங்களொழிய அபயமடைவாயாக—எ-ம். (98)

சேர்ந்தார் சினமறுக்குந் தேஜோன் மயவடிவிற்
சேர்ந்தாரோ யென்றென்றுஞ் சீவியராம் - தேர்ந்தறிவா
லெண்புவனத் தோர்க்கு மிறைவனருண் மூழ்கினு
லண்டர்களுஞ் சொல்வார்ஆ - சீர்.

(இ-ள்.) உலகவாசனையென்னும் ஆணவாதிமலங்களை ஞானவாளினுற் களைந்து, நித்யாபரோட்சநிலையிற்புகுந்த மஹாநுபவர்களின் மரணமென்னுங் கொடியத் துன்பவியாதியைத் தடுக்காநின்ற அறிவானந்த சிவசொரூபத்தினிற்கலந்த புங்கவர்களென்னுந் தேவர்கள் ஏககாலத்து மழிவில்லாமற் றழைத்தோங்கும் நிரதிசயானந்தராவார், இந்நன்மைபொருந்திய மார்க்கத்தையுணர்ந்து இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்னும் அட்டாங்கயோக சாதனையில்மூழ்கி, ஞானானந்தப் பரவெளியினிற்கலந்து மெய்யுடம்பைப்பெற்ற எண்புவனத்தோர்களாகிய முனிவரர்கட்குத் தலைவனுகிய பரமசிவமென்னும கர்த்தவ்யனின் கருணையாகுந் திருவடிநீழலி லடைவாயேயாமாயின வானுடனென்னும் விண்ணுலகத்தாரும் வாழ்த்துகூறி மகிழ்வார்கள்; ஆதலான் ஓ பாபமனமே! இங்ஙனமொழிந்த விஷயங்களை யுணர்ந் தந்நிலையிற்புகுந்து சஞ்சிதமாகிய பிறவிநோயைத் தீர்ப்பாயாக—எ-ம். (99)

ஆசிர் பெறலா மநித்தியமும் போக்கலாந்
தேசிகனுர் பொற்கழலைச் சேருப - தேசப்
பதிற்றுப்பத் தந்தாதிப் பாமாலை சூடிக்
குதித்துமே வாழ்வாயெங் - கும்.

(இ-ள்.) நிட்களங்கரஹித பரிபூரணாத்ம சத்தசைதந்ய ப்ரபுடிகவிலாசனும், ஸ்வயம்ப்ரகாஸ மஹைக்யானுஸத்திலடங்கி எல்லாபோகத்தையுங் கொடுத்தாள்பவனும், நிரதிசயானந்த நித்யாபரோக்ஷ சுப்ரதீப ஞானகிகார

னும், கடையிலாஞானம், கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், எண்ணிறந்த சுகம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுளின்மை' சகலசம்பியத்பாவம் என்னுமெண்குணம் நிறைந்த அட்டமூர்த்தியும், இறைவனென்னும் பேரின்பதயாளுவும், சச்சிதானந்த விலக்கணங் கமழுமறிவுமாகிய பரத்துவனை யென்று மிடைவிடாது அஞ்சலிசெய்தால் ஓ அஞ்ஞானமலிந்த மனமே! கர்த்தனாகிய ஆத்மானுபவவிலாச சிவபெருமானின் றிருவருளும் பசி, தாகம், பயம, கோபம், வெறுப்பு, பிரியம், மோகம், வெகுசிந்தனை, நரை, நோய், அழிவு, வேர்வு, இளைப்பு, மதம், இறாதுகொள்கை, அதிசயம், பிறப்பு, உறக்கம் என்னும் பதினெண்குற்றங்களில்லாத அண்டாகளென்னுந் தேவர், முனிவர், பெரியோர்களின் கருணையும், உலக அஞ்ஞானமென்னு மகங்காரத்தைவிட்டு விலகும்படியான நற்பாதையை விளக்கிக்காட்டி அறிவென்னு மவிழியைத்தந்த தேசிகராங்குரவரின் வாழ்த்தலும்பெற்று மோக்ஷானந்தமென்னுங் கைலையில் சுகித்திருக்கலாம, பிரவியாகிய ஜன்மகுணத்தாலாயதிய வாசனைகளையுங் கடந்துவிடலாம், சர்வக்ஞானக்ஞான அபேதாபேதமின்றிய அகண்டாகாரவஸ்துவாகியும், ஒப்பற்றதாகியும், உன்மத்தருளத்தில் நிலைக்காதனவுமாகிய வள்ளலின் பொன்னடி கமலததினின்றெழுந் திருவருளிற் கலக்கச்செய்கின்ற நற்போதனையாகுமிப் பாமாலையாம பதிற்றுப்பத்தந்தாதி யென்னுந் தொடையலை எவ்விடததுஞ் சாற்றி அப்பெரும்பொருளை யிடைவிடாது சிந்திக்கின்றமையினா லனுகாகின்ற ஆனந்த பரவசததி னமிழ்தைப் பருகி நிர்த்தமென்னுந் தாண்டவமாடிக் களிப்பெய்தி அருண்மாரிபொழிய எக்காலத்து மழிவின்றி ஸ்வாக்கபோகத்திற் சுகித்திருப்பாய்—எ-ம். (100)

---

# உபதேச சோடச மாலை.

பண் - பியந்தைக்காந்தாரம.

திருவார்ந்திடு மறையோதிடுஞ் சிவமாம்பழம் பொருளை
அருவார்ந்திடு கருணாகர வமிழ்தாநற்றீங் கனியை
பெருவார்ந்திடு பரமாத்மனை பெறியோருணர் பிழம்பை
கருவார்ந்திடு மயலாப வினை கழியத்துதி மனனே. (1)

துதிப்பாருளந் தனிலோங்கிடுந் துரியாதீத சிவத்தை
மதிப்பார்வையா லறிந்தேதுயா மாயும்வழி நினைந்தே
சதிப்பார்வையா லாவாசையி றயங்காநிலை யுணர்விற்
பதிபபாயும்பர் பணிவாருண்மை பகர்வாய்நலம் மனனே. (2)

நலமின்றிய பவஞ்சூழ்ந்திட நலிந்தேசிந்தை குலைந்து
பலகாலமும் வாழ்ந்தென்கதி பார்த்தாயையோ விழலாம்
குலமுங்குணங் குறியாதுமில குருவையுன்னுள் காணாத்
தலங்கள்சென்று பயனென்கண்டாய் சதியோவெல்லாம் மனனே. (3)

எல்லாமுணர்ந் தவனாகியு மிறையாயுன்னுள் விளங்கி
பொல்லாப்பவ பிறவித்துயர் போக்குஞ்சிவ சுயம்பை
நில்லாக்கட மதனால்மாய நெறிபற்றிதுஞ் சாமுன்
வல்லானடி வணங்காதது மாயமென்ன மனனே. (4)

மாயவுல கினிலேமலைத் தனையே மதியிலையோ
தூயகலை யுணர்ந்தேதினந் துதித்தேவினை யகற்ற
நேயமிலா தலைந்தாலினி நீங்கும்வகை யுளதோ
காயமுள பொழுதேநிலை காணில்சுகம மனனே. (5)

சுகமாவதே சுழியாமதிற் றூங்கிமய லொழித்தே
அகமேவிடு மறிவானந்த மதுவேப்பிரம மாதல்
புகலவரி தானநிலை புந்தியுளப பொழுதே
பகவனாஞ் சிவநாதனைப் பணிதல்நன்மை மனனே. (6)

நன்மைபெறத் தினமுந்துதி நவின்று புகழாமல்
வன்மப்பகை யெனுமுப்பசை மயக்கில்மகிழ்ந் தலைதல்
ஜென்மகுண மோஹூழ்வினைத் தீண்டுவதுங் களிப்போ
கன்மத்துய ரகலத்தொழு கருணைவரும மனனே. (7)

கருணாகர அருணோதயன் கருதும்பல வடிவன்
ஒருவாறுணர்ந் திடற்காகாமெய் யுள்ளும்புறம் பாகிப்
பெருவாரிதி யெனநின்றநம பெருமான்சிவன் கழலின்
அருளைமறந் தாலிங்குணக் காதாரமார் மனனே. (8)

ஆதாரமாய் நினைந்தேங்கிடு மற்பசுக வாழ்வின்
சூதாட்டங்கள் துறந்தாலன்றோ சுழியாம்வழி திறக்கும்
வேதாந்தமெய்க் கலையாய்ந்திடா வீணேமடி வதற்கோ
வாதாட்டங்கள் செய்தாயிது வஞ்சமல்லோ மனனே. (9)

வஞ்சமிலா ருளத்தில்மண மீலராய்கமழ் பரனார்
நஞ்சமுதா யருந்திதேவர் நடுக்கமெலாந் தவிர்த்துச்
செஞ்சடையன் சிவசங்கரன் திகழ்வானவர்க் கரசைத்
துஞ்சமதி குலையுமுனந் தொழுதேத்துவாய் மனனே. (10)

தொழுவார்த்துய ரதைதீர்த்தருள் சுயம்பைநினைந் துடலம்
பழுதாகுமும் மலக்காடதைப் பற்றுமலே துறந்து

அழுதேகண்ணீ ராரக்கதின மகலாமலே துதித்தால்
கழுமலெலா மகலுங்காட்சி காண்பாயுன்னுள் மனனே. (11)

காண்பார்சிவ ரூபந்தன்னிற் கலந்தேயென்றும வாழ்வார்
வீண்பார்வைய தெனுமாய்கையடா ம விதிமீறிமெய் யறிவைப்
பூண்பாரெவர் புண்யரெனப் புகலுமறை கடந்து
ஆண்மையினு ஞ்லைவதென்னே அற்பகுண மனனே. (12)

அற்பகுண மகலாதுன்னை யடைந்ததுயர் விடுமோ
விற்பனர்க ளாகுமுன்னோ வீணுமிஃதென் றுணர்த்தி
கற்பனையாஞ் சுருதிகளைக் கனிவாகத் தந்தனரே
சிற்பரனுஞ் சிவநாதனைச் சேவைசெய்வாய் மனனே. (13)

செயவாய்தினந் துதியானதுன் றீமைகள்விட் டேகும்
மெய்வாய்விழி நாசிசெவி விம்பத்திடை யிருததி
உய்வாய்பரத் துவனோடுள மூவந்தேகலந் திருப்பாய்
பொய்வாயினாக் காணுப்பரம பொருளைநினை மனனே. (14)

நினையாதவர்க் கிருளாவும் நிட்டைபுரி பவர்க்குள்
வினையாவையுந் தடுத்தேஞான விஞ்சையருள் சிவன்றாட்
குனையாவையுங் கொடுத்தேநோழா துறுமோநலம் வீணும்
மனையாவையு மதித்ததென்ன வஞ்சமிகு மனனே (15)

வஞ்சநமன் வருவானென்றும மதியானுனைத் துதியான்
கெஞ்சிப்பணி செய்தாலுமோ கிருபையிலா தழிப்பான்
அஞ்சுமொன்று யணுகிச்சிவ னருமபாமாலை சூடி
விஞ்சும்பதம் பெறுவாயமுந்தி விளங்குஞ்சொன்னேன் மனனே.

## வஞ்சிவிருத்தம்.

### அஷ்டகம்

அருமறைப் பொருளுமா யகிலகா ரணனுமாய்
திருவருள் டொலிநதிடுஞ் சின்மய சிவமுமாய்
கருணைசெய் பவனுமாய் காண்பவர்க் காட்சியாய்
சுருதிகட் கிறையெனுஞ் சுயம்புவைத் துதிநெஞ்சே. (1)

சுயம்புவாய் ஆய்கிறை சுத்தனய் நித்யனாய்
வயம்பெறு மடியவர் மாசெலாந் துடைத்துநல்
நயமிகு மறிவினி னடித்திடுஞ் சிவபிரான்
தயவதைப் பெறவுனுள் சந்ததம் பணிநெஞ்சே. (2)

சந்ததம் பணிபவர் சஞ்சலந் தவிர்த்திடுஞ்
சுந்தர பரசிவன் துணைபெரி துணர்ந்துநீ

பந்தமா மயலினாற் பதைத்துளம் வாடுமுன்
நிந்தையில் வாழ்வதில் நீடவே துதிநெஞ்சே (3)

நீடும்வாழ் வாகுமெய்ந் நிலையறி யாமலே
வாடுவ தெனசொலாய மதியிலென் றெண்ணலேன்
கூடுவிட் டாவியோ கூற்றன்பா லேகவீண்
பாடுகொண் டேங்கிடுய் பரனடி பணிநெஞ்சே (4)

அடிபணிந் திடுமனோ ரவனொன்று மழிவிலார்
மிடியினி லிறங்கியே வீணுழைய திரிந்துநீ
படிமிசை செய்தபல பவந்தீரத் திடவானை
கடிகமழ்ப் பதமலர் சருகியே துதிநெஞ்சே. (5)

கருதிடிய புவிமயல் கடக்கமன் னெறியிலாய
பொருளதைப் பெறவேயுன் புந்தியை யிழப்பதேன்
வெருவல ஞானமே விளைந்திடுக காமுனம்
பெருமையோ சிவன்கழல பெட்புறப் பணிநெஞ்சே. (6)

பெட்புசே ரும்பர்கள் பேணியே பணிசெய்நார்
கட்புலன் வாதையைக் கடந்தகா லின்பமாம்
நட்பென பலதிசை நாடியேன் வின்னுனை
அட்டலட் சணசிவ னருள்பெறத் துதிநெஞ்சே. (7)

அருளிலாக் கெழிலிலையெனச்செய்லு மாட்டுநின்
பொருளதை மறந்துவீண் பொய்மய லால்மிக
இருளுள வில்லென ஹீனமேற் கொண்டனை
தெருளுறுஞ சிவனடி சேவைசெய பாழ்நெஞ்சே. (8)

## வாழ்த்து.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

அருவுருவி லாதபிர ணவமு மைலை
யம்பதிவாழ் சுத்த னமமை கந்தன்
திருவருளுஞ் சிவசமய சசார்பா நால்வர்
சீர்தழிமிகு நலடியா ருபயர் பக்தர்
தெருளருளெங் குருதாளுங் கவிஞரன்பாய்த்
திருப்பணியா மிப்பனுவற் பிரசுரிக்க
பொருளருளிப் புகழ்மலிந்த புண்ணியரிந் நூற்
புகன்றோர்படித் தவர்கேட்டோர் பொலிந்து வாழி.

பதிற்றுப்பத்தந்தாதியும்,
உபதேசமாலையும் - ஸமாப்தம்.

# கையொப்பக்காரர்கள் நாமதேயம்.

(ஜகநாதபுரம்)
திருமயிலை-வ-தம்புஸ்வாமிபிள்ளை
காசிபேடு-மு-தம்புஸ்வாமிபிள்ளை
கா-இரங்கஸ்வாமிபிள்ளை
மா-சுப்ரமணியம்பிள்ளை
ம-திருக்காமணிபிள்ளை

{ கருக்காத்தம்மன்கோயில் சிவத்யானபஜனை. }

காரிபதரிசி-மு-ஏ-குமாரஸ்வாமி
சம்பிரதி-வே-மு-முனிஸ்வாமி
(பிள்ளைகள்)
கோ-இரங்கஸ்வாமிபிள்ளை
இரா-வீ-இராமஸ்வாமிபிள்ளை
இ-அ-ரங்கவேலுபிள்ளை
வீ-அரியப்பபிள்ளை
வே-ம-வேம்புலிபிள்ளை
ஷைபூர்-வே-மு-சின்னஸ்வாமிபிள்ளை

(இராயபேட்டை)
சோதி-மு-முத்துஸ்வாமிபிள்ளை
வீ-பூபதிபண்டாரம்
கிராமம்-அ-கபாலமூர்த்தி
ஜோ-பீ-பொன்னுஸ்வாமிபிள்ளை
க-ந வீ-தட்டுஸ்வாமிபிள்ளை
வீ-சபாபதிபிள்ளை
R-S-பொன்ராஜிபிள்ளை
எ-வ-கபாலமூர்த்தி (நட்டால்)

(கொன்னூர்நகர்)
கு-இ-ந்திரமூர்த்தி
வே-பொன்னுஸ்வாமிபிள்ளை

(சாணாங்குப்பம்)
சி-ம-இராகுவேல்மூர்த்தி

(வேளாளதேவனாம்பேட்டை)
பொ-ஐயாவுபிள்ளை
வே-ஜகநாதம்பிள்ளை
வீ-வ-முனிஸ்வாமிமூர்த்தி
பொ-வெ-ஸவயாபுரிபிள்ளை
யம்-பீ-ஆருமுகம்பிள்ளை (நட்டால்)
பீ-மாசன்பிள்ளை (நட்டால்)
மு-முனிஸ்வாமிபிள்ளை (பாசின்)
சி-அண்ணாமலைபிள்ளை

(சாலைதேவனாம்பேட்டை)
கி-இரா-வீ-நாராயணஸ்வாமிதாஸ்

(நரசிம்மபுரம்)
கே-சின்னையாபிள்ளை

(புரசைமாநகர்)
கு-காளப்பபிள்ளை
T·B-சாமுவேல்பிள்ளை (பீஜவாடா)

(கொட்டிமாநகர்)
(சிவசமயத்திருப்பணித்தொண்டர்)
வாசிவா-ஆ-ஆதிமூலம்பிள்ளை
சா-து-முனிஸ்வாமிபிள்ளை
ம-பழனிபிள்ளை
மு-[illegible]-தம்பிரான்பிள்ளை
வா-ஆ-ஜகநாதசாமிபிள்ளை
(வேறு) ட-மதுரைபிள்ளை
கே-வீ-முனிஸ்வாமிபிள்ளை
வெ-வாசுதேவபிள்ளை
M-C-பாளையம்பிள்ளை
வீ-வடிவேலுபிள்ளை

(ஸ்ரீராமாநுஜசபை உபாத்தியாயர்)
N-கோவிந்தராஜலுபாகவதர்

(கீழ்ப்பாக்கம் மேட்டுவீதி)
ச-செ-ஐயப்பபிள்ளை (நட்டால்)
சாமி-சுப்ரமணியம்பிள்ளை
க-ஆறுமுகம்பிள்ளை
திரு-செ-ட-முருகேசம்பிள்ளை
மு-பாளையம்பிள்ளை

(ஆலந்தோட்டம்)
கிராமம்-வெ-சின்னஸ்வாமிதாஸர்
சி-ஸ்ரீமுத்துகிருஷ்ணபண்டிதர்
இல-மாரிமுத்துபிள்ளை
வீ-பொன்னுஸ்வாமிபிள்ளை
செ-ஆறுமுகஆச்சாரி
வீ-முருகேசம்பிள்ளை (பெனாங்)
யம்-காளிபிள்ளை

(துலுக்கன்தோட்டம்)
கங்கணை ஐ-கணேச-ஐயமெய்யர்
நா-ப-சுப்ரமணியம்பிள்ளை
சி-பிரான்சீஸ்பிள்ளை
அ-ஆரோக்கியம்பிள்ளை (டாசின்)
சீ-பி-வெங்கடஸ்வாமிபிள்ளை (பாசின்)

# கையொப்பக்காரர்கள் நாமதேயம்.

(அமீர்நகர்)

மு-மதுரைபிள்ளை (பாஸின்)

மு-முனிஸ்வாமிபிள்ளை

(மக்கிமாநகர்)

பொ-ஐயாக்கண்ணுபிள்ளை

மு-ஆ-தாமோதரம்பிள்ளை

(நுங்கம்பாக்கம்)

பே-குமாரஸ்வாமிபிள்ளை

{ அடையார் நாராயணஸ்வாமிதோட்டம் }

V-முருகேஸம்பிள்ளை

(சிந்தாதிரிப்பேட்டை)

ராமலிங்க-வெ-சுந்தரமூர்த்தி

மா-சீ-தாண்டவம்பிள்ளை

வீ-திருவேங்கடம்பிள்ளை

மா-பொன்னுஸ்வாமிபிள்ளை

(கோமளீஸ்வரன்பேட்டை)

இரா-மதுரைமூர்த்தி

(பொன்னுநகர்)

காஞ்சிபுரம்-S-வடிவேலுபிள்ளை

அற்காடு-அ-முருகேஸம்பிள்ளை

இர-இராஜரத்தினம்பிள்ளை

ம-இருசப்பிள்ளை

(சைதாபுரம் கெண்டி)

யம்-பொன்னுஸ்வாமிபிள்ளை

(எழும்பூர்)

சு-ஞானஇரத்நம்பிள்ளை

L V-சின்னஸ்வாமிபிள்ளை (நட்டால்)

G-C-முனிஸ்வாமிபிள்ளை

(எழும்பூர்-ஆற்றூர்)

மு-அப்பாசாமிமூர்த்தி

(ஆயிரந்தீபநகர்)

R-M A-அ-சுண்முகநேசிபாண்டியர்

M-இரத்நவேலுபிள்ளை [ர

(பெரியமெட்டு)

எ-வரதப்பபிள்ளை (ஒந்நை)

அ-இலங்கஸ்வாமிபிள்ளை

சு-நாராயணஸ்வாமிபிள்ளை

ஐ-வடிவேலுபிள்ளை

(கரியமாநகர்)

ஜெ-வரதப்பபிள்ளை

(காட்டுக்கோவில்கன்னடிதெருவு)

ம-நாணிபேலபிள்ளை

(புரசை - சாமிநாய்க்கன் வீதி)

அ-வீரராகவபிள்ளை

(வேபபேரி)

பி-யம்-ஜெ-எபிநேசர்பிள்ளை

டீ-பி-சாமுவேலபிள்ளை

பல்-ஏப்ராம் பிள்ளை (நட்டால்)

(பாசின்)

{ சென்னை இராயபுரம் காக்கன் வீதி }

ரா-ஜானகிராம்பிள்ளை

ப லக்ஷ்மி-சீதாராமையர் ...ஸ்வாமிவுபாத்தியாயர்

{ வாசகபபாமேடை மீருலப்பை வீதி }

ம-ஆரோக்கியஸ்வாமிபிள்ளை

(பல்லாவரம்)

ம-பொன்னுஸ்வாமிபிள்ளை

(பரங்கிமலை-ஆபமன்வீதி)

மு-இராமஸ்வாமிபிள்ளை (நட்டால)

பூந்தமல்லி-கன்டோன்மென்ட்

ஏ-மு-பனையப்பமூர்த்தி

(மல்லிகாபுரம்)

வித்வான்-பொ-அருணாஜலம்பிள்ளை

(கிருஷ்ணமபேட்டை)

T-பொன்னம்பலகிராமணியார்

(மஞ்சாகுப்பம்)

கு-முருகேஸம்பிள்ளை

(வேலூர்)

பி-பி-நாராயணஸ்வாமிபிள்ளை

(பெங்களூர்)

செ-முனிஸ்வாமிபிள்ளை

(கோயம்பத்தூர்-உமனமாநகர்)

மு-முனிஸ்வாமிபிள்ளை

(பிஜவாடா)

மதுரைவாசகம்பிள்ளை

(டர்பன்கிளப்-நட்டால்)

வீ-முனிஸ்வாமி பிள்ளை

R-ஏப்ராம் ,,

பெ-வெங்கிடாஜலம் ,,

G-ஏப்ராம் ,,

# கையொப்பக்காரர்கள் நாமதேயம்

(டர்பன்கிளப் நட்டால்)

ப-நாராயணஸ்வாமி பிள்ளை
F-X-அந்தோனி ,,
S-ஆறுமுகம் ,,
பேக்கர்-வீராஸ்வாமி ,,
R-S-ஆரோக்கியம் ,,

(அலக்ஷான்டர்ஓட்டல்)

T-முனிஸ்வாமிபிள்ளை

(கிளார்டன் ஓட்டல்)

ஆ-வீ-நாராயணஸ்வாமிபிள்ளை

(ராயல் ஓட்டல்)

பொன்னுஸ்வாமிபிள்ளை

(அப்பர்பர்மா-இரங்கோன்)

C-T-முருகேசம் பிள்ளை
அ-கு-தருகாஜலம் ,,
அ-கு-ஐயாசாமி ,,
தெ-பெரியதம்பி ,,
க-சுந்தரம் ,,
எ-சந்தியாகு ,,
பொ-நாராயணஸ்வாமி ,,
A-வரதராஜு ,,
பீ-ஆரோக்கியம் ,,
அந்து ,,
பீ-யம்-இரங்கஸ்வாமி ,,
பீ-யம்-கெம்பு ,,
எ-சந்தியாகு ,,
சி-ஜி-சாமுவேல் ,,
அ-மரியகுசை ,,
மு-இரங்கஸ்வாமி ,,
யம்-இரங்கஸ்வாமி ,,
அ-வ-தருகாஜலம் ,,
கா-சாலமோன் ,,
அ-சொ-தருமலிங்கம் ,,
கு-சொர்ணஜலம் ,,
பீ-ஸ்ர-வடிவேல் ,,
ஜோ-அ-சயினியப்ப ,,
டைமன-இரங்கஸ்வாமி ,,
னா-முருகேசம் ,,

(இரங்கோன்)

யம்-இராகவலு பிள்ளை
பீ-மாரி ,,
சே-தா-காளியப்ப ,,

(டர்பன் நட்டால்)

(பழவர்த்தகர்) முருகேசம்பிள்ளை
ஆல்தோட்டம்
{ வீ-டீ-முனிஸ்வாமிபிள்ளை, இன்ட்டெர்பிட்டர் N-G-போலீஸ். }
போலீஷ்-கோதண்டராம்பிள்ளை
,, இலட்சுமணநாய்க்கர்
,, வெங்கட்ராமையா
யம்-அருணஜலம்பிள்ளை சர்தார்
B-சாப்ஜி ,,
L-வெங்கடசாமிநாயுடு ,,
D-விஸ்வநாதமுதலியார் ,,
R-கிருஷ்ணசாமிமுதலியார் ,,
சாமிகவுண்டர் ,,
சுப்பராயமுதலி-தர்மகர்த்தர்
C சங்கரன்
பீ-யெச்-யெஸ்-மனுவேல்
பீ-பார்த்தசாரதிபிள்ளை
S-நரசையா
T-துருபன்
S-E-ஜாசுவா
ரங்கன்-L-D
மு-ஜமுவான்
அ-இராகவமுதலியார்
கு-பொன்னுசாமிகிராமணி
வே-ஆறுமுகபண்டாரம்
மு-சின்னகுழந்தைபிள்ளை
தொ-குப்புசாமிநாய்க்கர்
அ-மலைசாமிமுதலியார்
வ-வரீது பிள்ளை
முனிசாமிமுதலியார்
நரசிமுலுமுதலியார்
சுப்ரமணிநாய்க்கர்
அருணஜலம்பிள்ளை